வெளியீடு : 22 - 11 - 2002

Issued : 22 - 11 - 2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்கிழமை, மார்ச் 12, 2002 – தொகுதி 14 – எண் 2

**Tuesday the 12th March, 2002– Volume 14 – No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...e Assembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

V. 11, 2-1-1802
Ro. 14.
224481.

[Price Rs. 3.00

**12-3-2002**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 35-66

2. அறிவிப்பு—

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் 67

3. அறிக்கை அளித்தல்—

அரசு உறுதிமொழிக் குழு 67

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்— 68-209

திரு. ப. இராஜரெத்தினம் 68-84, 85

திரு. பரிதி இளம்வழுதி 85-105

திரு. சி. சிவசாமி 108-113

*திரு. கு. ஜெயக்குமார் 114-122

திரு. சி. ஞானசேகரன் 122-136

*திரு. ஜி. பழனிசாமி 136-143

*திரு. கே. ஆறுமுகம் 143-150

திரு. கே. மகேந்திரன் 152-159

*திரு. கு. அன்பழகன் 159-164

திரு., கா. கந்தசாமி 164-167

பக்கங்கள்

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

திரு. கா. சுந்தசாமி

திரு. எச். ராஜா

திரு. க. முருகவேல் ராஜன்

திரு. வெ. ஏழுமலை

திரு. அ. அசோகன்

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224481
சென்னை-600 008
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 28, விசு—திருவள்ளுவர் ஆண்டு 2033
## 2002 மார்ச் 12, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

என் குடியை உயரச் செய்வேன் என்று முயலும் ஒருவற்கு, ஊழ், ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு, தானே முன்வந்து துணை செய்யும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 1. திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

1—

### பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள்

***4200—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர், அங்காள பரமேஸ்வரி ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்குத் தங்கும் வசதியும், கழிப்பிட வசதியும் செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) ஆம்.*

*(ஆ)* மேல்மலையனூர், அருள்மிகு அங்காள பரமேஸ்வரி ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் பயன்படுத்துவதற்கு 20 கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. திருக்கோயில் நிதியின் மூலம் பெண்களுக்கு 20 குளியலறைகள் மற்றும் ஆண், பெண் உட்பட 40 கழிவறைகள் கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 10 தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவனே வந்தாலும், தமிழகத்தைக் காப்பாற்ற முடியாது என்று, அன்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏழுமலை, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** இன்று ஆண்டவன் அருளால், தமிழக மக்களின் அன்பால், குறிப்பாக, ஆண்டிப்பட்டித் தொகுதி மக்களின் பேராதரவால், தமிழக முதலமைச்சராக, அரியணையில் வீற்றிருக்கும் நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம், தமிழக முதலமைச்சர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்களின் கோடானுகோடி தொண்டர்களில் ஒருவனாக உள்ள என்னை, எனக்கு முகவரி கொடுத்து 12-வது சட்டமன்றப் பேரவையின் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏழுமலை, இன்றைக்கு உங்களுக்குப் பேசக்கூடிய வாய்ப்பு இருக்கும்போது, அதையெல்லாம் பேசலாம்; கேள்வியை மட்டும் இப்போது கேளுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை :** 12-வது சட்டமன்றப் பேரவையின் கடந்த கூட்டத் தொடரிலே, முதல் வினாவிற்கு, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் அம்மா அவர்கள், 'ஆம்' என்ற பதிலைத் தந்து, அனைத்துத் தரப்பினரையும் மகிழ்ச்சியில் திளைக்க வைத்து, தமிழகத்திற்கு மீண்டும் முதலமைச்சராக, அம்மா அவர்கள் பொறுப்பேற்று, இந்த அவையிலே வீற்றிருக்கிற இந்த வேளையிலே, இன்று நடக்கின்ற இந்த



மாபெரும் பேரவையில், முதல் வினாவிற்கு, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், 'ஆம்' என்ற பதிலை அளித்ததற்கு நன்றியைச் சொல்லி, கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூர், சாமுண்டீஸ்வரி அம்மன் திருக்கோயில் மற்றும் கேரள மாநிலத்திலுள்ள சோட்டானிக்கரை பகவதி அம்மன் திருக்கோயில்களிலுள்ள வசதிகளைப்போல, டாக்டர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மேல்மலையனூர், அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலையும் மாற்றிட வேண்டுவதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையைக் கொண்ட, 15 அம்சத் திட்டங்களில் ஒன்றான, தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் மேல்மலையனூர் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலையும் கருத்திற்கொண்டு, பக்தர்களுக்கு மதிய உணவு திட்டத்தை வழங்கிட ஆவன செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர், அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில், சட்டப் பிரிவு 46(3)-இன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டு, முதல் நிலை செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டுவரும் திருக்கோயிலாகும். மேற்காணும் திருக்கோயிலில் 10 தங்கும் விடுதிகள் கட்ட, 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான மதிப்பீடு மற்றும் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, டெண்டர் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், தங்கும் விடுதிகள் கட்டப்படவுள்ள இடத்தை மண் ஆய்வு செய்ய வேண்டும் என உதவிக் கோட்டப் பொறியாளர் தெரிவித்துள்ளார். மண் ஆய்வு மேற்கொள்ள சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திடம் ரூ.11 ஆயிரம் செலுத்தப்பட்டு, அவர்களிடமிருந்து உரிய அனுமதி கிடைத்தபின், தங்கும் விடுதி கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன. மேலும், மாவட்டப் பரவலாக்கும் திட்டத்தின்கீழ், 20 கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டு, சேவார்த்திகளின் பயன்பாட்டில் உள்ளன. திருக்கோயில் நிதி மூலம், பெண்களுக்கு 20 குளியலறைகளும் மற்றும் ஆண், பெண் உட்பட 40 கழிவறைகளும் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்த உணவு வழங்கும் திட்டம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் தலைமையில், கூடிய விரைவில் எந்த ஆலயத்தில் தொடங்க இருக்கிறார்களோ, அந்த இடத்தில் தொடங்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 மார்ச் 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-05

**2—**

**திருச்செந்தூர் சுப்ரமணியசுவாமி கோவில் வருவாய்**

***5590—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோவில் தேவஸ்தானத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி மூலம் 1996 முதல் 2000 வரை கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) இவ்விடுதியை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில் தேவஸ்தானத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி மூலம் 1996 முதல் 2000 வரை ரூ.2,14,32,603 வருவாய் கிடைத்துள்ளது.

(ஆ) ஆம்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாருலகத்தில் தேவர்களையும் மற்றும் மக்களையும் கொடுமைப்படுத்தி, கொடுமைகளைச் செய்த சூரனை நேருக்கு நேர் சந்தித்து சூரசம்ஹாரம் செய்து, சேவல் கொடியுடன் காவல் தெய்வமாகக் காட்சியளித்த திருச்செந்தூர் அருள்மிகு முருகப்பெருமான் கோவில் சம்பந்தப்பட்ட இந்தக் கேள்விக்கு எனக்கு வாய்ப்பைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்து, இன்று ஆன்மீகம் பெருக்கெடுத்த இந்த நேரத்தில் திருச்செந்தூரில் 1996 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை வரப்பெற்றுள்ள இந்த வருமானத்தில் பக்தர்களுக்கு என்ன வசதி செய்து கொடுக்கப்பட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



2002 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவில் தேவஸ்தானத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி மூலம் 1996 முதல் 2000 வரை கிடைத்த வருமானம்:—

| | |
|---|---|
| 1-1-1996 முதல் 31-12-1996 முடிய கிடைத்த வருமானம் | ரூ.32,02,558 |
| 1-1-1997 முதல் 31-12-1997 முடிய கிடைத்த வருமானம் | ரூ.32,01,998 |
| 1-1-1998 முதல் 31-12-1998 முடிய கிடைத்த வருமானம் | ரூ.38,65,607 |
| 1-1-1999 முதல் 31-12-1999 முடிய கிடைத்த வருமானம் | ரூ.53,58,778 |
| 1-1-2000 முதல் 31-12-2000 முடிய கிடைத்த வருமானம் | ரூ.58,03,662 |
| மொத்தம் கிடைத்த வருமானம் | ரூ.2,14,32,603 ஆகும். |

மேலும் இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான செந்திலாண்டவர் விடுதி, வேலவன் விடுதி, ஜெயந்தி நகர் விடுதி, சிறு குடில்கள், தேவர் குடில், ஆறுமுக விலாஸ் விடுதி, வேலையா குடில் மற்றும் சண்முகவிலாஸ் குடில் எண் 3, 4, 5 ஆகிய 3 குடில்களை விரிவுபடுத்தவும், சிறு குடில்களில் 13 முதல் 26 முடிய உள்ள குடில்களில் மாடிப் பகுதிகள் கட்டுவதற்கும், தேவர் குடில் மேற்பகுதியில் மாடிகள் 2 கட்டுவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஏழுமலை, அங்காள பரமேஸ்வரி பற்றியும், திரு. சக்திவேல் முருகன் திருச்செந்தூர் பற்றியும் கேள்விகள் எழுப்பி இருக்கிறார்கள். இவை அடிப்படையில் சுற்றுலாத் தலங்களாகவும் பிரபல ஸ்தலங்களாகவும் விளங்கி வருகின்ற ஆலயங்களைப் பற்றிய கேள்விகளாக இருக்கின்ற காரணத்தால், தமிழகத்தில் இருக்கின்ற அப்படிப்பட்ட பிரபலமான ஆலயங்களில் தங்கும் விடுதிகள் பல இடங்களிலே இல்லை; அதுபோல கழிப்பிட வசதிகளும் இல்லை. இதை தனித் தனிக் கேள்வி என்ற முறையில், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், திருச்செந்தூரைப் பற்றிமட்டும்தான் அமைச்சர் சொல்லுவார். (குறுக்கீடு) மற்ற இடங்களுக்கு அமைச்சரிடம் பதில் இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் சந்தானம்.

[2002 மார்ச் 12

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்திலே இருக்கின்ற திருக்கோவில்களில் மிக அதிகமாக தங்கும் விடுதிகள் மூலமாகவும் மற்ற இனங்களின் மூலமாகவும் வருவாய் ஈட்டித் தருகின்ற கோவில் எது என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புவதோடு, பழனியில் இருப்பதுபோல, திருக்கோவில்கள் மூலமாக கல்லூரிகள் எல்லாம் நடத்தப்படுகின்றன.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; சந்தானம் திருச்செந்தூர் கோவிலோடு நில்லுங்கள். (குறுக்கீடு) திரு. என்.கே. பெருமாள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் விளாத்திகுளம் வருகை தந்தபோது. பழம்பெரும் மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயத்திறகு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெருமாள் உட்காருங்கள்; தனிக் கேள்வியாகப் போடுங்கள். திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவ்வப்போது வருகின்ற கோவில் என்பதால் பதில் அவர்களிடம் இருக்கும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். மற்ற இடங்கள் பற்றி கேள்வி வேண்டாம் என்று கூறிவிடவேண்டாம். அருள்மிகு திருவேற்காடு கருமாரியம்மன் ஆலயத்திற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருச்செந்தூருக்கும், திருவேற்காடுக்கும் ரொம்ப தூரம். திரு. எம். சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்று ஆன்மீகம் பெருக்கெடுத்து இருக்கின்ற இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புவது திருச்செந்தூரில் முந்தைய காலங்களில் எல்லாம் கடைசி வெள்ளி, முக்கிய விசேஷ காலங்களில் மட்டும்தான் கூட்டம் இருக்கும். ஆனால், தற்பொழுது தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான ஒரு புனித ஸ்தலமாக இது கருதப்படுவதால், 365 நாட்களும் திருவிழாக்கோலம் போல் கூட்டம் அதிகமாக இருந்து வருவதால், பக்தர்கள் தங்குவதற்கு இடவசதி இல்லாமல், அவர்கள் ரோடுகளிலே, கடற்கரையிலே படுத்து உறங்குகின்ற சூழ்நிலை இருக்கின்றது.

எனவே, இது ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு காலத்தில் இருந்த கோவில் என்ற காரணத்தாலும், தமிழகத்திற்கே ஒரு பொதுவான,



2002 மார்ச் 12]

முக்கியமான அறுபடை வீடுகளில் ஒன்றாக இது இருக்கின்ற காரணத்தாலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அறநிலையத் துறை மூலமாக பக்தர்கள் தங்குவதற்கு விரிவுபடுத்துகின்ற திட்டங்கள் ஏதாவது இந்த ஆண்டில் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரத்தை வைத்து தங்குவதற்கு வேண்டிய விடுதிகள் அனைத்தும் கட்டப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலைப் பற்றி, அதன் வருமானத்தைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இதைப்போல தமிழகத்திலே பிரசித்தி பெற்ற ஆலயங்கள் இருக்கின்றன; சிறிய அளவிலே இருக்கக்கூடிய திருக்கோவில்கள் இருக்கின்றன. இந்த ஆலயங்களின் மூலமாக ஆண்டுக்கு வருமானம் எவ்வளவு வருகிறது? அந்த வருமானத்திலே தங்கும் விடுதி, கழிப்பிட வசதிகளைச் செய்து தருவதற்கு இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட இருக்கிறது என்பதை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அமைச்சர் அவர்கள் இதற்கு அறநிலையத் துறை மானியக் கோரிக்கையிலேதான் பதில் சொல்ல முடியும்.

வினா எண் 3, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

3—

### கடலூரில் மருத்துவக் கல்லூரி

**•205—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூரில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கிட அரசு முன்வருமா?

[2002 மார்ச் 12

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூரில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் தலைமை மருத்துவமனை — Indian Medical Council-ன் அங்கீகாரம் தேவையென்றால் - ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு வேண்டிய தகு நிலையும், தகுதி நிலையும் பெற்று இருக்கின்ற ஒரு மருத்துவமனையாகும். அங்கே படுக்கைகள் 488-ம், மன நோயாளிகள் மற்றும் குழந்தைகள் சிகிச்சைகளுக்கான 20 படுக்கைகளையும் சேர்த்து 508 படுக்கைகள் உண்டு. 500-க்கும் மேற்பட்ட படுக்கைகள் இருக்கின்ற நிலை என்பது மட்டுமல்ல, ஒரு நாளைக்கு 5,000 பேர்களுக்கு மேல் புற நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற மருத்துவமனையாக மருத்துவக் கல்லூரி அமைக்கின்ற தகுநிலையில் ஒன்றாக இருக்கின்ற காரணத்தால், அங்கே 5000-க்கும் மேற்பட்ட புற நோயாளிகள் தினசரி சிகிச்சை பெறுகின்ற நிலை இருக்கின்றது. அதுமட்டுமல்ல, தமிழக அரசின் மூலமாக, 'ஏ-கிளாஸ்'— முதல் நிலை பிரிவு மருத்துவமனையாக கடலூர் மருத்துவமனை அங்கீகரிக்கப்பட்டு Nursing Course Diploma நடத்துகின்ற தகுதியும் பெற்றதாக இருக்கிறது. டாக்டர்கள், House Surgeon பயிற்சியைப் பெறுவதற்கான முறைகளும் அந்த மருத்துவமனையில் கற்பிக்கப்பட்டு வருவதற்கான தகுதி நிலையும் கொடுக்கப்பட்டு, டாக்டர்கள் மேல் படிப்பிற்காக பணம் கட்டி P.G. Course-க்காக பயிற்சி பெறுவதற்காகவும் கடலூர் மருத்துவமனையைப் பயன்படுத்துவதற்கான தகுதி நிலையை நம்முடைய அரசே வழங்கியிருக்கிறது. அதுமட்டுமல்ல, எந்தவிதமான அதிகச் செலவுகளும் தேவையில்லாமல் ஒரு மருத்துவக் கல்லூரி வருவதற்கான துறைகள் எல்லாம் அடங்குவதற்கான வாய்ப்போடு பெரும்பான்மையான துறைகள் ஏற்கெனவே கடலூர் தலைமை மருத்துவமனையிலே இருக்கின்றன. ஆக, இந்தச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு ஏற்கெனவே மாவட்டந்தோறும் ஒரு மருத்துவக் கல்லூரி, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற இலக்கணத்திற்கேற்ப, எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டத்தில் பரிசீலிக்கப்பட்ட இந்தக் கடலூர் மருத்துவக் கல்லூரி குறித்து இந்த அரசு நல்ல முடிவை எடுக்குமா? மருத்துவக் கல்லூரியை தொடங்குவதற்கான நிலைகளை வகுக்குமா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.



2002 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் சொன்னதைப்போல, கடலூர் மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களினுடைய மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் புற நோயாளிகளினுடைய எண்ணிக்கை, படுக்கைகளினுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றன. ஆனால், படுக்கைகளினுடைய எண்ணிக்கையை வைத்து, புற நோயாளிகளினுடைய எண்ணிக்கையை வைத்து ஒரு மாவட்டத்திலே மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுவது இல்லை. ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுவதற்கு, Medical Council of India சில norms வைத்திருக்கிறது. அதன்படிதான் அமைப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆனால் மருத்துவக் கல்லூரிகளை புதிதாகத் தொடங்குவதற்கு அரசு இரண்டுவிதமான அணுகுமுறைகளை இப்போது கையாள வேண்டியிருக்கிறது. ஒன்று, தற்போதுள்ள மருத்துவக் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளினுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்; அடுத்தது, பின்தங்கிய மாவட்டங்களில் தேவையின் அடிப்படையில், —self-need of the area— அப்பகுதியின் அவசியத்தை உணர்ந்து, அப்பகுதி மக்களின் மேம்பட்ட மருத்துவ வசதிகளை அதிகரிக்க ஏதுவாக புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைத்தல். ஆக, இந்த இரண்டு அணுகுமுறைகளின் அடிப்படையில்தான் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க இருக்கிறோம். அந்த அடிப்படையில் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு, இவற்றில் எது எது, எங்கு, எப்படி சாத்தியமோ அந்த நிலைமைக்கேற்ப முடிவு எடுக்கும்.

முற்பகல் 10-15

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Indian Medical Council அங்கீகாரம் பெறுவதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நிபந்தனையைப் புதியதாகச் சேர்த்தார்கள். அதில் மருத்துவமனையோடு மருத்துவக் கல்லூரி சேர்ந்து இருப்பதற்கான இடம் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். கடலூரைப் பொறுத்தவரையில் இடம் இருக்கிறது. மருத்துவமனையையொட்டி, மருத்துவமனைக்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அந்த விதியும்கூட பொருந்துகிறது. அதுமட்டுமல்ல, மருத்துவக் கல்லூரி அங்கே அமைவதன் மூலமாக இப்போது புறநோயாளிகளாக வருகின்ற 5000 பேர் — ஒரு புள்ளி விவரக் கணக்குப்படி ஒரு டாக்டர் புறநோயாளிகளாக வருகின்ற நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கின்றபோது 100 பேர்களுக்கு மட்டுமே அவரால் உரிய சிறந்த சிகிச்சை தரமுடியும் என்ற ஒரு கருத்து உண்டு.

ஆனால், இப்போது கடலூரிலே 33 டாக்டர்கள் மட்டுமே இருக்கின்றார்கள். இந்தச் சூழ்நிலையைக்கூட மாற்றுவதற்கு நான் சொல்வது, தமிழகம் முழுவதும் இப்போது பயிற்சி பெறுகின்ற டாக்டர்கள் என்ற முறையில் House Surgeon-களாகப் பயிற்சி பெறுகின்றவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு 'A' class பிரிவு தகுதி பெற்ற மருத்துவமனைகளிலே பயிற்சி பெறுகின்ற அந்தச் சூழ்நிலையில் 6 மாதங்கள் அந்த மருத்துவமனையிலும், அடுத்ததாக, ஒவ்வொரு பிரிவாக அவர்களுக்குள்ள பயிற்சிகளை ஆறு, ஆறு மாதங்களாக எடுப்பார்களேயானால், தமிழகம் முழுவதும் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ள நிலையை மாற்றுவதற்கும், அவர்கள் சிறந்த பயிற்சி பெறுவதற்கும் வழி வகுக்கும். ஆகவே, அந்த வகையிலேயும் கடலூரிலே மருத்துவக் கல்லூரியைத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த அரசும் முடிவு எடுக்குமா? கழக அரசு அறிவித்ததை இந்த அரசு தொடர்ந்து செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் தங்களுடைய மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று விரும்புவதிலே நான் குறை சொல்லவில்லை. ஆனால், எனக்குத் தெரிந்து கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசுகூட, கடலூரிலே மருத்துவக் கல்லூரி அமைப்பதாக எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை. கன்னியாகுமரியிலும், வேலூரிலும்தான் அமைப்பதாகச் சொன்னார்கள். எனவே, என்னைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தியினுடைய கடலூர் மாவட்டத்திற்கு, அந்தப் பகுதி மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கின்ற வகையிலே தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், கடலூர் மாவட்டத்தைவிட மிகப் பின்தங்கிய தேனி மாவட்டம் போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் எல்லாம் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கக்கூடிய அவசியம் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட பகுதிக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள், கடலூர் மருத்துவமனையிலே தற்போது 33 டாக்டர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நானும் கடலூர் மருத்துவமனைக்கு சென்ற மாதம் ஆய்வு செய்யப் போயிருந்தேன். அந்தக் குறைபாடுகளை எல்லாம் தெரிந்துகொண்டேன். அதற்குப் பிறகுதான் அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து இப்போது படிப்படியாக டாக்டர்களுடைய பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. அது விரைவிலே பூர்த்தி செய்யப்படும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேனி மாவட்ட மக்களின் சார்பாக புகழேந்திக்கு நன்றி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கடலூர், நீங்கள் விழுப்புரம். உட்காருங்கள்.

வினா எண் 4, திரு. எம். ராம்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**4—**

## மருத்துவர்களுக்குக் குடியிருப்பு

***4442—திரு. எம். ராம்குமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி, சுவாமிமலையில் இயங்கிவரும் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களுக்குக் குடியிருப்புக் கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பாபநாசம் தொகுதிக்குட்பட்ட சுவாமிமலை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்குக் குடியிருப்பு கட்டும் திட்டம் தற்சமயம் எதுவும் இல்லை.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுவாமிமலை பேரூராட்சி என்பது மிக அதிகமான மக்கட்தொகை கொண்ட பேரூராட்சி ஆகும். அதோடு மட்டுமல்ல, முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில் ஒன்றாக விளங்குகின்ற அந்தப் பகுதி, சுமார் 40 கிராமங்களுக்கும் மேற்பட்ட மக்கள் அந்த மருத்துவமனையிலே சிகிச்சை பெறுவதற்காக வருகின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. அங்கு மருத்துவர்களுக்குக் குடியிருப்பு இல்லாத நிலை இருக்கின்ற காரணத்தினாலே, பணியிலே இருக்கின்ற மருத்துவர்கள்

[2002 மார்ச் 12

அருகில் உள்ள குடந்தை நகரிலும்; தஞ்சை நகரிலும் சென்று குடியிருக்கின்ற காரணத்தினாலே, மக்கள் மிகுந்த இன்னலுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அடிப்படை சுகாதார சேவைக்குத்தான் - Primary Health Care இதற்குத்தான் - முக்கியத்துவம் கொடுத்து, முன்னுரிமை கொடுத்து இப்பொழுது கிராமப் பகுதிகளிலே இருக்கிற மக்களுக்குத் தரமான சிகிச்சை, அதுவும் குறைவான செலவில் அங்கேயே கிடைக்க வேண்டுமென்ற அந்த அடிப்படையில்தான் அதிக நிதியை ஒதுக்கீடு செய்து நல்ல திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி வருகிறது. அந்த அடிப்படையில்தான் கிராமப் பகுதிகளில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டு அங்கே Operation Theatre, X-Ray போன்ற வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்பட்டு தரமான சிகிச்சை அளிப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டாக்டர்கள் அங்கேயே தங்கி பணியாற்றக்கூடிய வகையில் குடியிருப்பு கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். முடிந்த அளவிற்கு, அதாவது பிரதான ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அங்கே குடியிருப்பு கட்டிக் கொடுத்து இருக்கிறோம். சுவாமிமலை ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில் அது துணை ஆரம்ப சுகாதார நிலையமாக இருக்கிறது. இருந்தாலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கிராமப் பகுதிகளில் இருக்கிற துணை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அங்கேயே கிராமப்புற செவிலியர்கள் தங்கி பணியாற்றக்கூடிய வகையில் இந்த ஆண்டு ஆயிரம் துணை சுகாதார நிலையங்களுக்குக் குடியிருப்பு வசதியோடு கட்டடம் கட்டித் தருவதற்கு 45 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர்கள் அங்கேயே தங்கி பணியாற்ற வேண்டுமென்பதுதான் இந்த அரசின் நோக்கம். அப்படி குடியிருப்பு இல்லாத பகுதிகளில், கிராமப்புறங்களில் பணியாற்றுகின்ற டாக்டர்களுக்கு கிராமப்புற அலவன்ஸ் கொடுத்துக் கொண்டு வருகிறோம். மாதம் 500 ரூபாய்



2002 மார்ச் 12]

அவர்களுக்குக் கொடுத்து வருகிறோம். எனவே, அந்த வகையிலே டாக்டர்கள் அங்கேயே தங்கி பணியாற்றுகின்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். எங்களுடைய அரசின் சார்பில் டாக்டர்களுக்கு வேண்டுகோளாக வைப்பது, முடிந்த அளவிற்கு டாக்டர்கள் அங்கேயே தங்கி பணியாற்ற வேண்டுமென்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திரு. கி. பாரிமோகன், திரு. வெ. கோவிந்தராஜ், திரு. ஜி.கே. மணி, திரு. பெ. பழனியப்பன், திரு. கா.பூ. முனுசாமி மற்றும் திரு. ஐ. கணேசன், கூட்டாகச் சேர்ந்து கேட்டிருக்கிற கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றிய கேள்வி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**5—**

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***527—திரு. கி. பாரிமோகன், திரு. வெ. கோவிந்தராஜ், திரு. ஜி.கே. மணி, திரு. பெ. பழனியப்பன், திரு. கா.பூ. முனுசாமி, திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) மேற்கண்ட குடிநீர்த் திட்டப் பணிகள் எந்நிலையில் உள்ளன?*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2002 மார்ச் 12

(ஆ) ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் மற்றும் சுகாதார வசதியுடன் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினை தருமபுரி மாவட்டம் முழுவதிலுமுள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 5542 குடியிருப்புகளும் பயன்பெறும் வகையில் ரூ.1008 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீட்டினைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டு நிதி உதவி மூலம் இத்திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தின் ஒட்டுமொத்த குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் சில ஆண்டுகளுக்கு முன்னால், அதாவது 1998-லே 526 கோடி ரூபாயிலே முடிவு செய்யப்பட்டது. மத்திய அரசு பொக்ரானிலே அணுகுண்டு சோதனை செய்த காரணத்தினால் ஜப்பானிலிருந்து வரவேண்டிய நிதி அன்றைக்கு நிறுத்தப்பட்டது. அதற்குப் பின்னால் இந்தத் திட்டத்திற்கு மீண்டும் ஜப்பானிலிருந்து நிதியுதவி பெறுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா? அதைப்போல பன்னாட்டு நிதி நிறுவனங்கள் என்று சொல்கிறபோது, எந்தெந்த பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி கோரப்பட்டிருக்கிறது? அங்கிருந்து அரசுக்கு இதுவரை கிடைத்திருக்கிற பதில் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஒரு திட்டத்திற்கு மட்டுமே நிதியுதவி கோரப்பட்டிருக்கிறது. மற்றும் பல திட்டங்கள் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன. அவற்றிற்கு வெளிநாட்டிலிருந்து நிதி ஆதாரம் இதுவரை தருவதாகவோ அல்லது இல்லையென்றோ தக்க பதில் வரவில்லை. எனவே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஜப்பான் நாட்டு நிதியுதவிக்காக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. கோவிந்தராஜ்.

**திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தருமபுரி மாவட்டம் வறட்சியான மாவட்டம். வறட்சிக் காலத்தில் ஹேண்ட் பம்ப் மற்றும் போர் வெல்லில் குடிநீர் அடிமட்டத்துக்குச் சென்றுவிடுகின்ற ஒரு நிலைமை இருந்து



2002 மார்ச் 12]

கொண்டிருக்கிற காரணத்தினால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டு எங்களுடைய தருமபுரி மாவட்டத்தினுடைய நீண்ட நாள் ஏக்கத்தை, தாகத்தைத் தீர்க்கின்ற வகையிலே அந்தத் திட்டத்தைச் செய்து முடிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இங்கே நிதி ஒதுக்கீடு செய்திருந்தாலும்கூட தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை அது புரட்சித் தலைவி அவர்களுடைய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால் இந்த ஆண்டே அது நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியுதவி கிடைத்தவுடன் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே சொல்லப்பட்டு இதுவரையிலே நிலுவையிலே இருக்கக்கூடிய, அந்த மாவட்ட மக்கள் எதிர்பார்க்கக்கூடிய மிகப் பெரிய திட்டம். மற்ற மாவட்டங்களிலே மிகப் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களெல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால், வறட்சியான மாவட்டம், மிகப் பின்தங்கிய மாவட்டம், அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நிலத்தடி நீரிலே புளோரைடு என்ற நச்சுத் தன்மை கலந்து, அந்த நீரைக் குடித்தால் உடல் நலம் பாதிக்கப்படும் என்று வல்லுநர்களாலே சான்று வழங்கப்பட்டு, இப்படி புளோரைடு கலந்த நீர் உள்ள மாவட்டம் என்று அரசாலே அறிவிக்கப்பட்ட மாவட்டம். இப்படி மிகப் பெரிய பாதிப்பு இருக்கிறது என்று அரசு அறிவித்திருந்தும்கூட இதுவரையிலே அந்த மாவட்ட மக்களுக்குக் குடிநீர் வழங்காத நிலை மிக வேதனையாக இருக்கிறது.

அதுமாத்திரமல்ல, அந்த மாவட்ட மக்கள் எல்லாம் கர்நாடகத்திலேயிருந்து வரக் கூடிய காவிரியை, அந்த மாவட்டத்தின் உள்ளே போகக் கூடிய காவிரித் தண்ணீரை, பார்க்க முடிகிறதே தவிர குடிக்க முடியவில்லை. ஆக இப்படிப்பட்ட நிலையிலே அரசினால் கடந்த காலங்களிலே நிறைவேற்றுவதாகச் சொல்லப்பட்டு வந்தாலும்கூட, பொக்ரான் அணு குண்டு வெடிப்பின் காரணமாக ஜப்பான் நாடு

வழங்குவதாகச் சொல்லியிருந்த நிதி நிறுத்தப்பட்டிருக்கிறது. சமீபத்திலே ஜப்பான் தடையை விதித்திருக்கிறது. ஆக, இந்த நிலையிலே ஜப்பான் நிதியை அரசு பெறப்போகிறதா? அப்படிப் பெறவில்லை என்று சொன்னால் உலக வங்கித் திட்டத்திலே, அல்லது எல்.ஐ.சி.யிடமிருந்து நிதி பெற்று எப்படியாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அந்த மாவட்ட மக்கள் எல்லாம் குரல் கொடுக்கிறார்கள். போராடிக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்திலேகூட நாங்கள் மனிதச் சங்கிலிப் போராட்டம் மாவட்டம் முழுவதும் நடத்தினோம். இப்படி மக்கள் எதிர்பார்க்கக்கூடிய இந்தத் திட்டத்தை காலம் தாழ்த்தாமல் நிறைவேற்ற வேண்டுமென்பது அந்த மாவட்ட மக்களின் கோரிக்கை. ஒட்டுமொத்த மாவட்டத்துக்கு எத்தனை ஒன்றியங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் என்பதைப் பற்றியெல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அந்த மாவட்டம் முழுவதும், என்னுடைய பெண்ணாகரம் தொகுதி உட்பட, வறட்சியினுடைய அடிப்படையைக் கருதி போர்க்கால அடிப்படையிலே நிதி ஒதுக்கீடு செய்து விரைவிலே திட்டம் நிறைவேற்ற ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களுடைய கருத்தினை அரசு பரிசீலித்து விரைவான நடவடிக்கையின் மூலம் தீர்த்து வைப்பதற்கு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தருமபுரி மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்த மக்களின் பிரச்சினையாக இது இருக்கிறது. சில மாவட்டங்களில் விவசாயம் செய்வதற்காகத்தான் நீருக்காகப் போராடிக் கொண்டிருப்பார்கள். ஆனால், தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் குடிப்பதற்கே தண்ணீருக்காகப் போராடிக் கொண்டிருக்கிற காலத்திலே இருக்கிறோம். வறட்சி வருகிறபோதெல்லாம் எங்களுக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. தருமபுரி மாவட்டத்தின் வழியாக அந்த ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி இருந்தாலும்கூட, இங்கே உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு எட்டாக் கனியாக இருக்கிறது. சென்ற ஆட்சிக் காலத்தில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே, பல்வேறுபட்ட நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, தருமபுரி மாவட்டம் ஒடுக்கப்பட்ட ஒரு மாவட்டமாக இருந்தாலும் அது





ஒரு வளர்ந்து வருகிற மாவட்டமாக இருந்தது. ஆனால், இன்றைக்கு நீருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம். அது மழை வளம் குறைந்த மாவட்டம். அங்கே குடிப்பதற்குச் சுத்தமான நீர் கிடைப்பதில்லை. ஆகவே, எங்களுடைய மாவட்ட மக்களுடைய அத்தியாவசியப் பிரச்சினையான இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், எங்கள் மாவட்ட மக்களுடைய ஒட்டுமொத்த நலன் கருதி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சென்ற நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிதியாண்டிலே அதை மென்மேலும் சீர்படுத்தி ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே சொன்னதைப்போல நிதி கிடைத்தவுடன் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் இருக்கின்ற அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுடைய முதன்மையான கோரிக்கை. இது எங்கள் மாவட்டத்தினுடைய உயிர்நாடிப் பிரச்சினை. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த 1991 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே தருமபுரி மாவட்டத்தில் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து உரிய அரசு அதிகாரிகளை நியமித்தார்கள். ஆனால், அடுத்து வந்த ஆட்சி நிதானப்படுத்தியதன் காரணமாக உடனடியாக நிறைவேற்றப்பட முடியாமல் 600 கோடி ரூபாயில் முடிய வேண்டிய இந்தப் பணி இப்போது 1008 கோடி ரூபாய் அளவிற்குச் சென்றிருக்கிறது. இதற்கு மேலும் அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொன்னதைப்போல அந்த மாவட்டத்திலே இருக்கின்ற நிலத்தடி நீர் நச்சுத்தன்மை வாய்ந்த நீராக இருக்கிறது. ப்ளோரைடு கலந்திருக்கிற காரணத்தினால் அந்த மாவட்டத்தில் இருக்கிற மக்களை நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், அவர்கள் பல்லைப் பார்த்தாலே மஞ்சளாக இருக்கும். அந்த நச்சுத்தன்மை உடலில் கலக்கின்ற

[2002 மார்ச் 12

காரணத்தினால் எலும்பு முறிவு விரைவிலே ஏற்பட்டு விடுகிறது. ஏதாவது ஒரு சைக்கிளிலேயிருந்து கீழே விழுந்தால்கூட உடனடியாக கை உடைந்துவிடும், கால் உடைந்துவிடும். ஏன் இந்த நிலை என்று சொன்னால், அந்த மாவட்டத்திலே இருக்கின்ற நிலத்தடி நீரைக் குடிக்கின்ற காரணத்தினால் வருகின்ற அவல நிலைமை. இந்த அவல நிலைமையைப் போக்குவதற்காகத்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991-லேயிருந்து 1996 வரை அந்த இடைப்பட்ட ஆட்சிக் காலத்தில் இந்த ப்ளோரைடை நீக்குகிற ஸ்கீம் ஒன்றைக் கொண்டு வந்து, கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் அளவிலே பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம் நிதி வருகிறது என்பதைவிட—இப்போது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கவர்னர் உரையிலே இந்த ஆண்டு 2300 கோடி ரூபாய் தமிழகத்திலே இருக்கிற ஊரகப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குகிற திட்டத்தை அறிமுகப்படுத்த இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள்.— இந்த 2300 கோடி ரூபாயில், குறிப்பாக இந்த மாவட்டத்திற்கு, வளர்ந்து வருகின்ற மாவட்டத்திற்கு இது புரட்சித் தலைவியின் மாவட்டம் - இந்த மாவட்டத்திற்கு இந்த நிதியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒகேனக்கல் திட்டத்தைப் பற்றித்தான் பதில் இருக்கும் அவரிடம்.

**திரு. கா. பூ. முனுசாமி:** இந்த நிதியிலிருந்து செய்ய வாய்ப்பு இருக்குமா? அதோடு மட்டுமல்லாமல் ஏற்கெனவே ஜப்பான் நாடு நமக்கு நிதி உதவி செய்ய இருந்தது. பொக்ரான் அணுகுண்டு சோதனையின் காரணமாக அது நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அரசு முழு முயற்சி செய்து இந்த நிதியாண்டிலேயே அந்த மாவட்டத்திற்கு அந்தக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பணம் வரும்போது எடுத்துக்கொள்ளப்படும் என்கிறார். வெறும் கையால் முழம் போட முடியுமா? வரட்டும். அடுத்து, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்த மக்களுடைய மனக் குறையைப் பற்றி கட்சி வேறுபாடின்றி இங்கு அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் தங்களுடைய உள்ளக் குமுறல்களை ஏழையெளிய பாட்டாளி வர்க்கத்தினுடைய குரலாக எடுத்துரைத்தார்கள். அந்த வகையிலே நம்முடைய பேரவை...



2002 மார்ச் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், என்ன கேட்டாலும் அமைச்சர் அதைத்தான் சொல்லப் போகிறார். பணம் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும் என்றுதான் சொல்லப் போகிறார்.

**திரு. ஐ. கணேசன்:** 1998-ல் ஆய்வு செய்து ரூ.526 கோடிக்கு தீட்டிய திட்டம் இன்று ரூ.1008 கோடி அளவிற்கு வளர்ந்திருக்கிறது. இன்னும் காலம் செல்லச் செல்ல அது பெரும் தொகையாக, கிட்டத்தட்ட ரூ.1500 கோடியைத் தாண்டக்கூடிய நிலைமை ஏற்பட்டு அரசுக்குப் பெரும் சுமையாக ஆகிவிடும். ஆகவே, மத்திய அரசுக்கு நீங்கள் எழுதிய கடிதத்திற்கு மத்திய அரசு என்ன பதில் அளித்தது? இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன? அதற்கு தமிழக அரசு மேலும் எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய திட்டத்திற்காக தமிழக அரசு 21-01-2002 அன்று மத்திய அரசிற்குக் கடிதம் அனுப்பியுள்ளது. மத்திய அரசிடமிருந்து இதுவரை பதில் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு வருகின்றபோது இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்து, இந்த அரசு குடிநீர்ப் பிரச்சினைக்காக 2300 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பது ஆளுநர் உரையிலே கூறியிருப்பதை எல்லாம் நமது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே, தருமபுரி மாவட்டத்திற்குக் குடிநீர் கொடுப்பதற்கு, தருமபுரி மாவட்ட மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு முன்னுரிமை கொடுத்து எடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலே அமைந்திருக்கிற இந்த அரசு நிச்சயமாக முழு முயற்சியை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

6—

## பாமாயில் வழங்கல்

***5934—திரு. பி. கே. சேகர்பாபு:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகளில் நிறுத்தப்பட்ட பாமாயிலை மீண்டும் வழங்க கருத்துரு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து எத்தனை கிலோ வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமையல் எண்ணெய்களிலே பாமாயில் எண்ணெய் எல்லாவிதமான சத்து மிகுந்தது என்று அறிமுகப்படுத்தப்பட்டு மக்களால் பயன்படுத்தப்பட்டது. தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை இந்த பாமாயில் எண்ணெய் அரசு நியாய விலைக் கடைகளில் கிடைத்திருக்கிறது. மக்களின் வாங்கும் சக்திக்கேற்ப விலை குறைவாக உள்ளதாலும், சத்துள்ளதாகவும் இருப்பதால் இந்த பாமாயில் எண்ணெய் தொடர்ந்து அரசு நியாய விலைக் கடைகளில் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு மாநிலத்திற்கு வழங்கும் ஒதுக்கீட்டின் அடிப்படையிலேதான் பொது விநியோகத் திட்டத்தில் இந்த பாமாயில் எண்ணெய் வழங்கப்பட்டது. மைய அரசு மாநிலத்திற்கு பாமாயில் வழங்குவதை நிறுத்திவிட்டதால், பொது விநியோகத் திட்டத்தில் பாமாயில் விற்பனை 01-12-1999 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வெளி மார்க்கெட்டிலே பாமாயில் எளிதாகவும், குறைந்த விலையிலும்





கிடைக்கின்ற காரணத்தினாலே, மத்திய அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறுத்தியிருக்கின்ற காரணத்தினாலே, இப்போது அந்தத் திட்டம் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வெளி மார்க்கெட்டில் கிடைக்கும் எண்ணெய்களின் விலை ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவும், சாதாரண மக்கள் வாங்க முடியாத அளவிற்கும், உற்பத்தியாளர்களே விலையை நிர்ணயம் செய்துகொள்கின்ற அளவிற்கும் சூழ்நிலை நாட்டிலே நிலவுகின்றமையால், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், எல்லா ரகங்களும் ஒரு கிலோவிற்கு இவ்வளவுதான் என்று விலையை அரசு நிர்ணயம் செய்ய முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாமாயிலை வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்து மத்திய அரசாங்கம் இங்கே வழங்கிக்கொண்டிருந்தது. அது இப்போது எளிதாகவும், மக்களுக்கு நிறையவும் கிடைக்கின்ற காரணத்தினாலே, நல்ல தரத்தோடும் கிடைக்கின்ற காரணத்தினாலே, இந்தத் திட்டத்தைப் பொது விநியோகத் திட்டத்திலே மத்திய அரசாங்கம் நிறுத்தியிருக்கின்ற காரணத்தினாலே, இதைப் பற்றி இப்போது பரிசீலிப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்திலே இந்த மாதத்திற்கான உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நியாய விலைக் கடைகளில் பாமாயில் வழங்குவது பற்றி மட்டும்தான் கேட்க வேண்டும். திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே. சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எண்ணெய் வெளி மார்க்கெட்டில் மலிவான விலையில் கிடைக்கின்றதால் மத்திய அரசு இதை நிறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அது சரியான தகவலாக என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. உண்மையில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ரேஷன் கடைகளில் கொடுக்கப்படுகின்ற பொருள்களின் விலையைவிட கூடுதல் விலையிலேதான் பொருள்கள் வெளியிலே விற்கப்படுகின்றன. ஆகவே, அத்தியாவசியப் பொருள்களை ரேஷன்

[2002 மார்ச் 12

கடைகளில் விநியோகிக்கின்ற திட்டத்தை விரைவுபடுத்துகின்ற, விரிவுபடுத்துகின்ற அடிப்படையில் நம்முடைய மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா? உதாரணமாக மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் 14 அத்தியாவசியப் பொருள்கள் ரேஷன் கடைகளில் விநியோகிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இங்கே விநியோகிக்கப்பட்டு வந்த பாமாயில் போன்றவை நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதுகுறித்து மத்திய அரசுடன் நம்முடைய மாநில அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு, மீண்டும் அதை மலிவு விலையில் நியாய விலைக் கடைகளில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு இந்த பாமாயில் வெளி மார்க்கெட்டிலே எளிய முறையிலே கிடைக்கின்றதாலே, மக்களும் அதை வாங்குகின்ற காரணத்தினாலேதான் மத்திய அரசு இந்தத் திட்டத்தை நிறுத்தியிருக்கிறது. ஆகவே, மத்திய அரசு இதை மறுபரிசீலனைக்குக் கொண்டு வந்து, பொது விநியோகத் திட்டத்தில் விநியோகிக்க வேண்டுமென்ற நிலை வருகிறபோது, அரசு நி[illegible]மாக அதை ஆலோசிக்கும்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7,திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

7—

### நகரங்களில் வீட்டுத் தோட்டங்கள்

***6845—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை போன்ற பெரிய நகரங்களில் பசுமை ஏற்படுத்தவும், சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படச் செய்யவும், வீட்டுத் தோட்டங்கள், மாடித் தோட்டங்கள் அமைக்க செய்முறைப் பயிற்சிகள் நடத்துவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2002 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சென்னை போன்ற பெரிய நகரங்களில் பசுமை ஏற்படுத்தவும், சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படச் செய்யவும், வீட்டுத் தோட்டங்கள், மாடித் தோட்டங்கள் அமைக்க செய்முறைப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் பிற நகரங்களில் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்பாடு அடையச் செய்ய மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் வீட்டுத் தோட்டங்கள், மாடித் தோட்டங்களைப் பராமரிக்க பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில், சென்னை போன்ற நகர்ப்புறங்களில் வீட்டுத் தோட்டங்கள் அமைப்பதற்கு மாடித் தோட்டங்கள் அமைப்பதற்குத் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திரு. கே.என். இலட்சுமணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

8—

### பயிர் இன்சூரன்ஸ் திட்டம்

***9725—திரு. கே. என். இலட்சுமணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய அரசு அறிமுகப்படுத்திய பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் வேளாண் பயிர்களுக்கு காப்பீட்டுத் திட்டம் 1985-86 முதல் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, பொது காப்பீட்டுக்

[2002 மார்ச் 12

கழகத்தின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அறிமுகப்படுத்திய, பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை, தமிழ்நாடு அரசு கொஞ்சம் விரிவாக அறிமுகப்படுத்தி, தமிழக விவசாயிகளுக்குப் பயன் அளிக்குமாறு செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** தமிழ்நாட்டு வேளாண் பயிர்களுக்கு காப்பீட்டுத் திட்டம் தேவைப்படுகிறபோது, இயற்கைச் சீற்றத்தால், வறட்சியால், வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படுகிறபோது, முறையாக கணக்கு எடுக்கப்பட்டு அதற்குத் தேவையான உதவிகள் இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலமாக அளிக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இலட்சுமணன், கேளுங்கள்.

**திரு. கே. என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்தச் சட்டமன்றக் கூட்டத்தின் தொடக்கத்தில் ஆளுநர் உரையில் ஆளுநர் மூலமாக இந்த அரசு அறிவித்திருக்கிறது. சமீபத்தில் வெள்ளத்தால் மிகுந்த பயிர்ச் சேதம் ஏற்பட்டபோது, சுமார் 59 கோடிதான் இந்த அரசால் கொடுக்க முடிந்தது; அது மிக மிகக் குறைவுதான்; அதனாலே மத்திய அரசிடம் இன்னும் அதிகமாகக் கேட்கப்பட்டிருக்கிறது; வந்தால் கொடுக்கப்படும் என்ற ஓர் அவல நிலையைச் சுட்டிக் காண்பித்திருக்கிறார்கள். விவசாயிகள் நம்முடைய நாட்டினுடைய உயிர்த் தொழிலாக, பயிர் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்வதற்கு ஒரு காப்பீடு வேண்டும். வெள்ளத்தாலும், வறட்சியாலும் வாடுகின்ற மக்களுக்கு தமிழக அரசு முன்னுரிமை கொடுத்து அந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் செயல்பட்டால் இந்தப் பற்றாக்குறை என்கின்ற அவல நிலையைப் போக்கமுடியும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்படுகிறபோது, அதற்கென்று ஒரு சில வழிமுறைகள், நெறிமுறைகள் இருக்கின்றன. அந்த முறைகளைக் கையாண்டுதான் எவ்வளவு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக்



2002 மார்ச் 12]

கணக்கெடுத்து, அதற்குத் தகுந்தாற்போல, விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. அந்த இன்சூரன்ஸ் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்ற நேரத்தில், கடுமையாக பாதிக்கப்படுவது வாழை விவசாயம். இன்று வாழை விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிற ஏழை எளிய மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பதால், வாழையைப் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் உட்படுத்துவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா?

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர் இன்சூரன்ஸ் திட்டம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வெள்ளத்தால், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டால் இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலமாக வழங்கப்படுவதாக அறிவித்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த, நல்ல விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்தான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அநேகமாக வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறபோது கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் பெற்றிருக்கிற விவசாயிகள் மட்டுமே அதில் பயன் பெறுகிறார்கள். அதிலே கடன் பெறாத விவசாயிகள் பயன் பெறுவதில்லை. ஆகையால் தனி நபர் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு மத்திய அரசிடத்திலே மாநில அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா? அப்படி மேற்கொள்கிறபோது விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற நட்டத்திற்காக அவர்களுடைய பயிர் நட்டத்திற்காக கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கக்கூடிய அந்தக் கடனிலே இருந்து ஈடு செய்து கொள்கின்ற ஒரு முறை இன்றையதினம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்போல அரசுக்கும் நட்டம் இல்லாமல், விவசாயிகளுக்கும் நட்டம் இல்லாமல் இதைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? ஏனென்றால் எல்லோருக்கும் வழங்கப்படும் என்று சொல்லிவிட்டு, சமீபத்திலே அப்படி வழங்கப்படவில்லை. ஏற்கெனவே வழங்கியதுகூட இன்னும் வழங்கப்படாமல், விவசாயிகளுக்கு

[2002 மார்ச் 12

பணம் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கும் உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அமைச்சர் அவர்களிடத்திலே பதிலை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தால் அழிவுகள் ஏற்படுகிறபோது, பயிர்ச் சேதங்கள் ஏற்படுகிறபோது, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல சில வழிமுறைகளைப் பயன்படுத்தித்தான் தரவேண்டும் என்கின்ற சட்டம் இருக்கிறது. ஓரிடத்திலே இயற்கைச் சீற்றத்தால் பாதிப்பு ஏற்பட்டது என்று சொன்னால், ஒவ்வொரு யூனியனிலும், ஒவ்வொரு பிளாக்கிலும் 18 இடங்களிலே அதற்கான சேம்பிள்—மாதிரி எடுக்கப்பட்டு, அறுவடை செய்யப்பட்டு, அதற்கு முன்னால் 3 ஆண்டு காலம் தொடர்ந்து எப்படி செய்யப்பட்டது, அப்போதுள்ள நிலைமை என்ன என்பதை எல்லாம் பார்த்து, சராசரியாக எவ்வளவு மகசூல் தந்தது என்பதை எல்லாம் பார்த்து, அதற்குத் தகுந்தாற்போல் தற்போது எவ்வளவு குறைந்துள்ளது என்பதை அறிந்து, அதற்குரிய நட்டஈடு இன்சூரன்ஸ் மூலமாகத் தரப்படுகிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே ஏற்பட்ட அடைமழையின் காரணமாக பண்ருட்டி தொகுதியில் இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்ட உளுந்து பயிர் முளைத்து, அந்தப் பகுதி மக்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உளுந்து முளைப்பு பற்றி சொல்லக்கூடாது. இது பயிர் இன்சூரன்ஸ் திட்டம் பற்றிய கேள்வி.

அடுத்து, வினா எண் 9, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர். (குறுக்கீடு) உங்கள் தலைவர் கேட்டுவிட்டார். சரி. திரு. வை. சிவபுண்ணியம், கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. இங்கே நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அந்தச் செய்தி, குறிப்பாக மத்திய அரசாங்கத்தாலே தொடர்ந்து இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக நாகை, திருவாரூர் மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அறிவிக்கப்பட்டதற்குப் பின்னாலேதான் இந்தப் பயிர் இன்சூரன்ஸ் திட்டம் கொண்டுவரப்பட்டது. இதிலே எங்களுடைய தலைவர்



2002 மார்ச் 12]

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி கேட்பது என்னவென்றால், குழு முறையிலே இருக்கின்ற திட்டத்தை மாற்றி விவசாயிகள் பயன்பெறத்தக்க வகையிலே தனித்தனியான முறையிலே விவசாயிகள் பிரிமியம் செலுத்துவதற்கும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் திட்டத்தின்படியே, நேரடியாக அந்தத் திட்டத்தின் மூலமாக காப்பீட்டுத் தொகையை வழங்குவதற்குமான ஒரு புதிய பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு மத்திய அரசாங்கத்தை நம்முடைய மாநில அரசாங்கம் வலியுறுத்துமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சட்டத்தில்—பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் அது ஒரு பகுதியைத்தான் பாதிக்கும். வெள்ளமாக இருந்தாலும் சரி, வறட்சியாக இருந்தாலும் சரி, அது ஒரு தனி நபருக்கு மட்டும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. அப்படித்தான் அரசு கருத்துரு கொண்டிருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில்தான் பயிர் பாதுகாப்புத் திட்டம் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆலோசனைகளை நாம் யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-50*

9—

## மகளிர் சுய உதவிக் குழுக்கள்

***261—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்தி, பயனுள்ள வகையில் செயல்படுத்திட அரசிடம் புதிய திட்டம் உள்ளதா?

[2002 மார்ச் 12

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஏராளமாக இருக்கின்றன. அவை எத்தனை எண்ணிக்கை அளவிலே இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, குறிப்பாக இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்துகிற வகையிலே ஏதாவது புதிய திட்டம் இருக்கிறதா என்று கேட்டேன். ஒரே வரியிலே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விரிவாகச் சொல்வார்கள் என்று கருதுகிறேன். இதிலே குறிப்பாக பல இடங்களிலே இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெயரளவுக்குத்தான் இருக்கின்றன. சில இடங்களிலே அவர்கள் ஓரளவு கடன் பெற்று செயல்படுத்துவதற்காக சில குறிப்பிட்ட எண்ணிக்கையிலேதான் செயல்படுத்துகிறார்கள். பொதுவான நிலையைப் பார்த்தால் மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்றாலே அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதற்கு அவர்களைப் பயன்படுத்துகிறார்கள் என்ற ஒரு கருத்துதான் நிலவுகிறது. ஆகவே, அதனை மாற்றி மகளிருடைய முன்னேற்றத்திற்கான முயற்சியாக இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு எல்லா வகையிலேயும் பயன்பெறத்தக்க வகையிலே ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்குலத்தின் நலம் காக்கும் பொன்மனத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையின்கீழ் செயல்படும் அரசு இது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் எத்தனை பேர் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். பிப்ரவரி மாதம் 2002 முடிய 1 இலட்சத்து 4 ஆயிரத்து 282 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்களிலே இடம் பெற்றிருக்கிற மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 17 இலட்சத்து 98 ஆயிரத்து 348. இவர்களில் தொழில் முனைவோர் பயிற்சி பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்களாவர்.



2002 மார்ச் 12]

இதுவரை ரூ.16,631.87 இலட்சம் இக் குழுக்களால் சேமிக்கப்பட்டு அவர்களது முன்னேற்றத்திற்குப் பயன்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலை இந்த அவைக்குச் சொல்லியிருக்கிறார்கள். அரசு விழாக்களில் பங்கு பெறுவதற்கு சுய உதவிக் குழு உறுப்பினர்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பது தவறான தகவல். அரசு விழாக்களில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் எந்தெந்த வகையிலே பயிற்சி பெற வேண்டும் என்று அந்தக் குழுக்களைச் சந்திக்கக்கூடிய, அறிவுரை சொல்லக்கூடிய பயிற்சியாளர்கள் வருகிறபோது, அந்தக் குழு உறுப்பினர்களை அங்கே அழைத்து அவர்களுக்குத் தெளிவுரை சொல்வதற்காக அவர்கள் அழைக்கப்படுகிறார்களே தவிர அரசு விழாக்களிலே பங்குபெறுவதற்கு அழைக்கப்படுவதில்லை. நடப்பு 2001-2002-ம் ஆண்டில் மட்டும் அவர்கள் அழைக்கப்படுவதில்லை. நடப்பு 2001-2002-ம் ஆண்டில் மட்டும் 1,18,240 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி 8 துறைகள் மூலம் 1,18,240 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டு 30 மாவட்டங்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதே தவிர அவர்கள் கூடிப் பேசுவதற்கான இட வசதி இல்லை. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு கிராமப்புறங்களிலே மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு கோரிக்கைகளைச் சொல்கிறார்கள். அவர்களுக்கான கட்டடம் கட்டித் தரப்படுமா? அல்லது பஞ்சாயத்து அலுவலகங்களிலேயாவது அந்தக் கூட்டங்களை நடத்துவதற்கு அரசு அனுமதியளிக்க ஆவன செய்யுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூடிப் பேசுவதற்கு அந்தந்த பஞ்சாயத்து அலுவலகங்களிலேயே மாதத்திற்கு ஒரு முறையோ, வாரத்திற்கு ஒரு முறையோ கூடிப் பேச வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள் அனைத்துமே பெரும்பாலும் நலிவுற்று, நசிவுற்று இருக்கின்ற இன்றைய காலகட்டத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் என்பது கிராமப்புறங்களைக் காட்டிலும் நகர்ப்புறங்களை மிகமிகக் கடுமையாகக்

[2002 மார்ச் 12

கொடுமையாகத் தாக்கியிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். கோவை மாநகரை எடுத்துக்கொள்வோமானால் ஓடிக்கொண்டிருக்கிற ஆலைகளெல்லாம் மூடிக்கிடக்கின்ற இன்றைய நிலையிலே இலட்சக்கணக்கான மககள் உழைப்புக்கு வழியில்லை; பிழைப்புக்கு வகையில்லை என்ற நிலையிலே பெரும்பாலும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நகர்ப்புற மகளிரும் பயன்பெறும் வகையிலே இன்றைக்கு ஊரகத்தில் மட்டுமே பயன்பாட்டில் இருக்கின்ற இந்த சுய உதவிக் குழுக்கள் நகர்ப்புற நங்கையருக்கும் நீட்டிக்கப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சமீபத்திலேதான் ஊரகப் பகுதிகளிலே மட்டுமே அமைக்கப்பட்டு வந்த சுய உதவிக் குழுக்கள் நகர்ப்புற பகுதிகளிலேயும் செயல்படுத்தப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. பூ. முனுசாமி.

**திரு. கா. பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுய உதவிக் குழுக்கள், பொருள் ஈட்டுவதற்காக நிர்வகிக்கப்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. கிராமங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கிற இலட்சக்கணக்கான ஏழை பெண்கள் சமூக ரீதியாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த சுய உதவிக் குழுக்களின் வாயிலாக ஒரு சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிலையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு திட்டங்களை வகுத்துள்ளதா, அப்படி வகுக்கப்பட்ட திட்டங்கள் என்ன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய உதவிக் குழுக்கள் மூலமாக பல்வேறு விழிப்புணர்ச்சிகளை பெண்கள் மத்தியிலே ஏற்படுத்துவதற்கு விழிப்புணர்ச்சி முகாம்களை அந்தந்த ஒன்றிய அளவில் அல்லது கிராம அளவிலே சுய உதவிக் குழு உறுப்பினர்களே பயிற்சி அளிப்பதற்கு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்துவதற்கு அவர்களுக்கு ஊக்கப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 மார்ச் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. சி. சண்முகம். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**10—**

### வேலை வாய்ப்பு

***3350—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட பட்டாபிராம், பூவிருந்தவல்லி பேரூராட்சிப் பகுதியைச் சேர்ந்த சென்னீர்குப்பத்திலுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது சம்பந்தமாக திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்பு அளிக்க பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத் திட்டங்களின்கீழ் பயனடைய திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட பட்டாபிராம், பூந்தமல்லி பேரூராட்சிப் பகுதியைச் சேர்ந்த சென்னீர்குப்பத்திலுள்ள ஊனமுற்றவர்களும், திருவள்ளூர் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலரை அணுகினால் தகுதிக்கேற்ப பயன் பெறலாம்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்கள் பலர் படித்துவிட்டும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டும் காத்திருப்பவர்கள் எத்தனை பேர் என்றும், அரசாங்க வேலையில் இதுவரை எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்றும் அறிய விரும்புகிறேன். படிக்காதவர்கள் வேலை பெற முடியாமல் சுய தொழில் செய்ய, அவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவி தேவை என்றும் கேட்டிருக்கிறார்கள். மேலும், ஊனமுற்றவர்கள் சிலர் திருமணம் ஆகாமலும், திருமணம் ஆனவர்கள் மனைவி, குழந்தை குட்டிகளுடன்

கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசு அறிந்து, அவர்களுக்கு விடிவுகாலம் ஏற்படுத்த முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோரை மிகவும் பரிவோடும் பாசத்தோடும் கவனித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு ஆளுநர் உரையிலே ஊனமுற்றவர்களை மனவளர்ச்சி குன்றியவர்களை கருணை அடிப்படையிலே கவனிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இதுவரை நம்முடைய தமிழ்நாட்டில் 10 இலட்சம் பேர் ஊனமுற்றவர்கள் இருப்பதாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், கிராமங்களிலே இருப்பவர்கள் பதிவு செய்யாதவர்களைக்கூட மாவட்ட அளவிலே கருத்தரங்குகள் மூலமாக அவர்களுக்கு நோட்டீஸ் விநியோகம் செய்து கலந்துகொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுத்து, அதன் மூலமும் கண்டறியச் செய்வதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. அரசுப் பணிகளில் 'சி' மற்றும் 'டி' பிரிவுகளில் தகுதி வாய்ந்த உடல் ஊனமுற்றோருக்கு 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளித்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு 18 வயது முதல் 55 வயதிற்குட்பட்ட உடல் ஊனமுற்றோருக்கு ரூபாய் 2,000 அல்லது மூன்றில் ஒரு பங்கு அரசு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் மாநிலம் முழுவதும் ஆண்டுதோறும் ஆயிரம் பேருக்கு வழங்கப்படுகிறது. இதுதவிர, பெட்டிக் கடை அமைப்பதற்கு 5,000 ரூபாய் அல்லது மூன்றில் ஒரு பங்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் ஆண்டுதோறும் மாநிலம் முழுவதும் 500 பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன் கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப் பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

1. திரு. பி. ஆர். சுந்தரம்
2. திரு. அ. பாப்பா சுந்தரம்
3. திரு. ப. இராஜரெத்தினம்
4. திரு. எம். ஏ. ஹக்கீம்
5. திரு. செ. கு. தமிழரசன்
6. திரு. லா. சந்தானம்

## 3. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002-ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

[2002 மார்ச் 12

முற்பகல் 11-00

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் முன்மொழிதல். திரு. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** என்னை வாழவைத்த தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்:

"2002 ஆம் ஆண்டு மார்ச திங்கள் 9 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு (@) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல். திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. இராஜரெத்தினம் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடங்குதல். திரு. ப. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளன்மையோடு வாரி வழங்குகின்ற வான்மேகம் நெஞ்சம்கொண்டு, கள்ளச் சிந்தை கொண்டு வரும் பகையைத் துள்ளி எழுந்து துண்டாடி, தூளாக்கி, தமிழகத்திலே மீண்டும் பொற்கால ஆட்சி நடத்திக்கொண்டு, காலத்தின் கொடையாய், கற்பகச் செல்வமாய், ஞாலப் புதுமையாய், நம்மனோர் மகிழ நாற்றிசையும் கூடிநின்று போற்றிப் புகழ்ந்திட, ஆற்றல்சால் அறிவு மேதையாய் தோன்றி, தமிழகத்திலே அரசு வீற்றிருந்து முறைசெய்து காப்பாற்றும் முத்தமிழ் வித்து, நம் திராவிடத்தின் சொத்து, இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பணிவுகலந்த வணக்கத்தைத் தெரிவித்து என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

(@) பக்கங்கள் 219 முதல் 259 வரை இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



2002 மார்ச் 12] [திரு. ப. இராஜரெத்தினம்]

பேரவைத் தலைவர் அவர்களே, பொன் நகை எதுவும் வேண்டாம், புன்னகை ஒன்றே போதும் என்கின்ற இலட்சிய நோக்கத்தோடு இன்றைக்கு அம்மா அவர்கள் அரியணையிலே அமர்ந்திருக்கிறார்கள்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறார். அந்தக் காலத்திலே பழங்கால மக்கள் சொல்வார்கள். மன்னரைப் பார்க்கின்ற நேரத்திலே,

'திருவுடை மன்னரைக் காணின்
திருமாலைக் கண்டேன்'

என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு இன்றைக்கு தமிழ்ப் பெருங்குடி மக்களுடைய தமிழ்க் கடவுளாக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாக ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன் நகை எதுவும் வேண்டாம், புன்னகை ஒன்றே போதும் என்ற சீரிய இலட்சியத்தை மனதிலே தேக்கி வாழுகின்ற வரலாறாய், வரலாற்றின் ஒளிவிளக்காய், தங்கத் தமிழகத்தின் சிங்கத் தலைவியாய் எங்களுடைய அம்மா அவர்கள் அரியணையிலே அமர்ந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடானுகோடி கடைகோடி தொண்டர்களிலே ஒருவனாக இருந்த, தமிழகத்திலே எங்கோ ஒரு மூலையிலே, சாதாரண ஒரு போலீஸ்காரர் குடும்பத்திலே பிறந்த என்னை 1998-இலே நாடாளுமன்ற உறுப்பினராக்கி, 1998-இலே தான் வழிநடத்துகின்ற ஒரு மகத்தான சக்திமிக்க இயக்கமாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே மிகச் சிறந்த பதவி என்று சொல்லப்படுகின்ற மாவட்டக் கழகச் செயலாளர் என்கிற ஒரு பதவியை ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவனான எனக்குக் கொடுத்து, 1999-இலே மீண்டும் பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதியிலே போட்டியிடுகின்ற நல்ல வாய்ப்பைக் கொடுத்து, இன்றைக்கு அமைந்திருக்கின்ற இந்தச் சிறப்புமிகு 12ஆவது சட்டப் பேரவையிலே பெரம்பலூர் சட்டமன்றப் பேரவையின் தொகுதி உறுப்பினராக்கி, எனக்கு வாழ்வளித்த அன்னையாம், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்கள் பாதத்தை நான் மீண்டும் வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவைக்கு அளித்த உரையின் மீது நன்றி பாராட்டுகின்றவர்களாக இன்றைக்கு நாம் நின்று கொண்டிருக்கிறோம். ஆளுநர் உரையைப் பிரித்துப் படிக்கின்ற நேரத்திலே ஆளுநர் உரையினுடைய இரண்டாவது பத்தியிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

2001-லே கொந்தளிப்பான நிகழ்வுகளுக்குப் பின் அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று ஆளுநர் உரையிலே கூறியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி 2001-ஆம் ஆண்டிலே ஏற்பட்ட கொந்தளிப்பான நிகழ்வுகளுக்கு யார் காரணம் என்று இன்றைக்கு நாம் நினைத்துப் பார்க்கக் கூடியவர்களாக இங்கே குழுமியிருக்கின்றோம்.

*முற்பகல் 11-05*

2001-லே ஏற்பட்ட கொந்தளிப்பான நிகழ்வுகள் என்பதை பேரவைத் தலைவர் அவர்களே, 1996-லே திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட அந்தக் கொந்தளிப்பான சூழ்நிலையிலே அதனுடைய முடிவுகள் 2001-லே வரவேண்டுமென்று அன்றைக்கு ஆண்டவர்கள் திட்டவட்டமாக திட்டம் போட்டு செயல்படுத்திக் காட்டினார்கள். ஒரு மாபெரும் மகத்தான மக்கள் தலைவியை—இலட்சோப இலட்சம் தொண்டர்களுடைய குலவிளக்காக விளங்கிக்கொண்டிருக்கிற அந்த மாபெரும் மக்கள் தலைவியை ஒரு அரசியல் தலைவியை—ஒரு பெண் என்றும்கூட பார்க்காமல் 1996-லேயிருந்து அவர்கள் திட்டம்போட்டு பழி வாங்கினார்கள். பொய் வழக்குகளைப் போட்டார்கள். பல்வேறு பொய் வழக்குகளின் மூலம் அந்த வழக்குகளுடைய தீர்ப்புகள் இன்ன காலகட்டத்திலே இந்த வடிவமைப்பிலே வரவேண்டும் என்றும்கூட திட்டம் போட்டார்கள். எதற்காக அந்தத் திட்டத்தைப் போட்டார்கள் என்று சொன்னால் பேரவைத் தலைவர் அவர்களே, 2001-லே பொதுத் தேர்தல் நடைபெறுகின்ற நேரத்திலே அந்த மாபெரும் மக்கள் செல்வாக்கு மிக்க தலைவி, தகுதியின்மை காரணமாக தேர்தலிலே போட்டியிடக் கூடாது என்கின்ற குள்ளநரித் தந்திரத்தைச் செய்தவர்கள் 1996-லே தொடங்கினார்கள் பேரவைத் தலைவர் அவர்களே. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் எதற்கும் கவலைப்பட்டதில்லை. புரட்சித் தலைவி அவர்கள் நாவசைத்தால் இந்த நாடே அசையும், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்கள் விரல் அசைத்தால் வெற்றிகள் குவியும் என்கின்ற ஒரு சூழ்நிலையிலே புரட்சித் தலைவி அவர்களுக்கு பல்கிப் பெருகுகின்ற மக்கள் செல்வாக்கைக் கண்டு





பொறாமைப்பட்டவர்களாக அன்றைக்குப் பொய் வழக்குகளை ஜோடித்தார்கள். பொய் வழக்குகளுடைய தீர்ப்புகளை 2001-லே அவர்கள் திட்டம் போட்டபடி குறித்த காலத்திலே வரவழைத்தார்கள். தகுதியின்மையை ஏற்படுத்தினார்கள். புரட்சித் தலைவி அவர்கள் அஞ்சவில்லை. புரட்சித் தலைவி அவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்த நேரத்திலே அவர்களுடைய வேட்பு மனுவை நிராகரித்தார்கள். தேர்தல் களத்திலே சுற்றிச்சுழன்று கொண்டிருந்த புரட்சித் தலைவி அவர்கள் இதனால் நிலைகுலைவார்கள் என்று கணக்குப் போட்டார்கள். புரட்சித் தலைவி அவர்கள் அச்சம் கொள்வார்கள் என்று கணக்குப் போட்டார்கள். ஆனால் அவர்களுடைய அச்சத்தையெல்லாம். எதிர்க் கட்சிக்காரர்களுடைய அச்சத்தையெல்லாம், தவிடுபொடியாக்கி புரட்சித் தலைவி அவர்கள் ஆங்கிலத்திலே சொல்வார்களே, not even a single step backward என்று சொல்வார்களே, அதைப்போல புரட்சித் தலைவி அவர்கள் தன்னந்தனியாக தேர்தல் களத்திலே 2001-ஆம் ஆண்டிலே மிகச் சிறப்பாகப் பணியாற்றி தமிழக மக்களுடைய ஏகோபித்த நல்லாதரவோடு தமிழக மக்களுடைய நல்ல தீர்ப்பின் அடிப்படையிலே ஆட்சி அமைத்தார்கள். புரட்சித் தலைவி அவர்களுக்கு ஆட்சி அளிக்கின்ற, ஆட்சியிலே அமர்கின்ற அதிகாரத்தை மக்கள் கொடுத்தார்கள். அதையும் அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை பேரவைத் தலைவர் அவர்களே. பல்வேறு சதிச் செயல்களைத் தீட்டினார்கள். மீண்டும் மீண்டும் சதித் திட்டங்களையே தீட்டிக்கொண்டு இருந்தார்கள். அம்மா அவர்கள் அரியணையிலே ஏறியவுடன் தமிழகத்திலே பல்வேறு (குறுக்கீடு) நல்ல திட்டங்களை (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மைக் வேலை செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் வேலை செய்யவில்லையா? பேசுங்கள். நாவலர் இருந்தால் தட்டிப் பார்த்துத்தான் பேசுவார். (சிரிப்பு)

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் கன்னிப் பேச்சோ என்று ஒரு எண்ணம் எனக்கு உண்டு. இருந்தாலும்கூட நாட்டினுடைய நீதிமன்றங்கள் மூலமாக சில தீர்ப்புகள் பெறப்படுகிறபோது, நீதிமன்றத் தீர்ப்பு கிடைத்து அதற்கு மாறான தீர்ப்பு நீதிமன்றத்திலே கிடைத்து மாறி மாறி கிடைத்துக்கொண்டிருக்கிற நிலையில், நீதிமன்றத் தீர்ப்புகள் எல்லாம்கூட ஒரு சதித் திட்டம் என்று ஒரு கருத்து

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 மார்ச் 12

தோன்றக்கூடிய அளவிற்கு ஒரு எண்ணத்தை இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் ஏற்படுத்துவது சட்டமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையிலே ஒரு மாறுபட்ட மனப்பான்மையையும் மோதலையும் ஏற்படுத்தக் காரணமாகக்கூடும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். Sub-judice என்று இதை நான் சொல்ல முடியாவிட்டாலும்கூட சதி என்ற சொல்லை நீதிமன்றத் தீர்ப்புகளையொட்டிப் பயன்படுத்துவது சரியாகாது. அது நமக்கு சாதகமோ, பாதகமோ, மாறுபாடோ அது வேறு. மாறுபட்டுக்கூட கருத்தைத் தெரிவிக்கலாம். ஆனால் அவையெல்லாம் சதி என்று சொல்லப்படுவதை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா, அப்படிச் சொல்லலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10

மற்றொன்று, எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் மீது ஆளுங்கட்சியிலே உள்ளவர்களுக்கு மாறுபட்ட கருத்து ஏராளமாக இருக்கக்கூடும். அந்தக் கருத்துகளைச் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால், இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தலில் நிற்பதைச் சதிசெய்து தடுத்துவிட்டார்கள் என்று வெளியிலே பேசுகின்ற அதே முறையிலே இங்கேயும் பேசுகிறபோது, நாங்கள் செய்யக்கூடிய சதி ஏதாவது இருந்ததா என்று கேட்க வேண்டியுள்ளது. ஒருவேளை நாங்கள் செய்த சதிதான் 4 இடங்களிலே அவர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார்களா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். இது கேள்வி கூட அல்ல. இந்தக் கருத்துப்போக்கு தொடர வேண்டுமா என்பதற்காகத்தான் இந்த அவையில் நான் இதை எழுப்புகிறேன்.

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, நீதிமன்றங்களைப் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. அதை இந்த அவையின் கவனத்திற்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சதித் திட்டம் தீட்டினார்கள் என்று பொதுவாக பேசினாரே தவிர, குறிப்பிட்ட இன்னார்தான் சதித் திட்டம் தீட்டினார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க.வினர்தான் இந்த சதித் திட்டம் தீட்டினார்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே வாக்குமூலம், ஒப்புதல்



2002 மார்ச் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வாக்குமூலம் கொடுத்துவிட்டது போன்று இங்கே அவருடைய பேச்சு அமைந்திருக்கிறது. இதற்குமேலே இதைப்பற்றி நான் எதுவும் சொல்லத் தேவையில்லை. அவரே எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு முடித்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது அவர் நீதிமன்றத் தீர்ப்பு பற்றி எதையும் விமர்சனம் செய்யவில்லை. அரசியல் போட்டி என்பதிலே சதி செய்தார்கள் என்று அவர் சொல்கிறாரே தவிர, வேறு எதையும் சொல்லவில்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சதி செய்ததாக நானே ஒப்புக்கொண்டதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படிச் செய்து இருந்தால் . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இவர்கள்தான் சதி செய்தார்கள் என்று இன்னும் சொல்லவில்லையே? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே முந்திக்கொண்டு, அவசரப்பட்டு நாங்கள் சதி செய்தோம் என்று அவர் சொல்லலாமா என்று அவரே ஏன் கேள்வி எழுப்புகிறார்? (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுத் திறமையினால் ஒரு கருத்து வெற்றி பெறுவதாக இருந்தால், (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வெற்றி மாண்புமிகு முதலமைச்சருக்குக் கிடைப்பதிலே எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. ஏனென்றால், அப்படிப் பல பேர் வெற்றி பெற்றதையும் நான் பார்த்திருக்கிறேன். வெற்றிகளுக்குப் பின்னர், பல தோல்விகளைச் சந்தித்திருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். ஆகவே, அதைப்பற்றி அல்ல பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தலிலே நிற்பதைத் தடுக்கக்கூடிய அளவிற்கு சதிசெய்து தடுத்திருக்க முடியுமா? யாராயினும் சதிசெய்து தடுத்திருக்க முடியுமா? அது சட்டப் பிரச்சினையா, சதிப் பிரச்சினையா என்பதை இந்த அவை உணர்ந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்களே, தாங்கள் சதி செய்ததாக அவர் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தாங்கள் சதி செய்ததாகச் சொல்லவில்லை.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் இங்கே பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள்.

[திரு. ப. இராஜரெத்தினம்] [2002 மார்ச் 12

நம்முடைய இதய தெய்வமாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், மிகச் சிறந்த விளக்கத்தை, அருமையான முறையில் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே தெரிவிப்பதெல்லாம், பேராசிரியர் அவர்களே, நீங்கள் சதி செய்தீர்கள் என்று சொல்லுகின்ற ஒரு கருத்து வருகின்ற நேரத்திலேகூட, உங்கள் இயக்கம் சதி செய்தது அல்லது உங்கள் தலைவர் அவர்கள் சதி செய்தார்கள் என்று சொல்ல வருகின்ற ஒரு சூழ்நிலையிலேகூட, நான் பணிவன்போடு கேட்பதெல்லாம், நீதிமன்றத்திலே வழக்குகள் தொடுக்கப்பட்டு நீதிமன்றத்திலே விவாதங்கள், நீதிமன்ற நடைமுறைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, அன்றைக்கு அமைச்சர்களாக இருந்தவர்கள், முதலமைச்சராக இருந்தவர் எத்தனை ஊர்களிலே அல்லது இதே அவையிலே அம்மா அவர்களை இத்தனை ஆண்டு காலம் அவருக்குத் தண்டனை கிடைக்கப் போகிறது என்று அவர்கள் எப்படிச் சொல்லமுடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அந்த சதிக்கு திட்டமிடவில்லை என்று சொன்னால், அம்மா அவர்களுக்கு இதுபோன்ற ஒரு தீர்ப்பு வரவிருக்கிறது, அவரால் தேர்தலில் பங்கேற்க முடியாது, அவர் சிறைக்குச் செல்வது உறுதி என்று நீங்கள் சதித் திட்டம் செய்யாதவர்களாக இருந்தால் எப்படி உங்களால் அப்படி ஆணித்தாமாக எடுத்து வைக்கமுடியும் என்று இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல்: 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலே இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மிகச் சிறப்பான தெள்ளத்தெளிவான நல்லதொரு தேர்தல் தீர்ப்பினைப் பொதுமக்கள் வழங்கினார்கள்.. 1991-லே இதய தெய்வம் அம்மா அவர்கள் தலைமையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் களத்திலே நின்ற நேரத்திலே, 168 இடங்களிலே போட்டியிட்டு 164 இடங்களைக் கைப்பற்றி ஒரு மகத்தான சாதனையை நிகழ்த்திக் காட்டினார் நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்கள். அதேபோல், கடந்த தேர்தலிலே-2001 தேர்தலிலே 141 இடங்களிலே அனைத்திந்திய அண்ணா திராவட முன்னேற்றக் கழகத்தினரை நிறுத்தி, அதிலே 133 இடங்களிலே வெற்றியைத் தேடித்தந்த ஒரு மகத்தான மக்கள் தலைவியை (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சதிச் செயலின் மூலம் வீழ்த்திட முடியாது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதையெல்லாம் நான் கோடிட்டுக் காட்டினேன்.



2002 மார்ச் 12] [திரு. ப. இராஜரெத்தினம்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டு காலம் இந்த நாட்டை ஆண்டவர்கள் கொடுத்திட்ட இன்னல்களை, இடர்பாடுகளை, தொல்லைகளை, துயரங்களை இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பேரவைத் தலைவர் அவர்களே, தாயை வெல்ல இன்னொருவர் பிறக்கவில்லை. சான்றோர் குலமும் இதை மறுக்கவில்லை. அன்னை சுட்டுவிரல் அசைத்ததால் அந்தச் சூரியன் முடங்கியது. அன்னை சுட்டுவிரல் அசைத்ததால் அந்தச் சூரியனும் அடங்கியது. சூழ்ச்சிக்காரர்களின் கூட்டமும் முடங்கியது. எத்தனை சோதனைகள்; எத்தனை வேதனைகள்? ஒரு மாபெரும் மக்கள் தலைவி, பெண் இனத்தினுடைய பொன் விளக்கு அரசியலுக்கு வருகின்ற நேரத்திலே அவர் சந்தித்த சோதனை, இந்த உலகத்திலே உள்ளவர்கள் யாரும் சந்தித்திராத ஒரு சோதனை. அந்தச் சோதனையை அம்மா அவர்கள் சந்தித்து, இன்றைக்கு மக்கள் தீர்ப்பின் மூலம், தெளிவான தீர்ப்பின் மூலம் 2001-லே ஆட்சிக் கட்டிலிலே ஏறினார்கள். தமிழகப் பெருமக்கள் மிகத் தெளிவாக அந்தத் தேர்தலில் தீர்ப்பைக் கூறினார்கள்.

ஆங்கிலத்திலே சொல்வார்கள்; It was a clear mandate of the people of Tamil Nadu, என்று சொல்வார்கள், The People's verdict was crystal clear என்று சொல்வார்கள். இப்படி ஒரு துல்லியமான தேர்தல் தீர்ப்பு வந்ததற்குப்பின் மகத்தான மக்கள் செல்வாக்கை புரட்சித் தலைவி அவர்கள், அம்மா அவர்கள் பெற்று ஆட்சி அமைத்தபோது, 100 நாட்களிலே 311 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவு வட்டியைத் தள்ளுபடி செய்து, மகத்தான சாதனையை நிகழ்த்திக் கொண்டிருக்கிற நேரத்திலே நான் பிறந்த ஆதிதிராவிட குலத்திலே இருக்கின்ற மாணவிகளுக்கு, கிட்டத்தட்ட 80,000 மாணவிகளுக்கு இலவச சைக்கிள்களைக் கொடுத்து, உலகத்திலேயே எந்த முதல்வரும், எந்தப் பிரதமரும், எந்த நாட்டிலே உள்ள அதிகார வர்க்கமும் (மேசையைத் தட்டும் ஒலி) நிகழ்த்திக் காட்டியிராத அற்புத சாதனையை அம்மா அவர்கள் படைத்துக் கொண்டிருந்த நேரத்திலே, மீண்டும் ஒரு சதிச் செயல் மூலம் புரட்சித் தலைவி அவர்களுடைய முதலமைச்சர் பதவியை நீங்கள் பிடுங்கிக் கொண்டீர்கள். நான் ஆணித்தரமாகக் குற்றம் சாட்டுகின்றேன். முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பிலே அமர்ந்து மக்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்த நேரத்திலே நீங்கள் சும்மா இருக்கவில்லை. சூழ்ச்சிகளைச் செய்து அம்மா அவர்களை மீண்டும் அரியணையிலேயிருந்து இறக்கினீர்கள். அம்மா அவர்கள் பெருந்தன்மையாக நடந்து கொண்டார்கள். மக்கள் தீர்ப்பு மிகத் தெளிவாக இருக்கிறது. அம்மா அவர்கள் சவாலாகச் சொன்னார்கள்.

"இந்த சவாலை நான் ஏற்றுக்கொள்கிறேன்; நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன்; என்னுடைய பதவியை இராஜினாமா செய்கிறேன்; மீண்டும் அதே நீதிமன்றத் தீர்ப்பு தெள்ளத் தெளிவாக வந்ததற்குப் பின்னால் மக்களைச் சந்தித்து மீண்டும் ஆட்சிக் கட்டிலிலே அமர்வேன்" என்று சொன்னார்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தேர்தலைப் பற்றித் தயவு செய்து நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் நடந்ததோ நான்கு மாநிலத் தேர்தல்கள். ஆனால், நாடே எதிர்பார்த்ததோ ஆண்டிப்பட்டி தேர்தல். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே நடந்தது நான்கு மாநிலத் தேர்தல்கள். ஆனால், புரட்சித் தலைவி அவர்கள், அம்மா அவர்கள் போட்டியிட்ட ஆண்டிப்பட்டி தொகுதியின் திசையை நோக்கித்தான் இந்தியத் துணைக் கண்டத்தின் மக்கள் ஒவ்வொருவருடைய பார்வையும் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று கேட்டால், ஆண்டிப்பட்டியில் அம்மா அவர்களின் வெற்றி என்பதை வருங்கால இந்தியாவை வாழ வைக்கின்ற அன்னையின் வெற்றியாக இந்தியர்கள் பார்த்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தேர்தலிலும் நீங்கள் சும்மா இருந்தீர்களா? பேராசிரியர் அவர்கள் கேட்டார்களே; பேராசிரியர் அவர்களுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரியாதா? தேர்தல் அட்டவணை வெளியிடப்பட்டு, தேர்தல் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுவிட்டால் எந்த நீதிமன்றத்திற்கும் போகக்கூடாது என்கின்ற அரசியல் அமைப்புச் சட்டத்தை துச்சமெனத் தூக்கி எறிந்து, ஆண்டிப்பட்டி தேர்தலிலே, தேர்தல் நடக்கக்கூடாது என்று பல்வேறு சதிச் செயல்களை மீண்டும் மீண்டும் நீங்கள் செய்தீர்கள். வழக்குகளைப் போட்டீர்கள். தேர்தல் கமிஷனிலே புகார் செய்தீர்கள். இறுதி வெற்றி என்றும் எங்கள் அம்மா புரட்சித் தலைவி அவர்களுக்குத்தான் என்பதை நிரூபிக்கின்ற வகையில் இப்போது ஆண்டிப்பட்டியில் மகத்தான வெற்றியைப் பெற்று இன்றைக்கு அரியணையிலே, இராஜ கம்பீரத்தோடு, அரிமாவிற்குரிய ஆற்றலோடு துணிச்சலோடு, வீரத்தோடு, விவேகத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் அமர்ந்திருக்கிற காட்சியைப் பார்க்கிற நேரத்திலே இந்தத் தமிழ்நாடே மிகவும் சந்தோஷமாக, மகிழ்ச்சிகரமாக இருக்கிறது.

(முற்பகல் 11:20

இன்றைக்கு இந்தச் சட்டமன்றப் பேரவையிலே ஆளுநர் உரை மிகத் தெள்ளத் தெளிவாக வைக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையிலே, ஆளுநர் உரையை நான் வரவேற்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற ஆளுநர் உரை என்பது, வள்ளலார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல,

"தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாய்க் கூட்டி
சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீப் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டில் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் ளமுதே..."

என்று இருக்கின்றது. இந்த ஆளுநர் உரையை வள்ளலார் பாடலோடு நான் ஒப்பிடுகின்றேன் என்று சொன்னால், அந்த அளவிற்கு இனிமையாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

இதய தெய்வம் அம்மா அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே பெரம்பலூர்-அரியலூர் மாவட்டத்தை இணைத்து ஒரே மாவட்டமாக பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரே மாவட்டமாக இயங்கும் என்கின்ற அறிவிப்பினை நீங்கள் செய்திருக்கின்றீர்கள். அதற்காக, அந்தப் பகுதி மக்களின் சார்பிலே உங்களுடைய பாதமலர்களிலே என்னுடைய நன்றியைக் காணிக்கையாக சமர்ப்பித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன், தாயே.

பேரவைத் தலைவர் அவர்களே, நினைத்துப் பார்க்க வேண்டும். 1995-ஆம் வருடத்திலே நிருவாகக் காரணங்களுக்காக ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம் என்பது திருச்சி, கரூர் என்று பிரிக்கப்பட்டது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிரித்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக 1996-லே ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்தவர்கள் ஒட்டுமொத்தமாக அந்த ஐந்து ஆண்டு காலம் முழுவதும் பெரம்பலூர் மாவட்டத்தைப் புறக்கணித்தார்கள். காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வரும் என்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டப்படும் என்று சொன்னார்கள். அத்தனையும் பகல் கனவாக முடிந்திருக்கிறது தாயே. புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த நல்ல நேரத்திலே, நீங்கள் அரசாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற இந்த இனிய வேளையிலே பெரம்பலூர் மாவட்டத்திலே பல்வேறு நலத் திட்டங்களை, அறிவிக்க வேண்டும். நீங்கள் பார்வையிட வருகின்ற முதல் மாவட்டமாக, நீங்கள் கலந்துகொள்ளக்கூடிய அரசு விழாக்களிலே முதல் மாவட்டமாக

[திரு. ப. இராஜரெத்தினம்] [2002 மார்ச் 12

எங்களுடைய பெரம்பலூர் மாவட்டம் இருக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே பெரம்பலூர் பகுதியிலே தனியார் கல்லூரிகள் மிகுந்து காணப்படுகின்றன. தனியார் கல்லூரிகள் எல்லாம் பல்லாயிரம் கோடி ரூபாயை வசூலிக்கின்ற ஒரு சூழ்நிலையை மாற்றுகின்ற வகையிலே அங்கே ஓர் அரசு கலைக் கல்லூரியை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிக்க வேண்டும்.

அதேபோல அங்கேயுள்ள மருத்துவமனையின் சீர்கேட்டைப் போக்கி அந்த மருத்துவமனையை சிறந்த மருத்துவமனையாக ஆக்க வேண்டும். அந்தப் பகுதியிலே பால்பவுடர் தயாரிக்கின்ற தொழிற்சாலையை அமைத்துத்தா வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையைப் பார்க்கின்ற நேரத்திலே, ஆங்கிலத்திலே சொல்வார்கள். Politician thinks about the next election but the Statesman thinks about the next generation என்று சொல்வார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆளுநர் உரையைத் தயாரிக்கின்ற நேரத்திலே ஓர் அரசியல் தலைவராக மட்டும் இருந்து தயாரிக்கவில்லை. ஒரு ராஜதந்திரியாக இருந்து தயாரித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கற்கண்டுக் கட்டியை உடைத்துப் போட்டால் எந்தப் பகுதி இனிக்கும்? எல்லா பகுதியுமே தித்திக்கும் என்று சொல்வதைப்போல, ஆளுநர் உரையிலே இருக்கின்ற அத்தனை அம்சங்களும் மக்களுக்குப் பயன்தரக்கூடிய, மக்கள் செவிகளில் இனிமையைத் தருகின்ற வகையிலே அமைந்திருக்கின்றன என்பதை நான் பணிவன்போடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே இருக்கின்ற ஒவ்வோர் அம்சத்தையும் நான் குறிப்பிட்டுச் சொல்ல வாய்ப்பு இல்லாவிட்டாலும், ஒருசிலவற்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

வேலூரிலே திருவள்ளுவர் பெயரிலே புதிய பல்கலைக்கழகம்; சென்னைக்கு அருகே சாதிமத பண்பாட்டு ஒற்றுமையைச் சித்தரிக்கக்கூடிய அமைதிப் பூங்கா; 2300 கோடி ரூபாய் செலவிலே தமிழ்நாடு ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுத் திட்டம்; சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க குடிநீர்த் திட்டம்-2 என்கின்ற புதிய



2002 மார்ச் 12] [திரு. ப. இராஜரெத்தினம்]

திட்டம்; 2003 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி; 385 வட்டாரங்களிலே வேளாண் தொழில் பிரிவு தொடங்குதல் இப்படி பல்வேறு சிறப்பு அம்சங்களை நாம் பார்க்க முடிகின்றது.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வீணை நல்ல நாதத்தை எழுப்ப வேண்டுமென்று சொன்னால், அதனுடைய அத்தனைத் தந்திக் கம்பிகளும் சீராக இருக்க வேண்டும். அதைப் போலத்தான் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் அம்மா அவர்கள், அனைத்துத் துறைகளும், தமிழக அரசாங்கம் என்கின்ற அந்த அரசாங்கத்தின்கீழ் வருகின்ற அனைத்துத் துறைகளும் சீராக இயங்க வேண்டும்; தமிழகத்திலே இருக்கின்ற 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 611 நகரப் பேரூராட்சிகள், 12,618 கிராமப் பஞ்சாயத்துகள் அனைத்தும் ஒரே அளவிலே முன்னேற்றம் காணுவதற்கு அற்புதமான திட்டங்களைத் தீட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு மணித் துளியிலே நான் முடித்துக்கொள்கிறேன். இங்கே, இந்த அவையிலே, ஆன்றோர்களும், சான்றோர்களும் இருக்கின்ற அவையிலே, ஓர் ஒப்பீட்டை நாம் செய்து பார்த்தாக வேண்டும். புரட்சித் தலைவி அம்மா அவர்கள், என்னை, 1998-லே நாடாளுமன்ற உறுப்பினராக ஆக்கி அனுப்பினார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, நான் கண்டிப்பாக இதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். 1998-லே பொதுத் தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பின்னாலே, இந்திய நாட்டினுடைய பிரதமர் யார் என்கின்ற அந்தத் தீர்மானத்தை, புரட்சித் தலைவி அவர்கள்தான் கொண்டுவர வேண்டும் என்கின்ற சூழ்நிலையிலே, அம்மா அவர்கள், அன்றைக்கு ஆளும் பொறுப்பிலே இல்லாவிட்டாலும்கூட, தமிழகத்தினுடைய இன்றியமையாத தேவைகளான காவிரி நதிநீர்ப் பிரச்சினை, 69 சதவிகித இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, 33 சதவிகிதம் மகளிருக்குக் கொடுக்கின்ற திட்டம், சேதுசமுத்திர கால்வாய்த் திட்டம், தமிழ் மொழியை ஆட்சிமொழி ஆக்குகின்ற திட்டம், முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்ட அளவை உயர்த்துகின்ற திட்டம், இவற்றையெல்லாம் டெல்லிக்கு வந்து மைய அரசிலே வற்புறுத்தி அம்மா அவர்கள் National Agenda for Governance என்று சொல்வார்களே, அந்தச் செயல் திட்டத்திலே சேர்க்க வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு ஒப்பிட்டுப் பாருங்கள். 1999-லே நீங்கள் டெல்லிக்குச் சென்றிருக்கிறீர்கள். அந்த

ஆட்சிக்கு நீங்கள் கரம் கொடுத்திருக்கிறீர்கள். ஏதாவது திட்டத்தை, ஒரு திட்டத்தை, புரட்சித் தலைவி அவர்கள் வற்புறுத்திய ஒரு திட்டத்தை, நீங்கள் தமிழக மக்களுக்காக அங்கே வற்புறுத்தினீர்களா என்று பணிவோடு நான் கேள்வியைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இப்படி ஒன்றுமே செய்யவில்லை. இதய தெய்வம் அம்மா அவர்கள் இன்றைக்கு மிக நல்ல ஆட்சியை நடத்திக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இனிய நேரத்திலே, கவர்னர் உரையிலே பேசுகின்ற அருமையான வாய்ப்பு எனக்கு கிடைத்து இருக்கிறது.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1991 முதல் 1996 வரை ஆட்சி நடத்திய காலத்திலே. உலகத்திற்கே எடுத்துக்காட்டான பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். மகளிர் காவல் நிலையங்களைத் திறந்தார்கள். அதைப் பார்த்த பாகிஸ்தான் பிரதம அமைச்சராக இருந்த பெனாசிர் பூட்டோ, பாகிஸ்தானிலே அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்தார்கள். அதைப்போல, தொட்டில் குழந்தை திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசா அவர்கள், சென்னைக்கு வந்து அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய அரிய திட்டத்திற்காக அம்மா அவர்களுக்குப் பாராட்டு மழையைப் பொழிந்தார்கள். புரட்சித் தலைவி அவர்கள், 'ராஷ்டிரிய பீஷ்மாச்சார்யா' என்கின்ற award-ஐப் பெற்றார்கள். அதைப்போல, உலகத்தினுடைய தலைசிறந்த பெண்மணி என்கின்ற விருதைப் பெற்றார்கள்.

அமெரிக்க நாட்டிலே ஒரு பிரதான சாலைக்கு, புரட்சித் தலைவியின் பெயர் சூட்டப்பட்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) காட்சிகளையெல்லாம் நாம் காண்கின்ற சூழ்நிலையிலே, அன்றைக்கு கவர்னர் உரை தொடங்குகின்ற நேரத்திலே, நிதி நெருக்கடியைப் பற்றி மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். நான் பணிவோடு அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன். ஐயா அவர்களே, நீங்கள் பல ஆண்டு காலம் அமைச்சராக, உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கென்று தனி மதிப்பு. அம்மா அவர்களே மதிக்கக்கூடிய அளவிற்கு இருக்கிறீர்கள். உங்களுக்கு அந்த விதி 17 தெரியாதா? விதி 17-ஐ தயவுசெய்து நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். ஆளுநர் அவர்கள், தன்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்னரோ, ஆளுநர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்திலோ அல்லது முடித்ததற்குப் பின்னரோ, எந்தக் குறுக்கீடும் இருக்கலாகாது என்று சட்டமன்ற விதி 17 தெளிவாகச் சுட்டிக்காட்டியும்,





நீங்கள் அன்றைக்கு வெளிநடப்புச் செய்தீர்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்? 8 மாத காலம் ஜனநாயகக் கடமையை ஆற்றவில்லை திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் உயர்திரு கருணாநிதி அவர்கள் என்கின்ற விமர்சனம் தமிழகம் முழுவதும் எழுந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, வந்தார்; சென்றார் என்று சொல்கிற அளவுக்கு வந்து ஒரு நிமிடம் உட்கார்ந்தார்; அனைவரையும் கூட்டிக் கொண்டு சென்றுவிட்டார் என்று இன்றைக்கு தமிழகமே ஏளனச் சிரிப்பை (மேசையைத் தட்டும் ஒலி) சிரித்துக் கொண்டிருக்கிறது, பேரவைத் தலைவர் அவர்களே.

புரட்சித் தலைவி அவர்கள், ஆட்சிக் கட்டிலிலே இல்லாத நேரத்திலும்கூட, தமிழகத்தினுடைய நலனுக்காகப் போராடி இருக்கிறார்கள். 1998-லே அம்மா அவர்கள் ஆட்சியிலே இல்லை. ஆனால் மத்திய அரசோடு போராடினார்கள். மத்திய அரசு வாயிலாக பல்வேறு இரயில்வே திட்டங்கள் வரவேண்டும் என்று வற்புறுத்தி மத்திய அரசிலே மனு கொடுக்கச் செய்தார்கள். காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்காக அம்மா அவர்கள் 84 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்தார்கள். எவ்வளவு பெரிய உண்ணாவிரதம்? அன்றைக்கு ஆங்கில பத்திரிகைகள் எல்லாம் பாராட்டி எழுதின. புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த அற்புதமான நடவடிக்கையை Strong, sensible and supreme என்று பாராட்டினார்கள்.

முற்பகல் 11-30

ஆனால், இன்றைக்கு ஒரு சாதாரண பிரச்சினைக்காக ஒரு மணி நேரம் உண்ணாவிரதம்; ஒரு மிக அற்பமான சாதாரண நிகழ்வுக்காக, ஒரு சாதாரண செயலுக்காக உண்ணாவிரதம் இருக்கக்கூடிய சூழ்நிலைக்கு இன்றைக்கு எதிர்கட்சித் தலைவர் தள்ளப்பட்டு இருக்கிறார். ஆண்மைத் திறத்தோடு இருக்கக்கூடிய எங்கள் புரட்சித் தலைவி அவர்கள், கருகிய பயிர்களைக் காப்பாற்றுவதற்காக, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று சொன்னாரே வள்ளலார், அவர் வழியிலே 84 மணி நேரம் உண்ணா நோன்பு இருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே தி.மு.க. எந்த அளவிற்கு அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்தது என்பதற்காக, நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; புரட்சித் தலைவி அவர்கள் 84 மணி நேரம் உண்ணா நோன்பு இருந்த காரணத்தால், மத்திய அரசிலே அன்றைக்கு நீர்வளத் துறை அமைச்சராக இருந்த சுக்லா அவர்கள் சென்னைக்கு ஓடோடி வந்து, 2 கமிட்டிகளை அமைப்பதாகச் சொன்னார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி

நதிநீர்ப் பிரச்சினையிலே இன்றைக்கு கவர்னர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்ற திட்டங்களை அன்றைக்கே செயல்படுத்திக் காட்டியவர் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பழமொழி சொல்லுவார்கள். படிப்பது இராமாயணம், ஆனால் இடிப்பது பெருமாள் கோவில்' என்று. அதுபோல திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், தி.மு.க. தலைவர் அவர்களும் எங்கள் இனமான ஆதிதிராவிட இனத்தையெல்லாம் சொல்கின்ற நேரத்திலே சம்பந்தி என்று சொல்லி ஏமாற்றிவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி), 1991-96-லே எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் எங்களுக்கு வாரி வாரி, வாரி வாரி வழங்கிய சலுகைகள் அனைத்தையும் பிடுங்கிக்கொண்டார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரும்பாலும் சம்பந்திகளைத்தான் ஏமாற்ற முடியும். (சிரிப்பு)

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்காக நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், சமத்துவபுரம் என்கின்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து, வீணான வெற்று விளம்பரத்திற்காக அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து, அதற்குப் போதுமான நிதியை சம்பந்தப்பட்ட துறை மூலம் ஒதுக்காமல், எங்கள் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனை கொடுக்கின்ற அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையை, எங்களுடைய தொகையை அவர்கள் சம்பந்தி என்று ஏமாற்றி விட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களை ஏமாற்றிய பெருமை அவர்களைச் சாரும். அதற்காகத்தான் நான் முதலிலேயே சொன்னேன்; 'படிப்பது இராமாயணமாக இருந்தாலும், இடிப்பது பெருமாள் கோவில்', என்று சொல்லப்படுகின்ற அளவிற்கு அவர்கள் எல்லாம் நடந்து கொண்டார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, உலக அரசியலின் தொட்டில்; உலக அரசியலின் தாய் வீடு என்று போற்றப்படுகின்ற இங்கிலாந்து பேரரசிலே எத்தனையோ பிரதமர்கள் இருந்திருக்கிறார்கள்; இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒருவரைத்தான் The Prime Minister என்று சொல்லுவார்கள். அதுபோல, தமிழக அரசியல் வரலாற்றிலே எத்தனையோ பேர் முதல்வராக இருந்தாலும், (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம்





புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்களை மட்டும்தான் The Chief Minister புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்களை மட்டும்தான் The Chief Minister என்று சொல்கின்ற அளவிற்கு இன்றைக்கு தமிழக மக்கள், புரட்சித் தலைவி அவர்களே, உங்களை போற்றிக் கொண்டிருக்கிறார்கள்; உங்களைப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; உங்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்; உங்களை வணங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு மணித்துளி தயவுசெய்து பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும். இந்த அவையிலே அனைத்து கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் இருக்கின்றோம். ஒரு நியாயமான சம்பவத்தை தயவுசெய்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் நினைத்துப் பார்க்க வேண்டும். 2001-லே அன்றைக்கு மாநில அமைச்சராக இருந்த ஒருவரை, தருமபுரியிலே அறநிலையத் துறை அதிகாரி ஒருவரை அடித்துவிட்டார் என்று உடனடியாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி அவர்கள் dismiss செய்தார்கள். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே ஆனால் இதேபோன்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே சொன்னதைப் போல உயர்திரு. என்று சொல்லுங்கள்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-லே அரசு அதிகாரியை அடித்ததற்காக ஒரு மாநில அமைச்சரை உடனடியாக dismiss செய்தார்கள். ஆனால், அதே 2001-லே வேறு ஒரு சம்பவத்திலே, நாம் அனைவரும் பதட்டத்தோடு, பதறிய நெஞ்சோடு இருந்தோம். நான் ஒரு காவல் துறை குடும்பத்தைச் சேர்ந்தவன் என்கின்ற ஒரு சூழ்நிலையிலே சொல்கின்றேன். காவல் துறையினரை எட்டி எட்டி உதைத்தார்கள், கன்னத்திலே அடித்தார்கள், வசைமாறி பொழிந்தார்கள். அந்த முல்லைக்குக் கொடுத்த அநீதியை ஏன் இந்த முரசொலிக்குக் கொடுக்கவில்லை என்று இந்தக் கூட்டத் தொடரின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு அதே நிகழ்வுக்காக ஒரு மாநில அமைச்சர் dismiss செய்யப்படுகிறார். அதே அரசு அதிகாரியை அடித்ததற்காக, அதே குற்றத்தைச் செய்ததற்காக. ஆனால் அதே குற்றத்திலே சம்பந்தப்பட்ட இன்னொருவர் காப்பாற்றப்படுகிறார் என்று சொன்னால், இதிலே இருக்கிற குடும்பப் பாச உணர்வை தயவுசெய்து நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ப. இராஜரெத்தினம்] [2002 மார்ச் 12

*முற்பகல் 11-35*

பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் இலட்சியப் பாதையை நோக்கி, தமிழகத்தை தலைசிறந்த மாநிலமாக ஆக்குவேன், இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாக ஆக்குவேன் என்ற இலட்சிய நோக்கத்தோடு இன்றைக்கு சீரிய முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இந்த நல்ல நேரத்திலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வைக்கின்ற அனைத்து முடிவுகளையும் தமிழக மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஒரு சூழ்நிலையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆங்கிலத்திலே சொல்வார்கள். A rose between two thorns என்று சொல்வார்கள். அதுபோல ஒரு புறம், திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்திட்ட சீர்கேடுகள், மறுபுறம் தி.மு.க. அரசாங்கம் சுமத்தி வைத்திருக்கின்ற நிதிச் சுமை; இரண்டிற்கும் நடுவே ரோஜா மலராக ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். எங்கள் அன்னையே, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்களின் புகழ் தமிழகம் எங்கும் நிலைத்து நிற்கும். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழ் இந்தக் காலகட்டத்திலே தமிழகத்திலே நிலைத்து நிற்கும் என்று சொன்னால், வருங்காலத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழ் இந்தியத் திருநாடு முழுவதும் நிலைத்து நிற்கும். (மேசையைத் தட்டும் ஒலி) நிலைத்து நிற்கும், நிலைத்து நிற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு 6 கோடி தமிழ் மக்களின் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் 100 கோடி இந்தியர்களின் எதிர்பார்ப்பாக இருந்து கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நல்ல நேரத்திலே சுட்டிக்காட்டி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்களுடைய புகழ் பார் உள்ளவரை, கடல் நீர் உள்ளவரை, இந்த மண் உள்ளவரை, இந்த விண் உள்ளவரை வாழும், வாழும், வாழும் என்று கூறி ஆளுநர் உரையை முன்மொழிந்து வரவேற்றுப் பாராட்டி நன்றியோடு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்ட ஒட்டுமொத்த மக்களுடைய நன்மையைக் கருத்திற்கொண்டு, பெரம்பலூர் மாவட்ட மக்கள், பெரம்பலூர் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வருகின்றவர்களுக்கு நோய்களைத் துல்லியமாகக் கண்டறிந்து,



2002 மார்ச் 12] [திரு. செ. செம்மலை]

அவர்களுக்குத் தரமான சிகிச்சை அளிப்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு, 85 இலட்ச ரூபாய் மதிப்புள்ள ஒரு C.T. Scan-ஐ வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லி, இன்னும் ஒருசில நாட்களில் பெரம்பலூர் மாவட்ட தலைமை மருத்துவமனையில் C.T. Scan நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. இராஜரெத்தினம், இதற்கும் சேர்த்து நன்றி சொல்லிவிடுங்கள்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல் ஆட்சியில் எங்களுடைய பெரம்பலூர் மாவட்டம் கண்டிப்பாக நல்ல பல வளங்களைப் பெறும். அதற்கான திட்டத்தை அறிவித்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது நடைபெறுகின்ற விவாதத்திலே கலந்து கொண்டு நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளை இந்த அவையின் குறிப்பேட்டிலே பதிய வைப்பதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக ஆளுநர் உரை என்பது ஓர் அரசாங்கத்தினுடைய கொள்கைகளையும், எதிர்காலத்திலே தாங்கள் நிறைவேற்ற எண்ணியிருக்கிற திட்டங்களையும் ஆளுநர் வாயிலாக அவைக்கு அறிவிப்பது. அந்த வகையிலே மேதகு ஆளுநர் அவர்கள் கடந்த 9 ஆம் தேதி இந்த அவையிலே ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து, கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த புன்னகை மன்னன், பூவிழிக் கண்ணன், ஆரூர் அண்ணன் பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சி என்றாலே, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற எங்களைப் பார்த்து..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதென்ன ஆரூர் அண்ணன்?

**திரு. பரிதி இளம்வழுதி:** ஆரூரும் அண்ணன்தான், ஆருயிரும் அண்ணன்தான்.

*முற்பகல் 11-40*

எதிர்க்கட்சி என்றாலே ஓர் அரசாங்கம் கொண்டு வந்ததை எல்லாம், கொண்டுவரும் திட்டங்களை எல்லாம் எதிர்க்க வேண்டும் என்பதற்காக அல்ல. இந்த அரசாங்கத்தினுடைய நிறை, குறைகளைச் சுட்டிக்காட்டுகிறோம். நிறைகள்—நல்லவைகளை நீங்கள் கொண்டுவந்தால் அவற்றை ஏற்று, பாராட்டக்கூடிய பக்குவம் எங்களுக்கு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், விமர்சனம் செய்கின்றபோது, தவறுகளைச் சுட்டிக்காட்டுகிறோம். சுட்டிக்காட்டுகின்ற நேரத்திலே, அவற்றைக் கவனத்திலே கொண்டு, எதிர்காலத்திலே அப்படிப்பட்ட தவறுகள் நடக்காத வண்ணம் அரசு தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து எங்களுடைய கருத்துகளைச் சொல்லுகிறோம். எதிர்க்கட்சியானது, ஏதோ ஆளுங்கட்சிக்கு எப்போதுமே பிடிவாதமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. ஒரு கார் இருக்கிறது என்றால், அந்தக் காருக்கு ஒரு பிரேக் இருக்க வேண்டும். ஒரு மாடு இருக்கிறது என்றால், அந்த மாடுக்கு ஒரு மூக்கணாங்கயறு இருக்க வேண்டும். ஒரு தேர் வீதிவலம் வருகிறது என்றால், அந்தத் தேர் ஒழுங்காகப் போவதற்கு முட்டுக்கட்டைப் போடுவார்கள். அந்த மாதிரி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நாவலர் அவர்கள் சொன்ன உவமை. அவருக்கு நன்றி சொல்லுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** யார் சொன்னால் என்ன? உவமை நல்ல உவமைதானே. இன்னும்கூட ஓர் உவமை இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெண்மணியாகப்பட்டவர், அவர் எவ்வளவு பெரிய பேரழகியாக இருந்தாலும், அவர் பட்டாடை உடுத்திக் கொண்டு, சீவி, சிங்காரித்து, நகையையும், நட்டையும் பூட்டிக்கொண்டு வெளியிலே கிளம்புகிற நேரத்திலே நிலைக்கண்ணாடி முன் ஒரு நிமிடம் நின்று தன்னுடைய அலங்காரம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்வார். அதுபோல, ஆளுங்கட்சியிலே இருக்கின்ற நீங்கள், எதிர்க்கட்சி வரிசையிலே முன்னால் இருக்கின்ற எங்களைக் கண்ணாடி போல் நினைத்து, உங்களுடைய தவறுகளைத் திருத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்ள நான் விரும்புகிறேன்.

அதேபோல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி இடர்பாடு என்பது எல்லா அரசாங்கத்திற்கும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அந்த நிதி இடர்பாடுகள் இருக்கின்ற நேரத்திலே திறமையாகச்





செயல்பட்டு, அவற்றிலிருந்து மீட்டு, நல்ல பாதைக்கு அழைத்துச் செல்வது ஓர் அரசாங்கத்தினுடைய கடமையாகும் ஆனால்...

**THIRU P.M. NARASIMHAN:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணாடி நன்றாக இருந்தால் பரவாயில்லை. கண்ணாடி முறிந்திருந்தால் எப்படிப் பார்ப்பது?

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் உதாரணத்திற்காகச் சொன்னேன். இன்னும்கூட ஓர் உதாரணம் இருக்கிறது. ஓர் ஆளுங்கட்சி, ஓர் எதிர்க்கட்சி எப்படிச் செயல்படவேண்டுமென்றால், ஆளுங்கட்சியிலே இருக்கிறவர்கள் ஓர் அம்மியைப் போல. எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் ஒரு குழவியைப் போல, அம்மியும், குழவியும் இணைந்து செயல்பட்டால்தான், மிளகாயை அரைக்க முடியும். அதுபோல, ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் இணைந்து செயல்பட்டால்தான், எதிர்காலத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர், நீங்கள் சொன்ன கண்ணாடி உவமைக்காகச் சொல்கிறார். ரசம் போன கண்ணாடியாக இருந்தால் எப்படிப் பார்க்க முடியும் என்று சொல்கிறார்.

**திரு. பரிதி இளம்வழுதி:** ஓர் உதாரணத்திற்காகச் சொன்னேன். அடுத்து, நிதி இடர்பாடு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை இங்கே வைக்கின்ற நேரத்திலே அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள். முந்தைய தி.மு.க. ஆட்சியிலே 5,700 கோடி ரூபாய்தான் திட்டச் செலவாக ஒதுக்கப்பட்டிருந்தது என்றும், அதிலும் 340 கோடி ரூபாய் அளவுக்கு அதிகமாக்கி, 6,040 கோடி ரூபாய் திட்டச் செலவு செய்ய ஒப்புதல் பெற்றிருக்கிறோம் என்று சொன்னார். ஆனால், இன்றைய ஆளுநர் உரையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், உள்ளதும்போய், 'அந்த அளவுக்குக் கூடுதல் வருவாய் ஆதாரங்களைத் திரட்டுவதற்கான சாத்தியக்கூறு இல்லாத நிலை உருவாகலாம் என்பதற்காக 5,200 கோடி ரூபாயாக திட்ட அளவைக் குறைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது' என்று இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய வீழ்ச்சி என்பது மட்டுமல்ல, கூடுதல் வருவாயைத் திரட்டக்கூடிய—கூடுதல் வருவாய் ஆதாரங்களைத் திரட்டாத காரணத்தால் இந்தக் குறை நேரிட்டிருக்கிறது

[திரு. பரிதி இளம்வழுதி] [2002 மார்ச் 12

என்றால், அதைத் திரட்டக்கூடிய—திறமை இந்த அரசின் நிர்வாகத்தில் இல்லை என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது.

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த நிதிச் சீரமைப்பு, திட்டக் குறைப்பு, இதற்கு அரசினுடைய திறமையின்மை காரணமல்ல. தி.மு.க. ஆளுகிற மைய அரசு, ஒரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. அந்த நடவடிக்கையின் அடிப்படையில் தமிழக அரசிற்கு மைய அரசு நிதியிலிருந்து மைய அரசு தரவேண்டிய ரூ.3,367 கோடி நிதியில் இந்த ஆண்டுக்கு மட்டும் 512 கோடி ரூபாயைக் 'கட்' செய்துவிட்டார்கள். மைய அரசு இப்படிப்பட்ட நிதி ஒதுக்கீட்டை குறைத்ததை தடுத்து இருந்திருந்தால், மைய அரசிலே அங்கம் வகிக்கிற திராவிட முன்னேற்றக் கழகம், மாநிலத்திற்கு அதிகப் பண அதிகாரம் வேண்டும் என்று கேட்கின்ற கொள்கையுடைய தி.மு.க., இதிலே தங்கள் கொள்கையை நிலைநாட்ட, டெல்லியிலே எடுத்து வாதிட்டிருந்தால் இந்த நிலை தமிழக அரசுக்கு வந்திருக்காது.

அதுமட்டுமல்ல. நிதி ஆதாரங்களை, வரி வசூலை மேற்கொள்வதில் தமிழக அரசு அக்கறை எடுத்திருக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி புரிந்த காலத்தில் அவர்கள் மேற்கொண்ட வரி வசூல் நடவடிக்கைகளைவிட, நடப்பாண்டில் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகளின் காரணமாக வரி வசூல் அதிகமாகியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 7,093 கோடி ரூபாய் மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது நடவடிக்கை மேற்கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 10,860 கோடி ரூபாய் வரி வசூலிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

**திரு. பரிதி இளம்வழுதி:** அதாவது வரி வசூல் என்பது தற்போதைய முதலமைச்சருடைய ஆட்சியிலே அதிகமாகி இருக்கிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் ஆளுநர் உரையிலே ஒரு பகுதியிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், நடப்பு நிதியாண்டிலே மாநில அரசின் வணிகவரி வசூல் வெகுவாகக் குறைந்து விட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வரி வசூல்



2002 மார்ச் 12] [திரு. சி. பொன்னையன்]

நடவடிக்கைகளில் மெத்தனத்தைக் கையாண்டதால், சலுகைகளைக்கூட பல இடங்களில் காட்டிய காரணத்தால், கிட்டத்தட்ட 4 ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் வரி வசூல் நிலுவையில் இருக்கிறது. அந்த வரியை வசூலிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அதிகமாக வரி வசூலை அடைய வேண்டுமென்ற எண்ணத்தில்தான், அதிகமான வரி வசூலை வசூலிப்போம் என்று நாங்கள் தெரிவித்து இருந்தோம். அந்த அடிப்படையில்தான் 10,860 கோடி ரூபாய் சென்ற ஆண்டு, நீங்கள் வசூலித்த வரி வசூலை விட, அதிக வரி வசூலை இந்த ஆண்டு இந்த அரசு வசூலித்து செயல்பாட்டில் காட்டியிருக்கிறது.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறுவது உண்மையானால், இந்த ஆளுநர் உரையிலே ஏன் அப்படி குறிப்பிடப்பட்டிருக்கிறது? வணிகவரி வசூல் வெகுவாகக் குறைந்திருக்கிறது என்றும் சொல்கிறீர்கள். ஆனால் அதிகமாக இருக்கிறது என்றும் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, அவர்கள் சொல்வது ஒப்பீடு. இது ஆளுநர் உரையிலே இருப்பது பொது நிலைமை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய எதிர்பார்ப்புகளைச் சொன்னேன். நீங்கள் நிலுவையில் விட்டு இருக்கிற வரி வசூல், நீங்கள் வசூலிக்காமல் விட்ட வரி வசூல், நீங்கள் சலுகை காட்டிய வரி வசூல், அவற்றையெல்லாம் வசூலித்தால் அதிக வரி வசூல் வரும் என்ற அடிப்படையில் அதைக் கூறியிருக்கிறோம். ஆனால் அன்று சலுகை பெற்றவர்கள் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்றுவிட்ட காரணத்தால் நிலுவை இன்னும் அதிகமாக இருக்கிறது. அதையும் தடுத்து அந்த வரி வசூலை அதிகமாக்க வேண்டுமென்று தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது எல்லாமே நாங்கள்தான் நிலுவையில் வைத்துவிட்டுப் போய்விட்டோம்; நாங்கள்தான் நிலுவையில் வைத்துவிட்டுப் போனோம் என்று சொல்கிறீர்கள். ஒரு வாதத்திற்காக ஒத்துக்கொண்டால்கூட இந்த 10 மாதத்தில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்று சொல்ல முடியுமா? இன்னொன்றுகூடச் சொல்கிறேன்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் எல்லாவற்றையும் தெளிவாகத்

தெரிவித்திருக்கிறோம். இப்பொழுது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும், எல்லா மாநிலங்களும் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய ஒரு நிலையில்தான் உள்ளன. இதற்கு ஒரு முக்கிய காரணம், மத்திய வரிகளில் மாநிலங்களுக்குக் கொடுக்கின்ற பங்கை மத்திய அரசு வெகுவாகக் குறைத்துவிட்டது. State share of Central taxes இந்த ஆண்டிற்கு மட்டும் தமிழ்நாட்டிற்கு 512 கோடி ரூபாய் அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது. இதுவும் ஒரு காரணம். வணிகவரித் துறையில் இன்னும் அதிகமாக வசூலாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்த்த அளவு வசூலாகவில்லை. இந்த நிலை தமிழ்நாட்டில் மட்டும் இல்லை. எல்லா மாநிலங்களிலும் இதே நிலைதான்.

முதலில் இந்த ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு 6,040 கோடி ரூபாய் அளவிற்கு நிறைவேற்ற முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அது நிர்ணயிக்கப்பட்டது. அதை அறிவித்தோம். இப்பொழுது எதிர்பாராத வகையில், எதிர்பார்த்த அளவு வரிகளை வசூலிக்க முடியவில்லை. மத்திய அரசு நமக்குத் தரவேண்டிய மத்திய வரிகளின் பங்கையும் குறைத்துவிட்டது. இதெல்லாம் எதிர்பாராத ஒரு development—நிகழ்வு. அதனால் வேறு வழியின்றி நிறைவேற்ற முடியாது என்று தெரிந்து இருப்பதால்தான் திட்ட ஒதுக்கீட்டை நாமே குறைக்க முன்வந்து இருக்கிறோம். 6,040 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டதை, 5,200 கோடி என்று குறைத்திருக்கிறோம். இந்த மாநிலம் மட்டுமல்ல. இந்தியாவில் உள்ள பெரும்பாலான மாநில அரசுகள் தங்கள் திட்ட ஒதுக்கீடுகளை குறைத்திருக்கின்றன. நாங்கள் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறோம். சில மாநில அரசுகள் அதை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. ஆனால் நடைமுறையில் எல்லோரும் அதைத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் அண்டை மாநிலங்களில்கூட ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கூட அவர்கள் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டை குறைத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-50*

ஆகவே இன்று உள்ளது ஒரு State-wide recession மட்டுமல்ல, ஒரு Nation -wide recession. இன்னும் சொல்லப்போனால் ஒரு Global recession. இன்றைக்கு உலகம் முழுவதுமே பொருளாதார ரீதியாக ஒரு பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இதிலிருந்து தமிழ்நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இன்றைய ஆளுநர் உரையில், இப்போதைய ஆளுநர் உரையில் இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீட்டை ஏன் குறைக்க முன்வந்துள்ளோம் என்று 'சொன்னால் 6,040





கோடி ரூபாய் அளவிற்கு எங்களால் நிறைவேற்ற முடியாது என்று தெரிகிறது. அதைக் குறைக்காமல் அப்படியே வைத்திருந்தால், அதை நிறைவேற்றத் தவறினால், அடுத்த ஆண்டு 2002-2003 நிதியாண்டுக்கான திட்ட ஒதுக்கீட்டை மத்திய அரசு வெகுவாகக் குறைத்துவிடும். அதற்கு வாய்ப்பளிக்கக் கூடாது என்பதற்காகத்தான் நாங்களே இந்த ஆண்டு ஒதுக்கீட்டைக் குறைக்க முன்வந்திருக்கிறோம். ஏதோ தமிழ்நாட்டில் மட்டும் இது பிரத்தியேகமாக நிலவுகின்ற ஒரு சூழ்நிலை அல்ல. இந்தியா முழுவதும் இதே நிலைதான் நிலவுகிறது. ஆனால் இதிலிருந்து இந்த மாநிலத்தை மீட்டுக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கிருக்கிறது. வரும் நிதியாண்டில் வரி வசூல் கணிசமான அளவிற்கு அதிகரிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதில் என்னுடைய வாதத்துக்கு வலு சேர்க்கின்ற வகையில்தான் அமைந்திருக்கிறது. இந்த நிலைமை இங்கு மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களிலேயும் இருக்கிறது என்று சொன்னார்கள். எங்கள் ஆட்சிக் காலத்திலே நாங்கள் நிலுவையில் வைத்துவிட்டுப் போனோம் என்று சொன்னார்கள். இப்போது எப்படி உங்களுக்கு மத்திய வரிப் பகிர்விலிருந்து உரிய பங்கு வந்து சேரவில்லையோ அது மாதிரி எங்களுக்கும் வந்து சேராத காரணத்தால்தான் இது நிகழ்ந்தது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினருக்கு இன்னும் சற்று விளக்கமாகக் கூற விரும்புகிறேன். கடந்த ஆண்டு 2001-ல் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, முந்தைய தி.மு.க. அரசு 700 கோடி ரூபாய் அளவிற்கு பற்றாக்குறையை வைத்துவிட்டுச் சென்றது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றபோதே 700 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட்டுடன்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம். அதை இந்த நிதியாண்டில் சரிபாதியாகக் குறைக்க முடியும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் எதிர்பார்த்த அளவு வரிகள் வசூலாகவில்லை. மேலும் மத்திய அரசு தர வேண்டிய பங்கைக் குறைத்துவிட்டது. அது எங்களுடைய தவறு அல்ல. அதனால் இப்போது பற்றாக்குறை இன்னும் அதிகமாகி விட்டது. இதையெல்லாம் நிதிநிலை அறிக்கையில் நாங்கள் விவாதிக்க உள்ளோம். தெரிவிக்க உள்ளோம். ஆகவே, நிதிநிலை அறிக்கையின்போது பேச வேண்டியதையெல்லாம் இப்போது ஆளுநர் உரையின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் வைத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[2002 மார்ச் 12

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளையேற்று நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பு கிடைக்கிறபோது . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வேண்டுகோள் அல்ல, அறிவுரை (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பரிதி இளம்வழுதி:** ஆகவே இதில் நீங்கள் 15 அம்சத் திட்டம், இன்னும் ஏகப்பட்டவை எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். அதை எல்லாம் உருவாக்க உத்தேசித்துள்ளோம், எண்ணியுள்ளோம், அப்படித்தான் சொல்லியிருக்கிறீர்கள். இது எல்லாம் உள்ளோம், உள்ளோம் என்றால் அடுத்ததுதான் ஒதுக்கீடு செய்ய உள்ளோம் என்பது எங்களுக்குத் தெரியும். தெரியாமல் இல்லை. இருந்தாலும் சில விளக்கங்களை முன்கூட்டி கேட்டுப் பெறுவது நல்லது என்கின்ற காரணத்தினால், அந்த அடிப்படையிலே கேட்டேனே தவிர வேறு ஒன்றும் கிடையாது.

அடுத்து இந்த ஆளுநர் உரையிலே முல்லைப் பெரியார் அணையினுடைய உயரத்தை 152 அடியாக உயர்த்துவது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன். இது மாதிரி ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே சொன்னது மட்டுமல்ல, இப்போது இந்த ஆளுநர் உரையிலும் உச்ச நீதிமன்றத்துக்கும் போகப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த பத்து மாத காலத்திலே இதற்காக எத்தனை முறை அந்த அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறீர்கள் ?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆட்சிக் காலத்தில், ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் எத்தனை முறை கேரள அரசோடு பேசினார்கள்? அந்த ஐந்தாண்டு ஆட்சிக்காலத்தில் இதை ஏன் அவர்கள் செய்து முடிக்கவில்லை ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது எத்தனை முறை கேரள அரசுடன் பேச்சு வார்த்தையை நமது அரசு மேற்கொண்டது என்பது பற்றி வினா எழுப்பியிருக்கிறார்கள். 5-10-2001-ல் கேரள அரசுடன் தொடர்பு கொண்டோம். 7-11-2001, 9-11-2001, 12-11-2001, 24-12-2001, 26-12-2001, 4-1-2002, 24-1-2002, 11-2-2002, 6-3-2002 ஆகிய தேதிகளில் கேரள அரசோடு நாம் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும், பேச்சுவார்த்தைக்கு தேதியைக் குறியுங்கள் என்று மாண்புமிகு



2002 மார்ச் 12] [திரு. சி. பொன்னையன்]

முதல்வர் அவர்கள் சார்பில் எழுதப்பட்டும் கேரள அரசிடமிருந்து
இன்னும் அது குறித்த தேதி குறிக்கப்படவில்லை. இதுதான் உண்மை
நிலை. 10 முறை இந்த அரசு இதுகாறும் கேரள அரசோடு இது குறித்து
ஆக்கப்பூர்வமான தொடர்புகளை மேற்கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய பொதுப் பணித் துறை அமைச்சர்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, அப்படியில்லை. கேட்டதாலே
சொல்கிறேன். வேண்டாம் என்றால் விட்டுவிடுகிறேன். அதில் ஒன்றும்
பிரச்சினை இல்லை. ஏனென்றால் உங்களுடைய ஆட்சியில் எத்தனை
முறை நீங்கள் எழுதினீர்கள் என்று கேட்டார்கள். அதற்காகச் சொல்கிறேன்.
இது ஒன்றும் போட்டிக்குப் போட்டி அல்ல. இந்த ஆட்சி வந்த பிறகு
எத்தனை முறை எழுதினோம் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். அங்கிருந்து பதில் வரவில்லை என்றார்கள். அதுவும்
எனக்குத் தெரியும். நாம் எத்தனை முறை எழுதினாலும் அவர்கள் பதில்
எழுதமாட்டார்கள் என்று. அதுவும் எனக்குத் தெரியும். இருந்தாலும் 1991-
லிருந்து 1996 வரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான்
முதலமைச்சராக இருந்தார்கள். அப்போது இந்தப் பெரியாறு அணை
குறித்து - இது 1979-லே ஆரம்பித்தது இந்தப் பிரச்சினை- அப்போது 1991-
லிருந்து 1996 வரையில் அன்றைக்கு இருந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில்
கேரள அரசுக்கு பெரியார் அணை குறித்து எழுதிய கடிதம் ஒரே ஒரு
கடிதம் மட்டும்தான். ஆனால் 1989, 1990, 1991 வரையில் கலைஞருடைய
ஆட்சியில் எழுதிய கடிதங்கள் இரண்டு. 1996-லிருந்து நாங்கள் இப்போது
ஆட்சியை விட்டு இறங்குகிற வரையில் 4 ஆண்டு காலத்திலே மட்டும்
எழுதிய கடிதங்கள் 17. ஆக, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 1991-ல் எழுதப்பட்ட
கடிதம் 1. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எழுதப்பட்ட கடிதங்கள்
19. அதேபோன்று மாண்புமிகு முதலமைச்சர் அன்றைக்கு முதலமைச்சராக
இருக்கின்றபோது அவர்களுடைய ஆட்சியில் P.W.D. Minister அந்த ஆட்சி
5 ஆண்டு காலத்திலே பெரியார் அணை பற்றி அன்றைக்கு எழுதிய
கடிதம் 1. நான் இருந்த காலத்திலே எழுதிய கடிதங்கள் 10. அதேபோன்று
கேரள அமைச்சர்களோடு பேச்சுவார்த்தையில் கலைஞருடைய ஆட்சியில்
இரண்டு முறை அந்த அமைச்சர்களோடு நாங்கள் பேசியிருக்கிறோம்.
எங்கள் அமைச்சர்கள் அளவிலே. அதாவது P.W.D. Minister, Irrigation
Minister அளவிலே, ஆனால் இன்றைய முதலமைச்சருடைய அன்றைய
ஆட்சியில் 5 ஆண்டுகளில் ஒரு முறை கூட பேசவில்லை.

முதலமைச்சர்கள் அளவில் பேச்சுவார்த்தை, கலைஞருடைய காலத்திலே ஒரு முறை நடந்திருக்கிறது. ஏன் கடைசியாக டெல்லியிலே நடந்ததைச் சேர்த்தால் இரண்டு முறை நடந்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் 1991-லே இருந்தபோது ஒரு முறையும் நடைபெறவில்லை. அதிகாரிகள் அளவிலே கேரள அரசிற்கு கலைஞருடைய ஆட்சியில் 11 கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அன்றைக்கு இருந்த காலத்திலே ஒரு கடிதம்கூட எழுதவில்லை. இது தான் நிலை.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பல ஆண்டுகளாக அத்தனை முறை அவர்கள் கடிதத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். ஆனால் தற்போது புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் 5 மாத காலத்திற்குள் 10 முறை நாங்கள் கேரள அரசுக்கு எழுதியிருக்கிறோம்.**

**திரு. துரைமுருகன்:** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் பேசி முடித்த பிறகு மறுபடி சொன்னீர்கள் என்றால் எப்படி?

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் இல்லை, எடுப்பதற்காக சொல்லவில்லை.**

**திரு துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த வாதத்தை இதோடு நீங்கள் முடித்துவிடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** **

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், கொஞ்சம் சொல்லிவிடுகிறேன். கேளுங்கள். பரிதி இளம்வழுதி அவர்கள் சொன்னதற்கு நிதியமைச்சர் சொன்ன பதில் அவைக் குறிப்பிலே இருக்கும். நீங்கள் சொன்னதிலே, நீங்கள் நடத்திய பேச்சுவார்த்தைப் பற்றி சொன்னீர்கள். அது அவைக் குறிப்பிலே இருக்கும். அது தவிர மற்றவை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



நீக்கப்படுகின்றன. பரிதி பேசுங்கள். (குறுக்கீடு) நீங்களே சொன்னீர்கள், இது பற்றிய விவாதம் நடத்துவது நாட்டு நலனுக்கு உகந்தது அல்ல என்று.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு அமைச்சர் சொன்னார், அதற்காகச் சொன்னேன். நான் ஒன்றும் இப்போது அவைக்குப் புறம்பானதைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் அவர்கள் இந்த ஆட்சியில் எத்தனை முறை பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்று சொன்னார்கள். அந்த விளக்கம் இருக்கும். நீங்கள் சொன்னீர்கள், தி.மு.க. ஆட்சியில் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம் என்று சொன்னீர்கள். அதுவும் அவைக் குறிப்பிலே இருக்கும். அதற்குப் பிறகு நடைபெற்றவை நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) வேண்டாம், போதும்.

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, பேசுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** இது இரண்டு மாநிலம் தொடர்புள்ள ஒரு பிரச்சினை, Inter-State விவகாரம். நீங்கள் இரண்டு பெரியவர்களும் சொன்னதால் நான் அதிலிருந்து அடுத்த subject-க்குப் போய்விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அண்மையில் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடனே எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஓர் அறிவிப்பு செய்தார்கள். தமிழ்நாட்டை இந்தியாவிலேயே வளர்ச்சி அடைந்த முதன்மை மாநிலமாக நான் மாற்றப் போகிறேன் என்று சொன்னார்கள். உள்ளபடியே மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம்தான். ஆனால், இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, மகிழ்ச்சி அளிக்கிற அதே நேரத்தில், அந்த இலட்சியத்தை அவர் எட்டிப் பிடிக்க வேண்டுமானால், ஓர் அரசு, ஒரு நேர்மையான அரசு எதிர்காலத்திலே தான் கொண்டிருக்கிற இலட்சியத்தையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமானால் இரண்டு முறையான அணுகுமுறைகளைக் கையாள வேண்டும். ஒன்று, ஏற்கெனவே இருந்த அரசாங்கம் செய்த நல்ல திட்டங்களைத் தொடர்ந்து செய்ய வேண்டும். வளர்ச்சி என்பதே திட்டங்களின் தொடர்ச்சிதான் வளர்ச்சி. இன்றைக்கு, ஏற்கெனவே இருந்த அரசாங்கம் செய்த அந்தத் திட்டங்களைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நீங்களும் புதிய திட்டங்களைத் தொடங்க வேண்டும். அந்த வகையிலே பார்க்கின்றபோது, ஏற்கெனவே எங்களுடைய அரசாங்கத்தில் செய்த திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு என்ன நிலைமையிலே இருக்கின்றன என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

தோட்டக் கலையைப் பற்றி, வேளாண் பொருளாதாரத்தைப் பற்றி நம்முடைய ஆளுநர் உரையிலே அதிக அக்கறையோடு குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த விவசாயப் பெருமக்கள் பெரிதும் லாபம் அடையக்கூடிய வகையில் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் உழவர் சந்தைகளை உருவாக்கினார். அந்த உழவர் சந்தைகள் எந்த அளவிற்கு வெற்றிகரமாக நடைபெற்றன என்பதைப்பற்றி எல்லா பத்திரிகைகளும் பாராட்டின. உதாரணமாக சொல்ல வேண்டுமானால், கும்பகோணத்திலேகூட, நான் அன்றைக்கு ஒரு திருமணத்திற்காக சென்று வந்தேன். அங்கே இருந்தவர்கள் எல்லாம் பேசிக் கொண்டார்கள். 'முன்பெல்லாம் தம்பி, அத்திம்பேர்தான் மார்க்கெட்டுக்குப் போய் வாங்கிட்டு வருவார். ஆனால், இப்போதெல்லாம் அத்திம்பேரே போறது இல்லை. அவருக்குப் பதிலாக நானே போயிட்டு வந்துடறேன். ரொம்ப நன்னா பேஷா இருக்கு காய்கறிகள் எல்லாம், விலைவாசி எல்லாம் ரொம்ப சஸ்தாவா இருக்கு' அப்படியென்று பேசிக்கொள்கிற அளவிற்கு, அந்த விவசாயிகளுக்கும் பயன் அளிக்கக்கூடிய வகையிலே, பொதுமக்களுக்கும் பயன் அளிக்கக்கூடிய வகையிலே, இடைத்தரகர்கள் இல்லாமல் நடந்து வந்த அந்த உழவர் சந்தைகளை மூடிவிட்டு, புதியதாக தோட்டக் கலை இயக்கம் ஆரம்பிப்போம் என்று சொல்லியிருப்பது வருத்தத்திற்குரியதாக இருக்கிறது. எனவே அந்த உழவர் சந்தைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும். நாங்கள் வந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, ஐந்து நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ள வேண்டும்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்கம் போல அவைக்குத் தவறான தகவலைத் தர வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு உழவர் சந்தைகளை மூடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற உழவர் சந்தைகள் அவர்களுடைய எண்ணப்படி வசதி படைத்தவர்களுக்கு பலன் அளிக்கின்ற முறையில் இருப்பதை பாராட்டுகிறார். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், இருக்கின்ற உழவர் சந்தைகளையும் பாதுகாக்கின்றது. இதுமட்டுமல்லாமல், கிராமப்புறத்திலே இருக்கின்ற நலிந்த மக்கள்,





ஆதிதிராவிட அருந்ததி இன மக்களுக்குப் பலன் தரக்கூடிய அளவிற்கு கிராமச் சந்தைகளை இடைத்தரகர்கள் இன்றி அவர்களுக்கு வசதியாக அமைக்கக்கூடிய அளவிற்கு கிராமப்புறங்களிலே உள்ள கிராமச் சந்தைகளையும் ஊக்குவிக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உழவர் சந்தைகளையும் ஊக்குவித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, ஐந்து மணித்துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** 40 நிமிடங்களுக்கு மேல் பேசினார் அவர், ஒன்றுமே சொல்லவில்லை நீங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களே தலைவராக இருந்து இந்த அவையை நடத்தியிருக்கிறீர்கள். குறுக்கீடுகளுக்கும் சேர்த்துதான் கணக்கு வைத்துக்கொள்வது வழக்கம்.

**திரு. பரிதி இளம்வழுதி:** அதனால்தான் கேட்கிறேன். சிறப்புச் சலுகையாக கொஞ்சம் சேர்த்துக்கொடுங்கள்.

உழவர் சந்தைகளை நாங்கள் ஊக்குவிக்கிறோம் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். சொன்னபடி நடந்துகொண்டால் நானும் அதை வரவேற்கத் தயாராக இருக்கிறேன். ஏனென்றால், நாங்கள் நடத்தினோம் என்பதற்காக நீங்கள் நடத்தக் கூடாது என்பதல்ல. மரியாதைக்குரிய பெரியவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவு கொண்டு வந்தார்கள். இந்தச் சத்துணவு, அதற்கு முன்பு காமராஜர் காலத்தில் மதிய உணவாக இருந்தது. அதற்குப் பிறகு, எம்.ஜி.ஆர். காலத்தில் சத்துணவாக இருந்தது. நாங்கள் வந்து அந்தச் சத்துணவுடன் முட்டையையும் சேர்த்து, வைட்டமின் மாத்திரையையும் போட்டு கொடுத்திருக்கிறோம். அந்த மாதிரி, ஏற்கெனவே ஒரு அரசு செய்த நல்ல திட்டங்களை அடுத்து வருகின்ற அரசும் தொடர்ந்து செய்தால்தான் நன்றாக இருக்கும் என்பதற்காக அதைச் சொன்னேனே தவிர வேறொன்றுமல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

*முற்பகல் 12-05*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 நாட்களுக்கு இருமுறை தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட முட்டையை, சத்து மிகுந்த உருளைக் கிழங்கு, கொண்டைக் கடலை,

பச்சைப் பயிறு வாரத்திற்கு மூன்று நாட்களுக்கு குழந்தைகளுக்குத் தந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டை சத்து மிகுந்ததா, உருளைக் கிழங்கு சத்து மிகுந்ததா, என்ற வாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை. ஏன் என்றால் அதுகுறித்த எல்லா விவரமும், எல்லோருக்கும் தெரியும். எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது.

அடுத்து நான் ஒன்றே ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்த 15 அம்சத் திட்டத்தில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். உணவுப் பாதுகாப்பில், ஆண், பெண் மற்றும் குழந்தைகள் அனைவருக்கும் சரிவிகித உணவு கிடைப்பதற்கான பொருள்ாதார சமூக வழிமுறைகளை உருவாக்கப் போகிறோம என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது ஆண், பெண குழந்தைகள் அனைவருக்கும், சரிசமமான, சரிவிகிதமான உணவு கிடைப்பதற்கான பொருளாதார சமூக விதிமுறைகளை உண்டாக்கப் போகிறோம என்று சொல்லியிருக்கிறீர்கள். உள்ளபடியே வரவேற்கிறேன். ஆனால், வரவேற்கிற அதேநேரத்தில், நீங்கள் முதன்முதலில் ஆட்சிக்கு வந்தவுடன், 13,000 மக்கள் நலப் பணியாளர்களை வீட்டிற்கு அனுப்பினீர்கள். ஒரே நாளில் உத்தரவு போட்டு அனுப்பினீர்கள். அதிலே 6 பேர் தற்கொலை செய்து கொண்டு செத்துப் போய்விட்டார்கள். அந்தக் குடும்பத்திற்கு யார் உணவு அளிப்பார்கள் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். ஏனென்றால், அவர்கள் எங்கள் ஆட்சிக் காலத்தில் பணியில் அமர்த்தப்பட்டார்கள் என்ற காரணத்திற்காக நீங்கள் அவர்களை நீக்கிவிட்டீர்கள் என்று நான் சொல்லமாட்டேன். அப்படி நீக்கியிருந்தால், தயவுசெய்து அந்தத் தவறான எண்ணத்தை நீங்கள் நீக்கிக்கொண்டு. ஏனென்றால், எல்லோருக்கும் சரிசமமாக சரிவிகிதத்தில் உணவு வழங்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். அப்படியென்றால், அந்த 13,000 குடும்பத்திற்கு யார் பொறுப்பு? அதனால், மீண்டும் அவர்களை பணியில் அமர்த்தவேண்டுமென்று, மீண்டும் பழையபடி அவர்களுக்கு வேலைவாய்ப்பு தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 15 அம்ச திட்டத்தை நீங்கள் புரட்டிப் புரட்டிப் பார்த்தீர்களென்றால், life security, அந்த security, இந்த security, தொடர் பசுமைப் புரட்சி, உணவுப் பாதுகாப்பு, கால்நடைப் பாதுகாப்பு, நீர்வளப் பாதுகாப்பு,





சுகாதாரப் பாதுகாப்பு, வாழ்வாதாரப் பாதுகாப்பு, உறைவிடப் பாதுகாப்பு, உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு, இவ்வளவு பாதுகாப்புகளையும் நாங்கள் எதிர்காலத்தில் செய்யப்போகிறோம் என்கிறீர்கள். ஆனால், உள்ள நிலைமை என்னவென்றால், இந்த நாட்டில் உயிர் வாழ்கிற மக்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்நாள் M.L.A.-வையும் காணோம். முன்னாள் M.L.A.-வையும் காணோம். கடற்கரையில் இருக்கிற கண்ணகி சிலையையும் காணோம். வண்டலூரில் இருக்கிற சிங்கத்தையும் காணோம். இப்படியிருக்கின்ற சூழ்நிலையில், இந்தப் பாதுகாப்பெல்லாம் எப்படி வரும் என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்நாள் M.L.A. சிவகாமியைக் காணோம் என்று சொன்னார்கள். அப்புறம், திரும்பி வந்துவிட்டார்கள். இது ஏதோ உங்களுக்கு ஒருவேளை ஆதரவாக இருந்த சூழ்நிலையில் அவர்கள் திரும்பி வந்தார்களோ என்று எனக்குத் தெரியாது. ஆனால், எங்கள் கட்சியைச் சார்ந்த முன்னாள் M.L.A. காணாமல் போய் மூன்று மாதங்கள் ஆகின்றன. அவர் உயிருடன்தான் இருக்கிறாரா, இல்லையா, M.K. பாலன் உயிருடன்தான் இருக்கிறாரா, இல்லையா, ஒன்றுமே தெரியவில்லை. அந்தக் குடும்பம் திண்டாடிக்கொண்டிருக்கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால் இரண்டே நாளில் தப்பித்துப் போன தீவிரவாதியில் ஒருவரான ஹைதர் அலியைக் கண்டுபிடிக்கக் கூடிய திறமை இந்தப் போலீசுக்கு இருக்கிறது என்றால் காணாமல் போன முன்னாள் M.L.A.-வை ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை?

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குடும்பப் பிரச்சினை, குடும்பத்திலிருந்து ஒருவர் காணவில்லை. அவர் எங்கு இருக்கிறார்? இருக்கிறாரா, இல்லையா என்பது குடும்பத்தில் உள்ள உங்களுக்கே தெரியாத நிலையில் அரசு முயற்சி எடுத்து வருகிறது. அரசு அதைக் கண்டுபிடிக்க முயற்சிகள் எடுத்து வருகிறது. ஆனால், அவரைக் கண்டுபிடிக்க முடியுமா, முடியாதா என்பது அந்தக் குடும்பத்தைச் சார்ந்த உங்கள் ஒத்துழைப்பில்தான் இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போகிற போக்கில் மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் பல தவறான தகவல்களை இந்த அவையில் வெளியிட்டிருக்கிறார். கண்ணகி சிலையும் காணவில்லை என்கிறார். கண்ணகி சிலை காணாமல் போகவில்லை. அது பத்திரமாக, பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது. நீதிமன்ற ஆணையை இந்த

அரசு எதிர்நோக்கியுள்ளது. நீதிமன்ற ஆணை கிடைத்தவுடன், வைக்கவேண்டிய இடத்தில் அந்தச் சிலை வைக்கப்படும். காணாமல் போகவில்லை.

வண்டலூரிலுள்ள சிங்கமும் காணாமல் போய்விட்டது என்றார். வண்டலூரிலுள்ள எந்தச் சிங்கமும் காணாமல் போகவில்லை. வெளியிலிருந்து ஒரு சிறுத்தைப் புலி உள்ளே வந்தது. அதுவும் பிடிபட்டு விட்டது. ஆகவே, தவறான தகவல்களை இந்த அவைக்குத் தரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம் சொல்லவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாலன் அவர்கள் காணாமல் போய், அவருடைய குடும்பத்தார் மிகுந்த வேதனைப்பட்டு, காவல் துறைக்கு பலமுறை, தெரிவித்து, பல்வேறு தலைவர்களையும் சந்தித்து, பாலன் காணவில்லை, காணவில்லை என்பதை மிகுந்த வேதனையுடன் சொல்லி காவல் துறைக்கு நாங்களும் தெரிவித்து, தேடும்படிக் கேட்டுள்ளோம். ஆனால், இதுவரையில் அவர் எங்கிருக்கிறார் அல்லது இல்லை என்பது பற்றிய உண்மையே தெரியாத ஒரு நிலைமை இருக்கிறது. இது ஏதோ தி.மு.க. குடும்பத்திலே ஒருவர் காணவில்லை என்பதைப்போல அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் சொல்லியது, குடும்பம் என்பது தி.மு.க. கழகத்தையே குடும்பம் என்கிற முறையிலே சொல்லியிருக்கக் கூடும். தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர் என்பதால் குடும்பம் என்று சொல்லியிருக்கக்கூடும். அந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திடம் வேண்டுகோள் தருவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்; வேறு யார் தேடமுடியும்? அல்லது தி.மு.க.வைச் சேர்ந்த தலைவர்களே போய் தேடமுடியுமா, கண்டுபிடிக்க முடியுமா? ஆகவே, அது குறித்து அரசு முழு அக்கறையோடு அந்தக் கடமையைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இது எடுத்துச்சொல்லப்பட்டது. அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போனவரின் உறவினர்கள் காவல் துறையில் புகார் செய்தார்கள்; நீதிமன்றத்திற்கும் சென்றார்கள். காவல் துறை ஏற்கெனவே அவரைத் தேடிக்கொண்டிருந்தது. அவரை விரைவில் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நீதிமன்றமும் உத்தரவிட்டது. அந்தப் பணியில் காவல் துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள். இதில் அரசு எந்த மெத்தனமும்



காட்டவில்லை. காவல் துறை எந்த மெத்தனமும் காட்டவில்லை. எந்த வழக்காக இருந்தாலும், எத்தகைய வழக்குகளாக இருந்தாலும் காவல் துறையில் ஒரு percentage, ஒரு சதவீதம்தான் வெற்றி அடைய முடியும். திருட்டுக் குற்றமானாலும் சரி, கொலைக் குற்றமானாலும் சரி, தீ வைப்புச் சம்பவங்களானாலும் சரி, எந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும், எந்தக் காவல் துறையை எடுத்துக்கொண்டாலும் percentage of detection *70* சதவீதம், *80* சதவீதம் என்று இருக்குமே தவிர எங்கேயும் *100* சதவீதம் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, காவல் துறையினர் இதில் மெத்தனம் காட்டவில்லை. தேடிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் சில விஷயங்களைக் கேள்விப்படுகிறோம். இவர்கள் இதையே ஒரு பிரச்சினையாக இங்கே எழுப்ப முயலுவதால் நாங்களும் இதைப்பற்றிப் பேசவேண்டியதாக இருக்கிறது. சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தல் வர உள்ளது. மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் சைதாப்பேட்டை தொகுதிக்கான தேர்தலில் போட்டியிட இருந்தார் (குறுக்கீடு) யார், பெருமாளா? நான் அவரைப்பற்றிச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி, இரண்டு மணித் துளிகளுக்குள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பாலன் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காணாமல் போன பாலன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** அது தவறு. காணாமல் போன திரு. பாலன் அவர்கள் சைதாப்பேட்டை இடைத் தேர்தலில் வேட்பாளராக நிற்கக்கூடியவர். தி.மு.க.விலேயே அந்தத் தொகுதிக்கு கடுமையான போட்டி நிலவுகிறது என்று கேள்விப்படுகிறோம். அதனால்தான் மாண்புமிகு நிதியமைச்சர் சொன்னார், இது அவர்களுடைய குடும்பப் பிரச்சினை என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நியாயமான பிரச்சினையை ஒரு தவறான கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது. அவ்வாறு செய்துவிடக் கூடாது. ஒன்று, காவல் துறையைப் பற்றிச் சொல்லுகிறபோது நூற்றுக்கு [illegible] அவர்களால் காணாமல் போனவற்றை எல்லாம் கண்[illegible] முடியாது. [illegible] *80, 60, 50* என்று விழுக்காடு அள[illegible]தான் வெற்றிகாண முடியும்.

2 24482
சென்னை-600 008

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 மார்ச் 12

என்று ஒரு பொதுக் கருத்தைத் தெரிவித்தார்கள். அது பொதுக் கருத்து. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அவர் கண்டுபிடிக்கப்பட்டால் நூற்றுக்கு நூறு அது கண்டுபிடிக்கப்பட்டதாகும்; கண்டுபிடிக்கப் படாவிட்டால் நூற்றுக்கு நூறு அது கண்டுபிடிக்கப்படாத ஒரு நிலை ஆகும். ஆகவே, இந்தப் பிரச்சினையில் விகிதாச்சாரம் என்பது பொருந்தாது. உயிர் போகிறபோது விகிதாச்சார அளவில் உயிர் போகாது. அதைப்போல இந்தப் பிரச்சினையை விகிதாச்சார அளவிலே கருதாமல் முடிந்த அளவுக்கு, அதுவும் நீதிமன்றம் தெரிவித்திருக்கிற அந்த ஆலோசனையின் அடிப்படையில் முழு அளவுக்கு, அவருடைய உயிருக்கு ஆபத்து வராத அளவுக்கு, அவர் எங்கிருந்தாலும் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதுதான், அரசாங்கத்தை எதிர்க்கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது ஆகும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன திரு. பாலன் அவர்களைத் தேடும் பணியில் காவல் துறை தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. அதில் எந்த மெத்தனமும் இல்லை. ஆனால், இதையே ஒரு பெரிய பிரச்சினையாக்க எதிர்க்கட்சியினர் முயலுவதைப் பார்க்கின்றபோது எங்களுக்கு என்ன எண்ணத் தோன்றுகிறது என்றால், பொதுவாக பொதுமக்களுக்கே என்ன எண்ணத் தோன்றுகிறது என்று சொன்னால், சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரின் அலுவலகத்தை தாங்களே உடைத்துக்கொண்டு பழியை ஆளுங்கட்சி மீது போட முயற்சி செய்தார்களே, அதுபோல இவர்களே திரு. பாலன் அவர்களை காணாமல் போகச் செய்துவிட்டு எங்களைக் குறை கூறுகிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். ஒரு பிரச்சினை அரசியல் ஆகிறபோது அரசியல் ரீதியாகத்தான் முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்ல முடியும். பிரச்சினைக்கு அரசியல் வண்ணம் பூசப்படும்போது அரசியல் ரீதியாகத்தான் அவர்களும் பதில் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் என்பது அவரவருடைய நிலையிலே இருந்து காணப்படுகிற வகையில் பிரச்சினைக்கு அவரவர்கள் விளக்கம் சொல்லலாம். ஆனால், சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை தி.மு.க.வினரே உடைத்துக்கொண்டு அ.தி.மு.க.வினர் மீது பழியைப் போடப் பார்க்கிறார்கள் என்று சொன்னது முறையல்ல. அப்படி அ.தி.மு.க.வினர்



2002 மார்ச் 12] [பேராசிரியர் க. அன்பழகன்]

மீது பழிபோட்டு எதுவும் பேசப்படவில்லை. குற்றவாளிகளைக் கண்டுபிடியுங்கள், உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடியுங்கள் என்று மட்டும்தான் காவல் துறைக்குச் சொல்லப்பட்டதே தவிர, அப்படிப்பட்ட ஒரு தவறான—இன்னும் சொல்லப்போனால் நான் சொல்லக்கூடிய வார்த்தையாக நான் இதைக் கருதவில்லை—இழிவான நோக்கத்தில் எந்தக் காரியத்திலேயும் ஈடுபடவேண்டிய அவசியம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி). இன்னும் சொல்லப்போனால், கலைஞர் அப்படிக் கேள்விப்பட்டபோது, முதல்நாள் அதைத் திறந்து வைத்தபோது இவ்வளவு அழகான ஒரு கட்டடம்-நல்ல இடத்தில் நல்ல முறையில் கட்டப்பட்ட கட்டடம்; அரசாங்கச் செலவிலே, நிதியிலேயிருந்து கட்டப்பட்ட கட்டடம்; அது இப்படி ஆகிவிட்டதே என்று வேதனைப்பட்டார். கட்டடத்தைச் சேதப்படுத்தியதற்காகக்கூட இல்லை. தான் போய் திறந்து வைத்ததில் யாருக்கோ மாறுபாடு, அதனால் இப்படிச் செய்துவிட்டார்களே என்றுதான் கலைஞர் வேதனைப்பட்டாரே தவிர, அ.தி.மு.க.வினர் தான் செய்தார்கள் என்றுகூடக் காவல் துறைக்குச் சொல்லவில்லை. நான் பக்கத்திலேயிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். யாராகவும் இருக்கலாம், அ.தி.மு.க.வும் இருக்கலாம், வேறு கட்சியும் இருக்கலாம்; கட்சியே இல்லாதவர்கள்கூட இருக்கலாம்; அல்லது அந்தப் பகுதியிலே rowdy element யாராவது இருக்கலாம். அது எனக்குத் தெரியாது.

*பிற்பகல் 12-15*

ஆகவே, இதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்குத்தான் அங்கே போனபோது, கண்ணாடியெல்லாம் உடைந்து கிடந்தபோது அவரை அறியாமலேயே அப்படியே உட்கார்ந்தவர் முடிவு தெரியும்வரை நான் இங்கேயேதான் உண்ணாவிரதமாக உட்காரப் போகிறேன் என்று சொன்னார். இதில் திட்டமிட்ட அரசியல் எதுவும் நடைபெறவில்லை. அதிலும் முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்வது, அரசியலில் ஒருவருக்கொருவர் இருக்கிற மாறுபாட்டுக்காக, ஒரு தவறான போக்கை உருவாக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையில் மட்டும் அல்ல, நாட்டிலேயும் அரசியலில் ஒரு தகுந்த நிலையில் மாறுபட்ட கருத்துக்களைக்கூட மக்களிடத்திலே எடுத்துச்சொல்லி நியாயங்கள் பெற முயற்சிக்கலாமே தவிர, அதற்காக மாற்றுக் கட்சியினரைத் தவறாக சொல்லக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தக் கூடாது என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி, இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. என். இலட்சுமணன்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி பேசுங்கள்.

***திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல்போய் இருக்கின்ற திரு. M.K. பாலன் அவர்கள் என்னுடைய மயிலாப்பூர் தொகுதியிலே வாழ்ந்து கொண்டிருந்தவர். அங்கே இருக்கின்றவர்கள், வாக்காளர்கள் அல்லது அவர்களுடைய குடும்பத்தினர்கள் நான் அந்தத் தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற காரணத்தினாலே என்னை அணுகி வேதனையோடு புலம்பிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே மிகவும் கஷ்டமாக, வேதனையாக இருக்கின்றது. மிகச் சிறப்புத் தன்மை வாய்ந்த நமது காவல் துறை மேல் அதிகாரிகளிடமும்கூட நான் முறையிட்டிருக்கின்றேன். ஆகவே அவர்களும் சாமர்த்தியமாக பணி செய்து கொண்டிருக்கின்றார்கள். அரசு கொஞ்சம் முனைப்பாக புலன் விசாரித்து அவரைத் தேடித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் என்னுடைய நேரத்திலே குறுக்கிட்டு அபகரித்துக்கொண்டார்கள். எனவே, ஒருசில நிமிடங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனவே எல்லாம் கிடையாது. குறுக்கீட்டுக்கும் சேர்த்துத்தான் நேரம். கடைசி வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்திலே தனியார் பஸ்களை எல்லாம் நாட்டுடைமையாக்கியது. அது நீலகிரி மாவட்டத்திலேயிருந்து படிப்படியாகத் தொடங்கி நாட்டுடைமையாக்கியது. அது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்களும் அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான் இருந்தீர்கள். S.R.V.S. Bus Service, Raman and Raman, T.V.S. இவையெல்லாம் நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை, உங்களுக்குத் தெரியும். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களை அரசாங்க ஊழியர்களாக மாற்ற வேண்டுமென்றும், அவர்களுக்கும் ஓய்வூதியம் தர வேண்டுமென்றும் சொல்லி இதே அரசாங்கம் அன்றைக்கு நாங்கள் ஆட்சியிலே இருந்தபோது





போராட்டம் நடத்தினார்கள். ஆனால் இன்றைக்கு தனியார்மயம் ஆக்கிவிட்டீர்கள் என்றால், அந்தத் தொழிலாளர்களை யார் அரசு ஊழியர்களாக மாற்றுவது, யார் அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பது? அதுமட்டுமல்ல, நீங்கள் சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது, படிப்படியாக மொத்தத்தையும் தனியார் மயமாக்குவதற்குத் தனியாருக்குச் சிகப்புக் கம்பளம் விரித்தது போலத்தான் இந்த அறிவிப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் முடிந்துவிட்டது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சிவசாமி. (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாருக்குச் சிகப்புக் கம்பளம் விரித்ததைப்போல இருக்கிறது என்று சொன்னார்கள். தனியார்களுக்குச் சிகப்புக் கம்பளம் விரித்தது, 4,000 மினிப் பேருந்துகளை தனியாருக்குக் கொடுத்து கிராமப்புறத்திலே ஓடுகிற அரசுப் பேருந்துகளுக்கெல்லாம் நட்டத்தை உருவாக்கி (மேசையைத் தட்டும் ஒலி), புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே போக்குவரத்துக் கழகங்களுக்கு வெறுமனே 500 கோடி ரூபாய் மட்டுமே நட்டம் என்றிருந்த நிலைமை மாறி, 2035 கோடி ரூபாய் நட்டம் என்ற அளவுக்கு தனியாருக்குச் சிகப்புக் கம்பளம் விரித்தது தி.மு.க. ஆட்சி என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிடக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

***டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் விடப்பட்ட மினிப் பேருந்துகள், பேருந்துகள் ஓடாத வழித் தடங்களிலே, போக்குவரத்துக் கழகங்களினுடைய பேருந்துகள் ஓடாத வழித் தடங்களிலே இயக்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, நான்கு கிலோமீட்டர்....(குறுக்கீடுகள்) சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காகச் சொல்லவில்லை. நீங்கள் சொல்கிற கருத்தே தவறு. மதுரையிலேயே மினிப் பேருந்து ஓடுகிறது. மதுரை நகருக்குள்ளேயே மினிப் பேருந்து ஓடுகிறது.

[2002 மார்ச் 12

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) பொன்முடி சொல்லட்டும். பொன்முடி சொல்லி முடிக்கட்டும். பொன்முடி சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 கிலோ மீட்டர்கள் பேருந்து இயக்குகிற சாலைகளிலே அதை இயக்கக் கூடாது என்று விதி வகுக்கப்பட்டு, அதன்படி கொடுக்கப்பட்டன. மற்றொன்று, இப்படி ஓடுகிற காரணத்தினால் எந்தப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் நிறுத்தப்படவில்லை. ஆனால், நீங்கள் கொண்டுவருகிற தனியார் பேருந்து மூலமாக போக்குவரத்துக் கழகங்கள் நிறுத்தப்படும். படிப்படியாக இது குறைக்கப்பட்டு, கொண்டு வருவோம் என்று சொல்லி இருக்கிறீர்கள்.

* **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தப்படுவது தவறல்ல. ஆனால் நட்டமாக்கப்படுவது மாபெரும் பாதகம். 2,035 கோடி ரூபாய் அரசுப் பேருந்து கழகங்கள் நட்டத்திலே இயங்குவதற்கு பெரும்பான்மையான காரணம் உங்கள் ஆட்சிக் காலத்திலே 4,000 தனியார் பேருந்துகள், கிராமப் பேருந்துகள் 4 கிலோ மீட்டர் தூரம் என்ற போர்வையிலே அரசினுடைய வருமானத்தைக் கெடுக்கின்ற வகையிலே நீங்கள் விட்டதுதான்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி இளம்வழுதி, உங்கள் பேச்சை பொன்முடி முடித்துவிட்டார். (குறுக்கீடு) பொன்முடி பேசி முடித்துவிட்டார்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு நிதி அமைச்சர் சொல்வது உண்மையாக இருக்குமானால், உண்மையிலேயே போக்குவரத்துக் கழகத்திற்கு அதிக வருமானம் இருக்கும் என்று சொன்னால், மினி பஸ்களை அவர் தேசியவுடமையாக்குவதை நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) நிதியமைச்சர் அவர்கள் அதற்கு சட்டப் பேரவையில் பதில் சொல்லச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2002 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற அனைத்துத் தரப்பு மக்களும், ஏழை எளிய மக்கள் முதல் பாட்டாளி மக்கள், விவசாயிகள், அனைத்துத் தரப்பு மக்களும் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கின்ற இந்த முடிவை ஏகமனதாக வரவேற்றுப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவிற்கு இந்த முடிவை எடுக்கக்கூடிய ஆற்றலும், திறமையும், மதிநுட்பமும் புரட்சித் தலைவி அவர்களுக்கு மட்டும்தான் இருக்கிறது என்று இன்றைக்கு மக்கள் அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒருசில அரசியல்வாதிகளைத் தவிர, மக்கள் அனைவரிடமும் இது வரவேற்பை பெற்றிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

* **பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெவ்வேறு (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லிவிடட்டும்.

* **பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெவ்வேறு காரணங்களின் அடிப்படையில் மக்களிடத்திலே கருத்துகள் உருவாகின்றன. ஒரு கருத்து, ஒரு புரபோசலை சொன்னவுடனேயே, பொது மக்கள் அந்த புரபோசலைப்பற்றி இப்படித்தான் என்று எல்லாவிதமான விளைவுகளையும் வெளியிட்டு விடமுடியாது, புரிந்துகொண்டும் சொல்லமுடியாது. மினி பஸ் விட வேண்டிய ஒரு சூழ்நிலை எப்போது ஏற்பட்டது என்றால் அரசாங்கப் பேருந்துகள் போய் வரமுடியாத பாதைகளிலேயும், பல கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி, கிராமத்து மக்களுக்கு கிடைக்கவில்லை என்பதற்காகவும் மினி பஸ் விடுகிற கொள்கை ஏற்கப்பட்டது. அரசாங்க பஸ்களைத் தனியாரிடத்திலே ஒப்படைத்து, அதன் மூலமாக நஷ்டத்தைத் தவிர்க்கலாம் என்ற அந்த நோக்கம் அன்றைக்கு ஏற்கப்படவில்லை; அந்த அடிப்படையிலே அது செய்யப்படவில்லை. இன்னொன்று, இப்போது அரசாங்கத்தினுடைய கொள்கையைப் பற்றி மாறுபட்ட கருத்தாகச் சொல்லப்படுவதெல்லாம், தனியாரிடத்திலே அதை மெல்ல மெல்ல ஒப்படைக்கின்றபோது, அந்த அளவிற்கு இழப்பு ஏற்படக்கூடிய பாதைகளில் கிராமத்து மக்களுக்கு வசதியாகத் தனியார் அந்தப் போக்குவரத்தை நடத்த மாட்டார்கள், மெல்லக் கைவிட்டுவிடுவார்கள். ஆகவே, பொதுமக்களைப் பாதிக்கும் என்பதுதான் கருத்து. இது அவரவருடைய கொள்கை அடிப்படையிலே ஏற்படும் கருத்து.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் எந்த வழித்தடங்களையும் நிறுத்தவில்லை என்று சொன்னார். அவருடைய ஆட்சியினுடைய நிர்வாகச் சீர்கேட்டினால் கிட்டத்தட்ட 850 பஸ்கள் டயர் இல்லாமல், உதிரிப் பாகங்கள் இல்லாமல் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். இவர்கள் மினி பஸ்களுக்கு கிராமப்புறங்களில் அனுமதி கொடுத்ததாக பெருமையாகப் பேசிக்கொள்கிறார்கள். அதை ஏன் இவர்கள் கார்ப்பரேஷன் மூலம் செய்யவில்லை என்பதையும் நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சிவசாமி. (குறுக்கீடு) எல்லாம் முடிந்துவிட்டது.

*பிற்பகல் 12-25*

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தோரை வாழ வைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க தொழில் நகரான திருப்பூர் மண்ணில் இருந்து, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் பாசறையிலே வளர்ந்து, திருப்பூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராய் என்னை உயர்த்திய எங்கள் இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம் எதிர்கால இந்திய அரசியலுக்கே வழிகாட்டுகின்ற வல்லமையோடு விளங்குகின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து எனது உரையினைத் தொடங்குகின்றேன்.

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், மீண்டும் தர்மம் வெல்லும்' என்ற கருத்திற்கேற்ப சூழ்ந்து வந்த சூழ்ச்சிகளையெல்லாம் சுக்குநூறாக்கி சில தீய சக்திகளின் அவதூறு பிரச்சாரங்கள், ஆர்ப்பாட்டங்கள், சொல்லவொண்ணா கொடுமைகள் போன்ற சோதனைகளை வென்று சாதனை படைத்து சிங்கத்தை அச்சுறுத்தும் துணிச்சல் மட்டும் அல்ல, குள்ள நரிகளைச் சமாளிக்கும் ராஜதந்திரமும் கொண்ட புறநானூற்று கவிதை 'இந்த பூமிக்கு வந்த புது வசந்தம்' மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதிக்கு தலை வணங்கி, தான் நிரபராதி என்று நீதிமன்றத்தில் நிரூபித்து மீண்டும் தமிழக முதல்வராக வருவேன் என்று கூறி. இடைத் தேர்தலில் ஆண்டிப்பட்டி மக்களைச் சந்தித்தபோது, அம்மக்கள் வாக்குகளை அள்ளித் தந்து மாபெரும் வெற்றியைத் தந்து ஆண்டிப்பட்டியை அரசிப்பட்டியாக்கிக் காட்டினார்கள். அப்படிப்பட்ட





ஆண்டிப்பட்டி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயங்கரவாதம் எந்த உருவத்தில் வந்தாலும் அதை எதிர்க்க வேண்டும், அனுமதிக்க முடியாது; பயங்கரவாதத்திற்கு நாம் பல அரிய உயிர்களை, வழிகாட்டிகளை இழந்துவிட்டோம்; இழந்தது போதும், இருப்பவர்களைக் காப்போம், பயங்கரவாதத்தின் வேர் எங்கே எனக் கண்டு அதை அறவே அழித்திட மத்திய அரசு பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகக் கொண்டு வந்துள்ள தேசிய சட்டத்தை இவ்வரசு ஆதரித்திருப்பதை மனதாரப் பாராட்டுகிறேன்.

அதேபோல் இலங்கையின் இனப் பிரச்சினை ஒற்றுமையுடன் விரைவில் தீர்க்கப்பட வேண்டும். ஆனால் கொடூரங்களையே சந்தித்த இந்திய நாடு குறிப்பாக, தமிழ் மண் மீண்டும் ரத்தக்கறை படுவதை ஏற்க இயலாது; பட்ட துன்பங்கள், இழந்துவிட்ட இன்னுயிர்கள் காரணமாக இனியும் உயிர்ச்சோதனை வேண்டாம். உறவு உதட்டளவில் இல்லாமல் உதிரத்தின் இழப்பு இல்லாமல், உள்ளபூர்வமாக ஏற்பட வேண்டுமென விரும்புகின்றோம். சோதனைக்கு மீண்டும் தமிழகம் தயாராக இல்லை, எனவே இங்கு பேச்சுவார்த்தை நடத்த வேண்டாம் என்று துணிவோடு தெரிவித்த கருத்துகளைப் பாராட்டுகிறேன்.

தமிழகத்தின் பெருமை காட்டும் அன்னை காவிரித் தாயின் வளம் தமிழ் மக்களின் உயிரிலும் உடலிலும் பின்னிப் பிணைந்தது. காவிரிக் கரையின் நாகரிகம் சிறப்புமிக்கது. இவ்வாறு புகழ்பெற்ற காவிரி நதியின் தண்ணீரைப் பெற நமது மாண்புமிகு அம்மா டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தங்களை வருத்திக் கொண்டு உண்ணா நோன்பு இருந்தது தமிழக வரலாற்றில் தனி இடம் பெற்றதாகும். அது முதல் காவிரி நீர் பற்றி நாடு சிந்திக்கத் தொடங்கியது. காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நமது அம்மா அவர்களின் அரசு, தம் நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கும் என உறுதிப்படுத்தியதை, மத்திய அரசும் அறியும், மாநில மக்களும் அறிவார்கள். ஏற்கப்பட்ட, எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயல்படுத்த உரிய அதிகாரங்களுடன் கூடிய தொழில்நுட்பக் குழு ஒன்றை மத்திய அரசு விரைவில் அமைத்திட வேண்டும் என்பதை நமது அரசு வலியுறுத்தும் எனத் தெரிவித்துள்ளது காவிரி நதி நீரை நம்பியுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பெரிதும் நம்பிக்கை அளிப்பதாகும்.

நதிகளை இணைத்து கடலில் வீணாகக் கலக்கும் நீரைப் பயன்படுத்துவதன் மூலம், தமிழகத்தின் பாசன வசதியை மேம்படுத்த

[திரு. சி. சிவசாமி] [2002 மார்ச் 12

நதிகளை இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசை வலியுறுத்தி உள்ளது பாராட்டுக்குரியதாகும். கடந்த காலத்தில், சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணாததன் காரணமாக, சென்ற ஆண்டு தண்ணீருக்காக கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த, சென்னை மக்களின் தாகம் தீர்க்க உடனடியாக இரயில்கள் மூலமாகவும், லாரிகள் மூலமாகவும் தண்ணீர் கொண்டு வர ரூபாய் 75 கோடி வழங்கியதும், நிரந்தரமாக சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த அரசு உறுதிகொண்டிருப்பதும் மகிழத்தக்கதாகும், பாராட்டத்தக்கதாகும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்தை வளமிக்க முதல் மாநிலமாக உருவாக்க மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள பதினைந்து அம்சத் திட்டம் மிகப் பயனுள்ளதாக அமையும் என்று மனதாரப் பாராட்டுகிறேன்.

கல்வி தந்த கருணைத் தாயே! கடைகோடி பெண்கள் எல்லாம் கால்கடுக்க நடந்து சென்றால், மாணவிகள் மலர் பாதம் நோகுமென்று சைக்கிளிலே போகச் செய்ய சென்ற ஆண்டு திட்டம் தீட்டிச் செயல்படுத்தி, அத்திட்டம் எனது சகோதரிகளுக்கு இந்த ஆண்டும் தொடரும் என்று மேதகு ஆளுநர் உரையிலே தெரிவித்தமைக்கு இந்தச் சரித்திர சாதனையை நாட்டில் உள்ள அனைவரும் போற்றிப் பாராட்டுகிறார்கள்.

தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பாகும் என்ற நீதியைக் கருத்திலே கொண்டு 49 விரைவு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டதில் திருப்பூர் நகரில் மட்டும் இரண்டு தொடங்க அனுமதி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு திருப்பூர் தொகுதி மக்களின் சார்பாக எனது நன்றியினை மனதார தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் என் நீண்ட நாள் வேண்டுகோளான திருப்பூரில் ஒரு புதிய சார்பு நீதிமன்றத்தை அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை, கொங்கு மண்டலமாம், கோவை பெரியார் மாவட்டங்களில் அவிநாசி, மேட்டுப்பாளையம், திருப்பூர், பவானிசாகர், பெருந்துறை, காங்கேயம், கோபி, ஆகிய தொகுதிகளில் உள்ள பத்து ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த முப்பது இலட்சம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினை மற்றும் இப்பகுதிகளைச் சார்ந்த கால்நடைகளின் குடிநீர்ப் பிரச்சினை எனத் தண்ணீருக்காக தவித்துக் கொண்டிருக்கும் இப்பகுதி மக்களின்



2002 மார்ச் 12] [திரு. சி. சிவசாமி]

நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்க்க, இப்பகுதி மக்களின் வேண்டுகோளை ஏற்று சென்ற நிதிநிலை அறிக்கையில் அவிநாசி அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர அறிவித்தீர்கள். இத்திட்டத்தின்கீழ் பவானி ஆற்றில் மழைக் காலங்களில் அளவுக்கதிகமாக வெளியேறும் உபரி நீரை இப்பகுதிகளுக்குட்பட்ட குளம் குட்டைகளுக்கு மண்வாய்க்கால் மூலம் நிரப்புவதால் இப்பகுதியின் நிலத்தடி நீர் மேம்பட்டு குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் சூழ்நிலை ஏற்படும். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் குடிநீருக்காக அரசு ஆண்டு ஒன்றுக்கு செலவழித்துக் கொண்டிருக்கக்கூடிய ரூபாய் 50 கோடி சேமிப்பாகும். எனவே இந்த நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கு முதல் கட்டமாக சிறிதளவு நிதி ஒதுக்கி இத்திட்டத்தின் ஆரம்பகாலப் பணிகளைத் தொடங்கி வைக்குமாறு தங்கள் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

செலவைக் குறைக்கவும் நிர்வாகத் திறனை மேம்படுத்தவும் மாவட்டங்களைப் பிரிப்பதைத் தவிர்த்தாலும்கூட தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவை மாநகரத்தையே மிஞ்சுகின்ற அளவிற்கு புதிய தொழில் நகரமாக வளர்ந்து வருகின்ற திருப்பூர் நகரம் நமது இந்தியாவிலேயே 5,000 கோடி ரூபாய்க்குமேல் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற தொழில் நகரமாகும். கோவை மாவட்டம் 14 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய மிகப் பெரிய மாவட்டம் ஆகும். அருகில் உள்ள பெரியார் மாவட்டம் 11 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய பெரிய மாவட்டம் ஆகும். எனவே தொழில் வளர்ச்சி கருதியும் தமிழகத்தின் பல மாவட்ட மக்களுக்கு தொழில் கொடுக்கக்கூடிய நகரமாகவும், இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து தொழிலதிபர்கள் வந்து தொழில் தொடங்கக்கூடிய நகரமாகவும் திருப்பூர் நகரம் விரிவடைந்து வளர்ந்து வருவதால் இந்த நகரின் தொழில் வளர்ச்சி, தொழிலாளர்களின் பாதுகாப்பு, இந்தப் பகுதி மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்பட அனைத்துத் துறையிலும் மாவட்ட அளவிலான உயர் அதிகாரிகள் இந்த நகரத்திலிருந்து பணியாற்ற வேண்டிய அவசியம் இருக்கின்ற காரணத்தினால் எதிர்காலத்தில் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு, கோவை மாவட்டத்தின் சில பகுதிகளையும், பெரியார் மாவட்டத்தின் சில பகுதிகளையும் இணைத்து நிதி நெருக்கடி இருந்தபோதிலும்கூட தொழில் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு அம்மா அவர்கள் எங்களது பல ஆண்டு கோரிக்கையை ஏற்று புதிய திருப்பூர் மாவட்டத்தை அமைத்துத் தருவதைப் பரிசீலனை செய்யுமாறு தொகுதி மக்கள் மட்டுமல்லாமல் தமிழகத்தின் பல பகுதி மக்களின் சார்பாக

தங்களின் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன். திருப்பூர் நகரில் நடைபெறும் பின்னலாடை தொழில் குடிசைத் தொழில் ஆகும். ஆனால் தற்போது மத்திய அரசு இந்த பின்னலாடை தொழிலை சிறுதொழில் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது. எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இந்தத் தொழிலை மீண்டும் சிறு தொழில் பட்டியலில் சேர்க்க ஆவன செய்ய தங்கள் பாதம் பணிந்து வேண்டிக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையில் தனியாருக்கு உரிமம் வழங்க அரசு முடிவு செய்திருப்பது பாராட்டுதலுக்குரியதாகும். இந்நாட்டில் எங்கு பார்த்தாலும் பேருந்துகளில் கூட்ட நெரிசலால் நின்றுகொண்டும், படிக்கட்டுகளில் தொங்கிக்கொண்டும் பயணம் செய்வதைக் காண்கிறோம். அரசு பேருந்துகளால் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படுகிறது. எனவே அரசின் வருவாய் இழப்பைத் தவிர்க்கவும், அரசுக்குக் கூடுதல் வருமானத்தைப் பெருக்கவும், தனியாருக்கு உரிமம் வழங்குவதன்மூலம் ஏராளமானவர்கள் தொழில் புரியவும் வாய்ப்பு பெறுவதோடு, வேலைவாய்ப்பும் பெருகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுமக்கள் மத்தியில் இத்திட்டம் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

15 அம்ச திட்டத்தில் குறிப்பிட்டுள்ளதைப்போல வளர்ந்துவரும் திருப்பூர் நகரத்தின் புறநகர்ப் பகுதிகளில் அனுமதி பெறாத வீட்டுமனைப் பிரிவுகள் என்ற அடிப்படையில் அங்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க மறுக்கப்பட்டு வருகிறது. அப்பகுதிகளில், குடிநீர், தெரு விளக்கு, சாலை மற்றும் சாக்கடை வசதிகள் தொடர்பாக சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு ஏற்படுகிறது. சுகாதாரம் கெடுகிறது. இப்பகுதிகளில் பெரும்பாலும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை எளிய மக்களும், தொழிலாளர்களும் வாழ்ந்து வருகின்றனர். எனவே இனிமேல் உருவாகின்ற குடியிருப்புப் பகுதிகள் நீங்கலாக சுமார் ஐந்தாண்டு காலத்திற்கு முன்பிருந்து வீட்டு வரி செலுத்தி வருகிற அனைத்துப் பகுதிகளுக்கும் மேற்படி அடிப்படை வசதிகள் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திருப்பூர் நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கிட திருப்பூர் நகராட்சி எல்லைக்குள் புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அனுமதியளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் நகராட்சி ஒரு சிறப்பு நிலை நகராட்சியாக இருக்கின்ற காரணத்தினால், இந்நகராட்சியை சிறப்பாக நிர்வகிக்க நகராட்சி ஆணையாளராக ஐ.ஏ.எஸ். அந்தஸ்தில் உள்ள அதிகாரியை நியமிக்க வேண்டுகிறேன். மேலும் கோவை மாநகரில் உள்ள மாவட்ட ஊரக காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தை திருப்பூர் நகருக்கு மாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.





கோவை மாவட்டத்திலுள்ள அனைத்து குடிநீர்த் திட்டங்களையும் ராஜீவ் காந்தி குடிநீர்த் திட்டத்தின்மூலம் செய்ய வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தும் ஊராட்சிகளுக்கு மட்டுமே விதிவிலக்கு அளித்து முழுமையாக நிதி கொடுத்து குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் உள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் ஆலை மூடப்பட்டுள்ளது. இதன்மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். தொழிலாளர்களின் நிலை கருதி அரசு தலையிட்டு உடனடியாக இந்தத் தொழிற்சாலையையும் மேலும் கோவை மாவட்டத்தில் மூடியுள்ள பிற ஆலைகளையும் திறக்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அரசியலில் வளர்பிறையாகவே என்றும் பிரகாசித்துக்கொண்டு இருப்பார்கள். அந்த முழு நிலாவை இடையில் மறைக்க முயன்ற சில மேகங்களும், மிரண்டு விலகினவே தவிர அந்த அறிவு நிலா சித்ரா பௌர்ணமியாகவே சிந்தனைக் கதிர்களைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களையும் இந்த அரசையும் அழிக்க இமயமாக நினைத்துப் புறப்பட்டவை எல்லாம் இலையுதிர் காலத்து சருகுகளாகிவிட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்ப் பறவை குஞ்சுகளை அரவணைத்துச் செல்வதுபோல், தணல் வீசும் பாலை நிலத்து கங்காரு வயிற்றுப் பையிலே வைத்து தனது குட்டியைப் பாதுகாத்து வளர்ப்பதுபோல் தமிழகத்து மக்களை பாதுகாத்து வருகின்ற எதிர்கால இந்திய அரசியலின் வழிகாட்டி, தமிழகத்தின் ஒளிவிளக்கு; கழகக் காவல் தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதமான அரசின் எண்ண உணர்வு மலர்கள் இந்த ஆளுநரின் உரையில் மணம் வீசுகின்றன.

இந்த ஆளுநர் உரை சிறப்பாக அமைந்திருப்பதை மன நிறைவோடு வரவேற்றுப் பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி கூறுவதோடு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், திருப்பூர் நகருக்கு வருகை தந்து பல்வேறு திட்ட நிகழ்ச்சிகளை தங்கள் திருக்கரங்களால் தொடங்கி வைக்க வேண்டும் என தங்கள் பாதம் பணிந்து வேண்டி அமர்கிறேன்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஜெயக்குமார்.

***திரு. கு. ஜெயக்குமார்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவித்து இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்த அவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல சோதனைகளைக் கடந்து மீண்டும் தமிழகத்தில் முதல்வராக பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையிலே பல கருத்துகளை அரசு தெரிவித்திருக்கிறது. எல்லா கருத்துகளையும் தொட்டுப் பேசுவது இயலாது என்ற காரணத்தால் ஒருசில கருத்துகள் மீது மட்டும் என்னுடைய கருத்துகளை விட்டுச்செல்வது சாலப் பொருந்தும் என்று நான் கருதுகின்றேன்.

இளைஞர்களின் இதயத்தில் எல்லாம் குடியிருக்கின்ற, இளைய தலைமுறையின் புதிய நாயகனாக வாழ்ந்து, திருப்பெரும்புதூரிலே இரத்தம் சிந்தி உயிர் நீத்த எங்களுடைய தலைவர், ராஜீவ் காந்தி அவர்களைக் கொன்றவர்களாகக் கருதப்படுகின்றவர்கள், தமிழகத்திலே காலடி வைக்கக்கூடாது என்பதிலே இந்த அரசு தீவிரமாக இருந்து, அவர்கள் இங்கே வந்து பேசுவதற்குக்கூட இடம் அளிக்கக் கூடாது என்பதை திட்டவட்டமாக அறிவித்திருக்கின்ற இந்த அரசுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவையிலே கடந்த மே மாதம் 29 ஆம் தேதி, இதேபோன்று ஆளுநர் உரையின் மீது பேசுகின்ற நல்ல வாய்ப்பினை நான் பெற்றிருந்தேன். அப்படிப் பேசுகின்றபோது, இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரிலுமே, என் கவனத்தைப் பொறுத்த மாத்திரத்தில், நான் மட்டும்தான் இந்த W.T.O என்ற நிறுவனத்தைப் பற்றிப் பேசினேன் என்று கருதுகிறேன். இந்த W.T.O நிறுவனத்தைப் பற்றி மத்திய அரசும், மாநில அரசும் ஒரு சரியான நிலையிலே இல்லையென்றும், அதில் எவையெல்லாம் நல்லவையாக இருக்கும், பாதகமாக இருக்கும் என்பதை அறிய வேண்டுமென்றும், அதற்காக சில அறிவுஜீவிகளைக் கொண்ட நல்ல ஒரு குழுவினை அமைத்து, அதன்மூலம் தேவையானவற்றை எடுத்துக்கொள்வதும், தேவையில்லாதவற்றை தடுக்க வழிவகை காணவும்





இந்த அரசு முயல வேண்டுமென்றும் நான் என்னுடைய கருத்தினை இங்கே தெரிவித்தேன். என்னுடைய கருத்தினை ஏற்றமைக்காக, அதனையேற்று, ஒரு குழுவினை இதற்காக அமைத்திருப்பதற்காக இந்த ஆட்சிக்கு, இந்த அரசுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய தலையாய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய 15 அம்சத் திட்டத்தை வரவேற்றே நான் பேச விரும்புகின்றேன். ஒரு முதல்வர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனேயே, தனக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது, மக்கள் பெருவாரியான வாக்குகளை அளித்து தன்னை மறுபடியும் முதல்வராக ஆக்கியிருக்கின்றார்கள், இந்த நாடு நலம் பெற, வளம் பெற, தமிழகம் இந்தியாவிலேயே ஒரு முதல் மாநிலமாக வரவேண்டும் என்பதற்காக சூளுரைத்துக்கொண்டு, அதை நான் செயல்படுத்துவேன் என்று சொன்ன முதல்வர் அவர்கள், சிந்தித்து பல திட்டங்களை இங்கே கொடுத்திருக்கின்றார்கள்.

கொடுத்திருக்கின்ற அத்தனை 15 அம்சத் திட்டங்களும், ஏற்றவையா, ஏற்றவையில்லையா என்பது இங்கே கருத்து அல்ல. செயல்படுத்த முடியுமா, முடியாதா என்பதல்ல. நினைத்த மாத்திரத்திலே, இத்தகைய ஒரு எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது என்பதற்காக நான் அவரை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைவருக்கும் வேலைவாய்ப்பு, குறைந்த அளவு நீர், அதிக அளவு விளைச்சல், உறைவிடப் பாதுகாப்பு, பாலின நேர்மை நெறி, ஓசூரிலே மலர் ஏற்றுமதி வளாகம் போன்ற போற்றத்தக்க திட்டங்கள்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட குடிநீர்ப் பிரச்சினையை இந்த அரசு மிகவும் சாமர்த்தியமாக சமாளித்தது. அது ஒரு தற்காலிக வழிதான், நிரந்தர வழி ஏற்படவேண்டும். அந்த நிரந்தரமான ஒரு வழியை நாங்கள் ஏற்படுத்துவோம் என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இதுவும் ஒரு நல்ல திட்டம் என்றே நான் கருதுகின்றேன்.

குறைந்த செலவில் சுகாதாரப் பணிகள் என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இது நல்லதொரு திட்டம். வாய்ப்பு கிடைத்த இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை செம்மலை அவர்கள் எங்களுடைய நாமக்கல் தொகுதியிலே, மாவட்ட தலைமை மருத்துவமனையாக இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்த மருத்துவமனையில் "scan machine-ஐக்" கொடுத்ததோடு மட்டுமல்ல,

அதற்குத் தேவையான நிபுணர் இல்லாத காலக்கட்டத்திலே, நிபுணர் இல்லாமல் அதை இயக்க முடியாது என்று அவரிடம் நான் குறை சொல்ல, 15 நாட்களுக்குள்ளாக ஒரு நல்ல நிபுணரை அங்கு நியமனம் செய்தார். அதற்காக அமைச்சர் பெருந்தகைக்கு என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-40*

கட்டணத் துப்புரவு வளாகங்கள், பாதாளச் சாக்கடைகள்; வரவேற்கத்தக்கத் திட்டம். ஆனால், இப்போது சட்டமன்ற உறுப்பினருக்கு என்று 82 இலட்சம் ரூபாயைக் கொடுத்து 50 இலட்சம் ரூபாய்க்கு இதைத்தான் செய்ய வேண்டுமென்று திட்டம் போட்டுக் கொடுத்துவிட்டு, 32 இலட்சம் ரூபாயிலே நாங்கள் மற்றவற்றைச் செய்ய வேண்டுமென்றால்; மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள்; நாங்கள் போகின்ற இடங்களிலேயெல்லாம் இதைச் செய், அதைச் செய் என்கின்றார்கள். அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி என்பதே, அந்தந்த சட்டமன்றத் தொகுதியில் இருப்பவர்கள் அவசரத்திற்காகப் பயன்படுத்தி, மக்களுக்குத் தேவையானவற்றை செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. அதில் 50 இலட்சம் ரூபாயை, அரசு இப்படித்தான் செய்ய வேண்டுமென்றால், அந்த நிதி ஒரு தேவையற்ற நிதியாகவே எனக்குத் தோன்றுகிறது. எனவே, தயவுசெய்து இந்த 82 இலட்ச ரூபாயையுமே சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்கள் விருப்பப்படி, தொகுதி மேம்பாட்டு வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு ஆணையிட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

2006-ஆம் ஆண்டிற்குள்ளாக வறுமைக் கோட்டிற்கு கீழே யாரும் இருக்கக்கூடாது என்ற ஒரு திட்டத்தை இங்கே சொல்லியிருக்கின்றீர்கள். இது சாத்தியமா என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், தமிழகத்திலே இருக்கின்ற 43 இலட்சம் குடும்பங்களுக்கு மேலாக வறுமைக் கோட்டிற்கு கீழாக இருந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த 43 இலட்சம் குடும்பங்களுக்கு மேலாக வறுமை கோட்டிற்குக் கீழ் இருப்பவர்களை, அரசுக்கு இன்றைக்கு இருக்கின்ற நிதி நெருக்கடியிலே 2006-ஆம் ஆண்டிற்குள்ளாக இந்தத் திட்டத்தைச் செய்து முடிக்க முடியுமா என்பது சந்தேகத்திற்கு உரியது. இருந்தாலும், இத்தகைய ஒரு முயற்சியை நீங்கள் எடுப்பதற்காக உங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

385 வட்டாரங்களிலும் வேளாண்மைத் தொழிற் பிரிவு இருக்கும் என்றும், இளைஞர்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்றும் சொல்லி இருக்கின்றீர்கள். வாழ்த்துகின்றேன். புதுமையான திட்டங்களைப் பரிசீலிக்க



Department of Special Initiatives and Projects என்ற ஒரு புதிய நிறுவனத்தைத் தொடங்கவிருக்கின்றீர்கள். வரவேற்கத்தக்கது. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குழந்தைகளுக்கு முழு நேர தொழிற் பயிற்சியும், அனைவருக்கும் தொடக்கக் கல்வியும் என்றீர்கள். செய்தால் மிகவும் நலமாக இருக்கும். மதுக் கடைகள் ஏலம் விடுவதிலேயும், பள்ளி ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதிலேயும் உங்களை நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். எந்தவொரு தவறும் நடக்காத அளவுக்கு மதுக் கடை ஏலத்தையும், பள்ளி ஆசிரியர்களைக் கலந்துரையாடல் செய்து மாற்றுவதிலும் இலஞ்சத்தை ஒழித்திருக்கின்றீர்கள். இதற்காக உங்களை நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். "அமெரிக்க சுதந்திரதேவி சிலை" போன்று ஒரு அமைதிப் பூங்கா அமைக்கவும், இலவச மிதிவண்டித் திட்டம் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பெண் மாணவிகளுக்கு தொடரும் என்றும், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் வரும் என்றும் அறிவித்திருக்கின்றீர்கள்; உங்களை வாழ்த்துகின்றேன். இங்கே இத்தனை வாழ்த்துக்களைச் சொன்னதற்குப் பிறகு;

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்று சொல்கின்ற பொய்யாமொழிப் புலவர், தமிழ் மறை யாத்த திருவள்ளுவரின் வாக்குப்படி ஒருசில கடுமையான வார்த்தைகளையும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாநில அரசு, மத்திய அரசு இயற்றப் போகின்ற பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு துணை நிற்கும் என்று அறிவித்திருக்கின்றீர்கள். பாராளுமன்றத்தின் மீது நடந்த தாக்குதல், தாக்குதல் நடக்கும் என்று மத்திய அரசு அறிந்த பிறகு நடந்த தாக்குதல். தாக்குதல் நடப்பதற்கு 15, 20 நாட்களுக்கு முன்பாக, மாண்புமிகு அத்வானி அவர்கள் பாராளுமன்றத்திலே சொல்லியிருக்கின்றார்கள். தீவிரவாதி ஒருவன் பம்பாயிலே பிடிக்கப்பட்டிருகின்றான்; அவனிடம், பாராளுமன்றத்தைத் தாக்குவதற்கான திட்டங்கள் இருக்கின்றன என்று. அப்படித் தெரிந்தும், ஒரு சாதாரண காரிலே ஏறி, மெயின் வளாகத்தின் வழியாக, நேர் வாசல் வழியாக தீவிரவாதிகள் உள்ளே வருகிறார்கள். பாராளுமன்றத்தின் வளாகத்தை நன்றாக அறிந்தவன் நான். maingate வழியாக உள்ளே சென்று, அங்கே பாராளுமன்றத்தைத் தாக்குகின்ற அளவிற்கு கேவலமான ஒரு நிலையிலே அன்றைக்குப் பாதுகாப்பு இருந்தது. அதுமட்டுமல்ல, POTO என்கின்ற அந்தச் சட்டம் அன்று அமலில் இருக்கின்றது. ஏற்கெனவே POTO அமலிலே இருக்கிறது.

The Ordinance has been initiated already; it is going to be an Act by passing it in the Parliament. It was there in place. When POTO was in place, the Government was not in a position to protect the highest place in the country. It only reflects the inefficiency of the Central Government. Even when POTO was there and it could not protect the Parliament, what more protection you are going to have? What is the purpose in supporting this Ordinance? What is the purpose of extending support to this Central Government? It was an utter failure on the part of the Government. For this, our beloved leader Tmt. Sonia Gandhi should have asked the dismissal of the Central Government; should have asked the Central Government to resign because of its inaction and inefficiency. On the contrary, our leader has extended the fullest support. She was the first person to enquire about what happened to the Prime Minister and she was the first person on the floor of the House, when it assembled next, to state that whatever the decision the Government was going to take to protect this country and the safety of the people, she would extend full co-operation. This was the message given by the Opposition Leader-our Party Leader.

பிற்பகல் 12-45

Therefore, I request the Hon. Chief Minister and the Government to please reconsider the decision to support POTO in the form in which it is going to be enacted. It will be misused totally by some people. It will be misused by the better placed people against the weakest people. I once again request the Government to deeply look into this Ordinance.

Sir, I am fortunate that the Finance Minister is here. The Government said that it is going to prune down the plan outlay from 6,040 crore rupees to 5,200 crore rupees i.e. reducing the plan outlay by Rs.840 crores. (The gong was sounded). Five minutes Sir,

Sir, I would like to recall my question in this House. When I raised the question what are your sources of funds to bridge your gap - The current account deficit was Rs.3,748 crores and your capital expenditure was Rs.2,354 crores. Your total deficit would be Rs.6,102 crores—When





I asked the question what are your sources, the Hon. Finance Minster said that internal debt would be Rs.2,268 crores and the Central Government loan would be Rs.2,935 crores and the Public Account amount would be Rs.1,408 crores, thus you will be mobilising an amount of Rs.6,611 crores against your expenditure of Rs.6,102 crores projecting a surplus of about Rs.510 crores.

Another thing. When you have gone to tax the State to an extent of only Rs.135 crores—your tax proposal was Rs.135 crores—you were kind enough to come before the House to seek the approval of the House. Whereas, when you presented a mini budget where you have increased the electricity charges, bus fares, uniform taxes and the savings in the Government expenditure all put together mopped up to Rs.3,113 crores, did not the Government consider it necessary to come before the House? Why we were not taken into consideration at that particular situation? We, the Congress Members in the House are supporting the Government on every issue, and it is for the Government to find ways. I am the last person to say that you should not tax the people. I am one person, only one person in this House who has suggested to increase the bus fare by one naya paise per k.m. per passenger which would give you about Rs.116 crores. If you apply this 116 crores you can buy 1000 buses and in the same way I suggested electricity subsidy should be curtailed and in the same way I suggested food subsidy should be curtailed and I would say I am the only person in the House to talk about the steps to increase the resources mobilisation. Nobody talked about resources mobilisation. I considered it my privilege to advise the Government.

On the contrary when you presented the mini budget to an extent of about Rs.3,000 crores you did not care to take the members of the House into confidence. I really do not know why such a situtation arose?

I know it is for political reasons, because you had to face the local body elections. I feel that we were totally neglected in that particular situation. We, the people, particularly in the Congress party are coming out to support the Government, coming out to help raising the tax. How else you can run the Government without the money? We agree that you have to do this here, you have no alternative. That is the reason why I

questioned the other day the Hon. Finance Minister in the House about the sources? We had been kept totally in the dark. It is not the right way of doing things.

Therefore, atleast in future, when we, the supporting people are here, when we, the people who know a little bit of economics and how to rule the State are here, please take us into confidence in this House. You have got a vast majority. If you want to do anything you can do it by voting.

Why you adopt a backdoor method to do this? It is my humble submission before the Finance Minister. I hope and trust honestly that the Hon. Chief Minister would be listening to my speech from her room. I would like to have a reply on this particular matter when she comes before the House as and when she feels convenient. Sir, another thing. (The gong was sounded) I will complete it, Sir.

In the 15 point programme I appreciated very many things. I talked at length at Nammakkal when the Hon. Finance Minister was there. முட்டையில்லாத மதிய உணவு. அது எப்படி, எல்லாம் சேர்ந்த ஒரு நல்ல உணவாக இருக்கும்? மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்கின்றேன்.

படித்த டாக்டர்கள் இங்கே இருக்கிறார்கள். Science படித்தவர்கள் இருக்கிறார்கள். முட்டை இல்லாத ஒரு உணவு, சிறப்பான உணவாக இருக்குமென்று சொல்கிறீர்களே, நான் என் தொகுதியைச் சார்ந்த கோழி முட்டைக்காரர்களுக்காக பேசவில்லை. மீண்டும் சொல்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஏழையெளிய குழந்தைகள் நல்ல உணவைப் பெறவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக சொல்கிறேன்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நீங்கள் 15 நிமிடம் பேசுவதற்காக எடுத்துக் கொண்டீர்கள். சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஒரே ஒரு நிமிடம். ஒரே நிமிடம் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது, உறைவிட பாதுகாப்பு என்கிறீர்கள். ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்பதிலே,



என்னுடைய தொகுதியிலே, ஒரு வீடு கூட கொடுக்க முடியவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதே அவையிலே, கடந்தமுறை சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, முட்டை ஏன் நிறுத்தப்பட்டது என்பதற்கான விளக்கத்தைத் தந்து, அறிவிப்புகள் செய்து முடித்து, செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டு, சிறப்பான முறையிலே குழந்தைகள் விரும்புகிறவகையில், உணவருந்திக் கொண்டிருக்கிறார்கள். நான் நாமக்கல் சென்றபோதுகூட, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள், மக்கள் மத்தியிலேகூட அந்தக் கருத்தைச் சொன்னார்கள். அப்போதும் அவருக்கு இதுகுறித்து விரிவான விளக்கம் அளித்துவிட்டு வந்திருக்கிறேன். மீண்டும், இதே அவையிலே முட்டை பிரச்சினையைப் பற்றி அவர் கிளப்பிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது; முட்டை வழங்குவதில், மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி சொன்னதைப்போல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே செயல்படுத்தப்பட்டது என்கிற காரணத்தால், நிறுத்த வேண்டும் என்கிற நோக்கம் இந்த அரசுக்கு என்றைக்கும் இல்லை. முட்டை வழங்குவதால் ஏற்பட்டிருக்கின்ற சிரமங்கள்; அதன்மூலம் அழுகிப்போன முட்டைகள் குழந்தைகளுக்குப் போய்ச் சேருகிறபோது, அதனால் வரக்கூடிய சுகாதாரக் கேடுகள், இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்ததற்குப் பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்திருக்கின்ற பல்வேறு குறிப்புகளின் அடிப்படையிலேதான் அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டதே தவிர, வேறெந்த நோக்கமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினா அவர்கள் ஒரு நிமிடத்திலே பேசி முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** அவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எந்த நேரத்திலும், முந்தைய Government, இதைச் செய்து கொண்டிருந்தது; அதனால் நிறுத்தி விட்டீர்கள் என்று சொல்லவில்லை; சொல்லவும் மாட்டேன். அருமைச் சகோதரர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்

[திரு. கு. ஜெயக்குமார்] [2002 மார்ச் 12

குறிப்பிட்டதைப்போல, நல்ல திட்டங்களாக இருந்தால், தொடர்வது நல்லது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஒரே நிமிடம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை, இன்னும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. முட்டை திட்டம் தொடர்வது, அரசுக்கு நல்லது; குழந்தைகளுக்கு நல்லது. ஏழைக் குழந்தைகளுக்கு நல்லது; தயவுசெய்து தொடருங்கள் என்று இருகரம் கூப்பி, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடிக்கிறேன்.

ஆளுநர் உரையிலே உள்ள 15 அம்சத் திட்டத்திலே, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் மேம்பாட்டிற்காக பல திட்டங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். கடந்த முறையும் நான் சொன்னேன். I do not believe in the Government's framing up new schemes new proposals. இந்தத் திட்டங்கள் எல்லாம் மக்களுக்குச் சரியாக சென்று சேர்வதும் இல்லை; இவை பயன்படுவதும் கிடையாது. நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினைத் தந்திருக்கிற தங்களுக்கு, தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற 9-ஆம் தேதி, மேதகு ஆளுநர் அவர்கள், தன்னுடைய உரையிலே சில நல்ல அம்சங்களைக் கூறியிருக்கிறார்கள். இல்லையென்று நான் மறுக்கவில்லை. எங்களுடைய கட்சி, எதிரிக் கட்சியாக நிச்சயமாகச் செயல்படாது; எதிர்க்கட்சியாக இருந்து செயல்படும் என்பதை எங்கள் கட்சியினுடைய தலைவர் திரு. வாசன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, எதிர்க்க வேண்டும் என்பதற்காக நாங்கள் எதையும் இங்கே எதிர்க்க வரவில்லை.



2002 மார்ச் 12] [திரு. சி. ஞானசேகரன்]

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்கின்ற வாக்கிற்கிணங்க, நீங்கள் எல்லாம் கெட்டுவிடக் கூடாது என்பதற்காக, எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து சில விளக்கங்களை, சில குறைகளை, நாங்கள் சுட்டிக்காட்டுவது எங்களுடைய தலையாய கடமை என்பதை உணர்ந்து, உங்களுக்குச் சில கருத்துகளை நாங்கள் இங்கே சொல்லவும் காத்திருக்கிறோம்.

11 ஆண்டுக் காலமாக, வேலூரிலே ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்க வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய குரல் பல காலகட்டங்களிலே ஏனோ உருமாற்றம் பெறாமல் போனாலும்கூட, இந்த முறை, வேலூரில் ஒரு, பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று, அரசு, ஆளுநர் வாயிலாக சொல்லியிருப்பதற்காக, மாவட்ட மக்கள் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-55

20 ஆண்டுகளுக்கு முன்னால் சேலத்திலும், வேலூரிலும் சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய விரிவாக்க மையங்கள் தொடங்கப்பட்டன. சேலமும் கேட்டு வந்தது; வேலூரும் கேட்டு வந்தது. ஆனால் வேலூர் சென்றமுறை தோற்றுவிட்டது. சேலத்திற்கு பல்கலைக்கழகத்தை சென்ற ஆட்சியிலே கொடுத்துவிட்டார்கள். பிறகு நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்ததினுடைய விளைவாக இன்றைக்கு நாங்கள் எல்லாம் நீண்ட நெடிய நாட்களாக கண்டு கொண்டிருந்த கனவு நனவாகப் போவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கு என்னுடைய நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் பல திட்டங்கள், குறிப்பாக முதலிலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், வரவேற்கக்கூடிய திட்டங்களை நாங்கள் வரவேற்கிறோம். தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களிலே ஏற்பட்ட எதிர்பாராத மழை வெள்ள சேதத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 49 கோடி ரூபாயை கொடுத்து இருக்கிறீர்கள். நன்றி.

தமிழகத்திலே எல்.டி.டி.ஈ.-யினுடைய ஆதிக்கம் இருக்கக்கூடாது; 1991-ஆம் ஆண்டு அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்திலே அவர்கள் ஊடுருவி, வெடிகுண்டு கலாச்சாரத்திற்கு வித்திட்ட காரணத்தாலே

எங்களுடைய அருமைத் தலைவரன் ராஜீவ் காந்தியை இந்த மண்ணிலே இழந்தோம். அப்படிப்பட்ட விடுதலைப் புலிகளுடைய ஆலோசகராக இருக்கக்கூடிய திரு. பாலசிங்கம் அவர்கள் தமிழகத்தில் தங்கி இருந்துகொண்டு ஸ்ரீலங்கா அரசோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அனுமதி கோரியபோது, இந்த அரசு அதற்காக மறுப்பு தெரிவித்து மத்திய அரசை வலியுறுத்தியதை நாங்கள் நிச்சயமாக வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

தரிசு நில மேம்பாடு, உள்ளாட்சிகளுக்கு நிதிப் பங்கீடு அளிக்கின்ற திட்டம், தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம், சென்னை குடிநீர் வழங்கல் பெருக்கு திட்டம்-1, திட்டம்-2 போன்ற அம்சங்களை எல்லாம் நாங்கள் வரவேற்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், இன்னும் இந்த அரசு நிறைய செய்ய வேண்டியிருக்கிறது. ஏனோ அவற்றைச் சொல்ல மறந்து இருக்கிறது. இனியாவது நாங்கள் சொன்ன பின்னால் அவற்றைக் குறித்து வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையோடு எங்களுடைய வாதங்களை நாங்கள் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

வாதங்களுக்குள்ளே நான் நுழைவதற்கு முன்னாலே சில கோரிக்கைகளை வைப்பது என்னுடைய கடமை என்ற வகையில், ஒருசில மணித்துளிகள் பேச அனுமதிக்கக் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய வேலூர் பொன்னையாற்று குடிநீர்த் திட்டம், 3 ஆண்டு காலத்திற்கு முன்னால் அதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும்கூட, தொடர்ந்து டெண்டர் வைக்கப்படாமல், டெண்டர் வைத்த பிறகு அதற்கு technical sanction கிடைக்காமல் இழுவையில் இருந்த திட்டம் இப்போது சென்ற 8-ஆம் தேதிதான் 19.22 கோடி ரூபாய்க்கு Work Order Issue செய்து இருக்கிறார்கள். அதற்கும் என்னுடைய நன்றியை நான் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த பொன்னையாற்று திட்டம்கூட எங்களுடைய வேலூருக்கு 6 ஆண்டு காலத்திற்குத்தான் தண்ணீரை வழங்கும். அதற்குப்பின்னால் தண்ணீர் நிச்சயமாக கிடைக்காது. எங்களுடைய மாவட்ட மக்கள் அங்கே தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுநீர் காரணமாக நிலத்தடிநீர் மாசுபட்டுவிட்டதால், தண்ணீரே இல்லாமல் இப்போதே துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் இந்த மன்றத்திலே நான் சென்ற கூட்டத் தொடரிலே கோரிக்கை வைத்தபோது, அன்றைய முதல்வர் அவர்கள் ஒப்புக்கொண்டு வேலூருக்கும் காவிரி ஆற்றிலிருந்து ஒகேனக்கல் தண்ணீர் திட்டத்தை நீட்டித்துத் தருவதாக ஓர் அறிவிப்பை இந்த





மாமன்றத்திலே சொன்னார்கள். அதற்காக இப்போது எங்களுடைய வேலூர் நகராட்சியிலே இருந்துகூட ஆய்வுக் கட்டணத்தை கொடுகக வேண்டும் என்றுகூட அரசிடமிருந்து ஒரு கோரிக்கை வந்து, அதற்கான தீர்மானங்கள் எல்லாம் இயற்றப்பட்டு இருக்கின்றன.

இன்று நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்கும்போது, நாங்கள் வெளிநாட்டு, பன்னாட்டு நிறுவனங்களுக்கு எழுதியிருக்கிறோம்; மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டு இருக்கிறோம்; கடிதத்திற்கு இன்னும் பதில் வரவில்லை என்று சொன்னார்கள். இந்த அரசு எப்படியாவது கொஞ்சம் கடுமையான முயற்சி எடுத்து,—எப்படி அந்த குளோரின் வாட்டர் கலந்து இருக்கின்ற காரணத்தால் தருமபுரி மாவட்ட மக்கள் குடிநீருக்கு மிகவும் துடிக்கிறார்களோ, அதுபோல எங்களுடைய மாவட்டமும் அந்த அளவிற்கு பாதிப்புக்கு உள்ளான மாவட்டம் என்பதாலே, எங்களுடைய மாவட்டத்திற்கு அந்தத் தண்ணீர் வழங்கப்படும் என்று அன்றைய முதல்வர் ஏற்கெனவே அறிவித்த அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற முகத்தான் உடனடியாக போர்க்கால அடிப்படையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்து, ஒகேனக்கல் தண்ணீரை எங்களுக்குத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலூரில் கூட்டுறவு பழத் தொழிற்சாலை பல ஆண்டுகள் இருந்து, அதை மூடி 7, 8 வருடங்களாகிவிட்டது. அந்த இடத்திலே ஒரு புதிய பஸ் ஸ்டாண்டை அமைக்க வேண்டுமென்று தொடர்ந்து நான் சட்டமன்றத்தில் வலியுறுத்தி 3 ஆண்டுகளுக்கு முன்னர் அதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டது. பிறகு சில பேர் நீதிமன்றத்திற்கு சென்று உயர்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றார்கள். பிறகு நானே உயர்நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடி அந்த வழக்கை முடித்து 10 வாரங்களுக்குள் அந்த நிலத்தை கையகப்படுத்தி, Emergency Provision-படி கையகப்படுத்தி, பஸ் ஸ்டாண்ட் அமைக்க வேண்டுமென்று உயர் நீதி மன்றம் உத்தரவிட்டது. ஆனால் இதுவரை இந்த அரசு அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த பஸ் ஸ்டாண்ட் திட்டத்தை உடனடியாக—ஏனென்றால் Enter upon Permission-ஐ கூட்டுறவுத் துறை கொடுத்தாலாவது உடனடியாக பஸ்களை அந்த இடத்திலே திருப்பிவிட்டு பஸ் ஸ்டாண்டை இப்போதைக்கு ஆரம்பித்துவிடலாம். இதற்கு நீங்கள், அரசுக்கு அரசு, இரண்டு அரசுத் துறைகள், ஏதோ வேறு ஒரு தனியாரிடம் நீங்கள் வியாபாரம் செய்யப் போவது இல்லை. மூடி வைத்திருக்கக்கூடிய அந்த ஆலையை பொதுக்

[திரு. சி. ஞானசேகரன்] [2002 மார்ச் 12

காரியத்திற்குக் கொடுப்பதற்குக்கூட அந்தக் கூட்டுறவுத் துறை ஏனோ தயக்கம் காட்டிக் கொண்டிருக்கிறது. Enter upon Permission-ஐக் கொடுக்காமல் இருக்கிறது. அதைக் கொடுத்து, எங்களுடைய வேலூர் பஸ் ஸ்டாண்டை உடனடியாகத் தொடங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-00*

அடுத்து, நான்கு ஆண்டுகளாக வேலூரிலே அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்ற வாக்குறுதி இந்த மன்றத்திலே கொடுக்கப்பட்டு வந்தது. எங்களுடைய அரசு மருத்துவமனையிலே வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை என்று பெரிய போர்டு மட்டும் தான் இருக்கிறது. தினகரன் பத்திரிகையிலே 4 நாட்களுக்கு முன்பு இந்தச் செய்தியை வேறு மாதிரிகூட போட்டு விட்டார்கள். அரசு மருத்துவக் கல்லூரியே வரவில்லை, எதற்காக இந்த போர்டை வைத்திருக்கிறீர்கள், எடுங்கள் என்று சொல்லி, அந்த மருத்துவமனை டீன் அவர்களிடம் போய் கேட்டு தகராறு செய்திருக்கிறார்கள். ஆகவே, நான் இந்த அரசையும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வது எல்லாம், மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே பிறப்பிக்கப்பட்ட அரசாணை, பிறகு அறிவிப்பு, எனினும் இன்னும் ஏனோ எங்களுடைய மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி வராமல் இருந்து கொண்டிருப்பதை நீங்கள் உணர்ந்து, வருகிற ஆண்டில் நிச்சயமாக கொண்டுவர வேண்டும். ஏனென்றால் இதற்கு ஒரு கோடி ரூபாய் கட்டணம் எல்லாம் கட்டப்பட்டு விட்டது. டி.பி. சானடோரியத்தில், அடுக்கம்பாறையிலே கட்டிக் கொடுத்துவிட்டார்கள். காலையிலே அருமை நண்பர் புகழேந்தி அவர்கள், அவருடைய கடலூர் மாவட்டத்திலே மருத்துவமனையில் இருக்கக்கூடிய இலக்கணங்களையெல்லாம் சொல்லியிருந்தார்கள். அதைவிட இரண்டு மடங்கு தகுதிகளையும், இலக்கணங்களையும் பெற்றிருக்கிற எங்களுடைய வேலூர் மருத்துவமனை இன்னும் வேலூர் மருத்துவக் கல்லூரியைப் பெறாமல் பின்தங்கிய மாவட்டமாக எங்களுடைய மாவட்டம் இன்னும் அந்தச் சூழலில் பின் தங்கி இருக்கிறது. எனவே, உடனடியாக இந்த ஆண்டில் மருத்துவக் கல்லூரியை அங்கே கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



2002 மார்ச் 12] [திரு. சி. ஞானசேகரன்]

அடுத்து, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொடுப்பதாக பல ஆண்டுகளுக்கு முன்னாலே இந்த அவையிலே இந்த அரசால் உறுதிமொழி கொடுக்கப்பட்டது. அதற்கான ஆய்வுகளும்கூட கிர்லோஸ்கர் கம்பெனி மூலம் ஏற்கெனவே நடத்தி முடிக்கப்பட்டு விட்டன. அதற்காக இந்த அரசாங்கம் 40 கோடி ரூபாயை மானியமாகவோ அல்லது matching grant கொடுத்தோ எப்படியாவது வழங்கி, தொடங்கினால்தான் எங்களுடைய வேலூரிலே பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். ஏனென்றால், சம்பளத்திற்கே திண்டாடுகிற நகராட்சி, எங்களுடைய வேலூர் நகராட்சி. ஆகவே, அதையும் செய்து தரவேண்டுமென்று நான் முதலிலே கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுடைய பிரச்சினையைப் பற்றி என்னுடைய வாதத்திற்கு வருகிறேன். இந்த அரசாங்கம் 49 கோடி ரூபாய் அளவிற்கு தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக வழங்குவதற்கு மட்டும் கொடுத்திருக்கிறதேயொழிய கிட்டத்தட்ட 900 கோடி ரூபாய்க்கு, 1,000 கோடி ரூபாய்க்கு அந்த இடத்திலே இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட மக்களும், அதுபோல பக்கத்திலே இருக்கக்கூடிய புதுக்கோட்டை, கடலூர் மாவட்ட மக்கள், உயிர்ச் சேதம், அதுபோல நெற்பயிர்ச் சேதம் என்றெல்லாம் இந்த அளவுக்கு பாதிப்புக்கு உள்ளாகி இருப்பவர்களுக்காக, நீங்கள் மத்திய அரசுக்கு நிதி உதவி கேட்டு எழுதியிருப்பதாக ஆளுநர் உரையிலே சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் அது நிச்சயமாக இப்போது இருக்கக்கூடிய விவசாயிகளுடைய நிலைமைக்கு ஒரு தீர்வாக அமையாது. இந்த அரசு எப்படியாவது நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட அத்துணை விவசாயிகள் குறித்தும் ஒரு கணக்கெடுப்பை மேற்கொள்ள வேண்டும். அங்கே சரியான கணக்கே கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். சில நேரங்களில் அங்கே இருக்கக்கூடிய D.R.O.-க்கள் எல்லாம் ஏதோ 10 சேதம் என்று சொன்னால் 1,2-தான் கணக்கு எடுக்கிறார்கள் என்ற குறையும் இருக்கிறது. அந்தக் குறையையெல்லாம் நிவர்த்தி செய்து சரியான முறையிலே கணக்கெடுத்து, 900 கோடி ரூபாய் அளவிலே சேதம் அடைந்திருக்கக்கூடிய அந்த விவசாயிகளுக்கு ஒரு நல்வாழ்வினை கொடுப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது எச்சரிக்கை மணி. உரையை நிறுத்துவதற்கு முன் அடிக்கிறேன். 10 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

**திரு. சி. ஞானசேகரன்:** சென்ற பட்ஜெட் அறிவிப்பின்போது விவசாயிகளின கடன்களுக்கான வட்டி, அபராத வட்டியை தள்ளுபடி செய்ய, தள்ளுபடி கடனுக்காக ரூ. 310.50 கோடியை இந்த அரசு ஒதுக்கீடு செய்து. அதிலே 100 கோடி ரூபாயை உடனடியாக வழங்குவதாக அறிவித்தது. ஆனால் 100 கோடி ரூபாய் மட்டும்தான் இதிலே செலவழிக்கப்பட்டதா அல்லது மீதம் இருக்கக்கூடிய தொகையும் செலவழிக்கப்பட்டதா என்ற ஒரு நிலை எங்களுக்கு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. பலபேர், விவசாயிகள் அந்த அசலை உரிய நேரத்திலே கட்ட முடியாத காரணத்தாலே, இந்தத் திட்டத்தை அவர்களாலே பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. விவசாயக் கடன் தள்ளுபடி என்று அறிவித்துவிட்டு நாம் ஒரு சிலருக்கு மட்டுமே, 100 கோடி ரூபாய் அளவிலே மட்டுமே இந்தப் பணத்தை ஒதுக்கீடு செய்து, பிறகு பெயர் அளவிலே இந்தத் திட்டத்தை அறிவித்து விட்டுவிடுவதைவிட நீங்கள் ஏற்கெனவே எடுத்துக் கொண்ட அந்தச் சூழல்படி பட்ஜெட் உரையிலே, பக்கம் 11-ல், 25-வது பாராவில் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அப்போது சொன்னார்கள், ரூ. 310 கோடி ஒதுக்குவதாக. பிறகு ஒதுக்கப்பட்டதா, மீதி இருக்கக்கூடிய மக்களும் பயனடையக்கூடிய அளவுக்கு அந்தத் திட்டம் விரிவாக்கப்படுமா, தொடர்ந்து நடைபெறுமா என்பது இதுவரை விவசாயிகளுக்குத் தெரியாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-05

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொடுத்த அந்தச் சலுகைகளிலே 6 இலட்சத்து 11 ஆயிரத்து 193 விவசாயிகள் பலன் பெற்றிருக்கிறார்கள். மொத்தம் அந்தத் தொகையிலே, 311 கோடியிலே, 226 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்குப் பலன் சென்றடைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** 226 கோடி ரூபாய் வழங்கியதற்கு நன்றி. ஆனால், அறிவிப்பில் இன்னும் பாக்கி இருக்கிறது. அவற்றையும் அளித்து,





பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு அந்தத் திட்டத்தை நீங்கள் நீட்டித்துக் கொடுத்து, அவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கரும்புக்கு, டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் கொடுப்பதாக . . .

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த காலங்களில் விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெற, அவர்கள் விவசாய வங்கிகளில் வாங்கிய கடனுக்காக, வட்டியும், அபராத வட்டியுமாக, ஒட்டுமொத்தமாக 311 கோடி ரூபாய் அளவுக்கு சலுகைகளை அளித்து அறிவிப்புச் செய்தார்கள். அறிவிப்புச் செய்தவுடன் இரண்டு மாத காலம் நீட்டிக்கப்பட்டிருந்தது. அடுத்தடுத்து மீண்டும் மூன்று மாத காலம் நீட்டிக்கப்பட்டிருந்தது. விவசாயிகளும் தானாகவே முன்வந்து அந்த அசலைக் கட்டுகின்றபோதுதான், 311 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் அதனுடைய பலனை அனுபவிக்க முடியும். ஆக, அந்த வகையில், விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றுவரை 226 கோடி ரூபாய் அளவுக்குத் தாமாகவே முன்வந்து அசலைக் கட்டி, அதற்குண்டான வட்டி, அபராத வட்டி சலுகையை அனுபவித்து இருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இரண்டு மணித்துளிகளில் முடித்து விடுங்கள். (குறுக்கீடு) இரண்டு மணித் துளிகள்தான் எடுத்துக்கொண்டார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும்கூட, இன்னும் பல விவசாயிகள் கடனிலே மூழ்கியிருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தை நீங்கள் விரிவாக்கம் செய்து, அவர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க வேண்டுமென்று சொன்னால், ஒருமுறை மீண்டும் அறிவித்துக்கூட அவர்கள் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தாருங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே இந்த மன்றத்தில் கோரிக்கை வைத்தோம். பரிசீலிப்பதாக அரசு சொன்னது. ஆனால் இதுவரை கரும்பு விவசாயிகளுடைய வயிற்றில் பாலை ஊற்றக்கூடிய சூழ்நிலை ஏனோ இன்னும் வாராமல் இருந்து கொண்டிருக்கிறது. அதற்காக மீண்டும் நீங்கள்

நடவடிக்கை எடுத்து, கரும்புக்கு, டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை. நீலகிரி மாவட்டத்தில் பச்சைத் தேயிலை கிலோ 18 ரூபாய் என்று விற்றது இப்போது 5¼ ரூபாய் என்றிருக்கிறது. விலை மிகக் குறைவாக இருக்கிற காரணத்தால், தேயிலை விவசாயிகள் பெருத்த ஏமாற்றத்தில் இருக்கிறார்கள்.

அதேபோல, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் இப்போது நெல் கொள்முதல் நிலையங்களிலே கொண்டுபோகக்கூடிய நெல்லையே சரியாகக் கொள்முதல் செய்ய மறுக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இதற்கெல்லாம் உரிய விலை கொடுத்து வாங்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் நிறைய இருக்கிறது. கொஞ்சம் நேரம் அதிகம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாலைக் கூட்டம் வேறு இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** 1½ மணிவரை பேசவிடுங்கள். விவசாயிகள் பிரச்சினையை அடுத்து, தொழிலாளர்கள் பிரச்சினைக்கு வருகிறேன். மூடிய தொழிற்சாலைகளைத் திறப்போம் என்று நாம் ஏற்கெனவே வாக்குறுதிகளை தேர்தல் காலத்திலே கொடுத்திருக்கிறோம். பல தொழிற்சாலைகள் குறிப்பாக, கூட்டுறவு நூற்பாலைகள், நம்முடைய தமிழகத்திலே பல மூடிக் கிடக்கின்றன. சென்ற ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆளுநர் உரையிலே, பத்தி 17-ல், இந்த அரசேகூட தொழில் வளம் மிக்க மாநிலமாக இந்த மாநிலத்தை நிச்சயமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்; புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்; வல்லுநர் குழு நியமிக்கப்படும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி. (குறுக்கீடு) அவர் Train-ஐப் பிடிக்க வேண்டும் என்று சொல்கிறார். (சிரிப்பு) (குறுக்கீடு) சரி, 1 நிமிடத்தில் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள் 16 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒன்றுமே பேசவில்லையே; ஒருவர் டெல்லி போக வேண்டும் என்கிறார்; ஒருவர் இரயிலுக்குப் போக வேண்டும் என்கிறார்; ஒருவர் விமானத்தைப் பிடிக்க வேண்டுமென்கிறார்; அதனால்





சீக்கிரமே பேச்சை முடித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால், நான் மாட்டிக்கொண்டு முழிக்க வேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். 16 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. இன்னும் ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேச வாய்ப்பில்லை என்று சொல்லிவிடுங்கள், நான் இதோடு பேச்சை முடித்து உட்கார்ந்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேசக்கூடாது என்றால் சொல்லிவிடுங்கள், முடித்து விடுகிறேன். இரயிலுக்குப் போகிறார், விமானத்திற்குப் போகிறார், அதனால், பேச்சினை சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோபப்படாதீர்கள். இதே உரிமை மற்ற உறுப்பினர்களுக்கும் உண்டு.

**திரு. சி. ஞானசேகரன்:** நீங்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்களை 50 நிமிடம், 80 நிமிடம் என்று பேச அனுமதிக்கிறீர்கள், எங்களுக்கு 10 நிமிடம், 20 நிமிடம் கொடுத்தால், எங்கள் கதி என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரத்தின் அருமை கருதி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆளுங்கட்சி என்றால் ஒரு மாதிரி; எங்களை மட்டும் வேறு மாதிரிப் பார்க்க வேண்டுமா நீங்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

பிற்பகல் 1-10

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு நீங்கள் எந்தத் திட்டத்தையும் இந்த ஆளுநர் உரையிலே சொல்லவில்லை. அதேபோல மூடிய தொழிற்சாலைகளைத் திறப்பதற்கும் நீங்கள் எந்தவிதமான வாக்குறுதியும் அளிக்காத காரணத்தால், மீண்டும் உங்கள் கவனத்திற்குக்

கொண்டு வருகின்றோம். தொழிற்சாலைகளைத் திறந்து இன்று வாடிக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

"வெளிநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களின் கூட்டமைப்பு" ஒன்றை அமைப்பதாகச் சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலே நீங்கள் பாரா 17-லே சொன்னீர்கள். ஆனால் வெளிநாட்டில் வாழ்கின்ற அந்த இந்திய தமிழர்களை நீங்கள் ஒருங்கிணைத்தீர்களா அந்த consortium என்கிற கூட்டமைப்பை நீங்கள் உருவாக்கினீர்களா என்ற கருத்து இன்னும் அவைக்குத் தெரிவிக்கப்படவில்லை. அவர்களுடைய முதலீட்டை எப்படியாவது பெறுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருமுல்லைவாயிலில் ஆயிரம் ஏக்கரிலே சிறிய தொழிற்பேட்டை, மகளிருக்கான தொழிற்பேட்டை அமைப்பதாகவும் சென்ற ஆளுநர் உரையிலே பாரா 10-லே சொல்லப்பட்டது. ஆனால் அது இன்னும் முழுமை பெறவில்லை. அது நடவடிக்கையில் இருக்கிறதா, இல்லையா என்பதையும் அவைக்கு சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Neyveli Lignite Corporation, சேலம் இரும்பாலை போன்றவற்றை தனியார்மயமாக்குவதற்கான அறிவிப்புகள். அதற்கான நடவடிக்கையை மத்திய அரசு இப்போது எடுத்துக் கொண்டு இருக்கிறது. Neyveli Lignite Corporation-ல் கிட்டத்தட்ட 19 ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். நமக்குக் குறைந்த விலையில் மின்சாரம் இப்போது கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இப்படி இந்தத் தமிழ்நாட்டுக்கு வாழ்வளித்துக் கொண்டிருக்கின்ற இந்த நெய்வேலி திட்டம், கர்ம வீரர் காமராஜர் காலத்தில் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டங்களெல்லாம் இப்பொழுது தனியார்மயமாக்கப்படும் என்று சொன்னால் ஒரு பெரிய ஆபத்து தமிழ்நாட்டுக்கு எதிர்காலத்தில் வந்து சேரும். ஏனென்றால், உங்களுக்கு மின்சாரத்தை அதிகமான விலைக்கு, தனியார்கள் விற்கக்கூடிய சூழல் வந்துவிடும். சேலம் இரும்பாலையை தனியார் மயமாக்கக்கூடாது என்று நாங்கள் கடுமையாக இந்தச் சபையிலே ஏற்கெனவே தீர்மானம் எல்லாம் போட்டு அனுப்பினோம். N.L.C. தனியார் மயமாக்கப்படுவதை இந்த அரசு எப்படி எடுத்துக்கொள்கிறது, அதை எதிர்க்கிறதா, மத்திய அரசு அதைச் செய்யக்கூடாது என்று வற்புறுத்தப் போகிறதா என்பது குறித்து ஆளுநர் உரையிலே எதுவும் சொல்லப்படாதது வேதனையாக



இருக்கிறது. ஆகவே அதற்கும் நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொது விநியோக முறையிலே ஏற்கெனவே ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவும் பல மாநிலங்களுக்கும், மாவட்டங்களுக்கும் சென்று ஆய்வு செய்து அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அந்த அடிப்படையிலே நீங்கள் பொது விநியோக முறையிலே பொருட்களைக் குறைவில்லாமல் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பொது விநியோக முறையிலே திடீரென்று இந்த அவையைக் கூட்டாமல், ஏற்கெனவே, அரிசி போன்ற இன்றியமையாதப் பொருட்களின் விலையை உயர்த்துவதற்கு நீங்கள் அறிவிப்புச் செய்து, பிறகு ஏனோ defer செய்து வைத்திருக்கிறீர்கள். ஆனால் நீங்களே சென்ற ஆளுநர் உரையிலே Para 17-ல் மாநில அரசு மக்களுக்கு நெருக்கமாக இருக்கிறது. இன்றியமையாத பொருட்களின் விலையை உயர்த்துகிறபோது மத்திய அரசு, மாநில அரசை ஆலோசிக்க வேண்டுமென்று நீங்கள் சொன்னவர்கள், ஏனோ இன்று மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கின்ற M.L.A.-க்களை ஆலோசிக்காமலேயே சபையைக் கூட்டாமலேயே நீங்கள் விலையை உயர்த்தச் சொன்னீர்கள், திருப்பி defer செய்திருக்கிறீர்கள். இனி நாங்கள் விலையை உயர்த்தமாட்டோம் என்ற உறுதியும் ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்படவில்லை. அதையும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைப் பொறுத்தவரை, எங்களுடைய மாவட்டத்தில் தெக்குப்பட்டு, அரசு சந்தன எண்ணெய் தொழிற்சாலையில் கடந்த 3-ஆம் தேதி சில திருடர்கள் வருகிறார்கள், உள்ளே நுழைகிறார்கள், காவலர்களைத் தாக்குகிறார்கள், எதையும் எடுக்காமல் போய்விட்டார்கள். 3 நாட்கள் கழித்து மீண்டும் அதே இடத்திலே முகமூடிக் கொள்ளையர்கள் போய் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தன எண்ணெயைத் திருடக்கூடிய அளவிற்கு இன்று நிலைமை மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதைப்போல, நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படக்கூடிய ஹைதர் அலி, இமாம் போன்றவர்களெல்லாம் திருமங்கலம் காவல் நிலையத்திலிருந்து தப்பிக்கிறார்கள். ஏனோ இப்படி காவலர்கள், ஸ்காட்லாந்து யார்டுக்கு இணையான போலீஸ் என்று வர்ணிக்கப்படக்கூடிய நம்முடைய காவல் துறை சில நேரங்களில் அவர்கள் தங்களுடைய கட்டுக்கோப்பை . . .
(குறுக்கீடு)

[2002 மார்ச் 12

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது, தெக்குப்பட்டு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். அங்கே வனத் துறையின் மூலமாகவும், காவல் துறையின் மூலமாகவும் அத்தனை பேரும் பிடிக்கப்பட்டு, அவர்கள் அத்தனை பேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிக்கன நடவடிக்கை என்று நீங்கள் அறிவித்துள்ளீர்கள். ஆனால், சிக்கன நடவடிக்கையை மேல்மட்டத்தில் மட்டும் ஏனோ விட்டுவிட்டு, கீழ்மட்டத்திலே மட்டும் செய்து கொண்டிருப்பது சரியாக இருக்காது. Compassionate appointment இல்லையென்று சொல்கிறீர்கள். ஆனால் இன்று நிறைய I.A.S., I.P.S. ஆபீசர்களை வைத்துக் கொண்டிருக்கிறோம். கேரளாவில் பார்த்தோம் என்று சொன்னால், I.A.S., I.P.S., ஆபீசர்களை குறைக்கச் சொல்லி, அவர்கள் வேண்டாம், எடுத்துவிடுங்கள் என்று சொல்லி, return செய்கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழகத்தில் மட்டும் ஒரே ஒரு Director of School Education தான் இருந்தது. ஒரே ஒரு Director எல்லா ஸ்கூலையும் Control பண்ணினார். ஆனால் இன்றைக்கு ஒவ்வொரு துறைக்கும் தனி. Elementary-க்குத் தனி, Teacher Training-க்குத் தனி, பிறகு Matriculation-க்குத் தனி, நிறைய Directors of School Education அதைப்போல Collector என்றால் ஒருத்தர் இருப்பார். I.A.S. ஒரு மாவட்டத்திலே இன்று மூன்று Collector, D.R.O. ஒன்று, P.O. என்று ஒன்று வைத்திருக்கிறோம். அதைப்போல M.M.D.A. என்று எடுத்துக்கொண்டால் அந்த இடத்திலே மூன்று I.A.S., officers. அவர்களுக்கு என்ன வேலை என்றே தெரியவில்லை. ஒருத்தர் C.E.O. ஒருத்தர் Member Secretary. ஒருத்தர் Vice-Chairman. *(மணியடிக்கப்பெற்றது)* இதோ முடித்துவிடுகிறேன். சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். அடுத்தவரைப் பேச அழைக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவற்றையெல்லாம்கூட குறைப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்தால்தான் நிதி நெருக்கடியால் இன்று மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிற உங்களுக்கு ஏதாவது ஒரு வாழ்வு வரும்.



2002 மார்ச் 12] [திரு. சி. ஞானசேகரன்]

நீங்கள் இவ்வளவு I.A.S. ஆஃபீசர்களை வைத்துக்கொண்டு என்ன பண்ணப் போகிறீர்கள்? ஏனென்றால் M.M.D.A.-விலே ஒரு I.A.S. Officer போதும். அதேபோல்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரத்தில்தான் சிக்கனம் தேவை நமக்கு.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே இவற்றையெல்லாம் நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Red Tapism இப்போது பார்த்தீர்கள் என்றால் ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் 90 நாட்களிலே ஒரு கோப்பு முடிக்கப்பட வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அதற்கு ஒரு G.O.வும் போட்டார்கள். ஆனால் சில நேரங்களிலே M.M.D.A. விலே நீங்கள் ஒரு Plan Approval-க்கு கொடுத்தீர்கள் என்றால், lay-out approval-க்கு கொடுத்தீர்கள் என்றால் ஒரு வருடத்திற்கு மேலே ஆகிறது. நானேகூட ஒருவருக்கு ஏற்கெனவே லெட்டர் கொடுத்தேன். C.E. இடம் கொண்டுபோய் கொடுத்தேன். அதைப்போல Agriculture Secretary-யிடம் கொடுத்தேன். Minister இடமும் கொடுத்தேன். இன்றுவரைக்கும் அந்த C.E. reply கொடுக்கவில்லை. கிட்டத்தட்ட ஆறு மாதத்துக்கு மேலாக ஒரு M.L.A. கொடுக்கக்கூடிய கடிதங்களுக்கே பதில் அனுப்பாமல் இருக்கக்கூடிய இந்த அதிகாரிகள் எங்கே இவர்கள் கோப்புகளை 90 நாட்களுக்குள் முடிக்கப் போகிறார்கள்? எனவே Red Tapism இருப்பதை ஒழிப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி.

**திரு. சி. ஞானசேகரன்:** இரண்டு நிமிடத்திலே பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Demand-லே பேசிக் கொள்ளுங்கள். இப்போது கவர்னர் உரைக்கு நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Real Estate டைப் பொறுத்த அளவிலே நீங்கள் இதுவரை எந்தவிதமான புத்துயிர்த் திட்டத்தையும் அறிவிக்கவில்லை. அதைப்போல Regularisation Scheme-க்குக்கூட நீங்கள் M.L.A., மற்றும் அமைச்சரைக் கொண்டு ஒரு குழு போட்டாவது கண்டுபிடியுங்கள். ஏனென்றால் மூன்று தடவை அறிவித்து, 1000 கோடி ரூபாய் வரும் என்று சொன்னார்கள்; 300

[திரு. சி. ஞானசேகரன்] [2002 மார்ச் 12

கோடியாகி கடைசியில் 40 கோடி கூட வரவில்லை என்று நினைக்கிறேன். ஒருவேளை 100 கோடி வந்ததா என்று தெரியவில்லை. Regularisation Scheme-ல் பல சங்கடங்கள். சில நேரங்களிலே சரியான வழிமுறைகளை நீங்கள் வகுக்கவில்லை.

சிமெண்ட் விலையைக் குறைப்பதற்கு ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசை வற்புறுத்துவதாகவும், அதேபோல நேர்மையற்ற நடைமுறையைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது சிமெண்ட் விலை ஏறிப் போய்க்கொண்டேயிருக்கிறது. அதையும் தடுத்து நிறுத்துவதற்கும், தமிழகத்தில் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக இருக்கக்கூடிய லஞ்ச லாவண்யத்தை ஒழிப்பதற்கும் நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள்.

***திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைமீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளைச் சொல்ல நான் முன்வருகிறேன். நேரம் குறைவாக இருப்பதால் 1½ மணியோடு அவையை முடிக்காமல் கொஞ்சம் extend பண்ணிக் கொடுக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் ஏதோ ஊருக்குப் போவதாகச் சொன்னீர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள். Train-ஐ விட்டுவிடாதீர்கள். *(சிரிப்பு)*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஆளுநர் உரையில் நல்ல பல வரவேற்க வேண்டிய அம்சங்கள் இருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, தென்னக நதிகளை இணைப்பது போன்ற திட்டங்களை மேதகு ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பது வரவேற்க வேண்டிய விஷயம். உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல், குடிநீர்த் திட்டங்களை அமல்படுத்துவது போன்ற பல நன்மைகளை அரசு அறிவித்திருப்பதை, கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, மேதகு ஆளுநர் உரையிலே ஓர் அரசினுடைய கொள்கை நிலையை இங்கே அறிவிக்கிறபோது, மத்தியிலே இருக்கக்கூடிய மைய அரசு மாநிலங்களுக்கு 29 சதவிகிதம்



2002 மார்ச் 12] [திரு. ஜி. பழனிசாமி]

வருவாயிலே ஒதுக்குவதாக கொள்கை அளவிலே ஒத்துக்கொண்டிருந்தது.
அநேகமாக அதை 21 சதவிகிதமாக மத்திய அரசு இன்றைக்கு
குறைத்திருக்கிறது. இதன் காரணமாக 6040 கோடி ரூபாய் என்பதிலிருந்து
திட்ட அளவு குறைந்திருப்பதற்கு மத்திய அரசின் பங்கு 512 கோடியாகக்
குறைத்திருப்பது ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. அநேகமாக 840
கோடி ரூபாய் இன்றைக்கு நம்முடைய திட்டச் செலவிலே குறைந்திருப்பது
என்பது தமிழ்நாட்டு வளர்ச்சியில் முற்றிலுமாக இது பெரிய பாதிப்பை
உருவாக்கக்கூடியது. அதனால் அரசு திட்டச் செலவுகளை முழுமையாக
நிறைவேற்றுவோம் என்று சொல்லியிருப்பதில், அநேகமாக இந்த 840 கோடி
ரூபாய் இன்றையதினத்திலே மிகப் பெரிய பாதிப்பை உருவாக்கியிருக்கிறது.
பல்வேறு வகைகளில் மத்திய அரசுக்கு ஒத்துப்போகக்கூடிய நம்முடைய
மாநில அரசு, மாநிலத்துக்கு வரக்கூடிய நிதிகளையும் பெற்றுத்தருவதிலே
நீங்கள் உறுதியாக நின்று போராட வேண்டுமென்று நான் மாநில அரசை
அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக மத்திய அர்சு எந்த ஒரு நடவடிக்கை எடுத்தாலும் அதை
நாம் ஏற்றுக் கொள்கிறோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய
கவனத்துக்கு நான் கொண்டுவருவது 1991 முதற்கொண்டு 2002 வரையும்
பல்வேறு வகையாக மத்திய அரசும், மாநில அரசும் தொடர்ந்து மக்கள்
மீது சுமத்தக்கூடிய வரிகளை நாம் சுமத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால்
இதிலே வணிகவரித் துறையிலிருந்து நம்முடைய மாநில அரசுக்கு வர
வேண்டிய தொகை என்பது 18 ஆயிரம் கோடிக்கு மேலே நம்முடைய
கஜானாவிற்கு வரவேண்டிய பணம் தேக்கத்தில் இருக்கிறது. யாருக்காக
நாம் வரியை உயர்த்துகிறோம். ஒன்று அரசுக்கு வரவேண்டும் இல்லை
மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும். இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட
வகையிலே....

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே,
18 ஆயிரம் கோடி என்பது சரியான தகவல் அல்ல. உச்சக்கட்டமாக 6
ஆயிரம் கோடி. அதிலும் வரக்கூடிய அளவில் இருப்பது சுமார் 2 ஆயிரம்
கோடி. அதுதான் வரவேண்டியிருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** அமைச்சர் சொல்லியிருக்கிற திருத்தமாக இருந்தால்
நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதனால் அதையும் நீங்கள்
வசூல் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆக இந்த
வரி பாக்கிகள், நம் வணிக வரித் துறையிலிருந்து வரவேண்டிய நிதி நம்
அரசினுடைய கஜானாவிற்கு வராததால் மக்கள் மீது நாம் தொடர்ந்து

பல்வேறு வரிகளை சுமத்த வேண்டியிருக்கிறது. சென்ற சட்டமன்றக் கூட்டத்திற்கும் இதற்கும் இடைப்பட்ட காலத்திலே 4850 கோடி ரூபாய் நாம் புதிய வரியைப் போடுவதாக நமது அரசே அவசரமாக அறிவித்தது. அது ஏழையெளிய மக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடிய வரியாக அமைந்தது. அதுவும் நடுத்தர மக்களிடத்திலே, ஏழையெளிய மக்களிடத்திலே, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களிடத்திலே அது பாதிப்பை உருவாக்கியது. மத்திய அரசு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பின்னால் பல்வேறு வரி உயர்வைத் தொடர்ந்து செய்து கொண்டே வருகிறது. அவர்கள் அரிசி விலையிலிருந்து, சீனி விலையிலிருந்து, சாதாரண ஏழையெளிய மக்கள், நடுத்தர குடும்பங்களைப் பாதிக்கக்கூடிய gas விலையைக்கூட இப்போது 40 ரூபாய் உயர்த்தியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 400 ரூபாயை எட்டிப் பிடிக்கக்கூடிய அளவிற்கு அந்த gas விலை உயர்வு இருக்கிறது. அதோடு சேர்ந்து நம்முடைய மாநில அரசும் மின் கட்டண உயர்வை இரண்டு மடங்கு உயர்த்தி இருக்கிறது. இதனால் ஏழையெளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி திடீரென்று ஓர் அறிவிப்பு. அதேபோன்று போக்குவரத்துக் கட்டணங்களை அதிகமாக உயர்த்தியிருக்கிறோம். இவையெல்லாம் மத்திய அரசுக்கு ஈடு இணையாக மாநில அரசும் இன்றைக்கு விலைகளை உயர்த்தி இருப்பது பெருத்த அளவிற்கு ஏழையெளிய மக்களிடையே பாதிப்பை இப்போது உருவாக்கி இருக்கிறது என்பதைச் சொல்லி இவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னால் பல உறுப்பினர்கள் நினைவுப்படுத்தியபோதும்கூட தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் பெய்திருக்கிற பெரு மழையினால், எதிர்பாராத மழை ஏதோ அரசு வரவழைத்த மழை என்று நான் சொல்லவில்லை. இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டது. ஆனால் அந்த இயற்கைப் பாதிப்பிலிருந்து அந்த விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டியது நம் அரசினுடைய கடமையாக இருக்கிறது. நாம் உருவாக்கவில்லை மழையை. ஆனால் இயற்கையால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசினுடைய கடமை. அநேகமாகப் பார்த்தோம் என்று சொன்னால் 90% அறுவடை செய்ய முடியாத நிலைமை. அறுவடை செய்த நெல்லைக்கூட எடுத்து வரமுடியாது ஆற்றிலே, வெள்ளத்தாலே அடித்துச் செல்லப்பட்டிருக்கிற கோர காட்சிகள் அந்த மாவட்டத்திலே 50 ஆண்டுகளுக்குப் பின்னால் நடந்திருக்கிறது. அந்த வரலாறு எனக்குத் தெரியவில்லை. எங்களுடைய காலத்திலேகூட நாங்கள் இப்படிப் பார்த்ததில்லை என்று பல முதியோர்கள் எல்லாம் கூறுகிறார்கள்.





அதேபோன்று பயறு, உளுந்து போன்ற அந்தப் பயிர்கள் விவசாயிகளுக்குப் பிரதானமான, இலாபகரமான தொழிலாக இருந்தது. அனைத்துத் தொழில்களும் முற்றிலுமாக அழிந்து போய்விட்டன. நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது அந்த விவசாயிகள் வருமானத்திலே ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்க்கு பெரிய இழப்பு ஏற்பட்டிருந்தபோதிலும்கூட அவர்களுக்கு, வரக்கூடிய ஜூன் மாதம் விவசாயம் செய்வதற்கான எந்தவிதமான விதைகளும் கிடையாது. குறுவையோ, சம்பாவோ எந்த ஒரு வகையான விதைகளையும் அந்த விவசாயிகளால் பாதுகாக்க முடியாது. இதை அரசியலுக்காகச் சொல்லவில்லை. அமைச்சருடைய, அரசினுடைய முன் நடவடிக்கைக்காக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர்கள் பல பேர் வந்து பார்த்திருக்கிறார்கள். உயர்மட்ட அதிகாரிகள் சிலர் வந்து பார்த்திருக்கிறார்கள். ஒரு படி நெல்கூட எடுத்து அவர்கள் விதைக்காக பாதுகாக்க முடியாத அளவிற்கு அந்த மாவட்டம் மிகப் பெரிய சோதனைக்கு ஆட்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாவட்டத்திலே இருக்கிற 12 இலட்சம் ஏக்கர் விவசாயம் செய்வதற்காக விதைகளை அரசு முன்கூட்டியே தயார் செய்வதற்கான அவசியம் இன்றைய தினத்திலே இருக்கிறது.

இப்போது 49 கோடி ரூபாய் நிதி நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. நிவாரணமாக ஒரு எக்டேருக்கு 2500 ரூபாய். ஒரு எக்டேருக்கு 600 ரூபாய் அளவிற்கு உளுந்து பயிர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் அரசை குறை சொல்ல வேண்டும் என்ற அந்த நோக்கத்தில் சொல்லவில்லை. 1,000 ஏக்கர் இருந்தால் 100 ஏக்கருக்குத்தான் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த 100 ஏக்கர் பணத்தையும் அவர்கள் பிரித்தால் ஒரு ஏக்கருக்கு 30 ரூபாயிலிருந்து 40 ரூபாய்க்கு மேலே வரவில்லை. ஒரு ஏக்கர் சாகுபடி செய்வதற்கு 6,000 ரூபாய் செலவாகிறது. இங்கே இருக்கிற வேளாண்மைத் துறை அமைச்சருக்குத் தெரியும். மறுக்க முடியாது. இங்கே வந்திருப்பவர்களில் பல பேர் 90% விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். ஆக இவ்வளவு பெரிய பாதிப்பு இன்றைக்கு வந்திருக்கிறது என்று சொன்னால் அந்த விவசாயிகளைப் பாதுகாப்பது என்பது முக்கியம். இப்போது ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் நமது நிதித் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்வது எல்லாம் முற்றிலுமாக இந்த விவசாயிகளுடைய வரியை நீங்கள் ரத்து செய்ய வேண்டும். நில வரியை முழுமையாக ரத்து செய்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

*பிற்பகல் 1-25*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்னால் முதலமைச்சராக வந்து பொறுப்பேற்றவுடனே 310 கோடி ரூபாய் விவசாயிகளுடைய கூட்டுறவு வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்தது, அந்த விவசாயிகளுடைய வாழ்க்கையிலே நிம்மதியாக இருந்தது. மகிழ்ச்சியாக இருந்தார்கள். நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், இந்த ஆண்டுகூட, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று இந்த தடவை அறுவடை செய்து தன்னுடைய கடனையும், கூட்டுறவுக் கடனையும் அடைத்து, அதிலிருந்து, அந்த வட்டியிலிருந்து விடுதலை பெறலாம் என்று எண்ணி இருந்ததில்கூட இன்றைக்கு அவர்களுக்கு ஒரு பாதிப்பு வந்திருக்கிறது. இதை நம்பியிருக்கின்ற விவசாயத் தொழிலாளர்கள் 12 இலட்சம். அந்த ஒன்றுபட்ட மாவட்டத்தில், கையையும், காலையும் நம்பியிருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள். இதிலிருந்து வரக்கூடிய ஆதாயத்தில் வாழ்க்கையை நடத்தக்கூடியவர்களுடைய வாழ்க்கை இன்றைக்கு கேள்விக்குறியாக அமைந்திருக்கிறது. எப்படி வாழ்க்கையை நடத்தப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. அநேகமாக, இந்த விவசாயத் தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற ஒரு புதிய திட்டத்தை நீங்கள் அறிவிக்க வேண்டும். கோலப்பன் கமிட்டியினுடைய சிபாரிசை ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொள்கையளவிலே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அமல்படுத்தி விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு மாற்று வேலை திட்டத்தைக் கொண்டு வர வேண்டும்.

நேற்றுகூட ஒரு துயரமான செய்தி பத்திரிகையிலே பார்த்தேன். தருமபுரியிலே பெண்ணாகரம் என்ற ஊரிலே வறுமையின் காரணமாக ஐந்து பேர் விஷம் குடித்து செத்தார்கள் என்ற செய்தி. வறுமைக்கு உயிர்விடக்கூடிய நிலைமை தமிழகத்திலே உருவாகியிருக்கிறது என்பதை நாம் அலட்சியப்படுத்த முடியாது. ஆகவே, அதுபோன்று தமிழகத்திலே இருக்கின்ற ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்களில் 12 இலட்சம் பேர் அந்த தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைக்கு நீங்கள் உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும்.

அதேபோன்று, அந்த மாவட்டத்தில் இன்று சாலைகள் அனைத்தும் வெள்ளத்தால் சீர்குலைந்து போய் இருக்கின்றன. எல்லா போக்குவரத்துகளும் தடைப்பட்டிருக்கின்றன. சாலை அவ்வளவு மோசமாக இருக்கிறது. அதற்கு நீங்கள் மாவட்டம் வாரியாகப் பார்க்காமல், தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் போன்ற மாவட்டங்களுக்கு





முன்னுரிமை கொடுத்து அந்தப் பணிகளைச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல். மக்களாட்சி சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)* நான் பார்த்துக்கொண்டேதான் இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடம் ஆகிவிட்டது

**திரு. ஜி. பழனிசாமி:** மக்களாட்சி என்று சொன்னால், 5 மாநகராட்சிகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுடைய தேர்தல் முடிவடைந்திருக்கிறது. ஓர் ஊராட்சிக்கு ஒரு ரூபாய்கூட இதுவரை மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும் நிதியை வரவு வைக்கவில்லை. மக்களாட்சி எப்படிச் செழிப்பாக இருக்க முடியும்? உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதியை ஒதுக்காமல் மக்களாட்சியை எப்படி நாம் நிறைவேற்ற முடியும்? உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதியை 4 காலாண்டுகளுக்கான நிதியை வரவு வைக்க முடியாமல் இருக்கிறது. அதையும் வரவு வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் இந்தியாவிலேயே தமிழகத்தை ஒரு முன்மாதிரியான மாநிலமாக உருவாக்குவேன் என்று சொன்னது உண்மையிலேயே வரவேற்க வேண்டிய நல்ல அம்சம். தமிழகம் இந்தியாவிலேயே ஒரு சிறந்த மாநிலமாக இருக்க வேண்டும் என்பதுதான். ஆனால், இன்றைக்கு மத்திய அரசு பாராமுகத்தோடு செயல்படுகிறது. சேதுசமுத்திரத் திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்படவில்லை. நம்முடைய கவர்னர் உரையிலேயும் தென்படவில்லை. அதேபோன்று....(குறுக்கீடு) வந்திருக்கிறதா சேதுசமுத்திர திட்டம்.

அதேபோன்று, கிழக்குக் கடற்கரைச் சாலை. பல மாநிலங்களிலே கிழக்குக் கடற்கரைச் சாலைக்கு முன் அனுமதி பெற்று அந்தப் பணிகளைத் தொடங்கிவிட்டார்கள். நம்முடைய அரசும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரிலே 4 ஆயிரம் ரூபாய் சம்பளத்தை உயர்த்தினீர்கள்.

இப்போது இல்லையென்று சொல்லி, ஓர் அறிக்கை வந்திருக்கிறது. சரிதான், தேவையில்லை. இவ்வளவு நிதி நெருக்கடியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அமைச்சர் பெருமக்களுக்கு இது தேவையில்லை என்பது என்னுடைய கருத்து. அரசு கொண்டு வந்திருக்கிறது, வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அமெரிக்கா போன்று நம்முடைய நாடு இல்லை. அமெரிக்கா போன்று பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகள் கிடையாது: அமெரிக்காவில் உள்ளது போன்ற சுதந்திர தேவி சிலையை ஒரு பார்க்கில் உருவாக்க வேண்டுமென்று கவர்னர் உரையிலே, அறிவித்திருப்பதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்யுங்கள். அமெரிக்காவோடு நம்முடைய நாட்டை ஒப்பிட வேண்டாம். அமெரிக்காவில் பஞ்சம் கிடையாது, பசி கிடையாது, வேலையில்லாத் திண்டாட்டம் கிடையாது, ஆள் குறைப்பு கிடையாது, விலைவாசி ஏற்றங்கள் அங்கே கிடையாது. மத்திய மாநில அரசு கொண்டு வரவில்லை. ஆகவே, அதற்கு ஈடு இணையாக ஒரு மாநில அரசை நாம் கொண்டு வர வேண்டும் என்று எண்ணுவது சரியல்ல. நம்முடைய நாடு நிதிநிலையில் வளர்ச்சி பெற்ற பின்னால் நீங்கள் கொண்டு வாருங்கள். எத்தனை பார்க், எத்தனை பூங்காக்கள், எத்தனை சுற்றுலா மையங்கள், கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றன. நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் இதைச் செய்யவில்லை என்று நான் குற்றம் சொல்லவில்லை. இதற்கு முதலில் நிதி ஒதுக்குங்கள், இதற்கு நிதியாதாரங்களை உருவாக்கி ஒரு சிறந்த மாநிலமாக உருவாக்குவதற்கு முன் முயற்சி எடுத்துவிட்டு, நீங்கள் அமெரிக்கா என்ன, உலக நாட்டில் இருக்கின்ற அதிசயங்களையெல்லாம் நம் நாட்டுக்கு கொண்டு வாருங்கள். நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் பல்வேறு சுற்றுலா மையங்கள், பார்க்குகள், பூங்காக்கள், இவையெல்லாம் பார்த்தோம் என்று சொன்னால், இன்றைக்கு படுமோசமான நிலைமைகளில் தமிழகத்தில் இருந்து கொண்டிருப்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். இதுபோன்ற பெரும் திட்டங்கள், இன்றைக்கு பார்த்தோம் என்று சொன்னால் *(மணியடிக்கப்பெற்றது).*

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய பணிகள் மிகச் சிறந்த முறையிலே இருக்கின்றன. மனப்பூர்வமாகப் பாராட்டவேண்டும்.



இருந்தபோதிலும்கூட, தற்பொழுது குடிதண்ணீரால், பல தொற்று நோய்கள் இங்கே தொடங்கியிருக்கின்றன. விஷச்சாராயங்களினால் தொடங்கியிருக்கின்றன. இதுபோன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை *4-30* மணிக்குக் கூடும்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

[2002 மார்ச் 12

*பிற்பகல் 4-30*

*பிற்பகல் 4-30 மணியளவில்* **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. அ. அருணாசலம்** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு. கே. ஆறுமுகம்.

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்து, என்னை சட்டப் பேரவை உறுப்பினராக உருவாக்கிய டாக்டர் ஐயா அவர்களையும், டாக்டர் சின்ன ஐயா அவர்களையும், அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகிறேன்.

காவிரி டெல்டா பகுதிகளாக இருக்கின்ற தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, கடலூர் மாவட்டங்களிலே மழையின் சீற்றத்தால், 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' என்று சொல்வார்களே அதைப்போல, நன்றாக விளைந்த நெல்லை அறுவடை செய்கிறபோது பாழாய்ப்போய் 1000 கோடி ரூபாய்க்கு மேலாக விவசாயிகளுக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் நம்முடைய அரசாங்கம், 49 கோடி ரூபாய்க்கு மட்டுமே மத்திய அரசிடமிருந்து நிவாரணம் பெற்றுக் கொடுத்திருப்பது வருந்தத்தக்கது. இதுபோக வரவிருக்கின்ற காலகட்டங்களிலே, அடுத்த சாகுபடிக்கு அரசாங்கமே நெல் விதைகளையும், உரங்களையும் இலவசமாக அந்த விவசாயிகளுக்கு வழங்குவதற்கு வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இப்போது உள்ளாட்சி அமைப்புகளுக்கு 3 அடுக்கு தேர்தல் முடிந்திருக்கிறது. ஆனால், அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு இதுவரையில் ஒரு பைசாகூட கொடுக்காததால் தமிழகம் முழுவதும் உள்ளாட்சி நிர்வாகம் ஸ்தம்பித்து இருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயத்தை நம்பி இருக்கின்ற தமிழ்நாட்டில், நம்முடைய ஆளுநர் உரையில், விவசாயிகளின் மேம்பாட்டுக்காக குறிப்பிடும்படியான திட்டங்கள் எதுவும் இல்லை. ஆனால், இதிலே தோட்டக்கலைத் துறைக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அரசாங்கம் இந்த ஆண்டும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் திட்டத்தை அறிவித்திருப்பதை வரவேற்கிறோம். அதேபோன்று மிகவும் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த



2002 மார்ச் 12] [திரு. கே. ஆறுமுகம்]

மாணவிகளுக்கும், பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கும் இந்த சைக்கிள் திட்டத்தை நீட்டித்து கொடுக்க வேண்டுமென்று ஒரு வேண்டுகோளாக இந்தச் சமயத்தில் வைக்கிறேன். இங்கே இருக்கின்ற நம்முடைய சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், நான் படித்த பள்ளியிலே, கடந்த 4 மாதங்களுக்கு முன்பாக நடைபெற்ற ஒரு விழாவிலே சொன்னார்கள். 'எங்களுடைய அம்மா மீண்டும் முதலமைச்சராக வந்ததும்,—நீங்கள் அங்கே பேசியதற்கு ஏற்ப—சைக்கிள் திட்டத்திற்கு நானும் வாய்ப்பளிப்பேன்' என்று சொல்லியிருந்தார்கள். அந்த வகையிலே நம்முடைய அமைச்சரும் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த நிதிநிலை அறிக்கையிலே மீனவர்களுக்கு 4 ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருவதாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால், அது நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறதா என்று தெரியவில்லை.

சென்னை குடிநீர்த் திட்டம் வல்லுநர் குழுவால் கைவிடப்பட்ட திட்டம். வீராணம் பகுதி விவசாயிகளின் நலனுக்கு எதிரான திட்டமாக உள்ளது. கிருஷ்ணா நீரைக் கொண்டுவந்தாலும், சென்னையை ஒட்டியுள்ள நதிகளில் வரும் மழை நீரைச் சேகரித்தாலே போதுமான குடிநீர் நம்முடைய சென்னை மாநகருக்குக் கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைவருக்கும் தரமான மருத்துவ வசதி என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பாலான மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லாமல் இருப்பதும், மருந்துப் பொருட்கள் பெருமளவில் கிடைக்காமல் இருப்பதும் துரதிருஷ்டவசமானதாக இருக்கிறது.

உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்புடன் கூடிய சிறந்த சுற்றுலா மையமாக மாமல்லபுரத்தை ஆக்குவோம் என்று ஆளுநர் உரையில் கூறியிருப்பதற்கு, என்னுடைய தொகுதியிலே இதுபோன்று வருவதற்கு நான் முதலில் நன்றி சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அரியலூர் மாவட்டத்தை பெரம்பலூர் மாவட்டத்தோடு இணைப்பதைத் தவிர்க்க வேண்டும். பல ஆண்டுகளாக அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள், ஏழை எளிய மக்கள், விவசாயத்தை நம்பியிருக்கின்ற மக்கள் எங்களுடைய பகுதி எல்லாம் பின்தங்கியிருக்கிறது. இந்தப் பகுதிக்கென்று தனியாக அரியலூரைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு மாவட்டம், வேண்டுமென்று போராட்டத்தின் வாயிலாக கிடைக்கப்பெற்ற அந்த மாவட்டம், மீண்டும் அரியலூரிலேயே தனியாக இயங்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் கோரிக்கையாக விடுக்கிறேன்.

[திரு. கே. ஆறுமுகம்] [2002 மார்ச் 12

அதுமட்டுமல்ல, செங்கற்பட்டைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும். ஏனென்று சொன்னால், செங்கற்பட்டு மாவட்டம் என்று ஏற்கெனவே இருந்தது. இப்போது காஞ்சிபுரம் மாவட்டம் என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. காஞ்சிபுரத்தைச் சுற்றியிருக்கின்ற பல்வேறு பகுதிகளை, திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளை இணைத்து காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டம் அமைத்து இருக்கிறார்கள். இதேபோன்று செங்கற்பட்டுக்கு ஆலந்தூர், தாம்பரம், திருப்போரூர், செங்கற்பட்டு, மதுராந்தகம், அச்சரப்பாக்கம் ஆகிய 6 தொகுதிகளை உள்ளடக்கிய ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு என்னுடைய கோரிக்கையாக வைக்கிறேன்.

அதுமட்டுமின்றி, மலிவு விலை மதுவை அறிமுகப்படுத்தி அரசே மதுவிலக்குக் கொள்கைக்கு மாறாகச் செயல்படுவதாக உள்ளது. இதனால் ஏழை எளிய மக்கள் அதிக அளவில் குடிக்கும் நிகழ்வுகள் ஏற்படுகின்றன. எனவே, மலிவு விலை மதுவை அறவே ஒழிக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த நிதிநிலை அறிக்கையில் 692 கோடி ரூபாய்க்கு மட்டும் பற்றாக்குறை பட்ஜெட்டை அறிவித்து, அதற்குப் பிறகு, 3 மாதங்களுக்குப் பிறகு அறிவிக்கப்படாத மிகப்பெரிய பட்ஜெட்டாக, சட்டமன்றத்தில் தாக்கல் ஆகாமல் 4000 கோடி ரூபாய்க்கு மேல் வரி விதித்து, பஸ் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, உணவுப் பொருட்கள், அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் விலை உயர்ந்து இருக்கிறது. அதை ஒரு பெரிய பட்ஜெட்டாகக் கருதுகிறார்கள் மக்கள்.

அதேபோன்று அரசு ஊழியர்களின் சலுகைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக surrender of earned leave, Personal loan போன்றவையெல்லாம் நீக்கப்பட்டிருக்கின்றன. அவர்களெல்லாம் இப்போது வேதனை அடைந்துவிட்டார்கள். அவர்களுக்கு மீண்டும் அவற்றைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-35

தமிழ்நாட்டில் படித்த இளைஞர்கள் மற்றும் பெண்கள் வேலைக்காகக் காத்துக்கொண்டிருப்போர் பட்டியல் ஏறக்குறைய 1/2 கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பே இல்லை. 5 ஆண்டுகளுக்கு இல்லை என்று இந்த அரசாங்கம் அறிவித்திருப்பது வேதனையான ஒரு விஷயம். அதை மீண்டும் இந்த அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



2002 மார்ச் 12] [திரு. கே. ஆறுமுகம்]

அதுமட்டுமல்லாமல், எம்.எல்.ஏ.க்களுக்குக் கட்டப்படுகிற தொகுதி அலுவலகம், எங்கள் தொகுதியைப் பொறுத்தமட்டில் அரைகுறையாக இருக்கிறது. என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, காஞ்சிபுரம் மாவட்டத்திலே திருப்போரூர், அச்சிறுப்பாக்கம், மதுராந்தகம், அதேபோன்று சகோதரர் திருப்பத்தூர் தொகுதி உறுப்பினர் அவர்களின் அலுவலகம் போன்ற சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களெல்லாம் கட்டி முடிக்கப்படவில்லை. அந்த அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், அரசாங்கம் நிதி தரவில்லை; அதனால் அரைகுறையாக நிற்கிறது என்று சொல்கிறார்கள். அதனாலே எங்களுக்கு அந்தப் பகுதி மக்களைச் சந்திப்பதற்கு அங்கே அந்த அலுவலகம் இல்லாமல் மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. எனவே, உடனடியாக இந்த அரசாங்கம் அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தடை செய்யப்பட்ட பான் பராக், குட்கா போன்ற புகையிலைப் பொருட்களெல்லாம் இப்போது கூடுதல் விலையோடு அதிகமாக பகிரங்கமாக தமிழகம் முழுவதும் விற்கப்படுகின்றன. அவற்றை உடனடியாக அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

ஏற்கெனவே கடந்த ஆட்சியில் கிராமப்புற மாணவர்களுக்கு தொழிற் கல்வியிலே 15 சதவீத இட ஒதுக்கீடு கொடுக்கிறோம் என்று சொல்லியிருந்தார்கள். அதை இந்த அரசாங்கம் வந்த பிறகு கடந்த தொடரிலே 25 சதவீதம் ஆக உயர்த்துவோம் என்று அறிவித்திருந்தார்கள். அதற்கு இப்போது தடை விதிக்கப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றத்திலே அது இப்போது இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கல்வியாண்டுக்குள்ளாக இந்தத் தடையை எல்லாம் நீக்கி மீண்டும் கிராமத்து மக்கள் இஞ்சினியர்களாகவும், மருத்துவர்களாகவும், சட்ட வல்லுநர்களாகவும் வருவதற்கு இந்த அரசாங்கம் வாய்ப்பை அளிக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, சிமெண்ட் விலை இன்றைக்கு விஷம்போல ஏறிக்கொண்டிருக்கிறது. அதனாலே கட்டடத் தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை இல்லாமல் அவதிப்படுகிறார்கள்.

கடந்த நிதிநிலை அறிக்கையிலே ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டித் தருவது என்பதையும், கைத்தொழில் நலிவுற்றிருப்பதற்கு நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்படவிருப்பதாகவும் கூறியிருந்தார்கள். ஆனால், அதற்கான திட்டங்கள் எதுவும் இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. ஆறுமுகம்] [2002 மார்ச் 12

இப்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கிற ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம், தாமஸ் மலை, திருப்போரூர், திருக்கழுக்குன்றம், காட்டாங்குளத்தூர், லத்தூர் போன்ற பகுதிகளிலே அந்தப் பகுதிகளுக்கான டி.டி. சுகாதாரம் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு ஏதும் சம்பந்தம் இல்லாத பகுதியாக இருக்கிற சைதாப்பேட்டையிலே, இருக்கிறார். அவர் சைதாப்பேட்டையிலே அலுவலகத்தை வைத்திருக்கிறார். ஆனால் அவர் இருப்பதற்கும் அந்தக் கடைசிப் பகுதிக்கும் 100 கிலோமீட்டர் இருக்கிறது. மேலும், இந்த அலுவலகத்திலே இருக்கிறவர்களைத் தொடர்புகொள்வதற்கும் சிரமமாக இருக்கிறது. அந்த அலுவலகத்திலே அலுவலர்களும் சரியாக அங்கே வரமாட்டேன் என்கிறார்கள். எனவே, அந்த அலுவலகத்தை செங்கற்பட்டிலேயே அமைக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே இந்த அரசாங்கத்திடம் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, நான் கடந்த இருமுறையும் சட்டமன்றத்திலே பேசியிருககிறேன். சூரப்பன் சாலையிலிருந்து நெரும்பூர், விட்டலாபுரம், வாயலூர் சாலைகளெல்லாம் மிகவும் மோசமாக இருக்கின்றன. 100 கிராமங்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. சாலைகள் மிகவும் போக்குவரத்திற்கு லாயக்கற்ற சாலைகளாக, பேருந்துகளை இயக்க முடியாத அளவிற்கு இருக்கின்றன. காரிலும் செல்ல முடியவில்லை, two-wheelers-லும் செல்ல முடியவில்லை. நடந்து செல்கிறவர்கள் நடுக்கி விழுகிற அளவிற்கு படுபாதாளக் குழிகளாக இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றைச் சரி செய்ய வேண்டுமென்று சொல்லியிருந்தேன். அரசு இப்போது 6 1/4 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அதை இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை.

அதேபோன்று 50 கிராமங்களுக்குப் பாய்ச்சக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய ஏரி களத்தூர் ஏரி. அதற்கு நீஞ்சல்புரம் அணைக்கட்டு மற்றும் களத்தூரான் கால்வாய்த் திட்டம் என்ற அந்தத் திட்டம் கிடப்பிலே கிடக்கிறது. அதற்கு 90 இலட்சம் ரூபாய் நிதி ஆகும் என்று சொல்கிறார்கள். அது கிடப்பில் கிடக்கிறது. அதையும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, செஙகற்பட்டு-திருப்போரூர் செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்ற வேண்டும்.

செங்கற்பட்டுத் தொகுதியைப் பொறுத்தமட்டிலே நகரப் பேருந்துகள் பெருமபாலும் சரியாக இயங்குவதில்லை. அப்படி வந்தாலும் குறிப்பிட்ட தடங்களிலே நிற்பதில்லை.



2002 மார்ச் 12] [திரு. கே. ஆறுமுகம்]

அதற்கு மேலாக இன்னுமொன்று. எங்களுடைய தொகுதியிலே இருக்கிற கரும்புகளையெல்லாம் வெட்டி மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்புவோம். படாளத்திலே இருக்கிற அந்த ஆலை மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கிறது. கரும்பு வெட்டியவர்களுக்குப் பணம் கொடுக்கவில்லை. இந்த ஆண்டு 1,23,000 டன் அரவைக்கு ரெடியாக இருக்கிறது என்று சொன்னார்கள். அது வேறு ஆலைக்கு மாற்றப்படுகிறது. மேலும், அங்கே இருக்கிற 500 ஊழியர்கள் இப்போது வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக இந்த அரசாங்கம் நிவர்த்தி செய்ய வேண்டும். அந்த ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செங்கற்பட்டு நகரத்திற்கும், மதுராந்தகம் நகரத்திற்கும் விரைவுப் பேருந்துகள் பகலிலும் செல்லவில்லை; இரவிலும் செல்லவில்லை என்று சொன்னேன். கடந்த சட்டமன்றத் தொடரின்போது போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய அண்ணன் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் சொல்கிறபோது அது செல்லும் என்று சொன்னார்கள். இன்றுவரையிலும் ஒரு சில பேருந்துகளைத் தவிர மற்ற பேருந்துகள் நகரத்திலே செங்கற்பட்டுக்கும் மதுராந்தகத்திற்கும் செல்வதில்லை. அதை உடனடியாக இந்த அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். இல்லை என்று சொன்னால், அந்தப் பகுதி மக்கள் எல்லாம் போராடத் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, விவசாயத்தையும் மீன்பிடித் தொழிலையும் மட்டுமே நம்பியிருக்கிற என்னுடைய தொகுதியிலே தொழிற்சாலைகளே இல்லை. அதை தொழிலில் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவித்து, தொழிற்சாலை தொடங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோன்று, செங்கற்பட்டு மருத்துவமனையைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அது அந்தப் பகுதியிலே இருக்கிற பழைய மருத்துவமனை. விழுப்புரத்திற்கும் சென்னைக்கும் இடையில் இருக்கிற பெரிய நகரம் அது. அந்த நகரத்திலே 1000 படுக்கைகள் கொண்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இருந்துகொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு அங்கே 3,000 பேர் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கே இருக்கிற படுக்கை ஆயிரம் மட்டுமே. 2,000 பேர் தரையிலே இருக்கிறார்கள். குறிப்பாக பிரசவத்திற்காக வந்திருப்பவர்களைப் பார்க்கும்போது, ஆட்டுமந்தையாக இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் கூட, இரண்டு

முறை அந்தப் பகுதியைப் பார்த்திருக்கிறார்கள். உடனடியாக அதற்குக் கூடுதல் கட்டணம் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், அந்த மருத்துவமனையில் இருக்கிற பல்வேறு, இயந்திரங்கள் Echo Cardiogram போன்ற கருவிகள் எல்லாம் இன்னும் சரிசெய்யப்படவில்லை. எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினரைக்கூட 11 இலட்சம் ரூபாய் அதற்குக் கொடுக்கச் சொன்னோம். கொடுத்திருக்கிறார். இதுவரையிலே அந்த Colour Doppler-ஐ வாங்கி வைப்பதற்குக்கூட அரசாங்கம் அனுமதி கொடுக்கவில்லை. இதெல்லாம் வருத்தமாக இருக்கிறது.

*பிற்பகல் 4-40*

செங்கற்பட்டைப் பொறுத்தவரையிலே மார்க்கெட் மிக மோசமாக இருக்கிறது. காலரா போன்ற தொற்று வியாதிகள் எல்லாம் அங்கே வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். இன்னும் ஒரு பெரிய பிரச்சினை. செங்கற்பட்டு பகுதியிலே இருக்கிற கல்பாக்கத்திலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கே. மகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** கல்பாக்கத்திலே 38 ஆண்டு காலமாக அணு மின் நிலையம் இருக்கின்றது. அந்தப் பகுதியிலே நிலம் கொடுத்தவர்களுக்கு அந்த நிர்வாகம் வேலை கொடுக்கவில்லை. இந்த மாநில அரசு உடனடியாகத் தலையிட்டு வேலை கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவரையிலே இந்த 38 ஆண்டு காலத்திலே 170 பேருக்கு மட்டும் வேலை கொடுத்திருக்கிறது. அங்கேயிருக்கிற மக்கள் எல்லாம் மிக வேதனையில் இருக்கிறார்கள். உடனடியாக மாநில அரசு இதில் தலையிட்டு அந்தப் பகுதி மக்களுக்கு அதிக வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டும்; அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கழுக்குன்றம் பேரூராட்சியிலே தண்ணீர் கிடைப்பதற்கு, மிக மோசமான நிலையிருக்கிறது. அங்கு தனியாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க வேண்டும் என்று கூறி, இந்தச் சமயத்திலே ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன். உலகப் பிரசித்திபெற்ற சுற்றுலா ஸ்தலமான மாமல்லபுரத்தில் 24 மணி நேர அரசு மருத்துவமனை இல்லை. பேருந்து நிலையம் இதுவரை கட்டப்படவில்லை. மேல்நிலைப் பள்ளிகளுக்கு பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலம் 2 இலட்சம் ரூபாய் கட்டியும், இதுவரை அரசிடமிருந்து ஒதுக்கீடு கிடைக்காமல் திட்டம் நிறைவேற்றப் பெறாமல் கிடப்பில் உள்ளது. உடனடியாக அரசு நிலம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதுவரையிலே பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விளக்கம் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில மருத்துவமனைகளில் மருந்து பற்றாக்குறை இருப்பதாகச் சொன்னார்கள். நான் அறிந்த வரையில், நான் பல மருத்துவமனைகளை, ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆய்வு செய்த வகையில் எங்குமே மருந்துத் தட்டுப்பாடு இல்லை என்கிற நிலைதான் இருக்கிறது. காரணம், எல்லா மாநிலங்களுக்கும் முன்னோடியாக தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலமாக, முறையாக தரமான மருந்துகளை நாங்கள் கொடுத்து வருகிறோம். அப்படி, மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதாவது அவர்களுடைய தொகுதியிலே ஒரு குறிப்பிட்ட சில மருத்துவமனைகளில் குறிப்பிட்ட மருந்துகள் இல்லை என்று தெரிவிப்பார்களேயானால், எழுத்து மூலமாகக் கொடுப்பார்களேயானால், உடனடியாக அந்த மருத்துவமனைக்கு மருந்துகளை வழங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

இன்னொன்று, தடை செய்யப்பட்ட பான் பாரக், பான் மசாலா போன்ற பொருட்கள் திருட்டுத்தனமாக கடைகளிலே விற்கப்படுவதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டினார். அதற்குக் காரணம், எங்களுடைய துறையைப் பொறுத்தவரையிலே Sanitary Inspectors பற்றாக்குறை இருந்து வருகிறது. எனவேதான், இந்தப் புகார்கள் எல்லாம் வந்தவுடன் உள்ளாட்சி அமைப்புகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற Sanitary Inspectors-ஐயும் கலந்து, எங்களுடைய துறையிலே இருக்கிற Health Inspectors-ஐயும் கலந்து massive raid ஒரு வாரமாகச் செய்து கொண்டு இருக்கிறோம். இதற்குப் பிறகு அதுபோன்ற நிலைமைகள் நிச்சயமாகத் தடுக்கப்படும்.

அதேபோல், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு படுக்கைகள் கூடுதலாக வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கிறார்கள். நானும் 2, 3 முறை அந்த மருத்துவமனைக்குச் சென்று ஆய்வு செய்திருக்கிறேன். பற்றாக்குறை இருப்பது உண்மைதான். உடனே அந்தக் கல்லூரி முதல்வரை அழைத்து கூடுதல் படுக்கைகளுக்கு முன்மொழிவுகளை அனுப்பச் சொல்லியிருக்கிறேன். அதையும் அவர் அனுப்பியிருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மேலும், ஒரு ஸ்கேன் கருவி இல்லை என்று சொன்னார். அது இல்லை என்பது உண்மைதான். அது பழுதுபட்டு இருந்தது. இப்போது ஒரு வாரத்திற்கு முன் தான் Ultra Sound Scan-ஐ சென்னையிலேயிருந்து செங்கற்பட்டு

[திரு. செ. செம்மலை] [2002 மார்ச் 12

மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பியிருக்கிறோம். எனவே, அந்த ஸ்கேன் பழுதுபட்ட நிலைமை மாறி இப்பொழுது அங்கே புதிய ஸ்கேன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம் நீங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையிலே பேசிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அவர் பேச ஆரம்பித்தாகிவிட்டது.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 9-ஆம் தேதி (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரேயொரு நிமிடம் கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், இப்போது தங்கள் துறையில் இருக்கக்கூடிய Health Inspectors மூலமாக, இந்த பான் பராக், அதுபோல பான் மசாலா மற்றும் புகையிலை போன்றவற்றை எல்லாம் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலேயும், பட்ஜெட்டிலேயும் இதற்கான ஒரு தனிச் சட்டத்தை கொண்டுவருவதாக இந்த அவையிலே சொல்லப்பட்டது. அந்தச் சட்டம் என்னவானது, கொண்டுவரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 4-45*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிச் சட்டம் கொண்டு வருவதாக நாங்கள் எங்கும் சொல்லவில்லை. ஏற்கெனவே இருக்கிற Prevention of Food Adulteration Act-ன்கீழ் Notification போட்டிருக்கிறோம். அதுவே சட்டப்படிச் செல்லும். அந்த Notification மூலமாகத்தான் இந்தப் பொருள்களை எல்லாம் தடை செய்திருக்கிறோம். இதற்காகத் தனிச் சட்டம் தேவையில்லை. ஏற்கனவே, Prevention of Food Adulteration Act என்பது நடைமுறையில் இருக்கிறது. இந்தச் சட்டத்தின்கீழ் அரசாங்கம், Notify செய்து, உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கின்ற பான் மசாலா, பான் பாஃராக், வாயில் போட்டு சுவைக்கும் புகையிலை போன்ற இவற்றைத் தடை செய்வதற்கு அந்த Notification-ல் அதிகாரம் இருக்கிறது. அந்த Notification-லே effect இருக்கிறது. அந்த Notification மூலமாகத்தான் நடவடிக்கை எடுத்துக்



2002 மார்ச் 12] [திரு. செ. செம்மலை]

கொண்டிருக்கிறோம். இப்போது எங்களிடம் உள்ள குறை, எங்களுடைய துறையில் போதுமான Health Inspectors இல்லாத குறையினால்தான் முழுமையாக இதை நாங்கள் அமல்படுத்த முடியவில்லை. இப்போது உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கிற Sanitary Inspectors-ஐ கொண்டு massive raid செய்து கொண்டிருக்கிறோம். இதன் மூலம் நாங்கள் அதைத் தடுத்துக் கொண்டு வருகிறோம். இன்னும் கூடுதலாக Sanitary, Health Inspectors-ஐ நியமிப்பதற்கு நம்முடைய நிதித் துறையிடம் கேட்டிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொஞ்சம் தாராள மனதோடு, நிதியொதுக்கீடு செய்து, கொஞ்சம் கூடுதலான பணியாளர்களை எங்களுக்கு அவர்கள் கொடுத்தால் நிச்சயமாக இதை அறவே ஒழித்துவிடுவோம். காரணம், இது உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கிற பொருளாக இருப்பதாலே ஒரு சமுதாய நோக்கத்தோடு, மக்கள் நலம் பாதிக்கக் கூடாது என்பதற்காக இந்த நல்ல நடவடிக்கையை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு எடுத்திருக்கிறது. இதிலே உறுதியாக இருக்கிறோம். நடைமுறைப்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஏற்கெனவே இதற்காக சட்டம் கொண்டு வருவதாக....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கே. மகேந்திரன் அவர்கள், உங்கள் நேரம்தான் வீணாக்கப்படுகிறது.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 9 ஆம் தேதி தமிழக சட்டப் பேரவையிலே ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையிலே தமிழக அரசு திட்டங்கள், கொள்கைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக சென்னை மாநகரத்திற்காக, சென்னை குடிநீர் வழங்கல் பெருக்கு திட்டம்-2 என்ற ஒரு திட்டம் 2002-2003-க்குள்ளாக அமல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே அந்தத் திட்டத்தினை நான் வரவேற்கிறேன். சென்னை மாநகர மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக போதுமான நிதியை இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஆளுநர் அவர்களுடைய உரையிலே தமிழக அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட வழித் தடங்கள், சேவைகள், பணிகள் படிப்படியாக தனியார் மயமாக்கப்படும்

[திரு. கே. மகேந்திரன்] [2002 மார்ச் 12

என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. காலையிலே ஒரு விவாதம் இங்கே நடைபெற்றபோது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி போக்குவரத்துக் கழகங்களை நட்டத்திலே இயக்குவதற்காக நட்டம் ஏற்பட வேண்டுமென்பதற்காகவே, மினி பேருந்துகளை தனியார்வசம் ஒப்படைத்ததாக, அந்த அர்த்தத்திலே நான் புரிந்து கொண்டேன். ஒருவேளை வேறு அர்த்தத்திலே அவர்கள் சொல்லியிருந்தால் திருத்திக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நோக்கம் என்பது இருப்பதாகச் சொன்னார்கள். உண்மையிலே அப்படிப்பட்ட நோக்கம் என்பது இருக்குமேயானால், எங்களைப் பொறுத்தவரையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் அன்றைக்கே மினி பேருந்துகளை இயக்கும்போது சுட்டிக்காட்டினோம். அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக மினி பேருந்துகளை இயக்க வேண்டும் என்று சொன்னோம்.

இன்றைக்கு 18 ஆயிரத்திற்கும் அதிகமான பேருந்துகள் தமிழகத்திலே அரசுப் போக்குவரத்துக் கழகங்களால். இயக்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் சேவை என்பது இந்த அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. தனியார்வசம் அந்தப் பேருந்துகள் என்பது படிப்படியாக, ஒப்படைக்கப்படுமானால் சேவை மனப்பான்மையோடு அவர்கள் போக்குவரத்துக் கழகங்களை நடத்துவார்களா என்றால், நிச்சயமாக நடத்தமாட்டார்கள். எந்த நோக்கத்திற்காக போக்குவரத்துக் கழகங்கள் அரசுடைமையாக்கப் பட்டனவோ, அந்த நோக்கம் என்பது சிதைந்துவிடும் என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஆகவே, போக்குவரத்துக் கழகங்களைப் படிப்படியாக தனியார்மயமாக்குவது என்கின்ற அந்தக் கொள்கையை தமிழக அரசு உடனடியாகக் கைவிடவேண்டும்; போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக மினி பேருந்துகளை இயக்கி, இன்னும் பேருந்துகள் இயக்கப்படாத குக்கிராமங்களுக்கும் பேருந்துகளை இயக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலே போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டத்திலே கலந்துகொண்ட, 1600-க்கும் அதிகமான போக்குவரத்துத் தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எடுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த நடவடிக்கை போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய போராட்டம் வாபஸ் பெறப்பட்டதற்குப் பின்பாக,



2002 மார்ச் 12] [திரு. கே. மகேந்திரன்]

அந்த ஒழுங்கு நடவடிக்கை இரத்துச் செய்யப்பட வேண்டும். எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்தத் தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஒழுங்கு நடவடிக்கையை இரத்துச் செய்து, 1600 தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-50

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, தொழிலாளர்மீது போட்டிருக்கின்ற வழக்குகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசில் அந்தப் போராட்டம் நடந்த காலத்தில்கூட முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப்பட்டவர்கள், போராட்டத்திலே கலந்துகொண்டவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் எல்லாம் திரும்பப் பெறப்பட்டு இப்பொழுது குறிப்பிட்ட குற்றங்களைச் செய்தவர்கள்மீது மட்டும் அந்த வழக்குகள் இருக்கின்றன. அவர்கள்மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சபையின் மூலமாக உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, அந்தத் தொழிலாளர்களில் அரசு சொத்துக்களை நாசப்படுத்திய குற்றம் போன்ற கடுமையான குற்றம் புரிந்தோர்கள்மீது மட்டும்தான் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், குறிப்பிட்ட குற்றங்கள் செய்தவர்கள் மட்டும் இந்தப் பணி நீக்கத்திலே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நீதிமன்றத்திற்குப் போய், நீதிமன்றம் அப்படிப்பட்ட பல வழக்குகளில் அரசு அல்லது காவல் துறை சொல்வது போல, இவர்கள் குற்றம் செய்யவில்லை என்று விடுதலை செய்யப்பட்டவர்களுக்குக்கூட வேலை கொடுக்கப்படவில்லையே ஏன்? அவர்களுக்கு ஏன் வேலை கொடுக்கப்படவில்லை?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலிருந்து உத்தரவு பெறப்பட்டவர்கள் தடையாணை பெறப்பட்டவர்கள், விடுவிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் பணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையிலே கைது செய்யப்பட்ட போக்குவரத்துத் தொழிலாளர்கள் பழிவாங்கப்படாமல் இருக்கலாம்.

ஆனால் குறிப்பிட்ட குற்றங்கள் என்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பொதுவாக காவல் துறையைப் பொறுத்தவரை எப்படியெல்லாம் நடந்துகொள்ளும் என்று இங்கே அமர்ந்திருக்கக்கூடிய அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஒரு போராட்டம் நடைபெறும்போது அந்தப் போராட்டத்தின் இறுதியிலே அந்தப் போராட்டம் வாபஸ் பெறப்படும்போது அந்தப் போராட்டத்திலே கலந்துகொள்ளக்கூடிய அனைவருக்கும் எந்தவித பாதிப்புமின்றி அந்தப் போராட்டத்தை முடித்து வைக்க வேண்டும் என்பதுதான் எங்களது விருப்பம். தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல, இன்றைக்கு நீதிமன்றங்களுக்குச் சென்று தடை உத்தரவு பெற்ற தொழிலாளர்களுக்குக்கூட இன்னும் சில தொழிலாளர்களுக்கு பணி வழங்கப்படாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு உடனடியாக பணியை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று மின்சாரத் துறை. இன்றைக்கு மத்திய அரசோடு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒப்பந்தம் சம்பந்தமாக இந்த ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை சில பகுதியிலே அமலாக்குவதிலே எங்களுக்கு மாறுபட்ட அபிப்பிராயம் கிடையாது. இன்றைக்கு மின்சாரத் துறையிலே, தமிழக மின்சாரத் துறையிலே ஏற்படக்கூடிய line loss என்பது கட்டுப்படுத்தப்பட வேண்டும். அது கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதை முறையாக முறைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதிலே எங்களுக்கு மாறுபட்ட அபிப்பிராயம் கிடையாது. ஆனால், தமிழகத்திலே இருக்கக்கூடிய மின்சார வாரியத்தைப் பொறுத்தவரை, இன்றைக்கு கட்டணத்தை நிர்ணயித்துக் கொள்வதற்கு ஒரு கமிட்டி அமைக்க வேண்டும் என்று அந்த ஒப்பந்தத்திலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழக மின்சார வாரியத்திலே இன்றைக்கு மூன்று பிரிவுகளாகப் பிரிப்பதற்கான ஒரு யோசனை இருப்பதாக அறிகிறோம். Generation, Distribution, Transmission என்று மூன்று கழகங்களாக, கார்ப்பரேஷன்களாக மாற்றுவதற்கான ஒரு முயற்சி இருப்பதாக அறிகிறோம். ஆனால் இன்றைக்கு ஒரே குடையின்கீழ் செயல்படக்கூடிய தமிழக மின்சார வாரியத்தைப் பொறுத்தவரை, மூன்று பிரிவுகளாகப் பிரிப்பது என்பது, தமிழக மின்சார உற்பத்திக்கு உகந்ததாக இருக்க முடியாது. கூடுதலான செலவு ஏற்படும் என்பதைக் கணக்கில் கொண்டு இந்த மூன்று பிரிவுகளாகப் பிரிக்கக்கூடிய யோசனை அரசுக்கு இருந்தால் அதை உடனடியாக நிறுத்திவிட்டு, ஒரே பிரிவாக தமிழ்நாடு மின்சார வாரியமாகச் செயல்பட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.



அதேபோன்று, விழுப்புரத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி. இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வெளிவந்திருக்கிறது. ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு ஒரு norms உருவாக்கப்பட வேண்டும் என்றும், உச்ச நீதிமன்றம் guidelines கொடுத்ததையொட்டி நம்முடைய தமிழகத்தினுடைய உள் துறைச் செயலாளர் அவர்கள் டெல்லி உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு Affidavit தாக்கல் செய்திருக்கிறார்கள். அதில் எந்தெந்த பேரணிகள் நடத்தலாம், கூட்டங்கள் நடத்துவதற்கு எந்தெந்த இடங்களைத் தேர்வு செய்யலாம் என்று மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரிடம் கருத்துகளைக் கேட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்திய ஜனநாயகத்தினுடைய அரசியல் சாசனம், நாட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்கு கொடுத்திருக்கக்கூடிய இந்த ஜனநாயக உரிமைகள் தங்களுடைய எதிர்ப்புகளைத் தெரிவிப்பதற்கான ஜனநாயக உரிமைகளை எந்தச் சூழ்நிலையிலும் யாரும் பறிப்பதற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று தமிழக அரசைப் பணிவன்போடு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

*பிற்பகல் 4-55*

இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருப்பவர்கள், நாளைக்கு எதிர்க்கட்சியாக மாறக்கூடிய சூழல் என்பது உருவாகலாம். எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் ஆளுங்கட்சியாக மாறக்கூடிய சூழல் உருவாகலாம். ஆனால், இப்படிப்பட்ட ஜனநாயக உரிமைகளைப் பறிக்கக்கூடிய இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, affidavit என்பது தாக்கல் செய்யும்போது, தமிழகத்திலே இருக்கக்கூடிய அரசியல் இயக்கங்களைக் கலந்துகொண்டு, நாம் ஒரு முடிவு எடுப்பது, உச்ச நீதிமன்றத்திற்கு பதில் மனு தாக்கல் செய்வது என்பது பொருத்தமாக இருந்திருக்கும்.

இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரை, ஜனநாயக உரிமை பறிக்கப்படுவதற்கு அனுமதிக்கக் கூடாது. நேற்றையதினம்கூட, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் சார்பாக மத்திய அரசைக் கண்டித்து, மத்திய அரசினுடைய பட்ஜெட்டைக் கண்டித்து தமிழகம் முழுவதும் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. இராஜபாளையத்திலே நடைபெற்ற மறியல் போராட்டத்திலே கலந்துகொள்வதற்காக எங்களது தோழர்கள் சென்றபோது, அங்கே பெண்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். வாலிபர் சங்கத்தினுடைய தாலுகா செயலாளர் உட்பட இன்றைக்கு காவல் துறையின் தாக்குதலுக்கு உட்பட்டு, அரசு ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு நிகழ்வு நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஜனநாயக உரிமைகளைப் பறிக்கக்கூடிய நடவடிக்கைகளை அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசினுடைய புதிய தொழிற் கொள்கை என்பது பட்ஜெட்டிலே அறிவிக்கப்படும் என்று ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. தமிழக அரசினுடைய புதிய தொழிற் கொள்கையைப் பொறுத்தவரை, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழில்களை பாதுகாக்கக்கூடிய கொள்கைகளாக, தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழிலாளர்களை பாதுகாக்ககூடிய ஒரு கொள்கையாக தமிழக அரசினுடைய புதிய தொழிற் கொள்கை என்பது அமையவேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். *(மணியடிக்கப்பெற்றது)* காரணம் என்னவென்றால், இன்றைக்கு நெய்வேலியிலே 19000 தொழிலாளர்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நெய்வேலியிலே இருக்கக்கூடிய அந்த அனல்மின் நிலையம் உள்பட, சுரங்கம் உள்பட தனியாருக்கு விற்பதற்கான முயற்சி மத்தியிலே ஆளக்கூடிய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மேற்கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையில், அந்த ஆலை N.L.C. நிறுவனம் என்பது, தனியார்மயம் ஆக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த அவையிலே இருக்கக்கூடிய அனைவரும் ஒன்றுபட்டு குரல் எழுப்பவேண்டும்.

நான் ஒரேயொரு விஷயத்தை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மின்சாரத் துறையைப் பொறுத்தவரை, தனியாருக்குச் சென்று விட்டது என்றால்—இன்றைக்கு சென்னையிலே இருக்கக்கூடிய ஜி.எம்.ஆர். வாசவி-யாக இருந்தாலும்சரி, பிள்ளைபெருமாள் கோவிலிலே இருக்கக்கூடிய தனியார் மின் நிலையமாக இருந்தாலும் சரி, இந்த மின் நிலையங்களிலே உற்பத்தி ஆகக்கூடிய மின்சாரத்திற்கு, தமிழக அரசு யூனிட் ஒன்றிற்குக் கொடுக்கக்கூடிய வரம்பு என்பது 4 ரூபாய் 50 காசிலிருந்து, 5 ரூபாய் 50 காசு வரை தனியாருக்கு நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நெய்வேலியிலே உற்பத்தி ஆகக்கூடிய மின்சாரத்திற்கு, தெர்மல்-1-லே உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்திற்கு 1 ரூபாய் 65 காசும், தெர்மல்-2-லே உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்திற்கு 1 ரூபாய் 69 காசும்தான், தமிழக அரசானாலும் சரி, இந்தியாவில் இருக்கக்கூடிய இதர மாநில அரசுகளானாலும் சரி, வழங்கிக்கொண்டிருக்கின்றன. ஒரு மாநிலத்தினுடைய மின்சாரத் தேவை என்பது பூர்த்தி செய்யப்பட்டால் தான் அந்த மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சி பாதுகாக்கப்படும், புதிய தொழிற்சாலைகளை உருவாக்கமுடியும், அனைத்து வகையான கட்டமைப்புகளையும் மேம்படுத்த முடியும் என்பதைக் கணக்கில் கொண்டு, அது நெய்வேலி நிலக்கரிச் சுரங்கமாக இருந்தாலும் சரி, சேலத்திலே இருக்கக்கூடிய Steel Plant-ஆக இருந்தாலும் சரி, சென்னையிலே இருக்கக்கூடிய Fertilizers நிறுவனமாக இருந்தாலும் சரி, இதுபோன்ற





மத்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் தனியார் துறைக்கு மாற்றப்படாமல் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய அதே சூழலிலே, தமிழகத்திலே இருக்கக்கூடிய பொதுத் துறை நிறுவனங்களையும் தனியாருக்கு விற்காமல் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாயப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. அன்பழகன்.

***திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் எங்களுடைய தங்கத் தலைவி, தானைத் தலைவி, தன்னிகரில்லாத சேனைத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இரண்டாவது ஆண்டினுடைய ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கும்பொருட்டு, என்னைப் பேசப் பணித்தமைக்காக எங்களுடைய ஒப்புயர்வற்ற தலைவி அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துகளைச் சொல்ல விரும்புகின்றேன்.

*பிற்பகல் 5-00*

கடந்த ஆளுநர் உரைக்குப் பின்பு, ஏறக்குறைய இந்த 10 மாதங்களில் தமிழகத்தில் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகி வந்ததையும், மக்கள் அளித்த தீர்ப்பினை மறைமுகமாக மத்தியிலே இருக்கின்ற அதிகாரத்தினுடைய பிடியை வைத்துக்கொண்டு, எங்களுடைய தாயின் நிலையை மாற்றி ஆட்சியினுடைய சக்கரத்தைப் பறித்தார்கள். நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

“மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
கடலிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ”

என்றெல்லாம் உலவாக் கட்டுரை பல பாராட்டி, செந்தமிழ்ப் பாவை செய்த தவக் கொழுந்து, கொங்கச் செல்வி, குடமலை ஆட்டி என்றெல்லாம் புகழாரம் செய்து, ஒரு மாமணியாய் உலகிற் தோன்றிய திருமாமணி பாண்டிய நெடுஞ்செழியன் அவையில் வழக்குரைத்ததைப் போன்று,

நீதிக்காக நெடும்பயணம் செல்லாமல், அந்த சிலம்புச் செல்வி, டெல்லியைக் கடந்து இமய மலையிலேபோய் நீதியைப் பெற முடியாது என்று கருதி, நமக்குப் பக்கத்திலே இருக்கிற ஆண்டிப்பட்டியை அடுத்த வருசநாடு மலைப் பகுதியில் அன்றையதினம் நீதியை அடைந்ததாக நம்முடைய இளங்கோ அடிகள் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப் போன்றுதான் எங்களுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் நீதியை டெல்லி சென்று இமய மலையில் வாங்காமல், நீதியை அந்த ஆண்டிப்பட்டியாகிய மஞ்சு சூழ் மலை நாடாம் வருசநாட்டுப் பகுதியிலேபோய், நான் என்ன தவறு செய்தேன்; என்னை அரசியலில் இருந்து ஒழிக்கப் பார்த்தார்கள்; வீழ்த்தப் பார்த்தார்கள்; இது நியாயம்தானா என்று அந்த மக்கள் மத்தியிலே சாதிமத பேதங்களையெல்லாம் கடந்த தலைவியாக, மொழி இனத்தைக் கடந்த தலைவியாக வலம் வந்து கேட்டார்கள். எப்படி பாண்டிய நெடுஞ்செழியன், 'யானோ அரசன்; யானே கள்வன்' என்று சொல்லி, அந்த வளையா நீதியை நிமிர்த்தினானோ, அதைப்போன்று, அங்கே இருக்கிற பாண்டியர் குலமக்கள் நீதிமானைப் போன்றவர்கள், 41 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்திலே, அந்த ஆண்டிப்பட்டி தொகுதியில் வெற்றி வீராங்கனையாக புரட்சித் தலைவி அவர்களை தேர்ந்தெடுத்து நீதியை வழங்கியிருக்கிறார்கள். இங்கே இருக்கிற எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அங்கே சொன்னார்கள் நாங்கள் சம்பந்தி வந்திருக்கிறோம்; உங்கள் வீட்டு மாப்பிள்ளை வந்திருக்கிறோம்; உங்களுடைய பங்காளிகளாக வந்திருக்கிறோம்; எங்களுக்கு வாக்களியுங்கள் என்று சொன்னார்கள். ஆனால், எங்கள் புரட்சித் தலைவி மாத்திரம்தான், தொகுதி முழுவதும் பேசுகிற பொழுது நான் சாதிமத பேதங்களைக் கடந்து இன்றைக்கு உங்களிடத்திலே வந்திருக்கிறேன் என்று சொல்லி வாக்குகளைக் கேட்டு, மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள்.

பிற்பகல் 5-05

அப்படி மாபெரும் வெற்றியை இன்றைக்கு இந்தத் தமிழ்கூறும் நல்லுலகம் மட்டுமல்ல, இந்த இந்தியத் துணைக் கண்டம் மட்டுமல்ல, ஏன் இந்த ஆசியாக் கண்டமே வியக்கக்கூடிய வகையில் பெற்றிருக்கிறார்கள். அந்த வெற்றியைப் பெற்றதற்குப் பின்னால் நேற்றையதினம் இங்கே நடந்த சட்டப் பேரவையின் இந்தத் தொடக்கக் கூட்டத்திலே, இங்கே இருக்கக்கூடிய, போற்றுதலுக்குரிய நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்களுடைய அணியின் தலைவரவர்கள் இங்கே வந்தார்கள். உண்மையிலே நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைந்தோம்.



பெருவகை கொண்டோம். தமிழகம் இப்படித்தான் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இந்தியத் துணைக் கண்டமே வியக்கும் வண்ணம், இந்த மாமன்றம் விளங்கி, இந்தத் தமிழ்நாடு ஒரு சிறந்த மாநிலமாக, ஒரு ஒப்புயர்வற்ற மாநிலமாக, பகையே இல்லாத ஒரு மாநிலமாக இருக்கப் போகிறதே என்று நாங்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தோம். ஆனால், இங்கே வந்தவர்கள் மீண்டும் வெளிநடப்புச் செய்கிறேன் என்று சொல்லி வெளியேறி விட்டார்கள். ஆனால், நம்முடைய பெருந்தகை எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களை, நான் ஒரு மாணவன் என்ற முறையிலே கேட்டுக்கொள்கின்றேன், எப்படி அந்தப் பாண்டிய நெடுஞ்செழியன், யானோ அரசன் என்று சொன்னானோ, அதைப்போன்று நம்முடைய சோழப் பரம்பரையிலே, மனுநீதிச் சோழன் வந்த அந்தப் பரம்பரையிலே வந்ததாகச் சொல்லிக்கொள்ளும் நீங்கள் யானோ அரசன், நான்தான் தவறு செய்துவிட்டேன் என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டு சென்றிருப்பீர்களேயானால் அதை. நாங்கள் மனமுவந்து ஏற்போம். (மணியடிக்கப்பெற்றது) இதுதான் நனி நாகரீகம். இதுதான் பண்பாடு. இதுதான் தமிழர் காத்து வந்த ஒற்றுமை.

ஆனால், இன்றைக்கும் சரி, என்றைக்கும் சரி, எங்களுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் 1991-லே ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலேகூட, யாரையும் எதிரியாகக் கருதவில்லை. யாரையும் பழிவாங்க வேண்டுமென்று எண்ணவில்லை. யாரையும் வீழ்த்த வேண்டுமென்று துடிக்கவில்லை. ஆனால், அதற்குப் பின்னாலே வந்த நீங்கள், உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாமல் எங்களுடைய தாயை, எங்களுடைய தமிழை, எங்களுடைய புரட்சியை நீங்கள் அடக்கப் பார்த்தீர்கள். ஒடுக்கப் பார்த்தீர்கள். ஆனால், காலம் மாறும், தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மறுபடியும் வெல்லும் என்ற சத்தியத்தின் வலிமையை நம்பி புரட்சித் தலைவி அவர்கள், புரட்சித் தலைவர் அவர்களுடைய பாதையில் இன்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் கற்றுக்கொடுத்த, பேரறிஞர் அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற அந்த எதையும் தாங்கும் இதயம் எங்களிடத்தில்தான் இருக்கிறது என்பதை இந்த நல்ல நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும்கூட, தமிழர்களைப் பார்த்துக் கேட்டால் அவர்கள் சொல்வார்கள், யாதும் ஊரே யாவரும் கேளிர் - இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கிற ஊர்கள் எல்லாம் எங்களுடைய ஊர்கள். இங்கே இருக்கிற மக்கள் எல்லாம் எங்களுடைய மக்கள் என்று சொல்லக்கூடிய பண்பை வளர்த்தவர்கள் நம்முடைய தமிழர்கள். அப்படிப்பட்ட தமிழர் மரபிலே (மணியடிக்கப் பெற்றது) உதித்த நாம், பெருமையாக இந்த

ஆட்சிக்கு வழிவிட்டு, இந்த ஆட்சியினுடைய உயர்விற்கு ஒத்துழைப்புக் கொடுத்து, இந்த ஆட்சியினுடைய மாட்சியைப் பெருக்க வேண்டுமென்று இந்த அருமையான நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் இங்கே இந்த ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாகக் கூறி இருக்கிறார்கள், 15 அம்சத் திட்டம். இந்த 15 அம்சத் திட்டத்தை நான்கு ஆண்டுகளில் தொடர்ந்து உண்மையாக, நேர்மையாகச் செயல்பட்டு அந்த இலக்கை நாங்கள் அடையத் தயாராக இருக்கிறோம். அப்படிப்பட்ட திட்டங்களைத்தான் இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 5-10*

ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதி, நிலக்கோட்டை தொகுதி. இந்த நிலக்கோட்டை தொகுதியிலே ஓர் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரி தற்காலிக இடத்திலே இன்று இருக்கிறது. அந்தப் புதிய இடத்திலே எங்களுடைய புரட்சித் தலைவி அரசு இன்று கட்டடம் கட்டி முடித்து, அந்தக் கல்லூரியையும், கொடைக்கானலிலே இருக்கின்ற அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தோடு இணைத்திருப்பதை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். வாயாரப் புகழ்கிறோம். அந்த அளவுக்கு எங்களுடைய தொகுதியை மாத்திரமல்ல; இன்றைக்கு இந்தச் சமுதாயம், ஆதிதிராவிடர் சமுதாயம், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயம், மிகவும் வறுமைக் கோட்டிலே இருக்கிற எந்தச் சமுதாயமாக இருந்தாலும் சரி, அவர்கள் அறிவியலிலே முன்னேற வேண்டும்; தொழில் துறையிலே முன்னேற வேண்டும்; கல்வியிலே முன்னேறிவர வேண்டும் என்பதற்காக, நம்முடைய வேலூர் மாவட்டத்திலே, நம்முடைய தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெயரிலே ஒரு பல்கலைக்கழகத்தையும் தோற்றுவித்திருக்கிறார்கள். இப்படி எத்தனையோ திட்டங்களைத் தோற்றுவித்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், சுருக்கமாகச் சொல்லப்போனால், எங்களுடைய இந்த ஆளுநர் உரையிலே, கேட்டதையெல்லாம் கொடுக்கும் கற்பக மரம் என்று சொல்வார்களே, அந்தக் கற்பக மரம்கூட கேட்டால்தான் கொடுக்கும்; ஆனால் எங்களுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அரசு, கேட்காமலேயே கொடுக்கக்கூடிய கற்பக விருட்சமாக இன்றைக்கு இந்த ஆளுநர் உரை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.





அதேபோன்று, எங்களுடைய இந்த 15 அம்சத் திட்டங்களைப் பற்றி விரிவாகச் சொல்ல வேண்டுமேயானால், பட்ஜெட்டிலே சொல்லவிருக்கிறார்கள். தெளிவாகச் சொல்லவிருக்கிறார்கள். ஒவ்வொரு திட்டத்தையும் ஆணித்தரமாக, இப்படித்தான் நடைபெற வேண்டும்; இப்படித்தான் நடக்கும் என்று சொல்லவிருக்கிறார்கள். அவற்றில் கோடிட்டுச் சொல்லக்கூடியவை நம்முடைய தொடர் பசுமைப் புரட்சி, உணவுப் பாதுகாப்பு, கால்நடைப் பாதுகாப்பு. இந்தக் கால்நடைப் பாதுகாப்பு என்பது, உண்மையிலேயே கிராமப்புறத்து மக்கள், அந்தக் காலத்திலே கேரளாவிலே சொல்வார்கள்; ஓர் யானை வைத்திருந்தாலே அவன் மிகப் பெரிய பணக்காரன் என்று. அதேபோன்று, எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்திலேயும் சரி, மதுரை மாவட்டத்திலேயும் சரி, அங்கே இருக்கக்கூடிய யாதவர் குல மக்கள், 2 ஆடுகள் இருந்தால் போதும்; அந்த ஊரிலே நாங்கள் எல்லாம் பெரிய பணக்காரர்கள் என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு, கால்நடைப் பாதுகாப்புக்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்து, இன்றைக்கு ஒரு மாபெரும் பாதுகாப்புத் திட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நாம் மனதார வரவேற்க வேண்டும்; பாராட்ட வேண்டும்.

அதேபோன்று, கறவை மாடுகள். கிராமப்புறத்திலே ஒரு கறவை மாடு இருந்தால் போதும்; அவன் இராஜாவாக இருப்பான். என்னிடம்கூட ஒரு கட்சிக்காரர், நீங்கள் ஐந்தாண்டுகளுக்கு எனக்கு ஒன்றும் செய்யவேண்டாம்; ஒரு கறவை மாடு வாங்கிக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார். அந்த அளவுக்கு கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தை இன்றைக்கு விரிவுபடுத்தும் முகமாக, இந்த அரசு கொண்டு வந்திருப்பதை நாம் முழு மனதோடு ஏற்க வேண்டும்.

இப்படிப் பல்வேறு திட்டங்கள். ஒன்று அல்ல, இரண்டு அல்ல, 15 அம்சத் திட்டங்கள். இந்த 15 அம்சத் திட்டங்களையும் நாம் மனதாரப் பாராட்ட வேண்டும். கடந்த காலத்திலேகூட சட்டமன்ற உறுப்பினருடைய நிதியையெல்லாம் பெண்கள் கழிப்பிடத்திற்காகக் கொடுத்துவிட்டார்களே என்று ஆதங்கப்பட்டார்கள். இப்போது என்னுடைய தொகுதியிலே 30 ஊர்களுக்கு பெண்கள் கழிப்பிட வசதி செய்திருக்கிறோம். உங்களுக்குத் தெரியும்; கிராமப்புறத்திலே இருக்கிற பெண்கள், குளிக்க இடம் இல்லாமல், கழிப்பிடம் செல்வதற்கு வழியில்லாமல், ரோடுகளிலும், வயல்களிலும், வரப்புகளிலும் உட்கார்ந்து அவர்கள்படும் வேதனையைப் போக்கும் பொருட்டு, எங்களுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள், பெண்கள் கழிப்பிட திட்டத்தைக் கொண்டு வந்து, இன்றைக்குச் சாதனை

படைத்திருக்கிறார்கள் என்று சொல்லி, இந்த அருமையான வாய்ப்பைக் கொடுத்த நம்முடைய சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய தங்கத் தலைவி புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றியினைச் சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. கந்தசாமி அவர்கள்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் ஆரம்பித்து, 134 ஆண்டுகள் ஆகின்றன. சுதந்திரத்திற்குப் பிறகும்கூட, கடந்த 55 ஆண்டு காலமாக, நீலகிரி மாவட்டத்திற்குத் தமிழக அமைச்சரவையிலே ஓர் அமைச்சர்கூட இல்லாமல் இருந்தது. இந்த முறை, நீலகிரி மாவட்டத்திற்கு, சுற்றுலாத் துறையைக் கொடுத்து—சுற்றுலாத் துறை அமைச்சராக, கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. மில்லர் அவர்களை அமைச்சராக ஆக்கிய தமிழக அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், நீலகிரி மாவட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5-15*

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளாக ஜீவாதாரப் பிரச்சினையாக இருந்து வருவது, பச்சைத் தேயிலைக்கு விலை குறைந்துவிட்ட பிரச்சினை. 4 வருட காலத்திற்கு முன்பு ஒரு கிலோ தேயிலை 18 ரூபாய்க்கு விற்றது. இன்றையதினம் அது 5¼ ரூபாய்க்கு விற்கிறது. விவசாயிகளுக்கு பச்சைத் தேயிலை உற்பத்திச் செலவு 6 ரூபாய் ஆகிறது. ஆனாலும், அது கிலோ 5¼ ரூபாய்க்குத்தான் விற்கிறது. ஹிந்துஸ்தான் லீவர் போன்ற பெரிய கம்பெனிகள் பச்சைத் தேயிலைக்கு விலை கிடைக்காமல் செய்கின்றன. நீலகிரி மாவட்டத்திலே ஏறத்தாழ 50 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் இருக்கின்றார்கள். வாரந்தோறும் குன்னூரிலே தேயிலை ஏலம் நடக்கிறது. அந்த ஏலம் நடக்கின்ற இடத்திலே விவசாயிகளின் பிரதிநிதிகள் இல்லை. ஹிந்துஸ்தான் லீவர் போன்ற பெரிய கம்பெனிகள் அதிலே கலந்துகொள்கின்றன. ஆனால், ஏலம் நடக்கின்ற இடத்திலே விவசாயிகளின் பிரதிநிதிகள் ஒருவர்கூட கலந்துகொள்ள முடியாத சூழ்நிலை இருக்கின்றது. தமிழ்நாடு அரசு, குறிப்பாக ஊரகத் தொழில் துறை இதிலே தலையிட்டு விவசாயிகளின் பிரதிநிதிகள் தேயிலை ஏலத்தில் கலந்து கொள்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.





இந்த ஆண்டு மத்திய பட்ஜெட்டிலே இறக்குமதி செய்கின்ற தேயிலைக்கு 70 சதவீதம் இறக்குமதி வரியிலிருந்து 100 சதவீதமாக உயர்த்தி இருக்கிறார்கள். அது போதாது. ஏறத்தாழ 150 சதவீதம் சுங்க வரி இறக்குமதி செய்கின்ற தேயிலைக்கு விதிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன்.

மத்திய அரசு 282 சதவீதம் வெளிநாட்டு மது வகைகளுக்கு சுங்க வரி விதிக்கின்றது. அதுபோல் இறக்குமதி செய்கின்ற தேயிலைக்கும் 150 சதவீதம் சுங்க வரி விதிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

நெல்லுக்கும் கரும்புக்கும் குறைந்த விலை நிர்ணயம் செய்து இருக்கின்றார்கள். அதேபோன்று தேயிலைக்கும் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

தேயிலை எஸ்டேட் தொழிலாளர்களுக்கு கடந்தகாலத்திலே ஒரு நாளைக்கு ரூ.76.85 கூலியாகக் கொடுத்து வந்தார்கள். இன்றைக்கு அந்தக் கூலி 70 ரூபாயாகக் குறைத்துக் கொடுக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் 2 மணி நேரம் கூடுதலாக வேலைப் பளுவையும் கொடுத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு கூலியைக் குறைக்காமல், தொழிலாளர் நலத் துறை இதிலே தலையிட்டு, பழையபடி ரூ.76.85 கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திற்கு தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றார்கள். உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மட்டுமல்லாமல் வெளிநாட்டுப் பயணிகளும் வருகின்றார்கள். ஆனால், அங்கே பஸ் போக்குவரத்து சரியாக இல்லை. எல்லா பஸ்களும் பழுதடைந்து ஆங்காங்கே நின்றுவிடுகின்றன. போதுமான பஸ் வசதி இல்லை. நீங்கள் தனியார் பஸ்களை விட்டாலும் சரி, அல்லது அரசு பஸ்களை விட்டாலும் சரி, கூடுதல் பஸ்களை விட்டு சுற்றுலாப் பயணிகளை ஊக்கப்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில், சில வழித்தடங்களில் தனியார் பஸ்களை விட ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லி இருக்கிறீர்கள். அப்படி தனியார் பஸ்களை விடுகின்றபோது அரசு போக்குவரத்துத் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

புதிய பஸ் பெர்மிட் கொடுக்கின்றபோது, ஆதிதிராவிடர்கள் அதற்கு விண்ணப்பம் செய்தால், ஆதிதிராவிடர்களுக்கும் புதிய பஸ் பெர்மிட் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

மலிவு விலை மது 15 ரூபாய்க்கு விற்க வேண்டுமென்று நீங்கள் உத்தரவு போட்டு இருக்கின்றீர்கள். ஆனால், குன்னூர் பகுதியிலும் சரி, நீலகிரி மாவட்டம் முழுவதிலும்சரி 100 மில்லி லிட்டர் மலிவு விலை மது 15 ரூபாய்க்கு விற்பதற்குப் பதிலாக, 18 ரூபாய், 20 ரூபாய் என்று விற்கிறார்கள். கலால் துறையினர் இது குறித்து கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் சுற்றுலாப் பயணிகள் வருகின்ற இடமாக அது இருக்கின்ற காரணத்தால் அரசு நிர்ணயித்த விலையிலேயே, அதாவது ரூ.15-க்கு விற்கின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-20*

சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாக்கின்ற வகையில் நீலகிரி மாவட்டம் முழுவதிலும் கட்டடங்களை இடித்து விடுகின்றார்கள். ஏற்கெனவே கட்டடங்களைக் கட்டுகின்றபோது Town Planning Officers எல்லாம் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று தெரியவில்லை. இப்போது கட்டடங்களை இடிக்கின்ற காரணத்தால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். 7 மீட்டர் உயரத்திற்கு கட்டடங்களைக் கட்டலாம் என்று அரசு அதிகாரிகள் சொல்கிறார்கள். அரசு ஒரு நிபுணர் குழுவைப் போட்டு அது 10 மீட்டர் அளவு உயரத்திற்குக் கட்டடங்களைக் கட்டினால் பொது மக்களுக்கு எந்தப் பாதிப்பும் இருக்காது என்று சொல்லியிருக்கிறது. எனவே 10 மீட்டர் உயரத்திற்கு கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஊரகத் தொழில் துறை நடத்துகின்ற கோத்தகிரி தேயிலைத் தொழிற்சாலையை மூடி இருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்கலைக்கழகங்கள். சேலத்திலே, பெரியார் பல்கலைக்கழகம், அதுபோல, கோவையிலே பாரதியார் பல்கலைக்கழகம், திருச்சியிலே பாரதிதாசன் பல்கலைக்கழகம் என்று இருக்கிறது. மதுரை பல்கலைக்கழகம் ஏற்படுத்துகின்றபோது, வெறுமனே காமராஜர் பல்கலைக்கழகம் என்றுதான் ஆரம்பித்தார்கள். அண்ணன் நெடுமாறன் போன்ற தலைவர்கள் எல்லாம்





மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் என்று ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன்பேரில், அரசு மதுரையை அதோடு சேர்த்தது. அதுபோல சேலம் பெரியார் பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் என்று அந்த ஊர் பெயர்களைச் சேர்க்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் "திட்டத்திற்கு ரூ.82 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 50 இலட்ச ரூபாய்க்கு இன்ன வேலைகளைத்தான் செய்ய வேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். மேலும் சில மாணவர் விடுதிகளை ரூ.24 இலட்சம் செலவிலே கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சில தொகுதிகளிலே மாணவர் விடுதியின் தேவை இல்லாமல் இருக்கிறது. எனவே அரசு பரிசீலித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் இஷ்டப்படி எந்த வேலைகளுக்கு வேண்டுமானாலும் ஒதுக்கீடு செய்யலாம் என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களிலே தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு இன்னும் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. அந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, குன்னூர் தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் இன்னும் கட்டப்படவில்லை, அதைக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் தனது உரையிலே டிசம்பர் 13 ஆம் தேதி நாடாளுமன்றத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து, பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு மத்திய அரசு மேற்கொண்டுள்ள தேசிய சட்டம் இயற்றும் முயற்சிக்கு தனது முழு ஆதரவையும் தமிழக அரசு அளிக்கும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். டிசம்பர் 13 ஆம் தேதி அன்று நடந்த தாக்குதல் பாகிஸ்தானுடைய எல்லை தாண்டிய தீவிரவாதத்தினுடைய ஓர் அம்சமாகும். அந்தச் சமயத்திலே நம்முடைய பாதுகாவலர்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, 7 பேர்

இன்னுயிரைத் தந்து நாடாளுமன்றத்தைக் காப்பாற்றி இருக்கிறார்கள். ஆனால் இது தொடர்பாக இங்கே மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் போடோ சட்டம் அமலில் இருக்கும்போது இந்தச் சம்பவம் நடந்தது; ஆகவே அந்த போடோ சட்டத்திற்கு ஆதரவா? அது தேவை இல்லை என்பதைப்போல இங்கே பேசினார்கள். பல்வேறு குற்றவியல் சட்டங்கள் இருக்கின்றன. Criminal Procedure Code-302 இருக்கிறது. இருந்தாலும், கொலை நடக்கிறது, செக்ஷனை எடுத்து விடுவோமா? ஆகவே ஒரு சட்டம் இருக்கிறது, அந்தச் சமயத்திலே ஒரு சம்பவம் நடந்துவிட்டது என்பதற்காக சட்டத்தை எடுக்க வேண்டும் அல்லது கொண்டு வரக்கூடாது, ஆதரிக்கக்கூடாது என்று பேசக்கூடாது, அதிலும்கூட அவர்கள், நான்...(குறுக்கிடு) இதிலே தயவுசெய்து குறுக்கிட வேண்டாம், I am not yielding. மேலும் வாஜ்பாய் அவர்களுடைய அரசு இராஜினாமா செய்திருக்க வேண்டும்; அதை பெருந்தன்மையாக நாங்கள் கேட்கவில்லை என்று சொன்னார்கள்.

*பிற்பகல் 5-25*

ஆனால் ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த டிசம்பர் 13 சம்பவத்தன்று இந்திய அரசின் புலனாய்வுத் துறை, பாதுகாப்புத் துறை சிறப்பாகச் செயலாற்றி இருக்கிறது. ஒரு நிமிடம் செப்டம்பர் 11 ஆம் தேதி அமெரிக்காவிலே என்ன நடந்தது? அமெரிக்கா எப்படி re-act செய்தது என்பதைப் பார்க்க வேண்டும். அமெரிக்காவிலே 4 விமான தளங்களிலே 4 விமானங்கள் ஒரே சமயத்திலே கடத்தப்படுகின்றன. அவை அமெரிக்காவினுடைய air space-லே 45 நிமிடம் இருக்கின்றன. ரேடார் என்ன பண்ணியது? F.B.I. என்ன பண்ணியது? இந்தக் கேள்விகள் அங்கே எழுப்பப்படவில்லை. மாறாக, உலகம் தழுவிய பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு எனக்கு 50 டிரில்லியன் டாலர் வேண்டுமென செனட்டில் அதனுடைய ஜனாதிபதி புஷ் கேட்டபோது செனட்டர்கள் அனைவரும் ஒரு குரலிலே நாங்கள் 70 டிரில்லியன் தருகிறோம், உலக பயங்கரவாதத்திற்கு எதிராக நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளை ஆதரிக்கிறோம் என்றார்கள். அது நாட்டுப் பற்றினுடைய வெளிப்பாடு. இது, நாற்காலிப் பற்றினுடைய வெளிப்பாடு. ஏனென்றால், நமது நாட்டிலே இரண்டு நிமிடங்களில் தீவிரவாதிகள் நுழைந்தது என்பது வெளி வளாக கேட்டிற்குள்ளே. At the first point of frisking அவர்கள் தீவிரவாதிகள் என அடையாளம் காணப்பட்டார்கள். இரண்டு நிமிடங்களிலே பாராளுமன்றத்திற்குள்ளே நுழைகின்ற அனைத்துக் கதவுகளும் மூடப்பட்டன.





**THIRU S.R. BALASUBRAMONIYAN:** I am on a Point of Order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது first point என்று சொன்னார்கள், நிச்சயமாகக் கிடையாது. First point என்பது முதலிலே வந்த செய்திப்படி விஜய் சௌக் பக்கத்திலே வந்தால் அங்கே ஒரு கேட் இருக்கிறது. இரண்டாவது வந்த செய்தி 'சன்சத் மார்க்' Parliament Street-லே ஒரு கேட் இருக்கிறது. ஒன்று, அங்கேயே தடுத்து நிறுத்திவிடுவார்கள். பாஸ் இல்லாதவர்கள் யாருமே 'விஜய் சௌக் கேட்'-டைத் தாண்டிப் போக முடியாது. இந்தப் பக்கம் இருந்து வந்தால் Parliament Street Gate-ஐத் தாண்டி யாரும் போகமுடியாது. அந்த கேட் டைத் தாண்டி வந்து, முதலிலே வந்த செய்திப்படி., விஜய் சௌக் கேட் டில் இருந்து வந்து. பிறகு இடது பக்கம் திரும்பினார்கள். அது தவறு. ஒரே ஒரு பத்திரிகை மட்டும் 2-வது நாள், சம்பவம் நடந்த 3-வது நாள், 'இல்லை, அவர்கள் Parliament street gate வழியாகத்தான் வந்தார்கள்' என்று சொன்னார்கள். ஆனால், பாராளுமன்றத்தில் அறிக்கை வைத்த நேரத்தில் உள் துறை அமைச்சர் அவர்கள் எந்தப் பக்கம் இருந்து வந்தார்கள் என்று சொல்லவில்லை. எதுவாக இருந்தாலும், அது முதல் பாயின்ட் அல்ல. 12-வது கேட் என்பதோ, 9-வது கேட் என்பதோ, 11-வது கேட் என்பதோ, முதல் பாயின்ட் அல்ல. முதல் பாயின்ட் என்பது விஜய் சௌக் கேட். இல்லாவிட்டால் முதல் பாயின்ட என்பது Parliament street கேட். அந்த இரண்டையும் தாண்டி உள்ளே எப்படி வர முடிந்தது? எந்தக் காரும் போக முடியாது. நானும், நீங்களும் போனால்கூட,—முன்பு துணை சபாநாயகராக இருந்தவர்கள் இங்கே இருக்கிறார்கள்,— அங்கே இருக்கிற செக்யூரிட்டிபடி Parliament label இருந்தாலொழிய உள்ளே நுழைய முடியாது. நாம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும்கூட, வேறு காரிலே போனால் அங்கே இறங்கிவிட வேண்டும். அங்கே நமக்கு ஒரு Ferry—வேறு கார் அவர்கள் தருவார்கள். அந்தக் காரிலே ஏறித்தான் போக முடியும். வெளியே இருந்து வந்த காரிலே, தனியார் டாக்சியிலே வந்தவர்களை உள்ளே போக அனுமதித்ததைவிட அவமானச் சின்னம் ஒன்றுமே இருக்கமுடியாது.

**திரு. எச். ராஜா:** அவ்வாறு உள்ளே நுழைந்த தீவிரவாதிகள் 5 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதோடு மாத்திரமல்ல, இன்றுவரை அமெரிக்காவிலே World Trade Centre-ஐத் தாக்கியவர்கள் யார் என்று அறுதியிட்டு, உறுதியாக, எந்தவொரு ஆதாரத்தோடும் அவர்களால் வெளியிட முடியவில்லை. மாறாக இந்திய அரசாங்கம் 48 மணி நேரத்திற்குள்ளாக அந்த 5 தீவிரவாதிகளுடைய பெயர், அவர்களுடைய ஊர், தாய், தகப்பன் பெயர், எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற அனைத்து ஆதாரங்களையும்

இப்போது உலக நாடுகளுக்கு முன்பாக வைத்திருக்கிறது. மேலும் அமெரிக்காவில் தீவிரவாதிகள் இலக்கை அடைந்தார்கள். அவர்கள் தாக்க நினைத்த இலக்கைத் தாக்கினார்கள். ஆனால், இந்தியாவிலே, தீவிரவாதிகள் அவர்களுடைய இலக்கைத் தொட்டுகூடப் பார்க்க முடியவில்லை என்பதுதான் உண்மை. எனவே, ஏதோ ஒரு சம்பவம் நடந்திருக்கிறது, தீவிரவாதிகள் நுழைந்திருக்கிறார்கள். இது *20* ஆண்டு காலங்களாக பாகிஸ்தான் இந்த நாட்டின் மீது நடத்திக் கொண்டிருக்கிற எல்லை தாண்டிய தீவிரவாதத்தின் ஒரு பகுதி. ஆகவே, எப்படி அமெரிக்க நாட்டிலே இருக்கின்ற செனட்டர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் இந்தச் சமயத்திலே Aeroplane-ல் எப்படி தீவிரவாதி நுழைந்தான்; அப்போது Aerodrome-இல் security frisking இல்லையா அல்லது *45* நிமிடங்கள் ரேடார் என்ன பண்ணிற்று; F.B.I. என்ன பண்ணிற்று என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்காமல், வெளி நாட்டிலிருந்து ஒருவனுடைய தாக்குதல் நடந்து கொண்டிருக்கிறது, ஆகவே, பாரதப் பிரதமருக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்கிற ஒரு தேசிய சிந்தனையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழகத்தை ஆளுகின்ற கட்சியும் ஆதரவு தெரிவித்து இருப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்குத் தலைமை தாங்குகின்ற கட்சி என்கின்ற முறையில் நான் என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, குஜராத்தில், சபர்மதி எக்ஸ்பிரஸ்ஸில் பயணம் செய்த அப்பாவி மக்கள் *60* பேர்களுக்கு மேற்பட்டவர்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டார்கள். இந்தச் சம்பவத்திலே இன்றுகூட குஜராத் மாநில முதலமைச்சர், மத்திய அமைச்சர்கள், கைது செய்யப்பட்ட நபர்கள் பெயர்களை, அவர்கள் காங்கிரஸ் (இ) உறுப்பினர்கள் என்ற உண்மைகளை வெளியிட்டு இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் நரேந்திரமோடி அவர்களும், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்களும்.. *(குறுக்கீடு)* I am not yielding. You can answer afterwards.

*பிற்பகல் 5-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Point of Order கேட்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான செய்தி முதலில் பத்திரிகையிலே வந்தது. பிறகு காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு. ஜெய்பால் ரெட்டி அவர்கள் தெளிவாக மறுத்திருக்கிறார்கள். அவர் யார் என்று



சொன்னால் அந்த நகராட்சித் தலைவர், காங்கிரஸ் வேட்பாளரைத் தோற்கடித்து அவர் வெற்றி பெற்றவர். அவர் காங்கிரஸ்காரர் அல்ல என்று தெளிவுபடுத்திய பிறகு இன்று வரை அவர் காங்கிரஸ்காரர் என்று யாருமே சொல்லவில்லை. இந்தச் சபைக்கு அவர் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து அகற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** தவறான தகவல் அல்ல. இரண்டு கவுன்சிலர்கள் காங்கிரஸ் கட்சியைத் சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றையதினம் திரு. வெங்கையா நாயுடு அவர்கள் பெயரோடு ஆதாரத்தோடு வெளியிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்கிறேன். தவறான கருத்தாக இருந்தால் அதை அவைக் குறிப்பிலிருந்து அகற்றிவிடலாம். தவறுதலாக இருந்தால்; இருக்குமானால். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்கிறார் என்றால், தீவிரவாதத்தை நாம் ஊக்குவிக்கக் கூடாது என்கிறார். அதிலே எல்லோருக்கும் ஒட்டுமொத்த கருத்துகள் உண்டு. அதைத்தான் பேசிக் கொண்டிருக்கிறார். திரும்ப நீங்கள் பேசுங்கள்.

**திரு. எச். ராஜா:** அதிலும் குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்கள் பெரும்பான்மை மக்களாக இருந்தாலும் அவர்களுக்கும் உரிமை இருக்கிறது. பெரும்பான்மை மக்கள் தாக்கப்படுவதுகூட குற்றம் என்கிற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டித்திருப்பதற்கும் நான் என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, விடுதலைப் புலிகள். I am not yielding *(சிரிப்பு) (திரு. சி. ஞானசேகரன் எழுந்து நின்று முன்வரிசையில் உள்ளவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார்)* நீங்கள் எழுந்தவுடனே பேசுகிறீர்களோ என்று நான் நினைத்தேன். விடுதலைப் புலிகள் இந்திய மண்ணை, குறிப்பாக தமிழகத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கு எந்தவிதத்திலும் அனுமதிக்கக் கூடாது என்பதிலே பாரதிய ஜனதா கட்சி உறுதியோடு இருக்கிறது. எங்களுடைய மாநில செயற்குழுக் கூட்டத்திலேகூட ஆன்டன் பாலசிங்கம் இங்கு வந்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கு தங்கக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். அதுபற்றி பாரதப் பிரதமருக்கும் உள் துறை அமைச்சருக்கும்கூட நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். நிச்சயமாக மத்திய அரசு அதற்கு எந்தவித அனுமதியும் அளிக்காது. ஆகவே இதை கவர்னர் உரையிலே கூறியிருப்பதை நான் பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

[திரு. எச். ராஜா] [2002 மார்ச் 12

சென்ற ஆண்டு முன்னாள் நிதித் துறைச் செயலாளர் திரு. ஏ.எம். சுவாமிநாதன் அவர்களைத் தலைமையாகக் கொண்டு பணியாளர்கள் செலவு சீர்திருத்தக் குழுவானது அமைக்கப்பட்டது. அதன் நோக்கம் திட்டம் சாராச் செலவினங்களைக் குறைப்பதாகும். மேற்படி குழுவானது அதனுடைய இடைக்கால அறிக்கையை 31-12-2001 அன்று சமர்ப்பித்தது. அந்த அறிக்கையின்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? அதன்மீது தக்க நடவடிக்கை எடுத்து, திட்டம் சாராச் செலவினங்களைக் குறைக்கவேண்டும். ஆனால் இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுள்ளதைப் போல, திட்ட அளவானது ரூ. 6040 கோடியிலிருந்து ரூ. 5200 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது முன்னேற்றப் பணிகளைப் பாதிக்கின்ற செயலாக இருக்கும். இதுபற்றி விவாதத்தின்போது, 11-வது நிதிக் கமிஷனுடைய பரிந்துரையின் மூலம் (மணியடிக்கப்பெற்றது) தமிழகத்திற்கு வரவிருக்கின்ற நிதி 512 கோடி ரூபாய் குறைக்கப்பட்டு இருப்பது காரணம் என மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதிலே 840 கோடி ரூபாய், 512 கோடி ரூபாயைவிட மேலும் 328 கோடி ரூபாய் திட்டச் செலவிற்கான அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அரசாங்கம் — It should not lose sight of. That is why I am referring this here. மேலும் சென்ற முறை நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்றபோது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதனுடைய 8-வது பத்தியிலே, 'பதினோராம் நிதிக் குழு, மத்திய வரிகளின் பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பிலிருந்து இம்மாநிலத்திற்குச் சேரவேண்டிய பங்கின் சதவீதத்தைக் குறைக்குமாறு பரிந்துரை செய்ததன் மூலமாக, தமிழ்நாடு போன்ற செவ்வனே செயல்படும் மாநிலத்தை உண்மையிலேயே தண்டித்துள்ளது. இதன் காரணமாக, நம் மாநிலம், 2000-2005 ஆம் ஆண்டுகளில் ரூபாய் 2946 கோடியை இழக்க வேண்டியுள்ளது' என்று கூறியிருக்கிறார். எனவே அவர் சென்ற ஆண்டு plan expenditure-க்கான estimate-ஐக் கணக்கிடும்போது, 11 வது நிதிக் குழுவினுடைய பரிந்துரையையும் கணக்கில் எடுத்துத்தான் திட்டமிட்டு இருப்பதாகத் தெரிகிறது. எனவே மொத்தப் பற்றாக்குறையும்கூட செலவினங்களைக் குறைக்கத் தவறியதால் நடந்திருக்கிறதோ, non-plan expenditure-ஐக் குறைப்பதை முழு மூச்சாக நாம் செயல்படுத்தாததால் நடந்திருக்கிறதோ என்று நமக்குத் தோன்றுகிறது. மேலும், . . . ,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.



2002 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 11-வது நிதிக் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில் 3000 கோடி ரூபாய், 2000-லிருந்து 2005 ஆம் ஆண்டு காலம் வரைக்கும் குறைக்கப்பட்டிருக்கிறது. அது வேறு. தற்போது 512 கோடி ரூபாய் மாண்புமிகு மைய நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற revised budget-டிலே நமது மாநிலத்துக்கு வர வேண்டிய பணத்தை, நமக்கு Central share என்ன நமக்கு revolve ஆகவேண்டுமோ, அதிலே 512 கோடி ரூபாயைக் குறைத்துவிட்டார்கள். இது வேறு.

பிற்பகல் 5-35

**திரு. எச். ராஜா:** மாநில அரசினுடைய நிதிநிலையை மேம்படுத்தும்வண்ணம் மத்திய அரசு இப்போது தன்னுடைய 2002-2003-க்கான நிதிநிலை அறிக்கையிலே சிறுசேமிப்பின் மூலம் பெறும் நிதியை, 80 சதவிகிதத்திலிருந்து மாநிலத்தினுடைய பங்கை 100 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறது. அதேபோன்று மத்திய அரசின் வரிகள் மாநில அரசுக்குக் கொடுக்கப்படும் பங்கை 29.5 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறது. இதன்மூலம் நடப்பு ஆண்டிலே நமக்குக் கிடைக்கின்ற நிதியைவிட 16 சதவிகிதம் நிதி அதிகமாகக் கிடைக்கும். அதேபோன்று மத்திய அரசு மாநில அரசுக்குத் தரும் கடனுடைய வட்டி விகிதத்தையும் குறைத்திருக்கிற காரணத்தால் மத்திய அரசு மாநில அரசினுடைய நிதிநிலையை மேம்படுத்துகிற முயற்சியிலே இறங்கியிருக்கிறது என்பதையும் நான் இந்த இடத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பைப் பொறுத்தவரைக்கும் 100 சதவிகிதம் மாநில அரசுக்குக் கடனாகப் பெறுகிற ஒரு தகுதியினை மாநிலங்களுக்கு மைய அரசு தந்திருக்கிறது உண்மைதான். ஆனாலும்கூட வட்டி விகிதத்தைக் குறைத்துவிட்ட காரணத்தால் சிறுசேமிப்பிலே முதலீடு செய்ய முன்வருகிற மக்களுக்கு அது ஒரு உற்சாகமாக, ஊக்குவிப்பாக இராது. Small savings-னுடைய total amount இதனால் குறைந்துவிடக்கூடிய ஒரு அபாய நிலை உருவாகியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. எச். ராஜா:** முடித்து விடுகிறேன். இந்தியாவிலேயே மிகவும் விரும்பத்தக்க சுற்றுலா மையங்களில் ஒன்றாக தமிழ்நாட்டை உருவாக்க இவ்வரசு உறுதிபூண்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உள்நாட்டு,

[திரு. எச். ராஜா] [2002 மார்ச் 12

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே, கிராம சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு இவ்வரசு முயற்சி மேற்கொள்ளும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகள் இங்கு தங்கி, அவர்கள் சுற்றுலா மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அவர்களைக் கவர்ந்திழுப்பதற்கு தமிழகத்திலேயிருக்கிற Luxury Tax மிகவும் அதிகமாக இருக்கிறது. அதாவது இந்தியாவிலேயிருக்கிற அனைத்து மாநிலங்களிலும் தமிழகத்தில்தான் 25 சதவிகிதம் Luxury Tax இருக்கிறது. அண்டை மாநிலமாக இருக்கின்ற ஆந்திராவிலே 5 சதவிகிதம், கேரளத்திலே 15 சதவிகிதம், கர்நாடகாவிலே 12 சதவிகிதம் என்கின்ற அளவு இருக்கின்ற காரணத்தால் அதைக் குறைக்க வேண்டும். தமிழக அரசினுடைய நோக்கம் வரவேற்கத்தக்கது. சுற்றுலாப் பயணிகளை இங்கு அதிகமாகக் கவர்ந்திழுப்பதற்காக Luxury Tax-ஐ தமிழக அரசு குறைக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பஸ் தடங்கள். தெரிந்தெடுக்கப்பட்ட பேருந்து வழித்தடங்களையும், சேவைகளையும், பணிகளையும் படிப்படியாகத் தனியார்மயமாக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தனியார் participation போக்குவரத்துத் துறையிலே இருப்பதை பாரதிய ஜனதா கட்சி வரவேற்கிறது. அதோடுகூட இதிலே Non-profitable routes இருக்கின்றன. Profitable routes-ம் இருக்கின்றன. அதிலே Profitable routes தனியாருக்குக் கொடுக்கும்போது அதற்கு அதிகப்படியான வரிகள், அதாவது route tax என்றோ, licence fee என்றோ வைத்து அதை நம் அரசாங்கம் நிதியாகப் பெறுவதன் மூலமாக Non-profitable routes-லே கிராமப் பகுதிகளிலே மக்களுக்கு அரசாங்கம் பஸ்களை விட முடியும் என்கிற காரணத்தால் இந்த யோசனையையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மொத்தத்திலே ஆளுநர் அவர்கள் உரையிலே பல்வேறு நல்ல அம்சங்களும் இருக்கின்றன. அதிலே சில, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதுபோன்று கவனமாக இருந்து செயலாற்ற வேண்டிய அம்சங்களும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. முருகவேல் ராஜன்.

*** திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது உழைக்கும் மக்களின் பேரியக்கமாக இருக்கக்கூடிய பாட்டாளி மக்கள்



2002 மார்ச் 12] [திரு. க. முருகவேல் ராஜன்]

கட்சியின் கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பளித்ததற்காக முதற்கண் என் பணிவான நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையின்மீது பாட்டாளி மக்கள் கட்சியினுடைய பார்வை என்ன என்பதைப் பற்றி கருத்துகளைச் சொல்வதற்கு முன்பாக, சென்ற முறை ஆளுநர் அவர்கள் இந்த அவையிலே ஆற்றிய உரையின்மீது நன்றி கூறுகிற தீர்மானத்தின்மீது பேசுகிறபோது தென்தமிழகத்திலே பரவியிருக்கக்கூடிய ஒடுக்கப்பட்ட சமுதாயமான தேவேந்திரகுல மக்களுக்கு அன்னையின் மன உள்ளத்தோடு அரவணைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய அமைச்சரவையிலே பிரதிநிதித்துவம் தர வேண்டுமென்று நான் கோரிய கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு தென் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அந்த மக்கள் மனம் மகிழ்ச்சியுறுகிறவகையிலே, அன்னை உள்ளத்தோடு அந்தச் சமுதாயத்துக்கு மந்திரி பதவி கொடுத்து, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு என்றைக்கும் ஆதரவாக இருக்கக்கூடியவர் என்ற கருத்தை நிலைநிறுத்தியமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய சமுதாயத்தின் சார்பாகவும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கிற டாக்டர் ஐயா அவர்களின் சார்பாகவும் என் மனமார்ந்த நன்றியை இந்த அவையிலே பதிவு செய்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-40

அதே வேளையிலே அநேகமாக இங்கே ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியிருக்கிற இந்த நிகழ்வு இந்தப் பேரவையில் அவர்கள் 19-வது ஆளுநராக உரை நிகழ்த்தியிருக்கிறார் என்று நான் கருதுகின்றேன். பொதுவாக ஆளுநர் உரை என்பது ஆளும் கட்சி அடுத்து வருகிற ஆண்டில் எப்படிப்பட்ட திட்டங்களை நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்க இருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்காக நிகழ்த்தப்படுகிற உரையாகத்தான் கருதப்பட்டிருக்கிறது. அவ்வாறே நிகழ்ந்தும் வந்திருக்கிறது. ஆனாலும்கூட ஆளுநர் உரையின் இரண்டாவது பத்தியிலே ஒரு வார்த்தை இன்றைக்கு ஆளுநர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இன்றைக்குக் காலையிலே இந்த உரையின் மீது தன்னுடைய உரையைத் தொடங்கி நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தொடங்கி வைத்திருக்கின்ற எனது அருமைக்குரிய சகோதரர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. இராஜரத்தினம் அவர்கள்கூட அந்த வார்த்தைக்கு ஒரு விளக்கத்தைச் சொல்லிருக்கிறார்கள். கொந்தளிப்பான நிகழ்வுகளுக்குப்

[திரு. க. முருகவேல் ராஜன்] [2002 மார்ச் 12

பின்பு மீண்டும் முதல்வராக வந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களை ஆளுநர் அவர்கள் பாராட்டுவதாக அந்தப் பத்தி அமைந்திருக்கிறது.

பொதுவாக ஆளுநர் உரை என்பது ஆளுங்கட்சி அடுத்து வருகிற ஆண்டில் நாட்டு மக்களுக்கு ஆற்ற இருக்கிற சேவைகளை சுட்டிக்காட்டுகிற, கோடிட்டுக் காட்டுகிற விஷயமாக அமைய வேண்டுமே தவிர, ஆட்சி நடத்துகிறவர்களின் அரசியல் நோக்கங்களை அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுகிற முகத்தான் அந்த வார்த்தைகள் இருக்கும் என்றால் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் அதுகுறித்து வேதனைப்பட வேண்டியிருக்கும். கவலைப்பட வேண்டியிருக்கும். ஏன் என்று சொன்னால் கொந்தளிப்பு என்று குறிப்பிட்டிருக்கிற அந்த வார்த்தைக்கு அன்பு நண்பர் திரு. இராஜரத்தினம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். முதல்வர் அவர்கள் மீது வழக்குகள் திணிக்கப்பட்டதாகவும், அவர்கள் தேர்தல் களத்திலே சந்தித்த கஷ்டங்களும், இந்தச் சபையிலே முதல்வராக இல்லாத ஒரு நிலைமை ஏற்பட்டது போன்ற விஷயங்களை எடுத்துக் கூறி அவைதான் கொந்தளிப்பான சூழ்நிலைக்கான காரணங்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் எதிரணியிலே இருக்கக்கூடியவர்களிடம் கொந்தளிப்பு என்ற அந்த வார்த்தைக்கு என்ன பொருள் இருக்க முடியும் என்று கேட்டால் அடக்குமுறையான கைது நடவடிக்கைகள், அதற்காக நியாயம் கேட்ட கட்சிக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், அவற்றைப் படம் பிடிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை எதிர்க்கட்சியினர் கொந்தளிப்பாகச் சுட்டிக்காட்ட முடியும். பத்திரிகையாளர்கள் கொந்தளிப்பாகச் சுட்டிக்காட்ட முடியும்.

பாட்டாளி மக்கள் கட்சியைக் கேட்டால் அரும்பாடுபட்டு உருவாக்கிய இந்த இயக்கத்தின் ஒரு சட்டமன்ற உறுப்பினர் இப்போது அந்தக் கட்சியிலேயிருந்து வெளியேறும்படியான சூழ்நிலை உருவாக்கப்பட்ட நிலைமை குறித்து கொந்தளிப்பான கருத்துகளைச் சொல்வார்கள்.

இங்கே சென்னை நகரத்தின் வீதியிலே காவல் துறையினால் அடித்து நொறுக்கப்பட்டு, பொய் வழக்குகள் புனையப்பட்ட மாணவர் சமுதாயத்தைக் கேட்டால் கொந்தளிப்பான சூழ்நிலைக்கு அவர்கள் வேறு ஒரு விளக்கத்தைத் தரமுடியும். அதைப்போலவே தீபாவளிப் பண்டிகைக்காக போனஸ் கேட்ட குற்றத்திற்காக சிறையிலே இருக்க நேர்ந்த கொடுமைகளைக் கேட்டால் போக்குவரத்துத் தொழிலாளர்கள் கொந்தளிப்புக்கான காரணங்களைச் சொல்லக்கூடும்.



2002 மார்ச் 12] [திரு. க. முருகவேல் ராஜன்]

அதைப்போல சட்டப் பேரவையைக் கூட்டாமலேயே ஜனநாயகத்தின் உரிமைகளை மறுக்கின்ற வகையிலே நாட்டு மக்களின் பிரதிநிதிகளைக் கூட்டி 3500 கோடி ரூபாய்க்கு வரி விதிப்பு செய்வது தேவைதானா? மக்களுடைய கருத்துகளை அறியாமலேயே பஸ் கட்டணத்தை, மின் கட்டணத்தை, பால் விலையை என்று எல்லா விதத்திலும் 3500 கோடி ரூபாய்க்கு வரி விதிப்பு சுமத்தப்பட்டதை நடுத்தர, ஏழை பாட்டாளி மக்கள் கொந்தளிப்பாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்களைக் கேட்டால் கொந்தளிப்புக்கான காரணங்களை அவர்கள் வேறு வகையிலே சொல்ல முடியும்.

எனவே, ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற இந்தக் கொந்தளிப்பு என்கிற இந்த வார்த்தை ஆளுங்கட்சி எதிர்வரும் ஆண்டிலே என்னென்ன திட்டங்களை நாட்டு மக்களுக்குச் சொல்லவிருக்கிறது என்பதைவிட ஆளுங்கட்சியினுடைய அரசியல் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரைக்கும், பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரைக்கும் என்ன கருதுகிறது என்று சொன்னால் ஆட்சி என்று சொன்னால் திரைப்படத்திலே வருகிற காட்சியைப்போல, நாடகத்திலே வருகிற காட்சியைப்போல நேரத்திற்கு நேரம், நிமிடத்திற்கு நிமிடம் மாறக்கூடியதுதான் ஆட்சி. அதுதான் ஆட்சியின் தத்துவமும். அந்த ஆட்சியாளர்கள் செய்ய நினைத்திருக்கிற திட்டங்களை எடுத்துக் கூறியிருக்கிறார் ஆளுநர் அவர்கள் ஆளுநர் என்பவர் ஆட்சி செய்பவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர். அவர் அரசு. அரசு என்பது நாட்டு மக்கள் ஜனநாயகத்தினுடைய முரசாகக் கருத வேண்டும். நாட்டு மக்களுடைய நாதமாக, அடி நாதமாக இருக்கக்கூடிய அரசு, ஆட்சியாளர்கள் என்ன செய்ய இருக்கிறார்கள் என்பதை கோடிட்டுக் காட்டுவதற்காகத்தான் அந்த வழக்கங்களை 19 ஆளுநர்களும் இன்றைக்கு வரைக்கும் தொடர்ந்து கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 5-45

எனவே, ஆளும் கட்சியை நடத்துகிறவர்கள் ஆட்சியினுடைய திட்டங்களைக் கோடிட்டுக் காட்டுவதற்கு ஆளுநரைப் பயன்படுத்தலாமே தவிர தன்னுடைய அபிலாஷைகளைச் சுட்டிக்காட்டுவதற்கு ஆளுநரைப் பயன்படுத்துவது ஜனநாயகத்திற்கு செய்கிற பெரிய துரோகமாக இருக்கும் என்பதை, அது தேவையற்றதும் கவலை ஏற்படக்கூடியதுமான ஒரு நடவடிக்கை என்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அதே நேரத்திலே ஆளுநர் உரை என்பது அடுத்து வரும் ஆண்டுகளுக்கான அறிகுறி என்பதாலே அதிலே

இருக்கக்கூடிய நல்லனவற்றைப் பாராட்டவும், தவறுகளைச் சுட்டிக்காட்டவும், தேவையான ஆலோசனைகளை அரசுக்கு வழங்கவும் பாட்டாளி மக்கள் கட்சிக்குக் கடமையிருக்கின்றது என்கிற வகையிலே இந்த ஆளுநர் உரையிலே அரசு கோடிட்டுக்காட்டியிருக்கின்ற விஷயங்களில் நல்லனவற்றைப் பாராட்டுவதற்கு நாங்கள் முனைப்போடு இருக்கிறோம்.

உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும், 2003 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களைச் சார்ந்த சிறுவயதினருக்கு தொழிற்கல்வி, அப்படிக் கல்வி பெறுபவர்களுக்கு உணவும் உடையும் வழங்கப்படும், 500-க்கும் அதிகமாக மக்கள் தொகை உள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கு 2004 ஆம் ஆண்டுக்குள்ளே அனைத்துப் பருவத்திற்கும் ஏற்ற சாலை இணைப்பு வசதி, பெருநகர் பகுதிகளை ஒருங்கிணைத்து, முக்கிய மையங்களுக்கு பாதாளச் சாக்கடை வசதி அமைப்பதற்கு புதிய திட்டம், புறநகர் மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சிறப்புக் கவனம், நிலத்தடி நீரை உயர்த்த புதிய தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், —மழைநீரைச் சேகரிக்க எல்லா நிலைகளிலும் கட்டாயமாக்கப்படுவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்ற எங்கள் டாக்டர் ஐயா அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை இன்றைக்கு சேர்க்கப்பட்டிருக்கிறது — சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் திட்டம் 2 மூலமாக பாலாறு, அடையாறு போன்ற ஆறுகளிலே அணை கட்டுதல், ஏரிகளை ஆழப்படுத்துதல், தூர் வாருதல், ஊரகப் பகுதிகளுக்காக 2300 கோடி செலவிலே குடிநீர் வழங்கல், துப்புரவுத் திட்டம், அன்றாட நிருவாகத்திலே தமிழ் மொழி பயன்பாட்டை அதிகரித்தல், மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கற்பிக்க உறுதி, (மணியடிக்கப்பெற்றது) மாநிலத்தின் அனைத்து சட்டப்பூர்வமான துறைகளிலும் பெண்களுக்கு 33 சதவீதம் என்பதைப் போன்ற மிகச் சிறப்பான நல்ல திட்டங்களை இந்த அரசு அறிவித்திருக்கிறது. அவற்றை பாட்டாளி மக்கள் கட்சி மனம் திறந்து பாராட்டுவதற்கும் அப்படிப்பட்ட முயற்சிகளுக்கு உறுதுணை செய்வதற்கும் தயாராக இருக்கிறது என்பதை நான் கூறுகிற அதே நேரத்திலே இந்த ஆளுநர் உரையில் காட்டப்பட்டிருக்கின்ற அரசினுடைய செயல் குறிப்புகளில் மிகப்பயன் தரும் விஷயங்களைவிட, பயம் தரும் விஷயங்கள் அதிகமாக இருக்கின்றன. அவற்றையும் சுட்டிக்காட்டுவதற்கு ஜனநாயகக் கடமையிலே நாங்கள் நின்றுகொண்டிருக்கிறோம்.





உள்ளாட்சி மன்றங்களுக்கு மூன்று அடுக்கு தேர்தல்கள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து, கூட்டுறவு நிறுவனங்களுக்கு விரைவிலே தேர்தல் நடத்தப்படும் என்றும் ஆளுநர் உரையிலே இந்த அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், இந்திய நாடே வெட்கித் தலைகுனிகிற வகையிலே, இன்றைக்கு மதுரை மாவட்டத்திலே கீரிப்பட்டி, பாப்பாபட்டி, நாட்டார்மங்கலம், கொட்டகாச்சியேந்தல் போன்ற பகுதிகளிலே தாழ்த்தப்பட்ட மக்கள் ஜனநாயக அடிப்படையிலே தங்களுக்கு ஒதுக்கப்பட்ட உரிமைகளை நடைமுறைப்படுத்த முடியாமல், உள்ளாட்சிமன்றத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட முடியாமல் தடுக்கப்பட்டிருக்கின்ற ஓர் அவல நிலை தமிழ்நாட்டிலே நடந்துகொண்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று ஆளுநர் உரையிலே இந்த அரசு தெரிவித்திருக்கிறது. சட்டம் ஒழுங்கு என்பதே ஜனநாயகத்தைப் பாதுகாப்பதுதான். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்போம் என்பதன் பொருள் என்னவென்று சொன்னால், ஜனநாயகத்தைப் பாதுகாக்கிறோம் என்பதுதான் பொருளாகக் கொள்ள முடியும். ஜனநாயக நாட்டிலே தேர்தல் கமிஷன் வகுத்துக் கொடுத்த இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தொகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்கு தங்களுடைய தகுதியை நிரூபித்துக்கொள்ள முடியாத அளவிற்கு தடுக்கப்பட்டிருக்கிற அவலநிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மதுரை மாவட்டத்தில் மூன்று ஊராட்சிகளில் தேர்தல் நடத்த முடியாத ஒரு நிலை இருக்கிறது என்று சொல்கிறார். இந்த நிலை அரசால் ஏற்படுகின்ற குறையல்ல. அங்கேயிருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் வேட்பு மனு தாக்கல் செய்வதற்குக்கூட முன்வர மறுக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதே நிலை கடந்த 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை இருந்தது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், 11 நிமிடம் கடந்துவிட்டது. ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

[2002 மார்ச் 12

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகள் அல்ல, 10 ஆண்டுகள் ஆனாலும், தங்களுடைய வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய முடியாத அளவிற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் அச்சுறுகிற நிலைமையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் ஒத்துக்கொள்ளாத வரை, இந்த நாட்டிலே ஜனநாயகம் தழைத்திருப்பதாகச் சொல்வது பொய்யாகக் கருதப்படும் என்ற என் கருத்தைப் பதிவு செய்கிறேன்.

பிற்பகல் 5-50

அதைப்போலவே, இலவச மிதிவண்டித் திட்டம். பட்டியல் இன பழங்குடியின மக்களுக்கு இலவச மிதிவண்டித் திட்டம் தொடரும் என்கிறார்கள்.. ஆனால், இன்றைக்கு செய்தித்தாள்கள் ஒரு செய்தியைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 1017 பட்டியல் இன மக்களுக்காக பாடம் சொல்லித் தரக்கூடிய பள்ளிகள் மூடப்படும் என்றும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 12 நிமிடம் ஆகிவிட்டது.

**திரு. க. முருகவேல் ராஜன்:** பழங்குடியின மாணவர்கள் தங்கிப் படிக்கக்கூடிய பள்ளிகள் 243 பள்ளிகள் மூடப்படும் என்றும் இன்றைக்கு செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதனால் பட்டியல் இன மக்களுடைய மாணவர்கள், இரண்டு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் மாணவர்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இன்றைக்கு தமிழ்நாட்டிலே உருவாகியிருக்கிறது. 8809 பட்டியல் இன பழங்குடியினர் சமுதாயத்தைச் சார்ந்த ஆசிரியப் பெருமக்கள் வேலை இழக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பள்ளிகளை மூடிவிட்டு, ஆதிதிராவிட மாணவர்களுக்குரிய பள்ளிகளை மூடிவிட்டு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைச்சர் பேசட்டும் உட்காருங்கள்.

* **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முருகவேல் ராஜன் அவர்கள், ஒரு தவறான தகவலை இந்த அவைக்குத் தெரிவிக்கிறார். அப்படி எதுவும் நடக்குமானால், இந்த அரசுக்கு நேரடியாக எழுத்து மூலமாகக் கொடுத்தால், அதற்கு சரியான நேரத்தில் பதில் சொல்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 மார்ச் 12]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். என் கையிலே 'இந்து' என்ற ஆங்கில நாளேட்டில் வந்த செய்தி இருக்கிறது. புள்ளிவிவரங்களுடன் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** அதை ஒப்படைத்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே இன்னொரு செய்தியையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறை பள்ளியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய எண்ணிக்கை 8542 பேர் என்று இன வாரியாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எந்தவித இடையூறும் இல்லாத அளவுக்கு பணிகளைச் செய்வதற்கு காத்துக்கொண்டிருக்கிறது, உத்தரவிட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மெத்தப் பணிவுடன் இந்த அவைக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** அப்படிப்பட்ட எல்லாவித நடவடிக்கைகளுக்கும் நாங்கள் என்றும் துணையாக இருப்போம் என்பதையும் இந்த நேரத்திலே பதிவு செய்து, இந்த ஆளுநர் உரையின் 12, 13, 14-வது பத்திகளிலே அரசுக்கு ஏற்பட்டிருக்கிற நிதிநிலை நெருக்கடி மீண்டும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அப்படி நிதிச் சுமையிலே இருக்கிற இந்த அரசு எந்தவகையில் நிதிச் சுமையை சமாளிக்கப் போகிறது என்பதை 33-வது பத்தியிலே சொல்லியிருக்கிறார்கள். பொருளாதாரத்தின் முதன்மை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைத் துறைகளில் உலக வர்த்தக அமைப்பு

ஒப்பந்தங்களின் தாக்கம் குறித்து இவ்வரசு மிகவும் கவலை கொண்டிருக்கிறது என்று சொல்கிற அதே பத்தியிலே, அந்தக் கவலையையும், ஏற்பட்டிருக்கிற நிதிச் சுமையையும் போக்கிக்கொள்வதற்கு இவர்கள் எதைப் பின்பற்றுகிறார்கள் என்றால் ஏற்றுமதி மற்றும் வர்த்தகம், வணிகம் ஆகியவற்றின் அளவைப் பெருக்கும் வகையில் உலக வர்த்தக அமைப்பிடமிருந்து உயரளவு அனுகூலத்தைப் பெறும் உத்திகளை வகுப்போம் என்கிறார்கள். இந்த உலக வர்த்தக அமைப்புகளிடமிருந்து அனுகூலங்களைப் பெறுவது என்றால் எப்படி என்பதை நாட்டு மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் இன்றைக்கு தமிழ்நாட்டில் நடந்துகொண்டிருக்கிறது. ஆட்குறைப்பு, தனியார் மயமாக்கல், அரசுத் துறை ஒழிப்பு, மானியங்கள் ஒழிப்பு, வரி உயர்வு என்று இந்த நாட்டில் மக்கள் குடியிருக்க முடியாத ஒரு நிலைமையை நோக்கி இன்றைக்கு தமிழகம் சென்று கொண்டிருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏழுமலை. (குறுக்கீடு) இதில் என்ன Point of Order இருக்கிறது?

**திரு. க. முருகவேல் ராஜன்:** I am not yielding. (Interruption)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் உள்ளிட்ட 5 ஊராட்சிகளில், தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக தேர்தலை நடத்தமுடியவில்லை என்று சொன்னதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்கள் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன்வரவில்லை என்கிற ஒரு கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார். எந்த ஒரு தனி நபரும் தனக்கு பதவி வேண்டாம், தலைவர் பதவி வேண்டாம் என்கிற எண்ணம் உடையவனாக இருக்கமுடியாது. அங்கே, தாழ்த்தப்பட்டவர்கள் வேட்புமனு தாக்கல் செய்தால் படுகொலை செய்வோம், மேலவளைவில் நடந்த நிலைதான் உங்களுக்கும் என்று தொடர்ந்து கொலை மிரட்டல் விடுக்கிற காரணத்தினால் அங்கே வேட்புமனு தாக்கல் செய்ய முடியவில்லை.

*பிற்பகல் 5-55*

இது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் விடப்பட்டிருக்கிற சவால் அல்ல. ஒட்டுமொத்த நாட்டுக்கே விடப்பட்டிருக்கிற சவால், ஜனநாயகத்திற்கே விடப்பட்டிருக்கிற சவால். இந்த அவையில் உள்ள அத்தனை பேரும் தலைகுனியவேண்டிய ஒரு வெட்கக்கேடான நிலை.



தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 12,800-க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் 2800-க்கு மேற்பட்ட ஊராட்சிகள் தாழ்த்தப்பட்டோருக்கென ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பெண்களுக்கும் அதுமாதிரி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் 2800-ல் வேறு எந்த ஊராட்சியிலும் இல்லாத கொடுமை, மதுரை மாவட்டத்தில் மட்டும்தான், இந்த 3 ஊராட்சிகளிலே தொடர்ந்து வேட்புமனுவை தாக்கல் செய்யவிடாமல் தடுக்கிறார்கள். ஆகவே, அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்ய முன்வரவில்லை என்று சொல்லுகிற கருத்து தவறான கருத்து. உடனடியாக அரசு இதிலே தலையிட்டு அவர்கள் ஏன் வேட்புமனு தாக்கல் செய்ய முடியவில்லை என்பதை ஆய்ந்து தடுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும், உடனடியாக தேர்தல் நடத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமாவளவன் அவர்கள் கூறுகின்ற கருத்து தவறான கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். யாரையும் வேட்புமனு தாக்கல் செய்தால் கொலை செய்துவிடுவோம் என்ற அச்சுறுத்தலும் இல்லை. ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்துவதற்கு இப்போதுகூட நம்முடைய அரசு தயாராக இருக்கிறது. 20-3-2002-ல் வேட்புமனு தாக்கல் செய்யலாம் என்று தேர்தலை அறிவித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களிலே பல்வேறு துறைகளின் அரசு அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் போன்ற முக்கிய பொறுப்புகளில் இருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லாம் அந்த கிராமங்களுக்குச் சென்று தாராளமாக நீங்கள் வேட்புமனு தாக்கல் செய்யலாம், உங்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று இந்த அரசின் மூலமாக அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கியிருக்கிறோம். துணிச்சலாக நீங்கள் வேட்புமனு தாக்கல் செய்யலாம், யாரும் உங்களை அச்சுறுத்த மாட்டார்கள் என்று தெளிவாக எடுத்துக்கூறியும் அவர்கள் முன்வரவில்லை என்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல யாரும் கொலை மிரட்டல் என்று சொல்லுகின்ற வார்த்தையை தயவு செய்து பயன்படுத்த வேண்டாம். அவ்வாறு யார் செய்தார்கள் என்று நீங்கள் எழுத்துபூர்வமாகக் கொடுத்தால் அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 மார்ச் 12

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பிற்குரிய சகோதரர் திருமாவளவன் அவர்கள் கூறிய இந்த ஊராட்சிகள் எல்லாம் என்னுடைய உசிலம்பட்டி தொகுதியிலேதான் வருகின்றன என்று என்னிடத்திலே அவர்கள் தொலைபேசியிலே பேசி இவற்றுக்கெல்லாம் எப்படியாவது தேர்தலை நடத்த வேண்டும், நீங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் நானும்—எங்களைப் பொறுத்த அளவிலே, எங்களுடைய தலைவர்கள் நேதாஜி, தேவரைப் பொறுத்த அளவிலே ஜாதிய கோட்பாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட தலைவர்கள், இந்திய தேசத்தை நேசிக்கிறவர்கள்—எங்களைப் பொறுத்தவரையில் உங்களுடன் முழுமையான உடன்பாடு கொண்டிருக்கிறோம். நிச்சயமாக எனக்கு எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது; அங்கே தேர்தலை நடத்த வேண்டுமென்று நானும் கருதுகிறேன் என்று சொன்னேன். அதற்குப் பின்னால், அவர்கள் கூறியதற்குப் பின்னால் அந்த கிராமங்களுக்குச் சென்று, நானே அமர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவரை கூட்டிச் சென்று எல்லோரும் பேசுகின்ற நேரத்தில்கூட அவர்கள் எங்களிடத்திலே சொன்னது தமிழகத்தில் மற்ற எங்கெல்லாம் ஜாதிய கலவரங்கள் ஏற்பட்டிருந்தாலும்கூட, உசிலம்பட்டியிலே இதுவரை அந்த நிலை ஏற்படவில்லை. அப்படி நாங்கள் ஒன்றாக சகோதரர்களாக இருந்து கொண்டிருக்கிறோம். நாங்களேதான் இதிலே வேட்புமனு தாக்கல் செய்வதற்கு வேண்டாம் என்று மறுக்கிறோம் என்கிற நிலையை அவர்கள் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். காரணம் அந்த ஊராட்சிகளில் எல்லாம் மிகுந்த பொருளாதார பற்றாக்குறை இருக்கிறது. அங்கு மின்சாரத்திற்கு உரிய பணத்தைக்கூட, விளக்குகளுக்கு உரிய பணத்தைக்கூட கட்டுவதற்கு வசதி இல்லாத அந்த ஊராட்சிகளில் தலைவர்களாக்கப்பட்டால் தங்களுக்கு பல்வேறு சிரமங்கள் வரும் என்பதை அவர்கள் கருத்தில்கொண்டு ஒதுங்கிக்கொள்கிறார்கள் என்பதுதான் உண்மை. இந்தத் தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காலத்திலிருந்து, கடந்த 1996-லிருந்து இந்த 6 ஆண்டு காலமாக தேர்தல் நடைபெறாமல்தான் இருக்கிறது. அவர்களை யாரும் தடுக்கவில்லை என்பதை மட்டும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், நன்றி சொல்லி முடித்துக்கொள்ளுங்கள்.



2002 மார்ச் 12]

**திரு. க. முருகவேல் ராஜன்:** துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தை எடுத்துக்கொண்டார்கள். இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். இந்த நாட்டுக்குத் தேவையான விஷயங்கள் நிறைய இருக்கின்றன. கொஞ்சம் நேரம் கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் 33 ஆம் பத்தியிலே உலக வர்த்தக அமைப்பிடமிருந்து உயரளவு அனுகூலங்களைப் பெறும் உத்திகளை வகுக்கும் என்று சொல்லி அதற்கு தனியார்மயமாக்கலும், அரசுத் துறை ஒழிப்பும் கைகொள்ளப்படுகிறது என்று சொன்னேன். அதற்குப் பல உதாரணங்கள் இந்த ஆளுநர் உரையிலிருந்து கிடைக்கின்றன. அதில் 25-வது பத்தியிலே சொல்லப்படுகிறது 'வெளி நிதி உதவியுடன் (மணியடிக்கப்பெற்றது) தனியார் துறை பங்கேற்புடன் . . .

பிற்பகல் 6-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. ஏழுமலை அவர்கள். (குறுக்கீடு) திரு. ஏழுமலை பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம் . . .

**திரு. க. முருகவேல் ராஜன்:** துணைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய முறை வரும்போது பேசலாம். உங்களுக்கும் வாய்ப்பு வரும். திரு. ஏழுமலை பேசுங்கள்.

***திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டவனே வந்தாலும்கூட தமிழகத்தைக் காப்பாற்ற முடியாது என்று அன்று சொன்னவர்களுக்கு, ஆண்டவனாலேயே அருள்பாலிக்க முடியாமல்போய், இன்று ஆண்டவனருளால், தமிழக மக்களின் அன்பால் குறிப்பாக ஆண்டிப்பட்டி தொகுதி மக்களுடைய பேராதரவால் . . .

(திரு. இரா. திருமாவளவன் அவர்களும், திரு. க. பாரமலை அவர்களும் திரு. க. முருகவேல் ராஜன் அவர்களும் வாய்ப்புக் கேட்டு தொடர்ந்து நின்றுகொண்டே இருந்தனர்)

[2002 மார்ச் 12

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,...

**திரு. க. பாரமலை:** துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஏழுமலை அவர்களே கொஞ்சம் இருங்கள். உறுப்பினர் பாரமலை அவர்கள் ஒரு Point of Order கேட்கிறேன் என்கிறார்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு நான் ஒரு விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தயவுகூர்ந்து அதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி விளக்கம் சொல்லிக் கொண்டே போனால் அப்புறம் நேரம் இருக்காது. திரு. பாரமலை அவர்களே நீங்கள் Point of Order-ஐக் கேளுங்கள்.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர், உசிலம்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஒன்றைச் சொன்னார்கள். பொருளாதாரத்தை மிகவும் நன்றாகத் தெரிந்துகொண்ட அந்த ஊர் மக்கள் Electricity Bill கூட கட்ட முடியவில்லை; அதனாலே தேர்தலிலே நிற்கமாட்டோம் என்று சொல்வதாக அவர் சொன்னார்.

திரு. திருமாவளவன் அவர்கள் சொன்னதைப்போல 12,000-க்கும் அதிகமான ஊராட்சிகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. அவற்றில் 2800-க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அனைத்திலுமே எந்தவித சிரமமும் இன்றி எந்த விவகாரமும் இல்லாமல் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. இந்த 3 ஊராட்சிகள், 4 ஊராட்சிகளிலே மட்டும் கடந்த 8 ஆண்டுகளாக தேர்தல் நடைபெறாததற்கு என்ன காரணம்? அந்த மக்கள் முன் வரவில்லை என்றால் அவர்கள் வராமல் போவதற்கு அடிப்படை எது என்பதைக் கண்டறிய வேண்டும். இந்த ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு, ஒரு ஜனநாயக அமைப்பு அமைவதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் அரசு அளிக்கின்ற அத்தனை திட்டங்களும் அந்தப் பகுதிகளுக்கு நிறுத்த வேண்டும்; ரத்து செய்து தடுத்து நிறுத்த வேண்டும். அந்தக் கட்டாயம் வந்தாலொழிய அந்தப் பகுதி மக்கள் நிச்சயமாக ஊராட்சித் தேர்தல் நடத்தவிடமாட்டார்கள். இதில் மறைமுகமாக அச்சுறுத்தல் இருக்கிறது. அப்படியில்லை என்றால் அவர்களே வேண்டாம் என்று சொல்வதற்கு



2002 மார்ச் 12] [திரு. க. பாரமலை]

நியாயமே கிடையாது. ஆகையினாலே, இப்போது தேர்தல் அறிவிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். 20 ஆம் தேதி தேர்தல் நடப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தேதியில் தேர்தல் நடத்தவில்லை என்று சொன்னால் அந்த ஊராட்சிகளுக்கு அரசு வழங்குகிற அத்தனை திட்டங்களையும் ரத்து செய்ய வேண்டும். அந்த இக்கட்டான நிலை வருகிறவரை நிச்சயமாக அங்கு தேர்தல் நடக்காது. அதை அரசு செய்ய முன் வருமா என்பதை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே தேர்தல் நடத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது. இதில் யாருடைய அச்சுறுத்தலும் இல்லை. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் அந்தக் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று நீங்கள் தாராளமாக எந்தவொரு அச்சுறுத்தலும் இல்லாமல் உங்களுடைய விருப்பப்படி நீங்கள் வேட்புமனு தாக்கல் செய்யுங்கள் என்று பல முறை எடுத்துக் கூறியும் அந்த 3 உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை என்பதுதான் எங்களுக்குக் கிடைத்த தகவல்.

மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல — அரசாங்கம் தேர்தல் நடத்துவதற்குத் தயாராகவும் இருக்கிறது. ஏற்கெனவே நடத்தியும் இருக்கிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்காக அரசு நல்ல ஆலோசனைகளையும், பாதுகாப்பையும் கொடுத்து அவர்களுக்கு தேர்தல் நடத்துவதற்கு அரசினுடைய கடமையை நிச்சயமாக நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறது. சில தனி நபர்கள், வேண்டுமானால், எங்கோ ஒருசில இடங்களிலே ஏற்படக்கூடிய ஜாதிய மோதல்களைப் பற்றி வேண்டுமானால் சொல்லலாமே தவிர, மதுரை மாவட்டத்தை பொறுத்தமட்டில், உசிலம்பட்டி பகுதியிலே எந்தவொரு இடத்திலேயுமே யாரையும் அச்சுறுத்தியதாக அரசுக்குத் தகவலும் இல்லை. அவ்வாறு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றித் தகவல் வந்தால் அல்லது எந்தக்

[திரு. சி. துரைராஜ்] [2002 மார்ச் 12

கிராமத்திலேயிருந்து அச்சுறுத்தல் வருகிறது என்று சொன்னால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதற்காக ஒட்டுமொத்தமாகத் தேர்தல் நடத்தக்கூடாது அல்லது தேர்தலிலே போட்டியிட விரும்பாதவர்களுக்கு அந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய ஒட்டுமொத்த மக்களுடைய பொது நலனுக்கான நிதியை அரசு நிறுத்த வேண்டும் என்று சொல்வது அந்த அளவிற்கு நியாயமான கருத்து இல்லை என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 6-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நல்ல விளக்கத்தை கொடுத்துவிட்டார். மேற்கொண்டு வியாக்கியானம் தேவையில்லை. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் ஏழுமலை நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று ஆண்டவன் அருளால் தமிழக மக்களின் அன்பால் ஆண்டிப்பட்டித் தொகுதி . . . *(குறுக்கீடுகள்)*

*(திரு. க. முருகவேல் ராஜன், திரு. இரா. திருமாவளவன் மற்றும் திரு. க. பாரமலை ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் பேசினார்.

**திரு. வெ. ஏழுமலை:** குறிப்பாக ஆண்டிப்பட்டி மக்களின் பேராதரவால் தமிழக முதல்வராக அரியணையில் வீற்றிருக்கும் நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள் இருக்கின்ற திசையை நோக்கி என்னுடைய வணக்கத்தைச் செலுத்தி . . . *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

**திரு. வெ. ஏழுமலை:** கோடானுகோடி மக்களின் . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமருங்கள். அமருங்கள் என்று சொல்கிறேன்.



2002 மார்ச் 12]

**THIRU DURAIMURUGAN:** I am raising a Point of Order. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (கூச்சல்-குழப்பம்) சபாநாயகரோ, துணை சபாநாயகரோ எழுந்திருக்கும்போது ஓர் உறுப்பினர் அமர வேண்டும். அதுதான் முறை. ஆகவே, இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமா என்ற விளக்கத்தை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பேசினார்கள். அதைத் திரும்பத் திரும்ப அதே சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே பேச வேண்டும் என்றால் (குறுக்கீடு) பல விளக்கங்களைக் கேட்டும் சொன்னார்கள், அமைச்சர் அவர்கள். திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டே போனால், இதற்கு முடிவே இருக்காது. ஆகவே, அந்த மானியக் கோரிக்கை வருகிறபோது அதை விளக்கமாகச் சொல்வார்கள். அதற்கு முன்புகூட நடவடிக்கை எடுத்து, வருகிற 20 ஆம் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய அறிவிப்பு வரவிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே நீங்கள் பேச வேண்டும். ஆகவே, அந்த அறிவிப்பு வரவிருக்கிறது. தேர்தல் நடக்க இருக்கிறது என்று சொல்கிற அந்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் ஏழுமலை அவர்கள் பேசுவதற்கு நீங்கள் வாய்ப்பு அளிக்க வேண்டும், விட்டுக் கொடுக்க வேண்டும்.

**THIRU R. THIRUMAVALAVAN:** Point of Order. (Interruptions)

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோடானுகோடி தொண்டர்களின் கடைக்கோடி தொண்டனாகிய என்னை மாட்சிமை மிகுந்த 12-வது சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து பேசுவதற்கான வழிவகுத்த டாக்டர் அம்மா அவர்களுக்கு செஞ்சி தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றியபோது *(குறுக்கீடுகள்)*

**THIRU DURAIMURUGAN:** I am raising a Point of Order. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசிக்கொண்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)*

**திரு. வெ. ஏழுமலை:** ஆளுநர் உரையின் முதல் பக்கத்திலே இரண்டாவது பத்தியிலே சொல்லப்பட்டிருக்கின்ற *(குறுக்கீடுகள்)* கொந்தளிப்பான நிகழ்ச்சிகளை தமிழகத்து மக்கள் உணர்ந்த காரணத்தால்தான் தமிழ்நாட்டு

மக்களுக்கு அந்த வேதனைகள் தெரிந்த காரணத்தால்தான் தானைத் தலைவி, தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களை மீண்டும் தேர்ந்தெடுத்தார்கள். (குறுக்கீடுகள்) கடந்தகால ஆட்சியிலே இருந்த தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் பொய்யான வழக்குகளைப் போட்டு (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றங்களிலே அலைக்கழிக்க வைத்து பொய்ப் புகார்களைச் சொல்லிய அந்த வேதனையான வார்த்தைகளுக்குத்தான் காலையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் இராஜரெத்தினம் அவர்கள் கொந்தளிப்புக்கு அர்த்தம் சொன்னார்கள். அந்தக் கொந்தளிப்புக்கு அர்த்தத்தை தெரிந்து கொண்ட காரணத்தால்தான் (குறுக்கீடுகள்) எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் முருகவேல் ராஜன் அவர்கள், கொந்தளிப்புக்கு அவர் எழுப்பியிருக்கின்ற பொருள் வேறாக இருந்தாலும்கூட தமிழ்நாட்டில் இருக்கின்ற மக்கள் அந்தக் கொந்தளிப்பு என்ற வார்த்தைக்கு சரியான ஓர் அர்த்தத்தைக் கண்டு கொண்டதால்தான் இன்றையதினம் தமிழகத்திலே டாக்டர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இந்தப் பேரவையிலே அமர்ந்து இருக்கிறார்கள் என்பதை நானும் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** எங்களுடைய உறுப்பினருடைய உரிமை பறிக்கப்படுவதால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரிமையை யாரும் பறிக்கவில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** அதைச் சொல்லிவிட்டு போய்விடுகிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஏற்கெனவே பேசி இருக்கிறார். திருமாவளவன் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழக சின்னத்திலேயிருந்து வந்தவர்தான்.

**திரு. பரிதி இளம்வழுதி:** இது திருமாவளவன் அவர்களுடைய பிரச்சினை அல்ல. இது ஒரு பொதுப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்களுக்கு நான் முதலிலேயே அனுமதி வழங்கி இருக்கிறேன். உங்கள் இயக்கத்தின் சார்பிலே பேச வேண்டுமென்று சொன்னார்கள். எங்கள் இயக்கத்தின் சார்பிலே



பேச வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள். முதலிலே அவர்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டோம். அவர்களுக்குப் பின்னாலே ஆளுங்கட்சித் தரப்பிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இதிலும் குறுக்கிட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வெளியே போவேன் என்று சொன்னால் நான் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) உங்களுடைய விருப்பம்.

பிற்பகல் 6-10

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் நினைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் குந்தகம் ஏற்படுத்தாமல் இருந்தால் நல்லது. அதை நீங்கள் கடைபிடிக்க வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய நடவடிக்கைகளுக்கு எந்தக் குந்தகமும் ஏற்படுத்தக் கூடாது என்பதுதான் எங்கள் எண்ணம்.

**திரு. வெ. ஏழுமலை:** மைக் வேலை செய்யவில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திறமையான, உறுதியான தலைமையின்கீழ் இம்மாநிலம் எல்லா வகையிலும் வளமும் நலமும் பெறுமென நம்புகிறேன் என்று (மேசையைத் தட்டும் ஒலி) மேதகு ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியதை பொறுக்க முடியாத மேனாமினுக்கிகள், நுனிப்புல் மேய்பவர்கள் (குறுக்கீடுகள்)

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏழுமலை, கொஞ்சம் இருங்கள். திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாவளவன் அவர்கள் வேறு ஒரு பிரச்சினை குறித்து பேசினார். அந்தப் பிரச்சினைக்குள்ளே நான் போக விரும்பவில்லை. அதுகுறித்து நம்முடைய சந்தானம் அவர்கள்கூட அவருடைய பெயரைச் சொன்ன காரணத்தால்— ஏனென்றால் இவருக்கும் அவருக்கும்—ஒரு நல்ல பிரச்சினைதான், சுமுகமான பிரச்சினைதான்,

தகராறு இல்லை. அதுகுறித்து—ஒரு நிமிடம் அவரைப் பேச அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டைச் சொல்வதற்காக இந்த அனுமதியை நான் கோரவில்லை. தமிழகத்திலே உள்ள 12,800 ஊராட்சிகளில் 2,800 ஊராட்சிகள் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதில் 2795 ஊராட்சிகளில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் ஐந்தே ஐந்து ஊராட்சிகளில் கடந்த 1996 ஆம் ஆண்டிலிருந்து தேர்தல் நடத்த முடியாமல் போனது. இதற்கு முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும், தேர்தல் நடத்துவதற்கு அவ்வப்போது அறிவிப்பு செய்தது. தேர்தல் ஆணையம் அறிவிப்புச் செய்திருக்கிறது. ஆனால் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய விடாமல் பாப்பாப்பட்டியிலும், கீரிப்பட்டியிலும், நாட்டார்மங்கலத்திலும் தடுத்திருக்கிறார்கள். மருதங்குடி என்கிற இடத்திலே வேட்புமனு தாக்கல் செய்யச் சென்ற ஒரு இளைஞனை அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கட்டி தூக்கிக் கொண்டு போய் இனிமேல் நீ வேட்புமனு தாக்கல் செய்ய வந்தால் உன் தலை இருக்காது என்று மிரட்டியது பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. வேட்புமனு தாக்கல் செய்யப் போனவனை தடுத்து வெளியிலே இழுத்து வந்தார்கள். இது கடந்த முறை நடந்தது. தற்போதும் எல்லா பத்திரிகைகளிலும், மீடியாக்களிலும் அந்தச் செய்திகள் வந்திருக்கின்றன. தாழ்த்தப்பட்டவர்கள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்ய விரும்புகிறார்கள். ஆனால் தடுத்து நிறுத்தப்படுகிற ஒரு சூழல் அங்கே இருக்கிறது. கொலை மிரட்டல் இருக்கிறது. குறிப்பாக, மேலவளவு அடிக்கடி சுட்டிக்காட்டப்படுகிறது. ஆகவே அங்கே தேர்தல் நடத்துவதற்கு வெறும் அறிவிப்பு போதாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே அச்சுறுத்தல் இல்லை என்று சொல்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அச்சுறுத்தல் இல்லையென்று சொன்னால் குறிப்பிட்ட இந்தக் கிராமங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள் இல்லையா? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஓர் உறுப்பினரை நீங்களே அங்கே ஏன் நிறுத்தக் கூடாது? வேட்புமனுவை தாக்கல் செய்ய நீங்களே ஏன் முயற்சி செய்யக் கூடாது? அந்தக் குறிப்பிட்ட 3 ஊராட்சிகளில் இதுவரையில் தேர்தல் நடத்த முடியாமல் போனதற்கு அடிப்படையான காரணம் அங்கேயிருக்கிற கொலை மிரட்டல்தான். வன் கொடுமைதான் காரணம். உசிலம்பட்டி என்ற பகுதியிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. எல்லோரும் அண்ணன் தம்பிகளாக வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஏற்கெனவே . . . .





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருமாவளவன், பிரச்சினை என்னவென்று தெரிகிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கம் சொன்னார்கள். அதையும் கேட்டுக் கொண்டிருந்தேன். மாண்புமிகு சந்தானம் அவர்களும் இதுகுறித்து விளக்கம் சொன்னார்கள். இப்பொழுது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சந்தானம் அவர்கள், திருமாவளவன் அவர்கள், முருகவேல் ராஜன் போன்ற பெருமக்கள் அங்கே உள்ள நிலைமைகளைக் கொஞ்சம் கலந்து பேசி ஏதாவது செய்வதற்கான வாய்ப்பு இருக்குமானால், அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. திருமாவளவன்:** நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான். உட்காருங்கள். திரு. ஏழுமலை, நீங்கள் பேசுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறமையான, உறுதியான தலைமையின்கீழ் இம்மாநிலம் எல்லா வகையிலும் வளமும் நலமும் பெறுமென நம்புகிறேன் என்று மேதகு ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியதைப் பொறுக்க முடியாத மேனாமினுக்கிகள் நுனிப்புல் மேய்ப்பவர்கள், ஏய்ப்பவர்கள், எது கிடைக்குமோ என ஓடி, ஆடி பொது நலப் பணியை தன்னலமாக்கிக் கொண்டவர்கள் மட்டுமே இந்த ஆளுநர் உரையை குறை கூறுகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் அனைவருக்கும் ஆரோக்கியமான வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் 15 அம்சத் திட்டங்கள் செயல்படுத்த இருப்பதைப் பலதரப்பட்ட மக்களும், பல நாடுகளில் வசிக்கும் தமிழர்களும் பாராட்ட வார்த்தைகளே இல்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேளையில் பேரவையினுடைய மாண்புமிகு உறுப்பினர் கருணாநிதி அவர்கள், புதுமை இல்லை என்று கூறியிருக்கின்றார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுமை என்ற சொல்லுக்கு மாண்புமிகு உறுப்பினர் கருணாநிதி பாணியில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நெல்லுக்கும் புல்லுக்கும் . . . (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 6-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்னாள் முதலமைச்சர் என்று சொல்லுங்கள். அல்லது உயர்திரு என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

[2002 மார்ச் 12

**திரு. வெ. ஏழுமலை:** உயர்திரு முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஏழுமலை, உயர்திரு என்று சேர்த்துக்கொள்ளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்திரு முன்னாள் முதல்வர் கருணாநிதி பாணியில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நெல்லுக்கும், புல்லுக்கும் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏழுமலை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். ஒருவருடைய பெயரைச் சொல்வதில் ஒன்றும் சிறுமை ஏற்பட்டுவிடுவதில்லை. பாராளுமன்றத்தில் இந்திரா காந்தியை பார்க்கிறபோது மிஸஸ் காந்தி என்று சொல்லுவார்கள். பிரதம மந்திரி அடல் பிஹாரி வாஜ்பாய் என்கிறார்கள். ஆகையினால் அது ஒன்றும் பெரியது. கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் எங்களுடைய தலைவருடைய பெயரை 'கருணாநிதி' என்று சொல்வதிலே நாங்கள் தவறாகக் கருதவில்லை. நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அதேபோன்று உங்கள் கட்சித் தலைவியைச் சொன்னால் உங்களுக்கு தாங்கிக்கொள்கிற உரம் இருக்கிறதா என்று கேட்கிறேன். நீங்களும் சொல்லலாம். நாங்களும் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், ஏற்கெனவே இது பேசப்பட்டுவிட்டது. நான் ஏற்கெனவே இதைப்பற்றி விளக்கம் சொல்லியிருக்கிறேன். ஏழுமலை பேசுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்திரு முன்னாள் முதல்வர் பாணியில் சொல்வதென்றால், நெல்லுக்கும் புல்லுக்கும் தன் குடும்பத்தின் பெயர் வைப்பது, வேண்டும் என அவசியம் ஏற்படும்போது தலைக்கு மேலே வைத்து ஆடுவது, வேண்டாம் என்று முடிவு செய்தால் தொப்பென தரையில் போடுவதும்தான் புதுமை. பழமையிலேயே பள்ளிகொண்டிருக்கும் மாண்புமிகு முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களுக்கு இனியாவது அவரின் துணையாக உள்ளவர்கள் வணங்கும் தெய்வம், புதுமைச் சிந்தனையை வழங்க வேண்டும் என நான் வேண்டுகிறேன். நானும் ஒரு கவிஞர் என்று கூறிக்கொள்ளும் மாண்புமிகு முன்னாள் முதல்வர், மகாகவி பாரதியார் கூறிய 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பதை மறந்துவிட்டு கழக அரசை தனது மனசாட்சிக்குப் புறம்பாக விமர்சிக்கின்றார். தமிழ், தமிழ் என்று உதட்டோரம் மட்டுமே உச்சரிக்கும் மாண்புமிகு முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள், கண்ணகி சிலைக்கு அறிக்கை யுத்தம் நடத்தினார். ஆதரவு புலவர்களைத் தூண்டிவிட்டார். அப்போது மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் அடையாள உண்ணா நோன்பு இருந்திருந்தால், தமிழ், தமிழ் என்று உச்சரிக்கும் தகுதியைப் பெற்றிருப்பார். ஆனால் மாண்புமிகு முன்னாள் முதல்வர் தமிழைவிட தன் தொகுதி அலுவலகம்தான் முக்கியம் எனக் காட்டிக்கொள்ள உண்ணாநோன்பு இருந்தவர் இந்தப் புதுமை தமிழர்தான் என்பதை நான் இந்தப் பேரவையில் கூற விரும்புகிறேன்.



2002 மார்ச் 12] [திரு. வெ. ஏழுமலை]

இன்று நாட்டில் தீவிரவாதம் பெருகி வர மிக முக்கிய காரணம் விரக்தியின் விளிம்பில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைய சமுதாயமே. படித்த கல்விக்கு ஏற்ப வேலை பெருகவில்லை. இதனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம் அம்மா அவர்கள், எதிர்கால இளைய சமுதாயத்திற்கு ஒரு கலங்கரை விளக்காக வேலைவாய்ப்பு என்ற இத்திட்டத்தைத் தந்திருக்கின்றார். என்போன்ற இளைய சமுதாயமே இரு கரம் கொண்டு அம்மா அவர்களை வாழ்த்தி வரவேற்கின்றது. சாதிக் கலவரத்திற்கு தமிழ்நாட்டில் எள்ளளவும் இடம் தரமாட்டோம் என்று முழக்கமிட்டால் மட்டும் போதாது. அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற சீரிய சிந்தனையில், அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையில் பிறந்ததுதான் ஆதிதிராவிடர் பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டிற்காக வேலூரில் அமையவிருக்கும் திருவள்ளுவர் பல்கலைக்கழகமாகும். சமூக நீதி காத்த வீராங்கனை அம்மா அவர்கள் சமத்துவ, சமதர்ம சமுதாயம் காண இப்பல்கலைக்கழகத்தை அமைக்கவிருப்பது, தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாய அமைதிக்கு ஒரு கோவிலாக அமையும் என்பதிலே எந்தவித சந்தேகமும் இல்லை.

பிற்பகல் 6-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை கண்ட தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்

[திரு. வெ. ஏழுமலை] [2002 மார்ச் 12

சார்பாக செஞ்சி தொகுதியிலேயிருந்து யாரும் இந்த அவைக்கு வரவில்லை. முதன்முதலாக ஒருங்கிணைந்த தென்னாற்காடு மாவட்டத்திலேயே மிக அதிகமான வாக்கு வித்தியாசத்தில், அதாவது 29,081 வாக்குகள் வித்தியாசத்திலே வாக்களித்து வெற்றிபெறச் செய்து என்னை இந்த அவைக்கு அனுப்பிய, அந்தச் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பகுதிகள் அனைத்தும் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. இந்தத் தொகுதிக்கு, இந்த அரசும், மாண்புமிகு அம்மா அவர்களும் பல்வேறு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே வாக்களித்த அந்த வாக்காளப் பெருமக்களுக்கு மீண்டும் ஒரு முறை நான் என்னுடைய நன்றியினைச் சொல்ல விரும்புகிறேன்.

செஞ்சி என்றாலே செஞ்சிக் கோட்டை நினைவிற்கு வரும். இந்த அவைக்கு எத்தனையோ உறுப்பினர்கள் வந்திருக்கலாம். சொல்லி இருக்கலாம். வீரத்தின் விளை நிலமாக விளங்குகின்ற அந்த செஞ்சிக் கோட்டை இருக்கின்ற அந்தப் பகுதியை சுற்றுலா மையமாக அம்மா அவர்களுடைய அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த செஞ்சிக்கோட்டைக்கு பெருமை சேர்க்கின்ற அந்த செஞ்சி மண்ணை ஆண்ட தேசிங்கு ராஜா அவர்களுடைய படத்தை, அவர் ஆண்ட அந்த நிலைமையை சரித்திரத்தில் படித்திருக்கின்றோம். பின்வரும் காலங்களில் இருக்கின்ற சந்ததிகள் தேசிங்கு ராஜா எப்படி இருப்பார் என்பதை மறக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தக் கருத்தினை மனதில் கொண்டு, செஞ்சி பகுதியில் தேசிங்கு ராஜா அவர்களுடைய சிலையை அமைத்துத் தரவேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, செஞ்சியிலே நான் வழக்கறிஞராகப் (மணியடிக்கப்பெற்றது) பணிபுரிகின்றபோது, 50 வழக்கறிஞர்கள் இருந்தார்கள். இன்றையதினம் 100 வழக்கறிஞர்கள் வழக்கறிஞர் தொழிலைச் செய்கிறார்கள். ஆனால், செஞ்சிப் பகுதியிலே ஒரு குற்றவியல் நீதிமன்றமும், உரிமையியல் நீதிமன்றமும் இருக்கின்றன. ஆனால் சார்பு நீதிமன்றம் அங்கு தேவை. அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் சார்பு நீதிமன்றத்திலே வழக்குகளைச் சந்திக்க போக வேண்டும் என்று சொன்னால், விழுப்புரத்திற்கோ அல்லது திண்டிவனத்திற்கோ செல்ல வேண்டும். செஞ்சி வட்டத்தினுடைய கடைக்கோடியில் இருக்கின்ற எதப்பட்டியிலிருந்து திண்டிவனத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 80 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். விழுப்புரத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 100 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும்.



2002 மார்ச் 12] [திரு. வெ. ஏழுமலை]

திண்டிவனத்திலே இயங்குகின்ற அந்த சார்பு நீதிமன்றத்திலும், விரைவு நீதிமன்றத்திலும், செஞ்சிப் பகுதியில் இருக்கின்ற வழக்குகள் அதிகமாக நடத்தப்படுகின்றன. எனவே, நான் வணங்கும் அன்னை இதயதெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் செஞ்சி பகுதியில் சார்பு நீதிமன்றம் அமைத்துத் தரவேண்டும். சார்பு நீதிமன்றத்திற்குத் தேவையான கோப்புகள் அனைத்தும் தயாரிக்கப்பட்டு, வாடகைக் கட்டடம்கூட பார்வையிடப்பட்டு தயார் நிலையில் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த முறை செஞ்சி பகுதிக்கு ஒரு சார்பு நீதிமன்றத்தை அமைத்துத் தரவேண்டும்.

அதேபோன்று, செஞ்சி பகுதியில் பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்படுகின்ற ஏரிகள் சுமார் 93 ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகள் அனைத்தும் தூர்வாரப்படாமல், அந்த ஏரிகளுடைய நிலப்பரப்பிலே கரைகள் மிகவும் மோசமாக, மதகுகள் பழுதடைந்திருக்கிற காரணத்தால் நீர்ப்பிடிப்பு குறைகின்றது. அந்த ஏரிகளையும் செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டு, செஞ்சி தொகுதியில்....(மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.

பிற்பகல் 6-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள். இன்னும் 5 மணித் துளிக்குள் இன்னோர் உறுப்பினர் பேச வேண்டும்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதியை இணைக்கின்ற பிரதான சாலைகளாக இருக்கின்ற வல்லம்-மேல் ஒலக்கூர் சாலை, அதேபோன்று ஜெயங்கொண்டம்-பேரணி சாலை, ரெட்டணை-கீழ்மாம்பட்டு சாலை—மிக முக்கியமான சாலைகள்—கடந்த ஆட்சிக் காலத்திலிருந்தே அந்தச் சாலைகள் பழுதுபார்க்கப்படாத காரணத்தால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் திண்டிவனம் அல்லது செஞ்சிக்கு வரவேண்டுமென்று சொன்னாலும் அல்லது உடல் நலக் குறை ஏற்பட்டு மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமென்று சொன்னாலும் அல்லது காவல் நிலையம் செல்லவேண்டுமென்று சொன்னாலும் அல்லது வட்டாட்சியர் அலுவலகம் செல்லவேண்டுமென்று சொன்னாலும், அந்தச் சாலைகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலை இருக்கிறது. அந்தச் சாலைகள் அனைத்தும் மிக மோசமாக இருக்கின்றன. அந்தச் சாலைகளை செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, சாரத்தில் இயங்கி, மூடப்பட்டு.... (மணியடிக்கப்பெற்றது.)

[2002 மார்ச் 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள். இன்னொருமுறை பேசலாம்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். அந்த நூற்பாலை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டது. மூடிய நிலையிலே அங்கே வேலை செய்தவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். நான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு வைப்பது என்னவென்றால், அந்த நூற்பாலையை இப்போது திறக்காவிட்டாலும்கூட, அந்த நூற்பாலையிலே இருக்கின்ற இயந்திரங்கள் பல கோடி ரூபாய் பெறக்கூடிய அளவிற்கு இருக்கின்றன. அதேபோன்று, வேஸ்ட் காட்டன் பல இலட்சத்திற்கு விற்கக்கூடிய அளவிற்கு அங்கே இருக்கிறது. அதை இந்த அரசு மனதில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த நூற்பாலையை தனியாருக்கு விட்டாவது, இயக்கி அதிலே வேலை செய்த அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியிலே நெகனூர் கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தைச் சுற்றி 30, 40 கிராமங்கள் இருக்கின்றன. அவர்கள் மருத்துவமனைக்கு....(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற பிரச்சினைகளை பிறகு பேசலாம்.

**திரு. வெ. ஏழுமலை:** இந்த ஒரே கருத்தோடு முடித்துக்கொள்கிறேன். மருத்துவமனைக்கு வரவேண்டுமென்று சொன்னால் செஞ்சிக்குத்தான் வரவேண்டும். 20, 25 கிலோமீட்டர் தூரத்தைக் கடந்து வரவேண்டும். அந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை நெகனூர் பகுதியிலே அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டு....(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டு முடியுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு அம்மா அவர்கள், விவசாயிகளுடைய நலனைக் காப்பதற்காக மழை நீரைச் சேகரித்து விளை பொருட்களை அதிகப்படுத்துவதாக 15 அம்சத் திட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே சங்கராபரணி ஆறு ஓடுகின்றது. அந்த ஆற்றின் குறுக்கே மொடையூர் அருகே பொதுப் பணித் துறையால் அணை கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த அணையிலிருந்து தண்ணீர் வேகமாக வீடூர் அணைக்கு வந்து, பாண்டிச்சேரி கடலிலே கலக்கிறது. மொடையூரிலுள்ள அணையை உயர்த்தி, தண்ணீரைத் தேக்கி செஞ்சிப்



2002 மார்ச் 12] [திரு. வெ. ஏழுமலை]

பகுதியிலே இருக்கின்ற விவசாய மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே அம்மா அவர்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, செஞ்சி தொகுதிக்கு உட்பட்ட செஞ்சி ஒன்றியம், வல்லம் ஒன்றியம், ஓலக்கூர் ஒன்றியம், இந்தப் பகுதிகளிலே இருக்கின்ற கிராமங்களிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இருந்தும், அதற்கு ஆழ்துளைக் கிணறு போட்டும், அந்தக் கிராமத்தில் இருக்கின்ற மக்கள் குடிநீர் இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள். என்ன காரணம் என்று சொன்னால், கணக்கிற்கு ஆழ்துளைக் கிணறுகள் போடப்படுகின்றனவேயொழிய அங்கு நீராதாரம் இல்லை. என்னுடைய தொகுதியில், மிகவும் மோசமாக, குடிநீர் ஆதாரம் இல்லாமல் இருக்கின்ற சேனலூர், கொடியம்புதூர், ஊரல், நொலம்பூர், ஓலக்கூர் காலனி, கீழ்க்கூடலூர், கீழ்நெமிலி, மண்டபெரும்பாக்கம், அன்னம்பாக்கம், வெண்மணி ஆத்தூர் ஆகிய ஊராட்சிகளிலும், வல்லம் ஒன்றியத்தில் அகலூர், சோழங்குளம், அம்மாகுளமேடு, அவியூர், அருகாவூர், ஆகிய ஊராட்சிகளிலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திறந்தவெளி கிணறு அமைத்து, அந்தக் கிராம மக்களுக்குக் குடிக்க குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

பிற்பகல் 6-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் உரையின் மீதான விவாதத்தில் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

ஆளுநர் உரை என்பது, இந்த மாத இறுதியில் தாக்கல் செய்யப்படவிருக்கிற நிதிநிலை அறிக்கையினுடைய முன்னோடித் திட்டம். 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்று சொல்வார்கள். அதைப்போல அந்த நிதிநிலை அறிக்கையினுடைய முன்னோடித் திட்டம்தான் இது. இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, எந்த ஆக்கப்பூர்வமான திட்டமும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். இது மறைக்கப்பட முடியாத உண்மை. இந்த மாமன்றம், இந்த ஆட்சி ஏற்பட்டு இரண்டு முதலமைச்சர்களைக் கண்டுவிட்டது. பல்வேறு அமைச்சரவை மாற்றங்களைப் பார்த்துவிட்டது.

[திரு. அ. அசோகன்] [2002 மார்ச் 12

ஆனால் பத்துமாதக் காலத்தில் மக்கள் நலப் பணிகள் ஏதாவது நடைபெற்றனவா என்று கேட்டால், இல்லை. அதிலும், குறிப்பாக, எங்களுடைய மாவட்டம் மிகவும் வேதனைக்குரிய, பரிதாபத்திற்குரிய நிலைமையில் இருக்கிறது. எங்களுடைய திருவாரூர், நாகை, தஞ்சை, கடலூர் மாவட்டம் உட்படவுள்ள விவசாயிகள் பாதிப்படைந்திருக்கிறார்கள். எதிர்பாராதவிதமாக, இயற்கைக்கு மாறாக, கோடையிலே மழை பெய்த காரணத்தினால், அங்கே வெள்ளச்சேதம் ஏற்பட்டு, விவசாயிகள் தாங்கள் விளைவித்த நெல்லை இல்லத்திற்குக்கூட எடுத்துச் செல்ல முடியாமல் களத்துமேட்டிலே, சாலை ஓரங்களிலே போட்டிருக்கிறார்கள். இந்த நெல்லை, இன்றைக்கு அரசாங்கம் இரட்டை வேடம் போட்டு, இதை நாங்கள் கொள்முதல் செய்வதிலே நியாயம் உண்டு என்று சொல்லி, நெல் கொள்முதல் செய்வதிலேகூட இரட்டை வேடம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். நெல் கொள்முதல் செய்கிற இடங்களிலே பார்த்தால் விவசாயிகள் விடிய விடிய நெல்லை அங்கே அடுக்கி வைத்துக் கொண்டு, அதற்குக்கூட ஆளுங்கட்சியினுடைய ஒன்றியச் செயலாளர்களுடைய சிபாரிசு பெற்றால்தான் நெல்லை கொள்முதல் செய்ய முடியும் என்கின்ற நிலைமை இன்றைக்கு திருவாரூர் மாவட்டத்திலே உருவாகியிருக்கிறது. அதுமட்டுமல்ல . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அசோகன், இது குற்றச்சாட்டு. (குறுக்கீடு) இது குற்றச்சாட்டு. ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது.

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை இந்த அவைக்கு அவர் தந்து கொண்டிருக்கிறார். எந்தவிதமான நிர்பந்தமும் இல்லாமல் விவசாயிகள் கொண்டு வருகின்ற நெல்லை, இதுவரை 2½ மாதத்திற்குள்ளாக இந்த அரசு 7½ இலட்சம் டன் நெல்லை கொள்முதல் செய்திருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரட்டை வேடம் எல்லாம் கடந்த ஆட்சியிலேதான் நடைபெற்றது என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்ட விவசாயிகளுக்கு அதுபற்றித் தெரியும். இங்கேயிருக்கிற ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட தெரியும். என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால், நிலைமை அப்படித்தான்... (மணியடிக்கப்பெற்றது) ஏமாற்றம் . . .



2002 மார்ச் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவசாயத் துறை மந்திரியே உங்களுடைய ஊர்தானே? (குறுக்கீடுகள்) விவசாயத் துறையினுடைய அமைச்சரே உங்களுடைய மாவட்டம்தானே? (குறுக்கீடுகள்)-(கூச்சல், குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள். அசோகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) அசோகன் பேசுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** Speaker இங்கு இருக்கிறீர்கள்..(கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பன்னீர்செல்வம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது ஒன்றுமில்லை. திரு. பன்னீர்செல்வம் உட்காருங்கள்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. அ. அசோகன்:** கொள்முதல் நிலையங்களில் ஒரு காலத்திலே எங்களுடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில். . . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அசோகன் பேசியதற்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. அ. அசோகன்:** ஈரப்பதத்துடன் வந்த நெல்லை, பதருடன் கூடிய நெல்லை கடந்த கால ஆட்சியிலே நாங்கள் கொள்முதல் செய்திருக்கிறோம். இன்றைக்கு அப்படியல்ல. அந்தக் விவசாயிகள் மகிழ்ந்திருக்கிறார்கள். கொள்முதல் நிலையத்தின் வாசலிலே.... *(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். கூட்டுறவு அமைச்சர் பதில் சொல்வார். (குறுக்கீடு).

[2002 மார்ச் 12

*பிற்பகல் 6-35*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவைக்குத் தொடர்ந்து தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார்கள். ஈரப் பதமுள்ள, 22 சதவிகிதம் ஈரப் பதமுள்ள நெல்லைக் கொள்முதல் செய்ய அரசு ஆணையிட்டிருக்கிறது. அதன்படிதான் கொள்முதல் நடந்து வருகிறது. மைய அரசினுடைய அறிவுரைக்கேற்ப, அவர்கள் கொடுத்திருக்கின்ற விதிகளுக்கேற்ப, 2600 ரூபாய் per hectare என விநியோகம் செய்யப்பட்டது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, மைய அரசை 5,000 ரூபாய் அவர்களுக்கு உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறது. மைய அரசு இதை மறுத்துவிட்டது. மீண்டும் மைய அரசை வற்புறுத்தி வருகிறோம். அதுமட்டுமல்ல; கால்நடைகள் இழப்புக்கும், குடிசைகள் இழப்புக்கும் ஏற்கெனவே நிதி தரப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை நிலை.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, கொள்முதல் செய்வதைப் பற்றி. அதாவது வாசலிலே, கொள்முதல் நிலையத்தின் வாசலிலே ஒரு நெல் தூற்றுகிற இயந்திரத்தை வைத்துக்கொண்டு, மழையிலே விவசாயிகள் நெல்லை கஷ்டப்பட்டு கொண்டு சென்றாலும், அந்தக் கொள்முதல் நிலையத்தின் வாசலிலே அந்த இயந்திரத்தை வைத்துக்கொண்டு, தூற்றுகிறோம் என்கின்ற பெயரிலே பாதி நெல்லைக் கழித்து விடுகிறார்கள். இந்நிலையால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதுதான் உண்மை நிலைமை. இந்த நிலைமையை நீங்கள் புரிந்துகொண்டு, இதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த ஆளுநர் உரையிலே குறிப்பாக, மாவட்ட வளர்ச்சிக்கு, செயலாளர்கள் நியமனம் என்று அறிவித்து இருக்கிறீர்கள். அதற்கு அமைச்சர்கள் பொறுப்பு என்றும் அறிவித்து இருக்கிறீர்கள். அப்படியென்றால், அமைச்சர்கள் இல்லாத மாவட்டம் இருக்கிறது. அதற்கு யார் பொறுப்பு? ஐ.ஏ.எஸ். படித்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய பணி என்ன என்பதை நீங்கள் விளக்கியாக வேண்டும்.

அதுமட்டுமல்ல; இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்கள் படிப்படியாக தனியார் மயமாக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறீர்கள். அப்படியென்றால், தனியார் பஸ் முதலாளிகளைத் திருப்திப்படுத்த



2002 மார்ச் 12] [திரு. அ. அசோகன்]

முடியுமே தவிர, இதனால் பொது மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை. குறிப்பாக, எங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலேதான், தனியார்களுடைய பேருந்துகள் எல்லாம் அரசுடைமையாக்கப்பட்டு, பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் அதனால் பயனடைந்தார்கள். பொதுமக்களும் பயனடைந்தார்கள். இன்றைக்குக் காலையிலேகூட, மினி பேருந்துகள் அறிவிக்கப்பட்டு, அதிலே அரசாங்கத்திற்கு நஷ்டம் என்று ஒரு கணக்கைச் சொன்னார்கள். எங்களுடைய முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொன்னார்கள். அப்படியென்றால், மினி பேருந்துகளை நீங்கள் அரசுடைமையாக்குங்கள். அதை விட்டுவிட்டு, அரசுடைமையாக்கிய...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மினி பஸ்களை அரசுடைமை ஆக்குங்கள் என்று எங்களுக்குச் சொல்கின்ற நீங்கள், அதை அறிமுகப்படுத்தும்போதே செய்திருக்கலாமே? ஏன் அதைச் செய்யவில்லை? அதிலே இருந்த உள்நோக்கம் என்ன என்பதை உறுப்பினர் சொல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

***டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு காலையிலே நான் பதில் சொன்னேன். மினி பேருந்துகள், போக்குவரத்துப் பேருந்துகள் இயங்குகிற தூரங்களிலே 4 கிலோ மீட்டர் மட்டும்தான் செல்லலாம்; மீதி இருக்கிற 6 கிலோ மீட்டரும் (குறுக்கீடுகள்) இப்படி நீங்கள் பேசினால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசி வாக்கியத்தை முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நான் பேசும்போது, அவர்களைச் சும்மா இருக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு முன்னாலே இருக்கிற ஒலிப் பெருக்கிதான் ஒலிக்கிறதே?

[2002 மார்ச் 12

**டாக்டர் க. பொன்முடி:** எங்கள் ஆட்சியில் கடைசி ஓராண்டுக் காலத்திலே விடப்பட்ட மினிப் பேருந்துகள் 300 பேருந்துகள்தான். அந்த 300 பேருந்துகளை வைத்துத்தான், அவர்கள் போராட்டத்திலேகூட பயன்படுத்திக் கொண்டார்கள். ஆனால், அப்போது நாங்கள் அந்த 300 பேருந்துகளை இயக்கும்போது, ஒரு போக்குவரத்து கழகப் பேருந்தைக்கூட நிறுத்தவும் இல்லை; தனியார்மயமாக்கவும் இல்லை. கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இருக்கிற அரசுத் துறைகளை, தனியார்மயமாக்க வேண்டும் என்பது எங்களுடைய கொள்கை அல்ல; ஆனால், புதியதாக தனியார் துறைகள் வளர்ந்தால், அதை வரவேற்போம் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் புதிதாக தனியார் துறையிலே அவை விடப்பட்டபோதும்கூட, போக்குவரத்துத் துறையிலே, கழகங்களிலே இருந்து, எந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்தும் தனியார்மயமாக்கப்படவில்லை என்பதை நான் உறுதியாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் விட்டுவிடுங்கள். அது உங்களுடைய ஆட்சியின் கொள்கை; இது இந்த ஆட்சியின் கொள்கை. உட்காருங்கள். திரு. அசோகன், பேசுங்கள். (குறுக்கீடு).

**டாக்டர் க. பொன்முடி:** நான் கொள்கை ரீதியாக விமர்சனம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சியில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள். தனியார்மயம் என்று கொடுப்பதில், மறைமுகமாக எந்த முயற்சியும் செய்யவில்லை. 'மடியிலே கனம் இல்லை; வழியிலே பயமில்லை'; வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறோம். ஆனால், நீங்கள் அன்றைக்கு வெளிப்படையாகச் சொல்லாமல் போனதால், தனிப்பட்ட முறையில், மறைமுகமாக, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து கழகங்களைப் படிப்படியாக மூடுவதற்காகத் திட்டமிட்டு, மறைமுகமாக தனியார்களை ஊக்குவிப்பதற்காக, திட்டமிட்டு சதியைச் செய்து அறிமுகப்படுத்தியதுதான் மினி பஸ் திட்டம். ஆகவே, உள்நோக்கத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) மினி பஸ் திட்டம் தனியாரை ஊக்குவிப்பதற்காகத்தான் கொண்டு வரப்பட்டது. நாங்கள் வெளிப்படையாக, உள்ளதை உள்ளபடியே சொல்லி,



2002 மார்ச் 12] [திரு. இரா. விசுவநாதன்]

இன்றைக்குத் தனியார்மயமாக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறோம்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, கொள்கை அளவிலே வேறுபடவில்லை. நாங்களும் கொள்கை அளவிலே ஏதோ தனியாருக்குச் செய்தோம் என்றால், நீங்களும் திரும்ப அதைச் செய்கிறோம் என்று சொல்கிறீர்களா? நான் முதலிலே விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். எங்களுடைய கொள்கையைப் பொறுத்தவரையிலே, அரசுத் துறைகளிலே இருப்பவர்களை கை வைப்பதில்லை. புதிதாக தனியார் துறை வந்தால் அதைத் தடுப்பதும் இல்லை. அதுதான் எங்கள் கொள்கை. அதன்படிதான் நாங்கள் செய்தோம். அந்த அடிப்படையிலே செய்யப்பட்டதுதான் மினி பஸ்கள் திட்டம். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 6-40

*மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய இந்தியப் பொருளாதாரக் கொள்கையை வகுத்துவரும் மத்திய அரசு, தனியார் துறைகளை மட்டும் ஆதரிப்பதற்காக திட்டங்களை வகுத்துக்கொண்டு வருகின்றது. தனியார்மயம் ஆக்குவதில் ஒரு பொதுவான கருத்து இந்தியா முழுவதும் இப்போது நிலவிக் கொண்டுதான் இருக்கிறது. மத்தியிலே அவர்களுடைய ஆட்சி இருந்து கொண்டிருக்கிறது. நானும் மத்திய அரசிலே பங்கேற்றவன்தான். இப்போது இருக்கும் மத்திய அரசு, தனியார்மயமாக்கும் கொள்கையைச் செயல்படுத்தி வருகிறது. பல பொதுத் துறைகளில் எல்லாம் ஆட்குறைப்பு செய்வதோடு மட்டுமல்லாமல், அவற்றினுடைய investments எல்லாம் இப்போது தனியார் துறைக்குச் சென்று கொண்டுதான் இருக்கின்றன. ஆகவே, நாம் ஏதோ தனியார்மயக் கொள்கையை புதிதாகக் கொண்டுவருவதுபோலவும், இவர்கள் என்னவோ பொதுத் துறைதான் இருக்க வேண்டுமென்று பேசுவதெல்லாம்—இதுதான் இரட்டை வேடம் என்று சொல்வது. இங்கு பேசுவது ஒரு கொள்கை; மத்தியிலே பேசும்போது ஒரு கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்தக் கொள்கையை விட வேண்டும். அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்தான் மத்திய அமைச்சரவையில் Industries Minister-ஆக இருக்கின்றார். நாமெல்லாம் முன்பு பல்வேறு போராட்டங்கள் நடத்தினோம். சேலம் இரும்பாலையை தனியார்மயமாக்குகிறார்கள் என்று போராட்டம் நடத்தினோம். அப்போது இவர்கள் எதுவும் சொல்லவில்லை. ஆனால், இப்போதுதான் தனியார்மயம் என்று சொல்கிறார்கள். நாம்தான் அதைக் கொண்டுவந்துவிட்டோம்

[டாக்டர் மு. தம்பிதுரை] [2002 மார்ச் 12

என்பதுபோல, Social Justice-க்கு எதிரானது என்று பேசுவதெல்லாம்— இதுதான் இரட்டைக் கொள்கை. ஆகவே, முதலில் இதை அவர்கள் விட்டுவிட வேண்டும். இதை மத்தியிலே அவர்கள் முதலிலே செய்யட்டும். அங்கு தனியார் துறையை அழித்துவிட்டு, எல்லாவற்றையும் பொதுத் துறையாக மாற்றட்டும். Air Service தனியார் மயமாகாமல் இருக்கிறதா? Indian Airlines-ஐ தனியாருக்கு விடவில்லையா அவர்கள்? மத்திய அரசில் நீங்கள் பங்கு வகிக்கிறீர்கள். அங்கு Jet Air Ways-ஐ நிறுத்துங்கள் பார்க்கலாம்; Sahara Air Ways-ஐ நிறுத்துங்கள் பார்க்கலாம். அங்குமட்டும் தனியார் வரலாம்; ஆனால், இங்குமட்டும் வந்தால் அதில் என்ன தவறு இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, நீங்கள் சொல்வது, இதுதான் இரட்டை வேடம். (குறுக்கீடுகள்). Commerce and Industries Minister-ஆக உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்தான் இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அசோகன், பேசுங்கள். (குறுக்கீடு) பொன்முடி, நீங்கள் சொன்னதற்கு அமைச்சரிடமிருந்து பதில் வந்துவிட்டது. உட்காருங்கள். அசோகன் பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அசோகனிடம் விட்டுவிடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** சம்பந்தமே இல்லாமல் பேசுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அசோகனைப் பேச விடுங்கள்; உங்கள் உறுப்பினர் பேசுவார்; அவரிடம் சொல்லிப் பேசச் சொல்லுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் உடமையா, பொது உடமையா என்ற பட்டிமன்றத்திற்கோ, விவாதத்திற்கோ நாங்கள் வெளியே தயாராக இருக்கிறோம். பொருளாதாரக் கொள்கையிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கலாம். அதைப்பற்றி நான் இப்போது விவாதிக்க விரும்பவில்லை. ஆனால், போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையிலே மினி பஸ்ஸைப்பற்றிச் சொன்னீர்கள். அந்தக் கொள்கையைப்பற்றி நான் எடுத்துச்சொல்லி இருக்கிறேன். இரட்டை வேடம் என்று சொன்னீர்கள். ஆனால், தேர்தல் அறிக்கையிலே நீங்கள் போக்குவரத்துத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவோம் என்று சொல்லிவிட்டு, இன்று போக்குவரத்தே இல்லாமல் போனால் என்ன செய்வது? பானையே இல்லை; அகப்பைக்கு எங்கே போவது? இதைத்தான் சொல்கிறேன்; நீங்கள் போடுவது இரட்டை வேடம். வாக்குகளுக்காக போக்குவரத்து ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவோம் என்று சொல்லிவிட்டு, இன்று போக்குவரத்துக் கழகங்களே இல்லை; தனியார்மயம்தான் என்று சொன்னால், இது இரட்டை வேடம் இல்லையா? தேர்தலுக்காகச் சொல்லப்பட்ட தவறான வார்த்தைகள் இல்லையா?



2002 மார்ச் 12] [டாக்டர் க. பொன்முடி]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையும் இயங்குகிறது; அரசுத் துறை முழுமையாக இல்லை என்று தவறாகச் சொல்லக்கூடாது. அரசுத் துறையும் இயங்குகிறது; தனியார் துறையும் இயங்குகிறது. அதிலே ஓர் ஆரோக்கியமான போட்டி வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அந்தத் துறை பொதுமக்களுக்கு பலன் தருகின்ற துறையாக மாறவேண்டும் என்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த முடிவினை எடுத்திருக்கிறார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு என்பது லாப-நட்டக் கணக்கைப் பார்க்கிற வியாபார ரீதியாக இருக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அசோகன், வேறு பிரச்சினைக்குச் செல்லுங்கள்; இதுதான் முடிந்தாகிவிட்டதே!

**திரு. அ. அசோகன்:** நான் வேறு பிரச்சினைக்குத்தான் போகிறேன். மக்களுக்குப் பயன்படுகிற திட்டங்களாக இருக்க வேண்டும் என்பதுதான்

எங்களுடைய எண்ணம். அதுமட்டுமல்ல, ஆளுநர் உரையிலே அமெரிக்காவில் உள்ள சுதந்திரதேவி சிலையைப் போல் அமைத்து, அமைதிப் பூங்காவாக உருவாக்குவதாக அறிவித்து இருக்கிறீர்கள். அமெரிக்காவைப் போல ஆக வேண்டுமென்றால், அறிவியல் துறையிலே முன்னேறலாம். ஆனால், இன்றைக்கு சுதந்திரதேவி சிலை தேவையா என்பது கண்ணகி சிலையைப் பார்க்கிறவர்களுக்கு எண்ணத் தோன்றுகிறது. இதையெல்லாம் இன்றைக்கு முக்கியமான திட்டங்களாக போற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்; அதுமட்டுமல்ல.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

**திரு. அ. அசோகன்:** ஆளுநர் உரையிலே அவர்களுடைய திட்டத்தை ஆளும் கட்சி உறுப்பினர்கள் போற்றும்போது, அதுவும் குறிப்பாக காலையிலே பெரம்பலூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ஏதோ இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட இனத்தினுடைய ஒட்டுமொத்தப் பிரதிநிதி ஆளும் கட்சிதான் என்பதைப் போலவும், ஏதோ கடந்த காலத்திலே எங்களுடைய தானைத் தலைவர் அதற்கு, அந்த இனத்திற்கு எதிரியாகவும் கேலி பேசினார்கள். இது அவையிலே உங்களுக்குத் தெரியும். இன்றைக்கு சம்பந்தி என்பதைக்கூட criticise பண்ணி, கொச்சைப்படுத்திப் பேசினார்கள். எத்தனையோ தலைவர்கள் இந்த நாட்டிலே உருவாகி இருக்கலாம், மேடையிலே பேசலாம், சமத்துவம் பேசலாம். ஆனால், தன்னுடைய குடும்பத்திலே இன்றைக்கு சம்பந்தியான பெருமை எங்களுடைய தானைத் தலைவர் கலைஞருக்குத்தான் உண்டு என்பதை மக்கள் மன்றத்திலே இன்றைக்கு அத்துணைபேர்களும் போற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு ஏதோ சட்டப் பேரவையிலே இடம் கிடைத்துவிட்டது என்பதற்காக மட்டும் இதைப் பேசக்கூடாது.

*பிற்பகல் 6-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அசோகன், நல்ல பெண், நல்ல மாப்பிள்ளை கிடைத்தால் சொல்லுங்கள், நானும் சம்பந்தியாகத் தயார். *(சிரிப்பு)*





**திரு. அ. அசோகன்:** முதலில் ஆகியிருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. அ. அசோகன்:** இன்றைக்கு ஒவ்வொரு தலைவர்களை, அதுவும் திராவிட இயக்கத்தினுடைய தலைவர்களை அந்தக் கட்சியினுடைய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கிறபோது, பாராட்டுவது, புகழ்வது அவர்களுடைய கடமை. இது மரபாகப் போற்றப்படுகிறது. அதுபோல ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளுங்கட்சி உறுப்பினர்கள், அவர்களுடைய தலைவர்களைப் போற்றிப் புகழ்வதில் எங்களுக்கு ஒன்றும் ஆதங்கம் அல்ல. அதேநேரத்திலே, எங்களுடைய தலைவரை, எங்களுடைய இயக்கத்தினுடைய தலைவரை நீங்கள் விமர்சிக்கிறபோது இதை நாங்கள் பார்த்துக்கொண்டு எப்படி இருக்க முடியும்? ஓர் உறுப்பினருக்கு, எங்களுடைய மூத்த உறுப்பினர் துரைமுருகன் சொல்கிறார், பெயரைக் குறிப்பிடக்கூடாது என்று. அவர் மீண்டும் மீண்டும் சொல்கிறார். அவையிலே அந்த மரபை நீங்கள் காப்பாற்ற வேண்டும். தொடர்ந்து எங்களுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். கடைசி வாக்கியத்திற்கு வாருங்கள்.

**திரு. அ. அசோகன்:** அந்த முறை எங்களுக்குத் தெரியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே போற்றப்படுகின்ற திட்டங்கள் எதுவும் இல்லை. பாராட்டப்படுகின்ற திட்டங்கள் எதுவும் இல்லை. அதிலும் குறிப்பாக இந்த ஆளுநர் உரை திட்டங்கள் என்பது ஆண்டிகள் மடம் கட்டியதைப் போலத்தான் இருக்கிறது. சினிமாவில் வருகிற கனவுக் காட்சியைப்போல வந்து, தோன்றி மறைகின்ற திட்டங்களாக இருக்கின்றன என்பதைப் பதிவுசெய்து வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(13-3-2002)* காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 6-47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

# 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*1. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்யப்பட்டது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 20-3-2001-ஆம் நாளிட்ட 59-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தொகுதிகள் சீரமைப்பு அல்லது பிரித்தல் மற்றும் ஒதுக்கீடு) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 18-6-2001-ஆம் நாளிட்ட 85-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(d) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994-ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்கள் (தேர்தல்கள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 18-6-2001-ஆம் நாளிட்ட 86-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(d) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு





திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994-ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. திரு. R. கிருஷ்ணமூர்த்தி, S/o. K.L. நாராயணப்பிள்ளை 30-cc ரோடு, சேலம்-1 அவர்களுக்கு சொந்தமான TN 27-A 6363 பதிவு எண் கொண்ட ஆம்னி பஸ்-க்கு டிசம்பர் 1994, மார்ச் 1995 மற்றும் ஜூன் 1995 ஆகிய மாதங்களில் முடிவடையும் காலாண்டுகளுக்கு செலுத்தப்படவேண்டிய தொகை ரூ. 1.67 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்து ஏழாயிரம்) வசூலிக்க இயலா நிலுவை வரித் தொகை (ரூபாய் 0.44 இலட்சம்) மற்றும் தண்டத் தீர்வைத் தொகை ரூ. 1.23 இலட்சம்) ஆகியவற்றைத் தள்ளுபடி செய்தது குறித்து உள் துறையின் 14-8-2001 ஆம் நாளிட்ட, 764 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. சென்னை-7, மனநலம் குன்றிய குழந்தைகள் பள்ளி, பாலர் கல்வி நிலையம், நெ. 5 மற்றும் 6 ரித்தர்டன் ரோடு நிறுவனத்திற்குச் சொந்தமான TN 01 J 5974 பதிவு எண் கொண்ட மகேந்திரா வேன் வாடகைக்கு விடாமல் மக்கள் பணிக்காக பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி நிறுவனம் செலுத்தப்பட வேண்டிய வரித் தொகை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்கு ஐம்பது சதவீதமாக குறைப்பது குறித்து உள் துறையின் 18-7-2001-ஆம் நாளிட்ட, 671-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

6. கரூர், திரு. எஸ். பழனிச்சாமி, S/o. சுப்பையா கோனார் அவர்களுக்குச் சொந்தமான TNG 9993 எண் கொண்ட சரக்கு வண்டிக்கு 30-6-1994 மற்றும் 31-12-1994-ஆம் நாட்களுடன் முடிவடையும் காலாண்டுகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூ. 5,310 (ரூபாய் ஐயாயிரத்து முன்னூற்று பத்து) வசூலிக்க இயலா நிலுவை வரித் தொகை ரூ. 2,655 மற்றும் தண்டத் தீர்வைத் தொகை ரூ. 2,655 ஆகிய தொகையினை தள்ளுபடி செய்தது குறித்து உள் துறையின் 25-7-2001-ஆம் நாளிட்ட, 687-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

7. சென்னை-81, தண்டையார்பேட்டை, ரெட்டைக்குழித் தெரு, தமிழ்நாடு பார்வையற்றோர் சங்கத்திற்குச் சொந்தமான TN 04 X 5165 பதிவு எண் கொண்ட மோட்டார் வாகனம் வாடகைக்கு விடாமல் மக்கள் பணிக்காக பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி வாகனத்திற்கு மேற்காணும் சங்கம் செலுத்தப்பட வேண்டிய வரித் தொகையினை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 50 சதவீதமாக ஐந்தாண்டு காலத்திற்கு குறைப்பது குறித்து உள் துறையின் 25-7-2001-ஆம் நாளிட்ட 688-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராமம், காந்திகிராம ஊரக நிறுவன பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான TN 57D 4278 மற்றும் TN 57D 4279 பதிவு எண்கள் கொண்ட மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு விடாமல் பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி நிறுவனம் செலுத்தப்படவேண்டிய வரித் தொகையை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்கு 50 சதவீதமாக குறைப்பது குறித்து உள் துறையின் 25-7-2001 ஆம் நாளிட்ட 689-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு போதை மருந்துகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 20-2-2001-ஆம் நாளிட்ட 48-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1985-ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 61/1985) 78(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

10. 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (மேல்முறையீடு மற்றும் மறு ஆய்வு) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வருவாய்த் துறையின் 20-3-2001-ஆம் நாளிட்ட 131-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1955) 61(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

11. சென்னை-600106, திருவாளர்கள் உதவும் கரங்கள், நெ. 460, என்.எஸ்.கே. நகர், சொந்தமான TN 02 D 8445 மற்றும் TN 02 E 2648





பதிவு எண்கள் கொண்ட மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு விடாமல் மக்கள் பணிக்காக பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி வாகனத்திற்கு மேற்காணும் நிலையம் செலுத்தப்பட வேண்டிய வரித் தொகையினை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்கு 50 சதவீதமாக குறைப்பது குறித்து உள் துறையின் 26-7-2001 ஆம் நாளிட்ட 697-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

12. நீலகிரி மாவட்டம், குன்னூர், இந்திய குடும்ப நல திட்டத்திற்குச் சொந்தமான TN 43A 0504 பதிவு எண் கொண்ட வண்டி வாடகைக்கு விடாமல் மக்கள் பணிக்காக மட்டும் பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி வண்டிக்கு மேற்காணும் நிலையம் செலுத்தப்பட வேண்டிய வரியினை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு ஐம்பது சதவீதமாக குறைப்பது குறித்து உள் துறையின் 22-6-2001-ஆம் நாளிட்ட 578-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

13. முந்தைய, திருவாளர்கள் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான 125 மோட்டார் வாகனத்திற்கு 1978-1979 ஆம் ஆண்டிற்கான ரூ. 62,93,812 வசூலிக்க இயலாத வரியான ரூ. 44,95,580/- மற்றும் நாற்பது சதவீத கூடுதல் மேல்வரி (ரூ. 17,98,232) வரித் தொகையை தள்ளுபடி செய்தது குறித்து உள் துறையின் 28-8-2001 ஆம் நாளிட்ட 806 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

14. TML 9260 பதிவு எண் கொண்ட வண்டிக்கு 1-4-1999 முதல் 30-6-2000 வரையிலான காலத்திற்கு செலுத்தப்பட வேண்டிய காலங்கடந்த வரியினை சென்னை, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தினால் செலுத்தப்பட வேண்டிய தண்டத் தீர்வைத் தொகை ரூ. 6,875-ஐ தள்ளுபடி செய்தது குறித்து உள் துறையின் 18-9-2001 ஆம் நாளிட்ட 879-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

15. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டச் சட்டப் பணிகள் குழு விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் துறையின் 10-1-2001 ஆம் நாளிட்ட 35 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987ஆம் ஆண்டு சட்டப் பணிகள் அதிகார மன்றச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1987) 30(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

16. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பயறு மற்றும் பருப்பு வகைகளின் மாவு விற்பனை மீது எந்த ஒரு வணிகரும் செலுத்தத்தக்க வரிவீதத்தை நான்கு சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாகக் குறைப்பது குறித்தும் மற்றும் நெய் தயாரிப்பதற்காக வணிக முத்திரையிடப்படாத வெண்ணெய் வாங்குவதன் மீது, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 7-ஏ ஆம் பிரிவின்கீழ் எந்த ஒரு வணிகரும் வரி செலுத்துவதினின்றும் விலக்களிப்பது குறித்தும் வணிக வரிகள் துறையின் 24-9-2001 ஆம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

17. சென்னை, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு (முதன்மை அமர்வு) தீர்ப்பாயத்தின் இரண்டாம் உறுப்பினரான திரு. ட்டி. நூர் மொகையுதீன் (இந்திய தணிக்கை மற்றும் கணக்குப் பணி) என்பவரின் வேற்றுப் பணிக் காலத்தினை 1-9-2001 முதல் 31-8-2002 முடிய மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 30-8-2001 ஆம் நாளிட்ட அரசாணை (3டி) எண். 33-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

61. I have outlined the policy direction that this Government proposes to take during the course of the year in this address to you. The people have reposed their confidence in you, while electing you as their representative in this August Assembly. I am sure that your deliberations in the House will undoubtedly facilitate the Government to properly plan and take necessary steps for accelerating the socio-economic development of the State.

Vanakkam

[2002 மார்ச் 12

*மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே,*

2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் உளம்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டு ஆளுநராக நான் பொறுப்பேற்ற பிறகு, இதுவே இம்மாமன்றத்தின் பெருமைக்குரிய உறுப்பினர்களிடையே நான் ஆற்றும் முதல் உரையாகும். உங்கள் கனிவான வரவேற்பிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இம் மாநிலத்தின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் என் பேராதரவும் ஒத்துழைப்பும் எப்போதும் உண்டு என்பதையும் உறுதிப்படுத்த விரும்புகிறேன்.

2. 2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பான நிகழ்வுகளுக்குப் பின் மீண்டும் முதல்வராக வந்துள்ள செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை வரவேற்கிறேன். அவருடைய திறமையான, உறுதியான தலைமையின்கீழ் இம் மாநிலம் எல்லா வகையிலும் வளமும் நலமும் பெறுமென நம்புகிறேன்.

3. இந்திய நாடு, பலதரப்பட்ட பண்பாடுகள், மொழிகள் மற்றும் வரலாற்றைக் கொண்ட மிகத் தொன்மை வாய்ந்த நாடாகும். நம்மிடையே பல்வேறு வேற்றுமைகள் இருப்பினும், நாம் அனைவரும் ஒரே நாட்டினர் என்னும் உணர்வோடு, ஒன்றுபட்டிருப்பதை எவரும் மறுக்க இயலாது. 2001ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13 ஆம் நாளன்று இந்திய நாடாளுமன்றத்தின் மீது பயங்கரவாதிகளாலும், அழிவு சக்திகளாலும் நடத்தப்பட்ட தாக்குதல், நமது இறையாண்மை மீதும் தேசியத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாகும். இந்த அர்த்தமற்ற வன்முறைச் செயலை நான் வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்திய ஜனநாயகக் கோட்டையைப் பாதுகாப்பதில் ஈடுபட்டு தங்கள் இன்னுயிரை ஈந்த நமது பாதுகாப்புப் பணியாளர்களின் குடும்பங்களுக்குத் தமிழ்நாட்டு மக்களின் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன். பயங்கரவாதத்திற்கு எதிராக, குறிப்பாக, பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காக மத்திய அரசு தேசியச் சட்டம் ஒன்றை இயற்றும் முயற்சிக்கு இவ்வரசு தனது முழு ஆதரவை அளிக்கும்.

4. அண்மையில் இந்தியாவின் மேற்குப் பகுதியில் குறிப்பாக குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தில் அப்பாவி மக்கள், முக்கியமாக பெண்களும் குழந்தைகளும் தங்கள் இன்னுயிரை இழக்க நேர்ந்தது. நம்முடைய சகோதர, சகோதரிகளின் உயிரிழப்புக்கு தமிழ்நாட்டு



2002 மார்ச் 12]

மக்களுடன் நானும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனிதத் தன்மையற்ற இப்படுகொலைக்குக் காரணமானவர்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இம் மாநில மக்கள் எக்காலத்துக்கும் பொருந்தும் கொள்கைகளான சமூக நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் கட்டிக்காத்து வருவதுடன், அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதில் அரசுக்குத் தொடர்ந்து துணைநின்று வருகின்றனர். இம் மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதில் மிக உயரிய முன்னுரிமையை இவ்வரசு தொடர்ந்து அளிக்கும்.

5. விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்திய அரசின் உதவியைக் கோரியுள்ளதாகவும், விடுதலைப் புலிகளின் கொள்கை ஆலோசகர் ஆன்டன் பாலசிங்கமும் அவருடைய மனைவியும் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதுவாக சென்னையில் இருக்கக் கோரப்பட்டுள்ளது என்றும் செய்திகள், பத்திரிகை மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களில் பரவலாக வெளியிடப்பட்டுள்ளன. அத்தகைய முயற்சிக்கு இந்த அரசு, தனது திட்டவட்டமான எதிர்ப்பை மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது.

6. அண்மையில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர் ஆகிய மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் பருவமல்லாத காலத்தில் பெய்த பெரு மழையால், உயிர்ச் சேதமும், நெற்பயிருக்கும், ஏனைய பயிர்களுக்கும் பெருத்த சேதமும் ஏற்பட்டது. மத்திய அரசு நிர்ணயித்த வரையறைகளின் அடிப்படையில், இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து உதவித்தொகையாக ரூ.49 கோடியை இவ்வரசு உடனடியாக வழங்கியுள்ளது. வடிநிலப் பகுதியில் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பெரும் இழப்பை ஈடுசெய்ய இத்தொகை போதுமானதல்ல என்பதை அரசு அறியும். பாதிக்கப்பட்ட மக்களின் துயரைத் துடைக்க கூடுதலாக நிவாரணத்தை விரைந்து அளிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

7. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பில் வரையறுக்கப்பட்ட அளவிற்கான தண்ணீர் அந்தந்தக் காலத்தில் பெறப்படாததால், தமிழ்நாட்டில் காவிரிப் பாசன ஏற்பாட்டை நம்பியிருக்கும் நிலங்கள் வறண்டுபோகக் கூடிய நிலை ஏற்பட்டு வருகிறது. காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் இந்த அரசு தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துவருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இப் பிரச்சினையில் மத்திய அரசு, நடுநிலைப்போக்கைக் கடைபிடிக்கும்

என்று இவ்வரசு எதிர்பார்க்கிறது. நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பைச் செயல்படுத்தி, அதனைக் கண்காணிப்பதற்கு ஏதுவாக உரிய அதிகாரங்களுடன்கூடிய தொழில்நுட்பக் குழு ஒன்றை ஏற்படுத்துமாறு தொடர்ந்து இவ்வரசு வலியுறுத்தும். இதற்காக உரிய விதிகளையும், விதிமுறைகளையும் உடனடியாக இயற்றுவதும் அவசியமாகும். மத்திய அரசு ஏற்படுத்திய ஒரு வல்லுநர் குழு தெரிவித்த முடிவுகளுக்கு இணங்க, முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை முதற்கண் 142 அடியாகவும், பின்னர் 152 அடியாகவும் உயர்த்த அனுமதிக்கக்கோரி உச்ச நீதிமன்றத்தில் இந்த அரசு முறையீடு செய்யும். ஆந்திரப்பிரதேச அரசின் ஒத்துழைப்புடன் 'கிருஷ்ணா நதிநீர்த் திட்டம்' விரைவில் நிறைவேற்றி முடிக்கப்படும்.

8. இம்மாநிலத்தில், மக்களாட்சிக்கு அடித்தளத்திலிருந்து புத்துயிரூட்ட வேண்டுமென்ற உறுதியை நிறைவுசெய்யும் நோக்குடன், உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று அடுக்குகளிலும் தேர்தல்களை இவ்வரசு நியாயமாகவும் நேர்மையாகவும் நடத்தியுள்ளது. சில நிருவாகச் சிக்கல்கள் காரணமாக, இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கான தேர்தல்களை நடத்த இயலவில்லை. கூட்டுறவு நிறுவனங்களுக்கு விரைவில் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

9. மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்தல், உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த நிதி ஆதாரங்களையும், அவை நல்கும் பணிகளின் தரத்தையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய 2002-2007 காலஅளவிற்காக இரண்டாம் மாநில நிதிக் குழு தெரிவித்த பரிந்துரைகள் அரசின் பரிசீலினையில் உள்ளன. இப்பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட முடிவுகள் அறிவிக்கப்பட்டு வரும் நிதி ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தேவையான நிதியொதுக்கம் செய்யப்படும்.

10. மக்களாட்சி முறையில், அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்ற அரசியலமைப்புக் கொள்கை நிறைவேற்றப்பட வேண்டுமானால், நமது உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்தவும், பங்கேற்புத் தரத்தை உயர்த்தவும் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம். உள்ளாட்சி அமைப்புகளின் முடிவு எடுக்கும் நடைமுறையை மேம்படுத்தும் வகையில், புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பயிற்சியளிப்பதற்கான விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியின் மூலம், தமது பகுதிகளில்





ஒட்டுமொத்த மேம்பாட்டுப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ள அவர்களால் இயலும்.

11. மத்திய அரசு அமைத்த அடுத்தடுத்து வந்த நிதிக் குழுக்களினால், மத்திய நிதிப்பகிர்வில், தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்களவு மறுக்கப்பட்டுள்ளது. வரிவிதிப்பு நடவடிக்கை, நல்ல நிருவாகம், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தல், தனிநபர் வருவாய், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு குறியீட்டுச் சாதனைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில், அறிவார்ந்த, நியாயமான வரிப் பகிர்வு நடைமுறை ஒன்றைப் பன்னிரண்டாவது நிதிக் குழு பின்பற்ற வேண்டும் என்று இவ்வரசு வலியுறுத்தும். சமூக-பொருளாதார மேம்பாட்டில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ள காரணத்திற்காக, தமிழ்நாடு தண்டிக்கப்படக் கூடாது என்பதில் கவனமெடுத்துக்கொள்வதே முக்கிய நோக்கமாகும்.

12. இவ்வரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது நிலவிய கடும் நிதி நெருக்கடியை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த நெருக்கடியின் அளவையும், இதற்கான காரணங்களையும் அறியும் முதல் நடவடிக்கையாக, அரசு கடந்த வரவு-செலவுக் கூட்டத் தொடரில் "தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையை" சமர்ப்பித்தது. இதைத் தொடர்ந்து, பணியாளர் - செலவு சீர்திருத்தக் குழு ஒன்று அமைக்கப்பட்டும், அரசின் திட்டம் சாரா செலவைக் குறைக்க ஏதுவாக பல சீரமைப்பு நடவடிக்கைகளும் அறிவிக்கப்பட்டன.

13. கடந்த சில ஆண்டுகளில் மிகச் சீர்கேடடைந்துள்ள மாநில நிதி நிலையை மேம்படுத்த இந்நடவடிக்கைகள் மட்டும் போதுமானதல்ல. இம் மாநிலம் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இத் தருணத்தில், மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கை நடப்பாண்டில் ரூ.512 கோடி அளவிற்குக் குறைப்பதற்கு மத்திய அரசு எடுத்த முடிவு, பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. தேசியப் பொருளாதாரத்தில் குறிப்பாக உற்பத்தித் துறையில் நிலவும் தற்போதைய மந்த நிலை காரணமாக, நடப்பு நிதியாண்டில் மாநில அரசின் வணிக வரி வசூல் வெகுவாகக் குறைந்தது, நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. இப்பிரச்சினை, தமிழ்நாடு மட்டுமே எதிர்நோக்கியுள்ள பிரச்சினை அல்ல; பொருளாதாரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவு, ஏனைய மாநிலங்களின் நிதி நிலைமையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன் காரணமாக பல மாநிலங்கள் அவற்றின் திட்டச் செலவைப் பெருமளவுக்குக் குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

[2002 மார்ச் 12

14. அரசு, நடப்பு நிதியாண்டிற்கான திட்ட அளவு ரூ.6040 கோடி என்று அறிவித்தது. மாநில அரசின் வரவுகள் கடுமையாகக் குறைந்ததால், கூடுதல் வருவாய் ஆதாரங்களைத் திரட்டுவதன் மூலம்தான் மேற்சொன்ன இலக்கை எய்த இயலும். நடப்பு நிதியாண்டு விரைவில் முடியவிருப்பதால், இதற்கான சாத்தியக்கூறு இல்லாத நிலை உருவாகலாம்; இந்தப் பின்னணியில், கிடைக்கக்கூடிய அனைத்து வாய்ப்புகளையும் கருதிப்பார்த்த பின்னர், 2001-2002 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் ஏற்பளிக்கப்பட்ட திட்ட அளவை எய்தக்கூடிய இலக்கான ரூ.5200 கோடியாகக் குறைப்பதற்கு இவ்வரசு முடிவு செய்துள்ளது.

15. சமச்சீரற்ற நிதி நிலைமையைச் சரிசெய்யத் தேவையான நடவடிக்கையை எடுக்கும் அதே சமயத்தில் வளர்ச்சிக்கான திட்டங்களையும் அரசு தொடர்ந்து நிறைவேற்றும். தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக விளங்கச் செய்ய, தான் உறுதிபூண்டிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அறிவித்துள்ளார். "அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே" இவ்வரசின் இலக்காகும். இத்தொலைநோக்கினை எய்திட பின்வரும் 15 அம்சங்களை உள்ளடக்கிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

(i) **தொடர் பசுமைப் புரட்சி:** பண்ணை உற்பத்தித் திறன் என்றென்றும் நிலைத்து இருக்கும் வகையில் அதிகரிக்கச் செய்தல்; ஒவ்வொரு மழைத் துளியையும் சேமித்தல்; குறைந்த அளவு நீரைக் கொண்டு அதிக அளவில் உற்பத்தி.

(ii) **உணவுப் பாதுகாப்பு:** ஆண், பெண் மற்றும் குழந்தைகள் அனைவருக்கும் சரிவிகித உணவு கிடைப்பதற்கான பொருளாதார சமூக வழிமுறைகளை உருவாக்குதல்.

(iii) **கால்நடைப் பாதுகாப்பு:** கால்நடைகளின் தரத்தை மேம்படுத்துதல்; கால்நடைகளை நன்கு பேணுதல்; பண்ணைத் துணை வருவாயைப் பெருக்குதல்; பல்வகை மீன் வளர்ப்பை மேம்படுத்துதல்; மீன் வளத்தை அதிகரித்தல்.

(iv) **நீர்வளப் பாதுகாப்பு:** பாதுகாப்பான குடிநீர், வேளாண்மை மற்றும் தொழில் ஆகியவற்றிற்குப் போதுமான நீர்வளத்தை ஏற்படுத்துதல் மற்றும் உயிரின வாழ்க்கைச் சூழல் பராமரிப்பு.



2002 மார்ச் 12]

(v) **சுகாதாரப் பாதுகாப்பு:** தொழுநோய், காசநோய், தவிர்க்கக்கூடிய பார்வையின்மை உள்ளிட்ட அனைத்து தடுக்கத்தக்க நோய்களையும் கட்டுப்படுத்துதல்; தடுப்பூசிகள் மூலம் தவிர்க்கக்கூடிய நோய்களை முழுமையாக ஒழித்தல்; பிறப்பு இறப்பு விகிதங்களைக் குறைத்து சராசரி ஆயுட்காலத்தை அதிகரித்தல்; சிசு இறப்பு வீதம், மகப்பேறுகால இறப்பு வீதம் மற்றும் எடை குறைவான குழந்தை பிறப்பு வீதம் ஆகியவற்றைக் குறைத்தல்; தாய்-சேய் நலப் பாதுகாப்புக்கேற்ற நெறிமுறைகளைப் பின்பற்றுதல்; எச்.ஐ.வி./எய்ட்ஸ்க்கு எதிரான தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் உடல் ஊனமுற்ற, மனநலம் குன்றிய ஆண், பெண் மற்றும் குழந்தைகள் நலன் பேணுவதில் தனிக் கவனம் செலுத்துதல்.

(vi) **வாழ்வாதாரப் பாதுகாப்பு:** "அனைவருக்கும் வேலை வாய்ப்பு" தேர்ச்சிபெற்ற நிலைக்குத் தேர்ச்சிபெறா தொழிலாளர்களைத் கொண்டுவருதல்; கிராமப்புற பண்ணை மற்றும் பண்ணை சாரா வேலை வாய்ப்பிற்கும் சிறு அளவில் கடன் பெறுகின்ற சிறிய தொழில்களுக்கும் ஒருங்கிணைந்த தனிக் கவனம் செலுத்தல்; தொழில்நுட்பம், பயிற்சி, தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகம் ஆகியவற்றின் வாயிலாக சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் புதிய வழிவகைகளை ஏற்படுத்துதல்.

(vii) **உறைவிடப் பாதுகாப்பு:** சூரிய சக்தி பயன்பாடு மற்றும் மழைநீர் சேகரிப்பு ஆகிய இரண்டும் அனைவரின் பொறுப்பு என்பதன் அடிப்படைக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட வீட்டுவசதிப் பணிகளை மேம்படுத்துதல்.

(viii) **உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு:** நிலம், நீர், வனங்கள், பல்வகை உயிரின வகைகள், கடல், தூய்மையான காற்று போன்ற வாழ்க்கைக்கு ஆதாரமான வளங்களைப் பாதுகாத்து தரம் உயர்த்துதல்; திட திரவக் கழிவுகளை மீண்டும் பயன்படுத்துதல்; அனைத்து உயிரினக் கழிவுகளை உரமாக்குதல்; மருத்துவமனை கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றுதல்; மலேரியா நோய்க்குக் காரணமான உயிரினச் சுற்றுச்சூழல் கட்டுப்பாடு.

(ix) **எரிசக்தி பாதுகாப்பு:** அனல், புனல், அணுசக்தி ஆகிய எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் காற்று, சூரியசக்தி, உயிரின கழிவு எரிசக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க வகையிலான எரிசக்தி ஆதாரங்கள்

[2002 மார்ச் 12

ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தி நிலைபெற்ற ஆதாரங்களை ஏற்படுத்துதல்; வேளாண்மை, தொழில் மற்றும் வீட்டுப் பயனுக்காக எரிசக்தியில் தன்னிறைவை எய்துதல்.

(x) *வளர்ச்சிக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதி:* கிராம, நகர்ப்புறப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல்; 500-க்கு மேல் மக்கள் தொகை கொண்ட அனைத்து சிற்றூர்களுக்கும் தொடர்பு வசதிகள் அளித்தல்; கிராம-நகர்ப்புற ஏற்றத் தாழ்வுகளை அகற்றுதல்.

(xi) *எழுத்தறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு:* பாலர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை கல்வியைத் தரம் உயர்த்துவதில் கவனம் செலுத்துதல்; எழுதப்படிக்கத் தெரிந்த அல்லது ஓரளவு எழுதப்படிக்கத் தெரிந்த ஆண் பெண்களுக்குத் தொழில்நுட்பம் மற்றும் திறமைப் பயிற்சி அளிக்க தனிக் கவனம் செலுத்துதல்; குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்.

(xii) *நாட்டுப்புற, பாரம்பரிய மற்றும் நவீன கலை, பண்பாடு, நாடகம்:* தமிழ்நாட்டின் பாரம்பரிய பண்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆர்வத்தைப் பெருக்குதல்; தெரு நாடகங்கள் உள்ளிட்ட பண்பாட்டு மரபுகளுக்குப் புத்துயிரூட்டுதல்.

(xiii) *பாலின நேர்மை நெறி* **(Gender equity):** பாலினப் பாகுபாட்டை நீக்குதல், ஆண் பெண் விகிதாச்சார முரண்பாடுகளைக் களைதல்; பணிபுரியும் மகளிரின் அன்றாட வாழ்க்கைச் சுமைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஆதரவான சேவைகளை அளித்தல்.

(xiv) *ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை:* ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோரின் கல்வி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

(xv) *அதி விரைவுத் தொழில்நுட்ப முன்னேற்றம்:* உயிரித் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற முன்னணி அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் ஆராய்ச்சி மற்றும். வளர்ச்சியை ஊக்குவித்தல் கல்வியறிவையும் களச் செயல்பாட்டையும் ஒருங்கிணைக்கும் முயற்சிகள்; மக்களிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அறிவியல்



2002 மார்ச் 12]

வல்லுநர்களுக்கும் சமுதாயத்திற்குமிடையே புதிய சமூகத் தொடர்பை ஏற்படுத்தவும், இயக்கம் ஒன்றைத் தொடங்குதல்; கணினி அறிவு அடிப்படையில் உருவாகும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்குகின்ற கட்டமைப்பு மற்றும் தகவல் அளிப்பு முயற்சிகளுக்கு சமமான கவனம் செலுத்துதல்; குறைந்தளவு அடிப்படைத் தேவைத் திட்டத்தில் பொருத்தமான தொழில்நுட்ப வசதிகளைக் கிடைக்கச் செய்வதும் இதில் அடங்கும்.

இவ்வாறமைந்துள்ள முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம், அடுத்த நான்காண்டுகளில் அரசுக்கு வழிகாட்டியாக அமையும். 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் இந்த நோக்கத்தை அடைவதே இவ்வரசின் குறிக்கோளாகும்.

16. வேளாண் பொருளாதாரத்திற்குப் புத்துயிரூட்டும் வகையில் தகுந்த சாகுபடிப் பயிர்களைத் தேர்ந்தெடுத்தல், உர மற்றும் நீர் நிருவாக தொழில் உத்திகள், பாசன வ்சதிகளை நவீனப்படுத்தி விரிவுபடுத்தல், பண்ணை உற்பத்திப் பொருள்களைத் திறம்பட விற்பனை செய்தல் போன்றவற்றின் வாயிலாக, உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் பெருக்குவதற்கு இவ்வரசு உரிய கவனம் செலுத்தும். வேளாண்மைப் பயன்பாட்டிற்காக, பெருமளவில் தரிசு நிலங்களைச் சீரமைப்பதாக அளித்த உறுதிமொழியை இவ்வரசு ஏற்கெனவே செயற்படுத்தத் தொடங்கியுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வெளி நிதி ஆதாரங்கள் மூலம் நீர்வரத்து மேம்பாட்டு முகவரமைப்பு இப்பெரும் திட்டத்தைச் செயல்படுத்தும். 10 மாவட்டங்களில் 1,35,905 ஏக்கர் தரிசு நிலத்தை மேம்படுத்தும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. தரிசு நிலங்களைக் கண்டறிதல், நீர்வரத்துப் பகுதி ஒவ்வொன்றுக்கும் திட்டம் தயாரித்தல், நாற்றுப் பண்ணைகள் அமைத்தல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும். ஆதாயம் தரத்தக்க பயிர்களைப் பயிரிடவும், அவற்றுக்குச் சிறந்த முறையில் பாசனமளிக்கவும் இயலும் வகையில், நிலத்தடி நீர் வளத்தை அதிகரிக்க முக்கியத்துவம் அளிக்கப்படும். மூலிகைச் செடிகள் பயிரிட்டு விற்பனை செய்யவும், இயற்கை வழி வேளாண்மைக்கும் பெருமளவில் ஊக்கம் அளிக்கப்படும்.

17. தரிசு நில மேம்பாட்டுக்காக செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை முடிவு செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின்கீழ் தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்றே, வேளாண்மை வர்த்தகத்தையும் உணவுப் பொருள் பதப்படுத்துவதையும்

மேம்படுத்தும் பணி வேளாண்மை விற்பனைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, இத்துறை வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வர்த்தகத் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் முதன் முதலாக ஓசூரில் மலர்கள் ஏற்றுமதி வர்த்தக மண்டலம் ஏற்படுத்தப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இம்மாநிலத்தின் வெவ்வேறு மாவட்டங்களில் இவ்வகையான வேளாண் ஏற்றுமதி வர்த்தக மண்டலங்களையும் வேளாண் வணிக மையங்களையும் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு நடைபெற்று வருகிறது.

*18.* வேளாண்மைத் துறையின் வளர்ச்சி இயந்திரமாக அண்மை ஆண்டுகளில் தோட்டக்கலை உருவாகி வருகிறது. காய்கறிகள், கனிகள், மலர்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கும், பதப்படுத்தி மதிப்புக் கூட்டி அவற்றை விற்பனை செய்வதற்கும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாட்டில் தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் (Mission for Horticulture Development) ஒன்றை அமைக்க இவ்வரசு கருதியுள்ளது. புன்செய் தோட்டக்கலை, சொட்டு நீர்ப்பாசனம் மூலம் நீர்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை விளைபொருள்களின் அறுவடைக்குப்பின் பாதுகாத்து விற்பனை செய்வதற்காக வேளாண் பொருளாதார ஏற்றுமதி வர்த்தக மண்டலத்தை ஏற்படுத்துதல் ஆகியவை குறித்து தனிக் கவனம் செலுத்துவதுடன், பயிரிடுவதிலிருந்து விற்பனை செய்யும் வரை தோட்டக்கலை மேம்பாட்டின் பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைத்துச் செயல்படுவது ஆகியவை இவ்வியக்கமுறை செயல்பாடுகளில் (mission mode) அடங்கும்.

*19.* ஊரகக் குடும்பங்களின் கூடுதல் வருமானத்தை அதிகரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் வகையில் கால்நடை மேம்பாட்டில் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தும். கால்நடைகளுக்கு கோமாரி நோயினால் ஏற்படும் பாதிப்பு, அதனால் உழவர்களுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பு ஆகியவற்றை அறிந்து, இத்தொற்றுநோயினால் பாதிக்கப்படக்கூடிய இம்மாநிலத்திலுள்ள அனைத்து கால்நடைகளுக்கும், தடுப்பூசி போடக் கருதப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கால்நடை-எருமை வளர்ப்பிற்கான புதிய திட்டம் ஒன்று ரூ.93 கோடி செலவில் செயற்படுத்தப்படும். கால்நடை பாதுகாப்பு மற்றும் கால்நடை-கோழி வளர்ப்பு வசதிகளை அதிகரிக்கும்பொருட்டு, தகுந்த சுய வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்குவதன் மூலம், வேலைவாய்ப்பு பெறாத கால்நடை மருத்துவர்களின் பணியைப் பயன்படுத்திக்கொள்ள இவ்வரசு கருதியுள்ளது.





*20.* மிக நீண்ட கடற்கரையைக் கொண்ட தமிழகத்தில் மீன்வளத் துறை பெருமளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திறன் கொண்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு ஏற்ற முறையில், கடல் மற்றும் உள்நாட்டு மீன் பிடிக்கும் பகுதியை அதிகரிப்பதன் மூலம், மீனள மேம்பாட்டு இயக்கம் (Fisheries Development Mission) ஒன்றை அமைக்க இவ்வரசு கருதியுள்ளது. இது மீன் உற்பத்திக்கும் ஏற்றுமதிக்கும் ஊக்கமளிப்பதாக அமையும். கடல்சார் சிறு மீனவர்களின் வருமானத்தை உயர்த்துவதற்காக கரையோர மீன் வளத்தை அதிகரிக்க தனிக் கவனம் செலுத்தப்படும். மீனளம் சார்ந்த துணைத் தொழில்களை ஏற்படுத்துவதன் மூலம் இச்சமுதாயத்தினருக்கு வேலைவாய்ப்பும், கூடுதல் வருமானமும் பெறுவதற்கான வாய்ப்புகள் உருவாகும். பயன்படுத்தப்படாத சுரங்கங்கள் மற்றும் குவாரிகள், நெல்வயல்-மீன் பண்ணைகள், மாதிரி மீன்பிடி கிராமங்கள் ஆகியவற்றில் மீன்வளத்தைப் பெருக்குவதற்கான புதுமையான திட்டங்களை வகுப்பதன் மூலம், உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை இவ்வியக்கம் ஆராயும்.

*21. 2001* ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் மிகக் கடுமையாக நிலவிய குடிநீர்ப் பிரச்சினை, திறமையுடன் சமாளிக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். இம்மாநிலத்தில் தொடர்ந்து நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை பிரச்சினைக்குப் பல்முனை அணுகுமுறை மூலம் நீண்டகாலத் தீர்வைக் கண்டறிய இவ்வரசு மிகவும் ஆர்வம் கொண்டுள்ளது.

* இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மழைநீரைச் சேகரிக்கும் பெரும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான அனைத்துக் கட்டடங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கட்டடங்கள், புதிதாகக் கட்டப்படும் தனியார் கட்டடங்கள் ஆகியவற்றில் நிலத்தடி நீர் பெருக்கும் அமைப்புகள் இருக்கவேண்டியது கட்டாயமாக்கப்படும்.
* சென்னையில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை பிரச்சினையைச் சீர்படுத்துவதற்காக, வீராணம் திட்டம் என்னும் சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-Iஐ செயற்படுத்துவதற்கு அரசு ஏற்கெனவே அனுமதியளித்துள்ளது. பாலாறு, கொற்றலையாறு, அடையாறு ஆகிய ஆறுகளின் குறுக்கே புதிய நீர்த்தேக்கங்கள் மற்றும் தடுப்பணைகள் கட்டுதல், சென்னையைச் சுற்றிலுமுள்ள ஏரிகளை ஆழப்படுத்தி, தூர்வாருதல் ஆகியவை அடங்கிய சென்னை குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-II வகுக்கப்பட்டு *2002-03* ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

[2002 மார்ச் 12

* மாநிலத்தில், குடிநீர்ப் பற்றாக்குறை நிலவும் மாவட்டங்கள் சிலவற்றின் ஊரகப் பகுதிகளுக்குக் குடிநீர் மற்றும் துப்புரவு வசதிகளை அளிக்கும் நோக்குடன், ரூ.2,300 கோடி மதிப்பீட்டுச் செலவில், "தமிழ்நாடு ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டம்" என்ற புதிய திட்டம், மத்தியத் திட்டக் குழுவினால் இசைவளிக்கப்பட்டு, நிதியுதவி வேண்டி உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

22. தற்போதுள்ள நடுத்தர மற்றும் சிறிய நீர்த்தேக்கங்களைத் தூர்வாரி, ஆழப்படுத்தும் பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, வெளி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். பாசன வசதி மற்றும் மக்களின் குடிநீர் வசதி ஆகிய தேவைகளை நிறைவு செய்வதற்கேற்ப, நிலத்தடி நீர் அளவை உயர்த்துவதற்காக, புதிய தடுப்பணைகள், கசிவு நீர்க் குட்டைகள் போன்றவற்றை அமைப்பதும் இத்திட்டத்தில் அடங்கும். "தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத்" திட்டத்தைச் செயல்படுத்த, மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும். இத்திட்டத்தில் முதற்கட்டமாக, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணார், குண்டார், காவிரி மற்றும் வைகை ஆகிய நதிகளை இணைக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரப்படும். இவ்வாறு செய்வது, கடலில் வீணாகச் சென்றடையும் வற்றாத ஜீவ நதிகளின் நீர், உரிய வகையில் பயன்பாட்டுக்கு வருவதை உறுதிசெய்வதோடு, தமிழ்நாட்டிலுள்ள ஊரகப் பகுதிப் பொருளாதாரத்திற்கு ஊக்கம் அளிப்பதாகவும் அமையும். தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் பாசன ஏற்பாடுகளை மேம்படுத்தும் வகையில், பம்பா, அச்சன் கோயில் மற்றும் வைப்பார் ஆகிய நதிகளை இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துமாறு மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்படும்.

23. மக்கள் அனைவருக்கும் தரமான மற்றும் குறைந்த செலவிலான சுகாதாரப் பணிகள் கிடைக்கச்செய்வதை உறுதி செய்தல், தனியார் துறை பங்கேற்பை ஊக்குவித்தல் ஆகியவை அடங்கிய, விரிவான சுகாதாரக் கொள்கை ஒன்றை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. நோயின்மையே, மக்களின் சுகாதாரத் தர உயர்விற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். மாநகர மருத்துவமனைகளில் அதிக எண்ணிக்கையிலான நோயாளிகளின் வருகையைத் தவிர்க்க இயலும் வகையில், புறநகர் மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சிறப்புக் கவனம் செலுத்தப்படும். அடுத்த நிதியாண்டில் நகர்ப் பகுதிகளில் தொடக்கச் சுகாதார பாதுகாப்புக்கு அரசு தனிக் கவனம் செலுத்தும்.



2002 மார்ச் 12]

24. ஆயுர்வேதம், சித்தா, யுனானி, அக்யூபஞ்சர் சிகிச்சை முறை போன்ற மாற்று மருத்துவமுறை மேம்பாட்டில் தனியார் துறை பங்கேற்பை இவ்வரசு ஊக்குவிக்கும். மாவட்டங்களில் மாற்று மருத்துவமுறைகளுக்காக தற்போதுள்ள அடிப்படை வசதிகள் வலுப்படுத்தப்படுவதோடு, அவை இல்லாத இடங்களில் புதிய வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

25. மகளிருக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்களை அமைப்பதற்கான இவ்வரசின் திட்டம் நமது மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. வெளி நிதியுதவியுடனும், தனியார் துறை பங்கேற்புடனும், சென்னையிலும், ஏனைய நகர்ப்புறப் பகுதிகளிலும் கட்டண துப்புரவு வளாகங்களைக் கட்டி பராமரிக்க முக்கியத்துவம் அளிக்கப்படும். இம்மாநிலத்தின் பெரியநகர்ப் பகுதிகளிலும் ஒருங்கிணைந்த முக்கிய மையங்களிலும் பாதாள சாக்கடை வசதிகள் அமைப்பதற்குப் புதிய திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும்.

26. 2002-2003 ஆம் ஆண்டில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதும் வறுமையை ஒழிப்பதும் இவ்வரசின் முதன்மை நோக்கங்களாக அமையும். தரமான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம், வேளாண்மை மற்றும் தொழில் துறைகளில் வளர்ச்சியை விரைவுபடுத்தி, அதன் மூலமாக, மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். நமது சமுதாயத்தில், குறிப்பாக ஊரகப்பகுதிகளில் ஏழ்மை நிலையிலும், ஒடுக்கப்பட்ட நிலையிலும் உள்ள மக்கள் பின்னடைவு கொள்ளாமலிருப்பதை உறுதிசெய்யும் வகையில், வறுமையை ஒழிப்பதில் தன்னுடைய முதன்மையான மற்றும் நேரடியான பங்கை இவ்வரசு நிலைநிறுத்தும். 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குப் பிறகு, எந்தவொரு குடும்பமும் வறுமைக் கோட்டிற்குக் கீழில்லை என்பதை உறுதி செய்வதே இவ்வரசின் நோக்கமாகும்.

27. ஊரகப் பகுதிகளில் போதிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது, ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் அவர்களது பொருளாதாரத்திலும் பல்வகை மாற்றங்களை ஏற்படுத்தும் என்பது ஒப்புக் கொண்ட கருத்தாகும். எனவே, ஊரக வளர்ச்சி, தொடர்ந்து இவ்வரசின் மிக உயர்ந்த முன்னுரிமைகளில் ஒன்றாக இருக்கும். வேளாண் பொருள்களின் பயன் தரத்தைக் கூட்டும் நோக்கத்தோடு, ஊரகப் பகுதிகளில் சிறிய மற்றும் குடிசைத் தொழில்களாக அமைந்துள்ள

வேளாண் தொழில்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும். இதனால், உழவர்களுக்கு ஆதாயம் தரத்தக்க வருவாய் கிடைப்பது மட்டுமின்றி, வேளாண் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதும் உறுதி செய்யப்படும்.

*28.* ஊரக வளர்ச்சியைப் பொறுத்தவரை, அப்பகுதிகளிடையே தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைந்திருப்பது மிக முக்கியமான தேவையாகும். ஐநூறுக்கு அதிகமான மக்கள் தொகை உள்ள குடியிருப்புகளைக் கொண்ட ஊரகப் பகுதிகளிலும் 2004 ஆம் ஆண்டுக்குள் அனைத்து பருவ காலத்திற்கேற்ப சாலை இணைப்பு வசதிகள் அளிக்க இவ்வரசு தீவிரமாக முயலும்.

*29.* 'வறுமை ஒழிப்பு' என்பது, வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருப்போருக்கு, பிழைப்பிற்கான வருமானம், உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றை வழங்குவது மட்டும் ஆகாது. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கு வேளாண்மை, தொழில் மற்றும் சேவைத் துறைகளில் பயனுள்ள வேலை வாய்ப்பு வசதிகளைச் செய்துகொடுப்பதும் இதில் அடங்கும். வேளாண்மைத் துறையில்லாத பிற துறைகளில் குறிப்பாக கைத்தறிகள், கைத்திறத் தொழில்கள், பட்டுப்புழு வளர்ப்பு, ஏனைய ஊரகத் தொழில் துறைகளில் வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்க இவ்வரசு முயற்சி மேற்கொள்ளும். கிராம கைவினைஞர்களின் திறமைகளை மேம்படுத்திவதிலும் அவர்கள்தம் உற்பத்திப் பொருள்களின் மதிப்பை உயர்த்துவதிலும் மேற்கொள்ளப்படும் தொடர் முயற்சிகள் வாயிலாக அவர்களது திறமை குன்றாதவாறு பாதுகாக்கப்படுவர். இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்ல வருவாய் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், உற்பத்திப் பொருள்களைச் சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கான வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இம் மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட பொருள்களின் ஏற்றுமதிக்கு ஊக்கம் அளிக்கும்வகையில் மாவட்ட அளவில் ஏற்றுமதி வழிகாட்டிப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

*30.* வேளாண்மை, தொழில் மற்றும் சேவைத் துறைகளை நவீனமயமாக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் நகர்ப்புற மற்றும் ஊரக இளைஞர்களுக்காக ஆதாயம் தரத்தக்க புதிய வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதுடன், சுய வேலைவாய்ப்பு வளமும் அதிகரிக்கும். நீடித்த, திறன்வாய்ந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கவல்ல வேளாண் தொழிற் பிரிவு ஒன்றாவது இம்மாநிலத்தில் உள்ள *385* வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஏற்படுத்தப்படும்.

2224781



*31.* அரசுக் கொள்முதல்களில் சிறு தொழில்கள் *1997* வரை அனுபவித்துவந்த விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமைகளை, மீண்டும் வழங்கி, தனது தேர்தல் உறுதிமொழியை இவ்வரசு நிறைவேற்றியுள்ளது. இந்த முடிவு, இம்மாநிலத்தில் தொய்வு நிலையிலுள்ள சிறுதொழில்கள் உடனடியாக மீண்டும் தொடங்கி புத்துயிர்பெற பெரிதும் உதவும் என இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இத்துறையில், தொழில்கள் வளர்ச்சியடைவதற்குத் தேவையான சூழல்களை ஏற்படுத்திக் கொடுக்க, இயன்ற முயற்சிகளை இவ்வரசு நிச்சயமாக மேற்கொள்ளும். அதே நேரத்தில், உலகமயமாக்கல் மற்றும் தொழில் போட்டிகள் மலிந்துள்ள இக்காலக் கட்டத்தின் பெருந்தாக்கங்களைத் தொழில் முனைவோர் உணர்ந்து, செயல்பட வேண்டியதும் அவசியமாகும். செலவுக்கேற்ற பயனளிக்கும் வகையில் பொருத்தமான தொழில்நுட்ப உத்தியைப் பயன்படுத்தியும், சந்தையில் போட்டியிடும் வகையில் பொருட்களின் தரத்தை உயர்த்தியும், சிறுதொழில் நிறுவனங்கள் தங்களுடைய சொந்தத் தொழில் பிரிவுகளைச் சீரமைத்துக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

*32.* தமிழ்நாடு, சிறந்த அறிவாற்றல் மற்றும் திறமையைத் தன்னகத்தே கொண்ட பெருமையை உடையது. இந்த ஆற்றல்களில் பெருமளவு பயன்படுத்தப்படாமலுள்ளன. வெவ்வேறு வள ஆதாரங்களிலிருந்து உருவாகும் புதுமையான திட்டங்களைப் பரிசிலிக்க சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள் துறை (Dcpartment of Special Initiatives and Projects) ஒன்று ஏற்படுத்தப்படும். இத்துறை மாண்புமிகு முதலமைச்சரின் நேரடிப் மேற்பார்வையின் கீழ் செயல்படும்.

*33.* பொருளாதாரத்தின் முதன்மை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைத் துறைகளில் உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தங்களின் தாக்கம் குறித்து இவ்வரசு மிகவும் கவலை கொண்டுள்ளது. குறிப்பாக வேளாண்மை, துணித் தொழில் துறை மற்றும் சிறு தொழில் துறைகளில் உலக வர்த்தக அமைப்பின் ஆதரவின் கீழ் வர்த்தக தாராளமயமாக்கலின் விளைவுகளை ஆய்வு செய்ய, உலக வர்த்தக அமைப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்படும். வர்த்தகம், வேளாண்மை, கல்வி ஆகிய துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களைக் கொண்ட இப்பிரிவு தொடர்ந்து செயல்பட்டு, ஏற்றுமதி மற்றும் வர்த்தகம், வணிகம் ஆகியவற்றின் அளவைப் பெருக்கும் வகையில் உலக வர்த்தக அமைப்பிடமிருந்து உயரளவு அனுகூலங்களைப் பெரும் உத்திகளை வகுக்கும். ஒப்புநோக்கு அனுகூலங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவும், நம்முடைய விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோரின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டும் உலக் வர்த்தக அமைப்பின்

கடப்பாடுகள் அடிப்படையில் முடிவு எடுக்கும்போது மத்திய அரசை அனைத்து மாநிலங்களையும் கலந்தாலோசிப்பதை உறுதி செய்வோம்.

34. தொழில், வணிகம், வேளாண்மை ஆகியவற்றின் நீடித்த வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். தமிழ்நாடு மின் வாரியத்தின் நலிவடைந்த நிதி நிலை குறித்து இவ்வரசு மிகவும் கவலை கொண்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். மின்துறையில், பெரும் சீர்திருத்தங்கள் குறித்து மாநில அரசுக்கும், மத்திய அரசுக்குமிடையே உடன்படிக்கை ஒன்று 9-1-2002 அன்று கையொப்பமிடப்பட்டுள்ளது. மாநில மின் ஒழுங்குமுறை ஆணையத்தின் செயல்பாட்டை விரைவுபடுத்த, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

35. பொது போக்குவரத்து கட்டமைப்பு, அரசின் உயரிய முன்னுரிமை பெறும் மற்றுமொரு முக்கிய கட்டமைப்பு வசதியாகும். போக்குவரத்துத் துறையில் தெரிந்தெடுக்கப்பட்ட பேருந்து வழித்தடங்களையும், சேவைகளையும், பணிகளையும், படிப்படியாகத் தனியார்மயமாக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. நிதி இடர்ப்பாட்டில் சிக்கியுள்ள அரசுப் போக்குவரதது நிறுவனங்களின் ஒட்டுமொத்த நிருவாகச் சீரமைப்பு மற்றும் போக்குவரத்தில் தனியார் துறை பங்கேற்பு ஆகியவை இத்துறையில் ஆரோக்கியமான போட்டிகளையும் அதன்மூலம் பணித் திறனையும் ஊக்குவிக்கும்.

36. சேதுசமுத்திரம் திட்டத்தை விரைவில் செயல்படுத்துமாறு தமிழ்நாடு நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் இத்திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

37. பெரும் சவாலாக அமைந்துள்ள 'அனைவருக்கும் இலவச தொடக்கக் கல்வி' என்ற குறிக்கோள் இன்னும் கனவாகவே இருந்து வருகிறது. "அனைவருக்கும் தொடக்கக் கல்வி" என்ற குறிக்கோளை எய்தும் பொருட்டு, 2003 ஆம் ஆண்டுக்குள் பள்ளியில் குழந்தைகளின் சேர்க்கையை 100 சதவீதம் கொண்டுவரவும், 14 வயது வரையில் அவர்கள் அனைவரும் கல்வி பெறுவதற்கு வசதி செய்யவும் இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. ஒரு கி.மீ. சுற்றளவுக்குள் பள்ளிகளே இல்லாத குடியிருப்புகளில் உள்ள குழந்தைகள் எளிதில் கல்வி கற்க ஏதுவாகத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.





38. ஆதாயம் தரத்தக்க வேலை வாய்ப்பு பெறுவதற்கு அவசியமான பயிற்சி தேவைப்படும், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சார்ந்த சிறுவயதினருக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் முழுநேர தொழில் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இப்பள்ளிகளில் அடிப்படைக் கல்வி மற்றும் வேளாண்மை, தோட்டக்கலை, கட்டுமானம், தச்சுவேலை, குழாய்வேலை, மின்பணிகள் முதலிய வாழ்க்கைத் தொழில் முனைப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும். இம்மாணவ மாணவியருக்கு உணவு, உடை மற்றும் உறைவிட வசதிகள் அளிக்கப்படும்.

39. "ஆரோக்கியமான உடல் நலத்தில் ஆரோக்கியமான மனவளம்" இதுவே அனைத்து கல்வித் திட்டங்களுக்கு அடிப்படையாக அமையும். இந்நோக்கத்தை எய்துவதற்காக, அடுத்த கல்வியாண்டிலிருந்து அனைத்து உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம் என்னும் புதிய திட்டம் கொண்டு வரப்படும். இத்திட்டத்தின்கீழ் பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்டு, உடல் வலிமை அல்லது கல்வி தொடர்பான ஏதேனும் ஒன்றிலாவது கூடுதல் திறமை பெறுவ்து கட்டாயமாக்கப்படும். இதனுடன், ஒவ்வொரு பள்ளியிலும் குறைந்தது ஒரு விளையாட்டிலாவது திறமையை வளர்க்க வேண்டியது அவசியமாக்கப்படும். இளம் திறமையாளர்களைக் கண்டறிய ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.

40. இவ்வரசு ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்குத் தற்போது பின்பற்றும் வெளிப்படையான கலந்தாய்வு முறை இலஞ்ச ஊழலை ஒழித்துள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடாகும். ஆசிரியர்களிடையே இந்தமுறை நல்ல வரவேற்பைப் பெற்றிருப்பதுடன், நாடு முழுவதும் பாராட்டையும் பெற்றுள்ளது. இக்கொள்கையைத் தொடர்ந்து செயல்படுத்துவதுடன், உபரியாக உள்ள ஆசிரியர்களை தேவைப்படும் பள்ளிகளுக்கு மாற்றவும் இவ்வரசு நடவடிக்கை எடுக்கும்.

41. இந்தியாவிலேயே மிகவும் விரும்பத்தக்க சுற்றுலா மையங்களில் ஒன்றாகத் தமிழ்நாட்டை உருவாக்க, இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. நடப்பாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், இத்துறைக்கான நிதியொதுக்கத்தைக் கணிசமான அளவு அதிகரிப்பதோடு, சுற்றுலா வளர்ச்சி நடவடிக்கைகளில் தனியார் துறையினரும் பங்கேற்கும்வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாமல்லபுரத்திலும் கன்னியாகுமரியிலும் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு

வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான பெருந் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தின் பெருமைவாய்ந்த பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பிரபலப்படுத்தும் வகையில், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே கிராமச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு இவ்வரசு முழு முயற்சி மேற்கொள்ளும்.

42. அமெரிக்க நாட்டு மக்களின் சுதந்திர-மக்களாட்சி உணர்வுகளை அங்குள்ள சுதந்திர தேவி சிலை பிரதிபலிப்பது போல, சாதி, மதம், பண்பாட்டு ஒற்றுமையைச் சித்தரிக்கும் சிலையுடன் கூடிய அமைதிப் பூங்கா ஒன்று சென்னை மாநகரை ஒட்டி அமைக்கப்படும். இவ் வளாகத்தில் பிரம்மாண்டமானதொரு கருத்தரங்கம், அனைத்து சமயச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட பெரியதொரு தியான மண்டபம், பல்வேறு சமயங்கள் பற்றிய புத்தகங்களைக் கொண்ட தனியொரு நூலகம் மற்றும் புத்தக மையம் ஆகியன இடம் பெற்றிருக்கும். இத் திட்டம், உலக அமைதியை எடுத்துரைக்கும் கருத்துக்கூடமாகவும், இந்தியர்களும் வெளிநாட்டவர்களும் வருகை தரக்கூடிய ஒரு சுற்றுலா மையமாகவும் இருக்கும்.

43. சென்னையில் பெரும் திறந்தவெளி சாக்கடையாக தற்போது மாறிவிட்ட கூவம் ஆற்றைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, தடையின்றி தண்ணீர் செல்லும் வகையில் மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. இரு கரைகளிலும் பூந்தோட்டங்கள் அமையப்பெற்று மாசுக்கேடின்றி உள்நாட்டு படகுப் போக்குவரத்திற்கு ஏற்றவகையில் இதை மாற்றி அமைப்பதற்கு விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்படும்.

44. அன்றாட நிருவாகத்தில் தமிழ்மொழிப் பயன்பாட்டை அதிகரிக்க இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய தமிழ்-ஆங்கில இருமொழிக் கொள்கைக்குத் தொடர்ந்து இவ்வரசு ஆதரவளிக்கும். மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பாடத் திட்டங்களில் தமிழ்மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

45. தெரிந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் "அன்னதானத் திட்டம்" ஒன்று தொடங்கப்படும். இதற்காக பக்தர்கள் காணிக்கை செலுத்துவதற்கு வசதியாக இக்கோவில்களில் தனி உண்டியல் ஒன்று வைக்கப்படும். தொடக்கத்தில், ஆலய நிதியுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்படும். இத்தகைய கோயில்கள் அனைத்திலும் குழந்தைகளுக்கு





ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியைப் போதிப்பதற்காக ஞாயிறு தோறும் குறைந்தது ஒரு மணி நேரம் வகுப்புகள் நடத்தப்படும்.

46. நேற்றைய தினம் உலகம் முழுவதும் மகளிர் தினம் கொண்டாடப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மகளிர் கல்வி மற்றும் மகளிர் தொடர்பான கல்வி ஆராய்ச்சி குறித்து ஊக்கமளிக்கும் பொருட்டு கொடைக்கானல் பகுதியிலுள்ள அனைத்து மகளிர் கல்லூரிகளையும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கக் கருதப்பட்டுள்ளது. அடுத்த இரண்டாண்டுகளில் இப் பல்கலைக்கழகத்தில் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

47. வளர்ச்சித் திட்டங்களை வகுப்பதில் மகளிரைப் பெருமளவில் பங்கேற்கச்செய்ய இவ்வரசு ஆர்வம் கொண்டுள்ளது. இதனால் அவர்கள் கணிசமான அளவுக்கு இத்திட்டங்களில் பங்குகொள்வதுடன், இத் திட்டங்களிலிருந்து கிடைக்கும் பயனையும் பெற இயலும். ஏற்கெனவே உறுதியளித்தவாறு, மாநில அரசின் அனைத்து சட்டபூர்வமான மற்றும் சட்டம் சாரா குழுக்களில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு செய்வதற்குத் தேவையான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஐந்தாண்டுக் கால அளவில் பல்வேறு சுய வேலைவாய்ப்புத் தொழில்களில் 5 இலட்சம் மகளிர் தொழில் முனைவோருக்குப் பயிற்சியளிக்கும் பெருந்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர் நடவடிக்கையாக, பொருளாதார உரிமைகளைப் பெறும்வகையில், அவர்களுக்காக இம் மாநிலத்தில் சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் பெருமளவில் செயற்படுத்தப்படும். கடன் வழங்கு நிறுவனங்கள் மூலமாக நிதியுதவி அளித்தல், தொழில்நுட்ப உதவி மற்றும் உற்பத்தியான பொருட்களை விற்பனை செய்வதற்கு வசதிசெய்து கொடுத்தல் ஆகியன இத்திட்டங்களில் அடங்கும்.

48. நமது சமுதாயத்தில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகள், உடல் ஊனமுற்றோர், மூளை வளர்ச்சி குன்றியோர், முதியோர் போன்றவர்களின் நலனிலும் தனிக் கவனம் செலுத்தப்படும். அநாதை இல்லங்கள் அமைப்பதற்கும், முதியோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கு காப்பகங்கள் அமைப்பதற்கும், தெருவில் சுற்றித் திரியும் குழந்தைகளுக்கு இரவில் தங்க இடவசதி செய்து கொடுப்பதற்கும், தனியார் துறையை அரசு ஊக்குவிக்கும். மேலும் இலாப நோக்கின்றி இத்திட்டத்தை மேற்கொள்ள முன்வருவோர்க்கு இலவசமாக நிலம் அளிக்கவும் அரசு முன்வரும்.

[2002 மார்ச் 12

49. ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகிய பிரிவினருக்குத் தக்க உரிமைகளை அளித்தல் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இவ்வரசு உணர்ந்துள்ளது. கல்வி, பொருளாதார வளர்ச்சி மற்றும் அடிப்படை வசதிகள் அளித்து இச்சமுதாயத்தினரின் நலன் பேணுவதற்குத் தகுந்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வசதி வாய்ப்பற்ற இப்பிரிவினருக்கு சுய வேலைவாய்ப்பு அளிப்பதிலும் முன்னுரிமை அளிக்கப்படும். அரசுப் பள்ளிகளில் பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கும் ஆதிதிராவிட, பழங்குடியின மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி அளிக்கும் புதிய திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது என்பது மிகவும் மனநிறைவளிக்கிறது. அடுத்த ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

50. ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட பிரிவினரின் பொருளாதார, சமூக மேம்பாட்டை முக்கிய நோக்கமாகக் கொண்ட புதிய பல்கலைக்கழகம் ஒன்று வேலூர் நகரில் ஏற்படுத்தப்படும். இப்பல்கலைக்கழகத்திற்கு தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெயர் சூட்டப்படும். இப் பல்கலைக்கழகம் சமூக மாற்றத்திற்கு ஒரு தன்னிகரற்ற முன்னோடி முயற்சியாக இருக்கும்.

51. வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்படவிருக்கும் "புதிய தொழில் கொள்கை", ஒளிவு மறைவற்றதாகவும் தொழில் முனைவோர் நேயமிக்கதாகவும் அமையும். இக்கொள்கை, வெளிநாட்டு, உள்நாட்டு தனியார் முதலீடுகளை ஈர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிப்பதாக இருக்கும். ஜவுளித் துறை மிக முக்கியமான வேலைவாய்ப்பு ஆதாரம் உள்ள ஒரு துறை ஆகும். பருத்தி சாகுபடியில் உற்பத்தித் திறனைப் பெருக்குதல், நெசவு முறைகளில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது உள்ளடக்கிய சாகுபடி முதல் விற்பனை வரையான தொடர்புகளைப் பெருக்குவதன் மூலம் இத்துறைக்கு ஊக்கமளிக்கப்படும்.

52. அறிவியல் துறையில் உயிரி தொழில்நுட்பம் ஒரு முக்கிய அம்சமாக உருவாகி வருவதைக் கருத்தில்கொண்டு, அரசு இத் துறைக்குப் புதிய ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும். மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளை உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்பத் துறையில் முன்னணியிலுள்ள நிறுவனங்களிடமிருந்து ஈர்க்கவும், அத்தகைய முதலீடுகளைப் பெருக்குவதற்கு உகந்த சூழ்நிலைகளை உருவாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



2002 மார்ச் 12]

53. வளம் மற்றும் வேலைவாய்ப்பினை அனைத்து வகையிலும் பெருக்குவதில், இன்றைய உலகில் தகவல் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது. தகவல்-தொழில்நுட்பம் தனித்தும் அதனைச் சார்ந்த ஏனைய பணிகளின் வாயிலாகவும் உலக முழுவதும் பொருளாதார வளர்ச்சியின் உந்துவிசையாக அமைந்துள்ளது. நாட்டிலேயே ஒப்புயர்வற்ற நிலையை எய்தும் பொருட்டு தகவல்-தொழில்நுட்பத் துறைக்கும் இதனைச் சார்ந்த பிற பணிகளின் வளர்ச்சிக்கும் புத்துயிர் ஊட்டுவது இந்த அரசின் நோக்கமாகும். இதை உறுதிசெய்யும் வண்ணம் இவ்வரசின் தகவல்-தொழில்நுட்பக் கொள்கையில் பின்வருவன அடங்கும்:

(அ) நகர்ப்பகுதிகளில் கணினி சேவை மையங்கள் (Call Centres) ஏற்படுத்துதல், கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் மேம்படுத்துதல், ஊரகப் பகுதிகளிலும், ஓரளவு நகர்சார்ந்த பகுதிகளிலும் வசிப்பவர்களுக்காக தகவல்-தொழில்நுட்பம் சார்ந்த ஏனைய பணிகள் உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம், வேலை வாய்ப்பு மற்றும் வருமானத்தைப் பெருக்குதல். குறிப்பாக ஊரகப் பகுதிகளில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தரமான தகவல்-தொழில்நுட்பப் பணி கிடைப்பதற்கு ஊக்கமளித்தல்.

(ஆ) துறைகளுக்குள்ளும் துறைகளுக்கிடையேயும் நிருவாகப் பணிகளில், தகவல்-தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக, அனைத்து அரசுத் துறை மற்றும் முகவரமைப்புகளோடு ஒருங்கிணைந்த செயல்பாடுகள்.

(இ) அனைத்து வகை வளர்ச்சிக்காக வேளாண், வர்த்தகம் மற்றும் தொழில் துறைகளோடு ஒருங்கிணைந்த தொடர்புகளை உருவாக்குதல்.

(ஈ) பொது மற்றும் தனியார் துறை பங்கேற்புடன் இத்துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான இன்னபிற வாயில்களைக் கண்டறிதல்.

54. "தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பாகும்" என்ற முதுமொழியைக் கருத்தில்கொண்டு, வழக்குகளை விரைவாகவும், நன்முறையிலும் தீர்வுசெய்வதற்காக இவ்வரசு, நீதித் துறையுடன் இணைந்து செயலாற்றும். 49 விரைவு நீதிமன்றங்கள் (Fast Tract Courts) தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு அவை அனைத்தும், செயல்படத் தொடங்கிவிட்டன. இந்த நீதிமன்றங்களுக்கு பணியாளர்கள் உட்பட, தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் அளிக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம், மாவட்ட

[2002 மார்ச் 12

நீதிமன்றங்களில் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை கணிசமான அளவிற்குக் குறைவதற்கும், மக்களுக்கு விரைவில் நீதி கிடைப்பதற்கும் வழி வகுக்கப்படும்.

55. மக்களின் பெருகிவரும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற, இவ்வரசு பெரும் பொறுப்புகளை ஏற்கவேண்டியுள்ளது. மாநிலத்தின் ஒட்டுமொத்த நலனைக் கருத்தில்கொண்டு, பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில், சில கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டிய இக்கட்டான நிலையில் இவ்வரசு உள்ளது. வீண் செலவைக் குறைத்தல், ஏழை எளியோருக்கு மட்டும் பயனளிக்கக்கூடிய வகையில் உதவித் திட்டங்களை செயல்படுத்துதல், பொதுத் துறை நிறுவனங்களைப் பொறுப்புணர்வோடு இயங்கச் செய்தல், ஒரு சில நிறுவனங்களில் அரசு முதலீட்டைத் திரும்பப்பெற்று சீரிய முறையில் மறு முதலீடு செய்தல், மக்களின் வரிப்பணத்தை வீணாக்கும் நிறுவனங்களை மூடிவிடுதல் ஆகியவை இதில் அடங்கும். தமிழக அரசு சீரமைப்பு நோக்கமற்ற அரசு என்ற தோற்றம், கடந்த சில ஆண்டுகளில் உருவாக்கப்பட்டுள்ளது. இதை மாற்றி ஏழை எளியோருக்கு அதிக அளவில் பாதிப்பு ஏற்படாத வகையில் மாநில அரசின் நிதிநிலையை மீண்டும் சரியான வழித் தடத்திற்கு இவ்வரசு கொண்டுவரும் என்ற தெளிவான செய்தியை அனைத்து நிதி நிறுவனங்களுக்கும் தெரிவித்துக்கொள்ள இந்த அரசு விரும்புகிறது.

56. பதினொன்றாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், மத்திய அரசு அமைத்த நிதிநிலைச் சீரமைப்பு வசதி நிதியத்திலிருந்து நிதியைப் பெற ஏதுவாக, நடுத்தர கால நிதிநிலைச் சீரமைப்புத் திட்டம் குறித்து மத்திய அரசுடன் உடன்படிக்கை ஒன்றில் மாநில அரசு கையொப்பமிட உள்ளது. சீரமைப்புத் திட்டங்கள் வெற்றியடைய வேண்டுமாயின், மத்திய அரசு, மாநிலங்களுக்குப் போதுமான ஆதரவு அளிக்க வேண்டும். உண்மையான கூட்டாட்சிக் கோட்பாடுகளின்படி, நிதிப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களுக்கு, அதிக நிதியுதவி அளிக்க மத்திய அரசு முன்வரவேண்டும். அரசியலைப்புச் சட்டத்தைத் திருத்தி, சேவைத் துறையின் மீதும் வரி விதிக்க மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்குமாறு இவ்வரசு, மத்திய அரசை வலியுறுத்தும்.

57. இம்மாநிலத்தின் வளர்ச்சிக்கு அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் ஆற்றிவரும் மதிப்புவாய்ந்த பணியை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. தற்போதைய நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, அவர்கள் அளித்துவரும் ஒத்துழைப்புக்கு நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 மார்ச் 12]

58. செலவைக் குறைக்கவும், நிருவாகத் திறனை மேம்படுத்தவும், அரியலூர் மாவட்டத்தைப் பெரம்பலூர் மாவட்டத்துடன் இணைக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. விரிவுபடுத்தப்பட்ட பெரம்பலூர் மாவட்டத்தின் தலைமையிடம் பெரம்பலூராக இருக்கும். இருப்பினும், சில முக்கியமான மாவட்ட நிலை அலுவலகங்கள் அரியலூரில் செயல்படும்.

59. பத்திரப் பதிவு, வருவாய், போக்குவரத்து போன்ற பல அரசுத் துறைகளில் கணினி வழி நிருவாகம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இக் கணினி வழி நிருவாகம் மற்ற துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்; அனைத்து மாவட்டங்களிலும் தொலைக்காட்சி வழி கருத்தாய்வு (Video Conferencing) வசதி அளிக்கப்பட்டு, நிருவாகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும். தற்போதுள்ள அரசுத் திட்டங்களை மதிப்பிடவும், கொள்கை மாற்றங்கள் மற்றும் புதிய கொள்கைகள் தொடர்பான கருத்துகளை அவ்வப்போது தெரிவிக்கவும், வேளாண்மை, தொழில், கல்வி, சமூகநலம் போன்ற முக்கிய துறைகளுக்கு, ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்களில் தனியார் துறை, பொதுமக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளிலிருந்து வல்லுநர்கள் இடம்பெறுவர்.

60. மாவட்ட அளவில் அரசின் அனைத்து முக்கிய திட்டங்களையும் விரைந்து செயல்படுத்தும் பொருட்டு, அரசுச் செயலாளர்களை, கண்காணிப்பு அதிகாரிகளாக நியமனம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு செயலர் பொறுப்பேற்பார். மேலும், இத் திட்டங்களை செயல்படுத்துவதில் தலைமையேற்கும் வகையில், ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களுக்கு அமைச்சர் ஒருவர் பொறுப்பேற்பார்.

61. இவ்வாண்டில் அரசு எடுக்கக் கருதியுள்ள கொள்கை நெறிமுறைகள் பற்றி என் உரையில் உங்களுக்குக் குறிப்பிட்டுள்ளேன். மக்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்து, தங்கள் பிரதிநிதிகளாக உங்களை இம்மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த அவையில் நடைபெறும் உங்களது விவாதங்கள், மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த உரியவாறு திட்டமிடுதலுக்கும் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும், அரசுக்கு உதவியாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

வணக்கம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224481.
சென்னை-600 008
நூலகம்

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.